ஸ்ரீராமாநுஜ
ஸித்தாந்த
வைஜயந்தி

1937

JL
Q22ൾ21, N35SR.
N37.2
218934.

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஸ்ரீ ராமாநுஜ

ஸித்தாந்த வைஜயந்தீ

860

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபன ஸபையின் சார்பாக

மாதந்தோறும் வெளிவரும்

ஸத் ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசந பத்ரிகை

OFFICE OF THE REGISTRAR
9-MAR 1937
MADRAS

ஸ்ரீ சாகுதி 2	தாதுஹூ தை மாதம்	பகுதி 3

பத்ராதிபர் :

வடகரை ராமாநுஜாசாரியார்

சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்

1937ஹூ ஜனவரீ

வருஷ சந்தா ரூ. 1—12—0] [தனிப்ரதி விலை ரூ. 0—3—0

விஷய ஸூசிகை

விஷயங்கள்	பக்கம்
1. தை மாதத்தின் பெருமை .... —பத்திராதிபர்	59
2. எம்பார் வைபவம் .... —பத்திராதிபர்	61
3. தை மாதத்தின் சிறப்பு .... —ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்	66
4. அருளிச்செயல் விசேஷார்த்தங்கள் .... —ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்	76
5. வானமாமலை திருவத்யயந உத்ஸவம்.... .... —ஸ்ரீ. உ. வே. தே. திருமலாசாரியார் வானமாமலை	82
6. வானமாமலை திருவத்யயந உத்ஸவமும் கனு உத்ஸவமும்... .... —ஸ்ரீ உ. வே. தே. திருமலாசாரியார், வானமாமலை	84
7. திருவிண்ணகர் .... —ஸ்ரீ உ. வே. ப. ஸ்ரீ. லக்ஷ்மீ நரஸிம்மாசாரியார் சிரோமணி, தேவனூர் விளாகம்	86
8. புருஷாகார வைபவத்தின் தொடர்ச்சி .... —பத்திராதிபர்	91
9. தர்ம வ்யாத சரிதம் .... —ப்ரதி வாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்	94
10. வர்த்தமானங்கள்	96

உத்ஸவங்கள்:—நாளது மாசி 9ௗ சனிக்கிழமையன்று ஸ்ரீ காஞ்சீ வரதராஜப் பெருமாளுக்குத் தென்னேரியில் தெப்பவுத்ஸவமும், அதற்கடுத்த வியாழக்கிழமை பௌர்ணமி யன்று ராஜி குளத்தில் தெப்ப வுத்ஸவமும், அதற்கடுத்த மூன்று நாட்களில் ஸந்நிதிக்குள் தவன வுத்ஸவமும் வெகு விபவமாக நடை பெறும்.

C. V. CUNNIAH CHETTY & CO.

SILK WOOLLEN AND COTTON PIECE GOODS MERCHANTS,

288, ESPLANADE ROW, MADRAS.

FOR COTHOOR BRAND SOYA BEANS.

L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது மனிதர்களுக்கு ஆரோக்கியத்தை அளிப்பது

L. G.
பெருங்காயம்.
எங்கும் கிடைக்கும்.

ப்ரபல பெருங்காய வியாபாரிகள்:
பம்பாய், சென்னை, கும்பகோணம்.

லால்ஜீ கோது & கம்பெனி,
8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதராஸ்.

அம்ருதாஞ்சனம்.

ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வ்யாதிகளின் உபசமநத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக் கூடும். அக்காலத்தில் அமிருதாஞ்சனம் கைவசமிருக்குமே யாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டா மென்பதை அனேகரு மறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.

அம்ருதாஞ்சனம் டிபோ.

பம்பாய். மதராஸ். கல்கத்தா.

சலோனுடவர் பிராண்ட்

போர்ட்லாண்ட் சிமெண்ட்

காரண்டீட்

பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷன்

மேற்கண்ட சிமெண்ட் அனேக ஹார்பர் வேலைகளுக்கும் ரயில்வே வேலைகளுக்கும், மதராஸ் கார்ப்பரேஷனிலும், இன்னும் பிரபல வியாபாரிகளும் கண்ட்ராக்டர்களும் உபயோகித்து வருகிறார்கள்.

மேல் கண்ட சிமெண்டை உபயோகிக்கவும்

சோல் ஏஜெண்ட்

M. குப்புசாமி நாய்க்கர்

83, செம்புதாஸ் தெரு,

மதராஸ், ஜி. டி.

FOR CO

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தி

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶந பத்ரிகை

தொகுதி 2.	பத்ராதிபர் வடகரை. இராமாநுஜாசாரியார்	பகுதி 3.

ஸ்ரீரஸ்து

ஶ்ரிய꞉காந்தாய நம꞉

ஸ்ரீமதே ராமாநுஜாய நம꞉

தஸ்மை ராமாநுஜார்யாய நம꞉ பரமயோகிநே ।
ய꞉ ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ॥
வேதவேதாந்த வேதாம்ஶ ஸத்பூதார்த்தப்ரவர்த்திநீ ।
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ॥

தைமாதத்தின் பெருமை

பத்திராதிபர்

சென்றவருஷம் தையில் மகத்தன்று வெளிவந்த பத்திரிகையில், தையில் மகத்தவரித்த திருமழிசை யாழ்வாரின் வைபவம் சிறிது வரையப்பட்டது. இவ்வருஷம், இம்மாதத்தின் பெருமையையும், திருமழிசை ஆழ்வாருக்கும், இம்மாதத்திற்கு முள்ள பொருத்தத்தையும், இம்மாதத்தில் வரும் ஶுக்லபக்ஷ ஏகாதஶியின் பெருமையையும் அடியேனறிந்தவளவு தெரிவித்துக்கொள்கிறேன். இதிலுள்ள தவறுகளை பெரியோர்களறிவித்தால் அவர்களிடம் மிகவும் நன்றி யுடையவனாயிருப்பேன்.

இம் மாதம் உத்தராயணத்தின் முதல் மாதமாயிருப்பதால் ஶுபமான கார்யங்களைச் செய்வதற்கு யோக்யமான மாதமாகும்.

ஸர்வ ஜகத்காரணபூதனான ஸர்வேஶ்வரனுடைய வ்யூஹாவதாரத்தில் இரண்டாவது அவதாரமான நாராயணனுடைய அம்

ஸமாயிருக்கும். ஆதலின் இம் மாதத்தி லவதரித்த திருமழிசையாழ்வார், ப்ரஹ்மருத்திராதி தேவர்களுக்கும் உத்பாதகனாய், ஸர்வஜகத் காரணபூதனாய், த்யேயவஸ்துவாயிருக்கும் ஸர்வேஸ்வரனுக்கு வாசகமான ஸப்தங்களாயிரக்கணக்காக இருக்க, **நான்முகனை நாரர்யணன் படைத்தான்** என்றுபக்ரமித்து, **இனியறிந்தேனீசர்க்கும் நான் முகற்கும் தெய்வம் இனியறிந்தே னெம்பெருமானுன்னை இனியறிந்தேன் காரணன் நீ கற்றவைநீ கற்பவை நீ நற்கிரிசைநாரணன்நீ நன்கறிந்தேன் நான்** என்று நாராயண ஸப்தத்தையே ப்ரதானமாகக் கொண்டு பூர்வத்தை நிலைநாட்டிய நாராயணனுடைய அம்ஸமான இம்மாதத்தி லவதரித்தமையே என்பது அறிவுடையார் ஆராய்ந்து அறியத்தகுந்தது.

இன்னமும், இம்மாதஏகாதஸியன்று உபவஸித்து த்வாதஸியன்று நாராயணனை உபாஸிக்கு மவர்கள், அஸ்வமேதயாகம்பண்ணினதா லேற்படும் பலனை யடைவார்கள். இது விஷயம் மஹாபாரதம் ஆஸ்வமேதிக பர்வம் 114 - வது அத்யாயம் 28 - வது ஸ்லோகத்தில் க்ருஷ்ணபகவான் யுதிஷ்டிரருக்கு அருளிச்செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஸ்லோகம் வருமாறு :

த்வாதஸ்யாம புஷ்யமாஸேது நாம்நா நாராயணம் து மாம்
உபபோஷ்ய பூஜயேத் யோ மாம் வாஜிமேத பலம் லபேத்

இன்னமும் இம்மாத ஸுக்லபக்ஷ ஏகாதஸி கூர்ம ஏகாதஸி என்று கூறப்படும். அதெங்ஙனே எனில் ?

முன்னொருகாலத்தில், தேவர்களும் அஸுரர்களும் பாற்கடலில் மந்தரபர்வதத்தை மத்தாக நாட்டி வாஸுகியைக் கயிறாகக் கொண்டு கடைய ஆரம்பிக்க, மந்தரபர்வதம் ஆதாரமில்லாமல் அழுந்திப்போக, அப்போது, தேவர்கள் மிகவும் வருந்திப் பகவானைப் பலவாறு ஸ்தோத்ரம்பண்ணிப்ரார்த்திக்க, பகவான் கூர்மரூபியாய் அப்பர்வதத்தை உத்தரிப்பிக்கவே, தேவர்கள் சந்தோஷத்தை யடைந்து, அஹோராத்ரம் ஆஹாரமின்றிக் கடைய, மற்றைநாள் ப்ராதஃகாலத்தில் க்ஷீராப்தியில் நின்றும் பிராட்டியுத்பவித்து எம்பெருமானுடைய வக்ஷஸ்தலத்தில் வீற்றிருந்தாள். அவ்வாறு பிராட்டியும் பெருமானும் சேர்ந்திருக்கும் அவ்விருப்பைக் கண்ணாரக்கண்டநுபவித்து வாயார வாழ்த்தி, அதன் பின்பு பாரணை பண்ணினார்கள். அவ்வாறு க்ஷீராப்தியைக் கடைய உபக்ரமித்த

24934

நாள் தைமாத ஸுக்லபக்ஷ தஸமியாகும். கடைந்த தினம் ஏகாதஸியாகும். பிராட்டி உத்பவித்த தினம் த்வாதஸியாகும். ஆதலால் இந்த ஏகாதஸீ கூர்ம ஏகாதஸி என்று சொல்லப்படுகிறது. இந்த ஏகாதஸியன்று, கூர்மரூபியான பகவானை த்யானித்துக்கொண்டு உபவஸித்து, த்வாதஸியன்று சக்தியநுஸாரம் தக்ஷிணாதிகளோடு கூட ப்ராஹ்மணர்களை யாராதித்துப் பகவானை யாநந்திப்பித்துப் பிறகு, பாரணை செய்யு மவர்கள், கூர்மரூபியான பகவானுடைய அநுக்ரஹத்தால் அனேக ஜந்மங்களால் ஸம்பாதிக்கப்பட்ட பாபங்களை ஒழித்து, இவ்விபூதியிலிருக்கும் நாள் உலகிலேந்து பெரும் செல்வத்தராய்த் திருமா லடியார்களைப் பூஜித்து, ஸரீரவியோக காலத்தில் அர்ச்சிராதி மார்க்கமாகப் பரமபதத்தை யடைந்து பரமாநந்த மடைவர்கள்.

இந்த விஷயம் வராஹ புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

எம்பார் வைபவம்

(பத்திராதிபர்)

விஸிஷ்டாத்வைத ஸித்தாந்த ப்ரவர்த்தகாசார்ய ஸார்வபௌமரான யதிசக்ரவர்த்தியின் அந்தரங்க சிஷ்யர்களில் ப்ரதானமானவராய், அவரை விட்டு க்ஷணகாலமும் பிரியாமலிருப்பதால் **ராமாநுஜ பதச்சாயா** என்றே தமக்கு நிரூபகமாம்படியானவரும், ஆழ்வானுக்கு ஆண்டாள் கர்ப்பத்திலவதரித்தவரா யிருந்தாலும் ஸ்ரீ ரங்கராஜர் புத்ரவத் ஸ்வீகரித்து அநுக்ரஹிக்கும் பெருமை வாய்ந்த ஸ்ரீ ரங்கராஜ பட்டருக்கு ஆசார்யருமான **எம்பார்** அவதரித்ததும் இத் தைமாதத்திலேயாகும்.

இவ்வாசார்ய சிகாமணியின் பெருமையைச் சிறிது வரைந்தநுபவிக்கும்பாக்யம், சிற்றறிவுடைய அடியேனுக்கு நேர்ந்தது. இவரது தயை முதலான ஆத்ம குணங்கள்வாசா மகோசரம். இவரது அவதாரத்தைப்பற்றி வரைய உபக்ரமிப்பதற்கு முன்னம், இவரது ஜ்ஞாநபக்தி வைராக்யங்களைப் பற்றிய ஓர் ஐதிஹ்யம் ஞாபகத்திற்கு வருகின்றது. அதாவது ஒருநாள் முதலிகளெல்லாரும் கோவிந்தப்பெருமாள் என்கிற இவரது ஜ்ஞானபக்தி வைராக்யங்களைப்பற்றிப் புகழா நிற்க, அதைக்

கேட்ட எம்பாரும், ஆம் ஆம் என்று தலை குலுக்கி தன்னைத்தானே துதித்துக்கொள்வதைக் கண்ட எம்பெருமானார், கோவிந்தப் பெருமாளை யழைத்து, யாராவது தன்னைப்பற்றிப் புகழாநின்ற காலத்து நைச்யானுஸந்தாநம் பண்ணுவது ஸ்வரூபமாயிருக்க, ஆம் ஆம் என்று சொல்லுவது உசிதமாகுமோ? என்ன, இதைக் கேட்ட கோவிந்தப் பெருமாள், ஸ்வாமி ஸாதிப்பது அழகே; இவர்கள் புகழ்வது என்னையன்றே! என்னைப்பற்றிப் புகழவேண்டுமானால் காளஹஸ்தியில், கையும் பில்வக்குடலையும், கழுத்தும் ருத்ராக்ஷ மாலையுமாய் உடம்பெல்லாம் சாம்பலைப் பூசிக்கொண்டு எளிவரவுபட்ட அந்நிலைமையையன்றோ? புகழவேண்டும். அத்தைவிட்டு அஸத்துக்களில் அக்ரகண்யனான அடியேனை பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகிவந்து, எனக்கினியார் நிகர் நீணிலத்தே என்று கொண்டாடும்படியாக, ஆன இந்நிலைமையையன்றோ! புகழ்கிறார்கள்.

சீலமில்லாச் சிறியனான வடியேனுக்கு இவ்வளவு பெருமையேற்பட்டது ஸ்வாமியின் திருவடி சம்பந்தத்தாலன்றோ? ஆதலின் யஸ்யைதே தஸ்ய தத்தநம் என்கிறபடி அவர்கள் புகழ்வது ஸ்வாமியின் திருவடிகளை யன்றோ? அத்தையில்லை யென்று சொல்வது ஸ்வரூபமோ? என்று விண்ணப்பம் செய்தார். இத்தைக் கேட்டு எம்பெருமானார் நல்லீர் நல்லீர் என்று போர உகந்து உம்முடைய குணங்கள் நமக்கு முண்டாகும்படி உம்முடைய அழகிய நெஞ்சால் நம்மை யணைத்துக்கொள்ளீர் என்று வாரியணைத்துக் கொண்டருளினார்.

இன்னமும் இவரது பூததயைப்பற்றிய ஓரைதிஹ்யமுளது. அதாவது திருமலைநம்பி ஸந்நிதியில், எம்பெருமானார் ஸ்ரீராமாயண விசேஷார்த்தம் கேட்டருளாநிற்க, ஒருநாள் கோவிந்தப்பெருமாள் ஒரு பாம்பின் வாயிற் கையைவிட்டு நீராடிச் செல்லுமதைக் கண்டு உடையவர், கோவிந்தப் பெருமாளே! என்? பாம்பின் வாயிற் கையிட்டீர் என்று கேட்க, கோவிந்தப்பெருமாள், அந்தப் பாம்பு நாக்கை நீட்டிக்கொண்டு மிகவும் உபத்ரவப்பட்டுக்கொண்டிருந்தது. அதைப் பார்த்து அதன் வாயிலிருந்த முள்ளையெடுத்துவிட்டு நீராடிவந்தேன் என்ன, இவருடைய பூத தயைக்கு உடையவர் மிகவுமுவந்தருளினார்.

இம்மஹாநுபாவரவதரித்த திவ்யதேசம், மதுரைமங்கலமென்கிற மழலைமங்கலமாகும். இவருடைய திருத்தகப்பனார், கமலநயநபட்டர். திருத்தாயார், பெரிய பிராட்டியார். க்ரோதந வருஷம் தைமாதம் பௌர்ணமியோடு கூடிய புனர்வசு, இவரவதரித்த திருநாளாகும். இவரவதரித்து ஆசௌசாதிகள் கழிந்து பன்னிரண்டாவது திநத்தில் பெரியதிருமலைநம்பி யெழுந்தருளி, இக்குழந்தையின் தேஜஸ்ஸைப் பார்த்து, இவன் ஸமஸ்தசாஸ்த்ரங்களையும் கசடறக் கற்று, ஸமஸ்தமான ஆத்மகுணங்களுக்குக் கொள்கலமாய் விளங்காநின்றுகொண்டு விசிஷ்டாத்வைதஸித்தாந்தப்ரவர்த்தகனாவான் என்றநுக்ரஹித்து, கோவிந்தன் என்று திருநாமமிடும்படி நியமித்து எழுந்தருளினார்.

கமலநயந பட்டரும், அவ்வாறே திருநாமமிட்டு, சௌளோபநயநாதி ஸம்ஸ்காரங்களைச் செய்து, வித்யையையும் அப்யஸிப்பித்து விவாஹமும் பண்ணிவைத்தார்.

அப்பால் கோவிந்தப்பெருமாள், இளையாழ்வார், பெருமாள் கோவிலில் யாதவப்ரகாசனிடம் வேதாந்தாச்ரவணம் பண்ணிக்கொண்டிருக்கிறார் என்பதை யறிந்து, தாமும் அங்கே சென்று, வேதாந்தச்ரவணம் பண்ணிக்கொண்டிருந்தார். இவ்வாறிருந்து வரும் காலத்தில், ஒரு சமயம் யாதவப்ரகாசன் சிஷ்யப்ரசிஷ்யர்களுடன் கங்கை நீராடச் செல்லும் காலத்தில் தாமும் சென்று கங்கை நீராட, அக்கங்கையில் நீராடும்பொழுது இவர் கையில் ஒரு லிங்கம் அகப்பட்டது. அதைக்கொண்டு வந்து தமது அவதாரஸ்தலத்தில் ப்ரதிஷ்டை செய்து சிவபக்தராயிருந்து வரும் காலத்தில் காளஹஸ்தீசன் இவரது ஸ்வப்நத்தில் வந்து, காளஹஸ்தியில் தமது கார்யங்களை நிர்வஹிக்குமாறு நியமிக்க, கோவிந்தபட்டரும், காளஹஸ்தி சென்று அங்குள்ளவர்களுக்குத் தலைவராய் காரியங்களை நிர்வஹித்துக்கொண்டு போரும்காலத்தில், உடையவர் வேண்டிக்கொண்டபடி பெரிய திருமலைநம்பி காளஹஸ்தி சென்று கோவிந்தபட்டரைத் திருத்திப்பணிகொண்டு, திருமலைக்கெழுந்தருளி, ஸமஸ்தமான ரஹஸ்யார்த்தங்களையும் கோவிந்தப் பெருமாளுக்கருளிச் செய்தார். கோவிந்தப் பெருமாளும், ஸ்வஸ்வரூபாதி அர்த்த பஞ்சகங்களை அழகாகக்கேட்டு பழுதே பல பகலும் போயினவென்று இழந்த நாளுக்கு வருந்தி, இவ்வாறு, கரியைப் பொன்னுக்குவாரைப்போலே தம்மைத்திருத்திப் பணிகொண்ட நம்பியிடம் பரம பக்தியையுடையராய் மற்றொரு தேவுமறியாது நம்பி திருவடியில் ஸர்வவித கைங்கரியங்களையும் செய்துகொண்டெழுந்தருளியிருந்தார்....................

அக்காலத்தில் உடையவர் பெரிய திருமலைநம்பிசன்னிதியில் ஸ்ரீராமாயண விஶேஷார்த்தச்ரவணம் பண்ணுவதற்கெழுந்தருளினார். அப்போது கோவிந்தப் பெருமாளின் ஜ்ஞானபக்தி வைராக்யங்களைக் கண்ணாரக்கண்டு, உவந்தருளாநிற்க, ஒரு நாள் நம்பிக்குத் திருப்படுக்கை படுத்து, அப்படுக்கையில் சிறிதுகாலம் தாம், ஶயநியா நிற்க, அத்தைக் கண்ட, எம்பெருமானார், நம்பியிடம் சென்றத்தை யறிவிக்க, நம்பியும், கோவிந்தப்பெருமாளை யழைத்து, நமக்குப் படுத்த படுக்கையில் நீர் படுப்பது உசிதமா? அவ்வாறு செய்த உமக்கு என்ன பலன்? என்று கேட்க, கோவிந்தப் பெருமாள், அவ்வாறு செய்த அடியேனுக்கு நரகமே பலம் என்ன. அவ்வாறு தெரிந்திருக்க இவ்வாறு செய்தது ஏன்? என்ன. கோவிந்தப்பெருமாளும், அடியேன் நரகம் சென்றாலும், ஸ்வாமிதிருமேனிக்குப் பாங்காக அப்படுக்கையிருந்தால் போதும் என்று நினைத்து, அதில் ஏதாவது யிருந்து ஸ்வாமி திருமேனிக்கு ஏதாவது தீங்கிழைக்குமோ? என்றஞ்சி அடியேன், அதில் படுத்துப் பார்த்தேன் என்றருளிச்செய்தார்— இதைக் கேட்ட நம்பியும், உடையவரும், மற்றுமுள்ள முதலிகளும் இவரது அத்யவஸாயத்தைக் கேட்டுப் போரவும் ஆனந்த மடைந்தார்கள்.

அப்பால் எம்பெருமானார், ஸ்ரீராமாயணம் சாத்தி, திருவரங்கம் செல்ல, திருமலை நம்பியிடம் விடைகொள்ள, நம்பியும், இவ்வளவுகால மிவ்விடமிருந்த உமக்கு ஏதாவது கொடுக்க நினையா நிற்கின்றேன், வேண்டுவதை வேண்டிக்கொள்ளுமென்ன, உடையவரும், பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி அநுக்ரஹித்தது போதாமல், மேலும் ஏதாவது அநுக்ரஹிக்கத் திருவுள்ள மிருந்தால், இந்த கோவிந்தப்பெருமாளைத் தந்தருள வேண்டுமென்று வேண்டிக்கொள்ள, உடனே நம்பியும், கோவிந்தப் பெருமாளை உதக பூர்வகமாக உடையவருக்குக் கொடுத்து, கோவிந்தப் பெருமாளைப் பார்த்து, எம்பெருமானாரை என்னைப்போலே சேவித் திருக்கக் கடவீரென்று நியமித்து விடை கொடுத்தருளினார்.

உடையவரும், கோவிந்தப்பெருமாளை யழைத்துக்கொண்டு திருக்கச்சிநம்பி சன்னிதியிற் சிலநாள் தாமதிக்க, கோவிந்தப் பெருமாள், திருமலைநம்பியின் விஶ்லேஷம்ஸஹியாதவராய், சரீரம்

மெலிந்து வருந்தாநிற்பதையறிந்த உடையவர், இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களை, கோவிந்தப்பெருமாளை நம்பி சன்னிதிக்கு அழைத்துக் கொண்டு போகும்படி நியமிக்க, அவர்களும் அப்படியே அழைத்துக்கொண்டு நம்பி சன்னிதி சென்று, இந்த வ்ருத்தாந்தத்தை யறிவித்தார்கள். இத்தைக்கேட்ட நம்பி ஒன்றும் சொல்லாமலிருக்க, நம்பியின் தேவிகள் இவ்வளவுதூரம் வந்தவனை வரவழைத்து ஸ்ரீபாததீர்த்தமும் தளிகைப் பிரஸாதமு மநுக்ரஹித்தருளலாகாதோ! என்று வேண்டிக்கொள்ள, நம்பியும் மிகவும் கோபித்து விற்ற பசுவிற்குப் புல்லிடுவாருண்டோ? என்று முகம் கொடா தொழிய. கோவிந்தப்பெருமாள் மிகவும் அபசாரப் பட்டேன் என்று மனம் வருந்தி உடையவர் திருவடி முன்பே வந்து தெண்டன் ஸமர்ப்பித்து நின்றார். உடையவர் நம்பி ஸந்நிதியில் நடந்த விருத்தாந்தத்தைக் கேட்டு, நம்பியின் ஸர்வஜ்ஞதைக்கு மிகவு முகந்தருளினார்.

உடனே அவ்விடம்விட்டுப் புறப்பட்டு கோயிலுக் கெழுந்தருளி நம் பெருமாளை மங்களாஶாஸநம்செய்து, மடமெழுந்தருளி, கோவிந்தப்பெருமாளைத் தன்னுடைய ஸௌஶீல்ய ஸௌலப்யாதி குணங்களிலே ஆழங்காற்படுத்தி, ஸகலார்த்தங்களையு மருளிச் செய்யா நிற்க, கோவிந்தபபெருமாளும், உடையவரின் திருமேனி ஸௌந்தர்யத்திலும், நல்வார்த்தையிலும், கோஷ்டியிலு மீடுபட்டு உடையவரை ஒரு க்ஷணகாலமும் விட்டுப் பிரியாமல் ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வவித கைங்கர்யங்களையும் செய்யா நின்றுகொண்டு எழுந்தருளி யிருந்தார்.

இவ்வளவில் கோவிந்தப்பெருமாள்தேவிகள் ருதுவானாள் என்று அவரது தாயார் வந்தறிவித்தபொழுது கோவிந்தப்பெருமாள் அநாதரித்திருக்கவே, தாயார், உடையவர்ஸன்னிதியில் இந்த விருத்தாந்தத்தை யறிவிக்க, உடையவர், கோவிந்தப்பெருமாளை யழைத்து அவ்வாறிருக்கக்கூடாது "ப்ரஜாதந்தும் மாவ்யவச்சேத்ஸீ:. ப்ரஜோத்பத்தியைச் செய்யவேண்டுமென்று வேதமே விதிக்கின்றதாதலின், நீர் போய் க்ருஹஸ்தாஶ்ரமதர்மத்தை யநுஷ்டித்து வாரும்" என்று நியமித்தருளினார். கோவிந்தப்பெருமாள் அப்படியே சென்று, ஏகாந்தத்தில் அந்தர்யாமியின் பெருமையை தேவிகளுக் குபதேசித்து, விடியற்காலம உடையவர் ஸந்நிதிக் கெழுந்தருளினார். உடையவர் இத்தையறிந்து இவ்வாறு, செய்தது

ஏன்? என்று கேட்டருள கோவிந்தப்பெருமாள் அந்தர்யாமி, ப்ரகாஶியா நிற்க, அளிச்சாட்டம் செய்யலாகுமோ? என்ன உடையவர், க்ருஹஸ்தாஶ்ரம தர்மாநுஷ்டாநம்செய்யகில்லீரேல் நிராஶ்ரமீ நஸந்திஷ்டேத் ஒரு ஆஶ்ரமமுமில்லாதவனாய் இருக்கக் கடவனல்லன் என்று ஶாஸ்த்ரம் கூறுகிறபடியால், ஸந்யாஸ ஆஶ்ரமத்தை அங்கீகரியுமென்று நியமித்து, காஷாய த்ரிதண்டாதிகளை அநுக்ரஹித்து ஸந்யஸிப்பித்தருளினார். இவ்வாறு ஸந்யஸித்து உடையவர் திருவடிகளை விட்டகலாமல் நிழல்போலே வர்த்திக்கையாலே **ராமாநுஜபதச்சாயா** என்று இவருக்குத் திருநாமமாயிற்று.

இன்னமும் உடையவர் விஷயத்தில் இவர்க்குண்டான பக்தியின் பெருமைக்கு நிதர்ஶநமாக ஓரைதிஹ்யமுண்டு. அதாவது ஒரு நாள் எம்பெருமானாரடியாளொரு தாஸிவீட்டண்டை கோவிந்தப்பெருமாள் நின்றுகொண்டிருப்பதைக் கண்ட ஸ்ரீவைஷ்ணவர்கள், உடையவர் ஸந்நிதியில் வந்து கோவிந்தப்பெருமாள், தாஸிவீட்டண்டை நின்றுகொண்டிருப்பதையறிவிக்க, அதைக்கேட்ட உடையவர், கோவிந்தப்பெருமாளை அழைத்தருளி, ஏன்? தாஸிவீட்டண்டை நின்றுகொண்டிருந்தீர். இந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் பரிஹஸிக்கிறார்களே என்ன, கோவிந்தப்பெருமாள், அங்குஸ்வாமி விஷயமான தாலாட்டு நடந்துகொண்டிருந்தது, அது, செவிக்கினிமையாயிருந்ததால் அங்கே நின்றுகொண்டிருந்தேன். அத்தாலாட்டு நின்றதும் விடைகொண்டேன் என்ன, ஸ்ரீவைஷ்ணவர்களும் தாலாட்டு நடந்தது வாஸ்தவம் என்று சொல்ல, உடையவரும், மற்றுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களும், இவருடைய ஆசார்ய விஷயமான பக்தியைக் கொண்டாடிப் போரவும் புகழ்ந்தார்கள்.

ராமாநுஜ பதச்சாயா கோவிந்தாஹ்வாநபாயிநீ
ததாயத்தஸ்வரூபா ஸா ஜீயாந்மத்விஶ்ரமஸ்தலீ

தை மாதத்தின் சிறப்பு.

ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியர்

தை மாதத்தில், ஆழ்வார்களுள் திருமழிசைப்பிரானும், ஆசாரியர்களுள் எம்பார், கூரத்தாழ்வான் என்ற இருவரும் திருவவதரித்ததனால் இம்மாதம் ஸ்ரீ வைஷ்ணவர்கட்கு மிகவுங் கொண்டாடத்தக்கதாகும். இம்மூவருடையவும் திருக்கல்யாண குணங்கள் குருபரம்பரா ப்ரபாவம் முதலிய நூல்களில் விரிவாகக் காணக்கிடைக்குமாயினும், நமது நண்பர்கள் இப்பத்ரிகை வாயிலாக ஸங்க்ரஹேண அநுபவித்தற்குரிய சில குணாநுபவங்களை ஈண்டெடுத்துரைப்போம்.

1. திருமழிசைப்பிரான்.

இவ்வாழ்வார் அருளிய திவ்யப் பிரபந்தங்கள் இரண்டு. 1. நான்முகன் திருவந்தாதி, 2. திருச்சந்த விருத்தம் இவையிரண்டும் திவ்ய ப்ரபந்தங்களெல்லாவற்றிலுள்ளும் வேதாந்த விழுப்பொருள்கள் நிரம்பித் ததும்பிய மிகச் சிறந்த அரிய பெரிய நூல்களாம். இவ்வாழ்வாருடைய காலத்தில் தேவதாந்தரபரத்துவம் கொள்ளும் மதாந்தரஸ்தர்கள் மலிந்திருந்ததனால் அவர்களைத் திருத்தி வழிபடுத்த வேண்டுவது இவர்க்கு அவசியமாய் அமைந்தது. ஆகவே, இவர் திருவந்தாதி தொடங்கும்போதே ஸ்ரீமந்நாராயண பரத்வத்தை மிக அழுத்தமாக அருளிச் செய்கின்றார். அது தலைக்கட்டுமிடத்தும் "இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம், இனியறிந்தேன் எம்பெருமானுன்னை" என்கின்றார். இடையிலும் பல பல பாசுரங்களினால் தேவதாந்தரங்களின் அபூர்த்தியையும் பரமபுருஷனுடைய பூர்த்தியையுமே பேசுகின்றார். ஆகவே, இவரது திருவந்தாதி பெரும்பாலும் பரதத்வஸ்தாபநத்தில் நோக்குடைத்தாயிருக்கும்.

இதில் முதற் பாசுரம்—"நான்முகனை நாராயணன் படைத்தான், நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்—யான் முகமாய், அந்தாதி மேலிட்டு அறிவித்தேனாழ்பொருளைச் சிந்தாமற் கொண்மினீர் தேர்ந்து" என்பதாம். இப்பாசுரத்தின் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான அவதாரிகையில் அருளிச்செய்யப்பட்டுள்ள ஓர் அற்புதமான திவ்ய ஸூக்தி காண்மின் ;—

"ப்ரஹ்மாதிகள் ஸம்ஸாரத்தை ப்ரவர்த்திப்பிக்க ப்ரதாநரானாப்போலே தந்நிவ்ருத்திக்கு ப்ரதாநனானேன் நானென்கிறார்." என்று. இந்த ஸ்ரீஸூக்தியின் காம்பீர்யம் வாசாமகோசரம்; இதன் கருத்தாவது—நாராயணன் நான்முகனைப் படைத்து வைத்தான் ; அந்த நான்முகனும் மற்றுள்ள ஸ்ருஷ்டிகளைப் பண்ணிப்போனான். ஆக அவ்விருவரும் இப்படி ஸம்ஸாரத்தை வளரச்செய்து வைத்

தார்களே யன்றி அடியறுக்கப் பார்த்தாரல்லர்; நான் அங்ஙனன்றியே, உங்களுடைய ஸம்ஸாரம் வேரறும்படியாக ஆழ்பொருள்களை யறிவிக்க முற்படுகின்றேன் காண்மின்—என்று ஆழ்வார் அருளிச்செய்வதாகப் பெரியவாச்சான் பிள்ளை எடுத்துக்காட்டியருளியிருப்பது பரமரஸம்.

இப்பாசுரத்தின் கருத்தையும் இங்குச் சுருக்கியுரைப்போம். காரியப்பொருள்கள் யாவும் பெயருமுருவமும் பகுத்தறியவொண்ணாதபடி தன் பக்கலிலே லயமடைந்து தானொருவனுமே காரணபூதனாய்க்கொண்டு உளனாய் நின்ற நாராயணன் "பஹு ஸ்யாம்" என்கிற தன்ஸங்கல்பத்தாலே ஸமஷ்டி பதார்த்தங்களை ஸ்ருஷ்டித்து நான்முகக் கடவுளைக்கொண்டு வ்யஷ்டி பதார்த்தங்களை ஸ்ருஷ்டிக்க வேண்டித் தனது திருநாபிக் கமலத்தில் நான்முகனைப் படைத்தருளினன். பிரமன் ஸ்ருஷ்டிகள் செய்தது வேதங்களைக்கொண்டேயாதலாலும், அந்த வேதங்கள் நால்வகைப்பட்டிருத்தலாலும், அந்நால்வகை வேதங்களையும் உச்சரிப்பதற்காகவே பிரமன் நான்கு முகங்களையுடையவனாகப் படைக்கப்பட்டனாதலாலும் இங்குப் 'பிரமனை' என்னாது **நான்முகனை** என்றார்.

[நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்.] ஸ்ரீமந்நாராயணனால் பிறப்பிக்கப்பட்ட அந்த நான்முகன் தானே தலைவனாய் நின்று ஸம்ஹாரக் கடவுளாகிய சங்கரனைப் படைத்தான். புத்திரன் விநயமற்று வழிகெட நடந்தால் அவனைத் தந்தை விலங்கிட்டு வைப்பது வழக்கம். அதுபோல, எம்பெருமானை ஆராதித்து உய்வு பெறுதற்கென்றே படைக்கப்பட்ட இவ்வுலகம் வழிகெட நடந்து அநர்த்தத்தை விளைத்துக்கொள்ளுமாகில் விலங்கிட்டு வைப்பதுபோன்ற கரண களேபர விநாசம் செய்து தீரவேண்டுவதொன்றாதலால் அதற்காகச் சங்கரனைப் படைத்தனனாம். சங்கரன் என்ற சொல் (ஶம் கரோதீதி ஶங்கர: என்ற ஸம்ஸ்கிருத வ்யுத்பத்தியினால்) நன்மை செய்பவனெனப் பொருள்படும். மேன்மேலும் கேடுகளை விளைத்துக்கொள்ளவொண்ணாதபடி கரணகளேபரங்களை ஒடித்துவைப்பதாகிற ஸம்ஹாரம் நன்மையேயாதலால் இது தோன்ற இங்கு 'உருத்திரனை' என்னாது '**சங்கரனை**' என்றார். ஆக விப்படி ஸ்ரீமந்நாராயணனொருவனே உத்பாதகன் என்றும், ப்ரஹ்மருத்ராதிகள் உத்பாத்யர்களே யென்றும் உண்மைப் பொருளுணர்ந்தால்

ஸர்வசேஷியான ஸ்ரீமந்நாராயணனைத் தவிர்த்துப் பிறிதொன்றையும் பரதெய்வமாகக் கொண்டாட வழியில்லை. ஆயினும், உலகத்தவர் இவ்வுண்மைப் பொருளுணரப் பெறாமையாலே நசித்துப் போகிறார்கள்; இதனை நாம் கல்வெட்டும் செப்பு வெட்டும் போலே பிரபந்தப் படுத்திப் பகர்வோமாயின் பலரும் தெளியலாகுமெனத் திருவுள்ளம் பற்றி 'இவ்வாழ் பொருளைத் திருவந்தாதிப் பிரபந்த முகத்தால் உங்கட்கு அறிவிக்கின்றேன்; ஸம்ஸாரத்தின் பொல்லாங்கையும் நான் சொல்லுகிற அர்த்தங்களின் அருமை பெருமைகளையும் ஆராய்ந்து, இவை நெஞ்சில் நின்றும் நழுவி மங்கிப் போகாதபடியாக உள்ளத்தே தேக்கிக் கொள்ளுங்கள்' என்று துடை தட்டி யுணர்த்துகிறார் பின்னடிகளில்.

இவ்வாழ்வார் ஆழ் பொருளை அறிவிக்கத் தொடங்கும்போதே '**அழிவித்தேனாழ்பொருளை**' என்று இறந்த காலத்தாற் கூறினது—தம்மைக் கொண்டு அறிவிக்க விரும்பிய எம்பெருமான் ஸத்ய ஸங்கல்பனாகையாலும், எம்பெருமானுடைய பரத்துவத்தைப் பற்றிப் பாசுரங்கள் பேசித்தலைக் கட்டியே தீரும்படியான தம் உறுதியினாலும் இப்பிரபந்தம் தலைக்கட்டியாய் விட்டதாகவே நினைத்தாம். இதனைத் தமிழர், தெளிவினால் எதிர்காலம் இறந்த காலமாகச் சொல்லப்பட்ட காலவழுவமைதி என்பர்.

இப்பாசுரம் முதலிய இருநூற்றுப் பதினாறு பாசுரங்களை [இரண்டு நூலாக] உதவியருளின இம்மஹான் தையில் மகத்தில் திருவவதரித்து நம்மை வாழ்வித்தருளினர்.

2. எம்பார்.

இவ்வாசிரியர் திருவவதரித்தது மழலை மங்கலத்தில். இவருடைய திருநாமம் ஸ்ரீகோவிந்த பட்டர் என்பது. உடையவர் யாதவ ப்ரகாஶரிடத்தில் வேதாந்த ச்ரவணம் பண்ணும் போது இவரும் உடனிருந்து அதிகரித்தவர். எம்பெருமானுடைய மாயையினால், இவர் சில காலம் சைவசமயப் பற்றுடையராய் காளஹஸ்திக்ஷேத்ரத்தில் சிவத்விஜராயிருந்துவந்து, "தேவு மெப்பொருளும் படைக்கப் பூவில் நான் முகனைப்படைத்த, தேவனெம்பெருமானுக்கல்லால் பூவும் பூசனையும் தகுமே." என்ற திருவாய்மொழிப்பாசுரத்தின் அழகிய பொருளை மாதுலரான பெரிய திருமலைநம்பி உபந்யஸித்தருளக் கேட்டு அப்போதே சைவப்பற்

றெழுந்து பகவத் பக்த சிகாமணியாய்த் திருமலைநம்பி திருவடிகளிலே ஆச்ரயித்துத் திருவிலச்சினையும் பெற்று, பிறகு உடையவர்க்கே அறுதியாக அர்ப்பணஞ் செய்யப்பட்டவர். திருமலை நம்பியின் பிரிவை ஆற்றகில்லாதவிவர் மீண்டும் அவர் திருமாளிகையேறச் சென்றவளவிலே “விற்ற பசுவுக்குப் புல்லிடுவாருண்டோ?” என்று சொல்லி அவ்வாசிரியர் தம்மால் மீண்டும் உடையவர் திருவடிக்கே அனுப்பப் பட்டனராதலால் ஓராண்வழி ஆசார்ய பரம்பரையில் எம்பார் உடையவர்க்கு அடுத்த ஆசிரியராயினர்.

“தந்நாமவஹநஞ்சைவ” என்றபடி ஆசார்யருடைய திருநாமத்தை வஹிப்பதும் சிஷ்யலக்ஷணமாதலால் இவர் எம்பெருமானாருடைய திருநாமத்தையே வஹிக்க விரும்பினர். திருநாமத்தின் ஐக்கியம் பலரும் மயங்குதற்கு ஹேதுவாகுமேயென்றெண்ணி அத்திருநாமத்தின் ஏகதேசவிகாரமாக எம்பார் என்பது இவர்க்குத் திருநாமமாக்கப்பட்டது. இவருடைய சிஷ்யரான பட்டர், எம்பாரென்கிற இத்திருநாமத்தை ‘எம், பார்’ என்று இரண்டு சொற்களாகப் பிரித்துக்கொண்டு தனியனிட்டருளின அழகு அற்புதமானது.

> ராமாநுஜபதச்சாயா கோவிந்தாஹ்வாநபாயிநீ |
> ததாயத்தஸ்வரூபா ஸா ஜீயாந்மத்விஶ்ரமஸ்தலீ ||

என்பது எம்பாருடைய தனியன். நிழலானது வ்யக்தியை விட்டு நீங்காதிருத்தல்போல இவர் எம்பெருமானார்தம் இணையடியை விட்டு நீங்காதிருந்தமைபற்றி ராமாநுஜபதச்சாயா என்னப் பெற்றிருந்தார். தாபாதுரர்களுக்கு நிழல் இளைப்பாறுமிடமாயிருப்பதுபோல ஸம்ஸார தாபதப்தரான தமக்கு [பட்டர்க்கு] இவ்வாசிரியர் இளைப்பாறுமிடமாக அமைந்ததனால் ‘எம், பார்’ என்று பிரித்துப் பொருத்தமாகப் பொருள் கொண்டவாற்றை ‘மத்விஶ்ரமஸ்தலீ’ என்ற சொல்லால் வெகு அழகாகக் காட்டினர்.

எம்பாருடைய ஜ்ஞாந பக்தி விரக்திகள் லோகவிலக்ஷணமாயிருக்கும். அருளிக் செயல்களிலே இவர் அருளிச் செய்யும் அர்த்த நிர்வாஹங்கள் இன்சுவையே வடிவெடுத்ததாயிருக்கும். திருவாய் மொழியில் மின்னிடை மடவார்கள் என்னும் பதிகத்தின் இரண்டாம் பாட்டின் அவதாரிகையில் ஈடு முப்பத்தாறாயிரப்

படியில் இவர் விஷயமாக அருளிச் செய்துள்ள சில ஸ்ரீ ஸூக்தி காண்மின் ;—

எம்பார்தாம் பாஹ்ய விஷயங்களில் ருசியில்லாமையாலே தார்த்த ஜ்ஞாநமின்றிக்கே யிருப்பர் ; இப்படியிருக்கையாலே ஸ்த்ரீகளுக்கு அஸாதாரணமான சிஹ்நங்கள் எங்ஙனே யிருக்கும்படி?’ என்று சிங்கப்பிரானைக் கேட்டருளினார் என்று ப்ரஸித்தமாயிருக்கும். இப்படியிருக்கிறவர் தாம் மின்னிடைமடவார் அருளிச் செய்யப்புக்கால் ‘இந்த ஸந்தியாஸி பிரட்டுப்பாடத் தொடங்கினார்’ என்பராம் பிள்ளையுறங்கா வில்லிதாஸர். இவருடைய பகவத் விஷயத்திலவகாஹநமிருக்கும்படி. ஒரு க்ஷேத்ர விஷயத்திலே நாலு நாள் வாஸநை பண்ணினார்கள். பேர விதூராயிராநின்றார்கள். அவ்வளவல்லவிறே ஸமஸ்த கல்யாண குணாத்மகனோடே நெடுநாள் வாஸநை பண்ணினார்க்கு இருக்கும்படி.

‘ஈச்வரன் முன்னே வந்து நின்றாலும் வா என்பாரையும் கிடையாத ஸம்ஸாரத்திலே, அவன் அல்பம் தாழ்த்தானென்று போ என்பாரைப் பெறுவதே!’ என்பர் எம்பார்.” என்பனவாம். இங்ஙனே எம்பாருடைய ஈடுபாட்டை விளக்கும் அருளிச் செயல் வியாக்கியான ஸ்ரீ ஸூக்திகள் பலபலவுள்ளன. சிலவற்றை ஈண்டெடுத்துக் காட்டுவோம் ;—

பெரியாழ்வார் திருமொழியில் (2—1.) * மெச்சூது சங்கமிடத்தானென்கிற அப்பூச்சிப்பதிகத்தை நம்பெருமாள் ஸந்நிதியில் ‘உய்ந்த பிள்ளை’ என்கிற அரையர் அபிநயிக்குமளவில் “அத்தூதநப்பூச்சி காட்டுகின்றான் அம்மனே அப்பூச்சிகாட்டுகின்றான்” என்ற விடத்திற்கு—கண்ணை இறுத்துவது, மயிரால் முகத்தை மறைத்துக் காட்டுவது முதலாகச் செய்யும் பயங்கரமான பால சேஷ்டைகளைக் கண்ணன் செய்வதாக அபிநயித்துக் காட்டினர். உடையவர் பின்னே எழுந்தருளியிருந்த எம்பார் அந்த அபிநயரீதியைக் கண்டு திருவுள்ளத்திற்குறை கொண்டு, தம் திருக்கைகளைத் திருத்தோள்களோடு சேர்த்துக் காட்ட, அரையரும் தாம் முன்னே அபிநயித்த ரீதியை விட்டு எம்பார் காட்டியது போலவே எம்பெருமான் திருத்தோள்களில் சங்கு சக்கரங்கள் தரித்துக் கொண்டிருப்பதை அபிநயித்தார். இதனால் ஏற்படுவதாவது-தூதனுய்த்தன்ஸௌலப்யத்தை வெளியிட்டு‘நம்மிலே

ஒருவன்' என்று இவ்வுலகத்தவர் கொள்ளும்படி யிருப்பவன், அவர்கள் அஞ்சும்படி சில காலங்களில் ஈச்வரத்வ சின்னங்களான சங்கு சக்கரம் முதலிய வற்றையும் காட்டுகின்றானென்பது ஸ்வாபதேசார்த்தமாம். இது எம்பாருடைய திருவுள்ளத்தில் தோற்றின அரும்பெரும் பொருள். அரையர், முதலில் ஸாமாந்யமாகவும் பிறகு இங்ஙனே விசேஷமாகவும் அபிநயித்தபடியை கோஷ்டியில் கடாக்ஷித்த எம்பெருமானார் இது எம்பாருடைய திருத்தமாகவேயிருக்க வேணுமென்று கருதி, உடனே பின்னே திரும்பிப் பார்த்து 'எம்பாரே! நீர் இருந்தீரோ?' என்றாராம்.

பெருமாள் திருமொழியில் (6—8.) "என்னை வருக வெனக் குறித்திட்டு" என்ற பாசுரத்தின் ஈற்றடி—"இன்ன மென் கையகத்தீங் கொருநாள் வருதியேல் என் சினம் தீர்வன் நானே" என்பது. கண்ண பிரானாலே வஞ்சிக்கப்பட்ட ஒரு ஆய்ச்சி 'கண்ணா! இச்சமயம் நீ தப்பிக்கொண்டு போனாலும் மற்றொரு சமயம் நீ என்கையில் அகப்படாமற் போகாய்; அப்போது நான் என் கோபத்தைத் தணித்துக் கொள்வேன்' என்பது இங்குவிஷயம்.

உய்ந்த பிள்ளை யென்கிற அரையர், நம்பெருமாள் ஸந்நிதியில் இப்பாசுரத்தை அபிநயிக்கும்போது கையாலே அடிப்பதும் காலாலே துவைப்பதுமாய் அபிநயித்தார். மறுபடியும் கண்ணன் ஆய்ச்சிகையில் அகப்படும்போது அவனை இவள் கையாலடித்தும் காலால் துவைத்தும் தன் கோபத்தைத் தணித்துக்கொள்வதாக அரையர் அபிப்ராயப்பட்டபடி. அப்போது கோஷ்டியிலெழுந்தருளியிருந்த எம்பார், இங்ஙனே அரையர் காட்டிய அபிநயத்தைக் கடாக்ஷித்து அரையர்க்கு ரஸிக்யம் போராதென்று திருவுள்ளம்பற்றி 'அந்தோ! அப்படி அவள் செய்தாளாகில் ஈச்வரஸ்ய ஜ்ஞாநம் மோஹிகாதாய நம்' என்றிருக்கிற கண்ணபிரானுக்கு அது வருத்தமோ? அஃது அவனுக்கு ஸ்வாபாவிகமாகுமன்றோ; ஆகவே அதுவன்று கருத்து. கண்ணா! நீ மீண்டுமொருகால் என்பால் வந்தவாறே முகங்கொடாமல் முகத்தை மாறவைத்து என் கோபத்திற்குப் போக்கு வீடு செய்துகொள்வேன் காண்—என்பதாகவே கருத்துக் காட்டவேணுமென்று கொண்டு தாம் (எம்பார்) அவ்வாறாக முகத்தை மாறவைத்துக் காட்ட, அரையரும் ஸாவஜ்ஞராய் மறுபடியும் அங்ஙனே அபிநயித்துக் காட்டினர் என்பது ப்ரஸித்தம்.

நாச்சியார் திருமொழியில் (4—11.) "நீடு நின்ற நிறைபுகழ் ஆய்ச்சியர்" என்ற விடத்திற்கு, ஆச்சியார்க்கு நிறைபுகழாவது, கிருஷ்ணனை இன்னாள், நாலுபட்டினி கொண்டாள் இன்னாள், பத்துப்பட்டினி கொண்டாள் என்னும் புகழ்காணும்" என்பராம் எம்பார்.—நம்மைப்போலே உண்டியே உடையே உகந்தோடித் திரிந்து பழுதே பலபகலும் போக்காமல் முப்போதும் பகவத் விஷய சிந்தனையேயாய்ப்போது போக்குகிறார்கள் ஆய்ச்சிகள் என்ற காரணத்தினால் அவர்கட்குப் புகழ் நிறைந்திருக்குமென்று ஸாமாந்யமாகச் சிலர் பொருள் கொள்வாராம்; எம்பார் கூறும் பொருளாவது—(விவரிப்போம் கேண்மின்:) கண்ணபிரானது வரவை யமுனையாற்றங்கரையில் எதிர்பார்த்திருப்பார்கள் பல மாதர்: இவன் இப்படிப் பலபேர்களை எதிர்பார்த்திருக்குமாறு செய்துவிட்டுத் தன் மனத்துக்கினியாளான ஒருத்தியோடே கலந்திருந்து போதுபோக்கும். அப்போது எதிர்பார்த்திருந்த மாதர்கள் 'இனி அவன் இங்கேற வருவானாகில் முகங்கொடுத்து ஒரு பேச்சும் பேசக்கடவோமல்லோம்' என்று ஸங்கல்பஞ் செய்துகொண்டு அளவு கடந்த ரோஷத்துடனிருப்பார்கள். பிறகு தனக்கு ஒழிந்த போது ஒருநாள் கண்ணன் அளவிறந்த அன்பு பூண்டவன்போல ஆடிப் பாடிக்கொண்டு அவர்கள் முன்னே வந்து நிற்பன். அப்போது அவர்கள் தாங்கள் முன்பு செய்துகொண்ட ஸங்கல்பத்தின்படியே முகங்கொடாமலேயிருப்பார்கள். அப்போது கண்ணன் கண்ணீர்விட்டழுவதும் காலில் கும்பிடுவதுமாய் ஊணுமுறக்கமுமின்றியே பல நாட்களளவும் அவர்களது வீட்டைவிட்டுப் போராதே இடைகழித் திண்ணையிலே கிடந்துபடுவன். இப்படி நாலுநாள் பட்டினி கிடந்தபிறகு ஒருத்தி மனமிரங்கி முகங்கொடுப்பள். மற்றொருத்தி அவ்வளவிலும் மறம் மாறாதே இவன் எட்டுநாள் பட்டினிகிடந்த பின்பு முகங் கொடுப்பள். மற்றுமொருத்தி அவ்வளவிலும் ஊடல் தீராதே இவன் பத்துநாள் பட்டினி கிடந்தபின் முகந்தருவள். ஆக இங்ஙனே பல பல நாள் பட்டினி கிடந்தாகிலும் அவ்வாய்ச்சிகள் பக்கலிலே இவன் முகம் பெற நினைப்பது, அவர்களிடத்துள்ள தேஹ குணம் ஆத்ம குணம் முதலியவற்றாலான வைலக்ஷண்யத்தைப்பற்றவாம். இதனால் அவர்களுடைய புகழ் வீறு பெறுமாயிற்று.

இங்ஙனே இவ்வாசிரியர் ஆங்காங்குப் பரமரஸமயமான பொருள்களைப் பணிப்பது அருளிச்செயல் வியாக்கியானங்களில் அவகாஹித்துக் காணவுரியது. இவருடைய திருவடிகளிற் பழகின பெருமையினால்தான் பட்டர் ஸ்ரீவாஸூக்துஸுவ்யஸ்ரீவம்போலே மிகவு மொளிமல்கினர். இவரது திருவவதாரம் தையிற் புநர்வஸுவில்.

3. கூரத்தாழ்வான்.

'எம்பெருமான் வைபவத்தைப் பேசித் தலைக்கட்டலாம், எம்பெருமானார் வைபவத்தைப் பேசித் தலைக்கட்ட முடியாதென்பர், ஆண்டான் எம்பார் முதலானோர். 'எம்பெருமானார் வைபவத்தைப் பேசித் தலைக்கட்டலாம், ஆழ்வான் வைபவத்தைப் பேசித் தலைக்கட்டமுடியாது' என்பர் ஆசிரியர்களனைவரும்.

இவ்வாசிரியரோடு ஒப்பிடக் கூடியவர்களும் இவர்க்கு மேம்பட்டவர்களும் முன்னு மவதரித்ததில்லை, பின்னுமவதரிக்கப் போகிறதில்லை. புருஷகுணங்க ளெல்லாவற்றினுஞ் சிறந்த ஜீவ காருண்யம் ஆசார்யபக்தி பகவத்பக்தி விரக்தி அப்ரதிமபாண்டித்யம் ஸத்கர்மாநுஷ்டாநம் முதலிய எண்ணில் பல குணங்கட்குப் பிறப்பிட மென்னவமைந்த இவ்வாசிரியரது திருக்குணங்களில் சிலவற்றை இங்கெடுத்துரைப்போம்.

இவர், தமக்கிருந்த விசேஷ ஸம்பத்துக்களை யெல்லாம் துறந்து, இராமானுசனடிக் கீழ்ப்புகுந்து வாழுங்காலத்திலே, இராமானுசன், திருக்கோட்டியூர் நம்பி திருவடிகளிற் சென்று பரமப்ரயாஸங்கள்பட்டு, சரம ச்லோக பரமரஹஸ்யார்த்தத்தை உபதேசிக்கப்பெற்று மீண்டு மடத்திற்கு எழுந்தருளினவளவிலே, ஆழ்வான் உடையவர் ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டுநிற்க, உடையவரும் 'வாராய் ஆழ்வான்! சரமச்லோக பரமரஹஸ்யார்த்தத்தை நம்பிகள் எனக்கு உபதேசித்தருளி, இவ்வர்த்த விசேஷத்தை ஒருவர்க்கும் செவிப்படாதபடி பேணிக் கொண்டிருக்குமாறு நியமித்தருளினபோது, பரமபாகவத சிகாமணியான ஆழ்வானுக்கு மாத்திரம் அடியேன் இதனை வெளியிடாதிருக்கமுடியாதே' என்று நான் விண்ணப்பஞ் செய்ய, 'ஆழ்வானுக்கு இவ்வர்த்தம் கேட்க அதிகாரமுண்டேயாகிலும் பல்வகையாலும் அவருடைய அத்யவஸாயத்தைப் பரீக்ஷித்தறிந்து ஓராண்டு சுச்ரூஷைகொண்டு

சொல்லும் என்று நியமித்தருளினார் என்று ஆழ்வானை நோக்கி அருளிச் செய்ய, அது கேட்ட ஆழ்வானும் * மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள் * என்ற பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி ஒருஸம்வத்ஸரம் இவ்வுடலுக்கு நிலையுண்டோ இல்லையோ வென்று வியாகுலப்பட்டு ஆலோசித்து, அவ்வர்த்த விசேஷத்தைப் பெற்றாலல்லது தரித்திருக்க முடியாத பேராசையாலே 'ஆசார்யனது திருமாளிகைவாசலிலே ஒரு மாஸம்பட்டினிகிடக்கை ஸம்வத்ஸர சுச்ரூஷையோடொக்கும்' என்று சாஸ்த்ர முண்டென்றறிந்து அங்ஙனமே மாஸோபவாஸம் கிடந்து அவ்வர்த்தத்தைப் பெற்றார் என்று ப்ரஸித்தம்.

திருவரங்கத்தமுதனார், உடையவர் நியமனப்படி ஆழ்வான் திருவடிகளில் அந்தரங்கராய்க் காலக்ஷேபஞ் செய்து வருகிற நாளிலே அவருடைய தாயார் ஆசாரியன் திருவடியடைய, தசாஹம் கடந்த பின்பு 'ஏகாஹத்திற்கு நிமந்த்ரணஸ்வாமியாக ஒருவரை நியமித்தருளவேணும், என்று உடையவர் திருவடிகளிலே விண்ணப்பஞ் செய்ய, உடையவரும், ஆழ்வானை நோக்கி 'நீர் போம்' என்ன, ஆழ்வானும் சிறிதும் முகம் கன்றாமல் அப்படியே எழுந்தருள, அமுதனாரும் 'ஆசாரியர் இங்ஙனே எழுந்தருளப் பெறுவதே!' என்று தாழ்ந்து தரைப்பட்டு ஸேவித்து ஏகாஹ ச்ராத்தத்திலே அமுது செய்வித்தார். நம்பெருமாள் ஸந்நிதித் திறவுகோல் அமுதனாருடைய ஆதீநத்திலிருந்தபடியால் அதை உடையவர் உபாயமாகக் கைப்பற்ற விரும்பியே ஆழ்வானை ஏகாஹத்தில் புஜிக்க நியமித்தார். ஸகலம் ஸம்பூர்ணம் சொல்லும் ஸமயத்தில் ஆழ்வான் கோயில் திறவுகோலை நல்விரகாலே ஸ்வீகரித்தருளி, அதைக் கொணர்ந்து, உடையவர் திருவடிவாரத்திலே ஸமர்பிக்கலானார். பின்பு ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம் என்று கடல் சூழ்ந்த மண்ணுலகமுற்றும் போற்றும்படி எம்பெருமானார், நம்பெருமாள் ஸந்நிதிக் கைங்கரியங்களைப் பரிஷ்கரித்தருளினார் என்று ப்ரஸித்தம்.

எம்பெருமானார் ப்ரஹ்ம ஸூத்ரத்துக்கு ஸ்ரீ பாஷ்யம் செய்தருளி, ஆளவந்தார் திருவுள்ளக் குறையை நீக்கக் கருதி, அதற்காக போதாயநவ்ருத்திக்ரந்தத்தைக் கடாக்ஷிக்கத் திருவுள்ளமாய் அந்த ஸ்ரீ கோசம் காச்மீர மண்டலத்தில் சாரதா பீடத்திலுள்ளதென்றுணர்ந்து ஆழ்வானுடன் அங்கேற எழுந்தருளின

வளவில், ஆழ்வான் அந்த வ்ருத்திக்ரந்தத்தை வெகு விரைவில் முழுதும் கடாக்ஷித்து ஹ்ருதயத்திலே தரித்துக் கொண்டார். பிறகு கோயில் வந்து சேர்ந்து, உடையவர், ஆழ்வானை உசாத துணையாகக் கொண்டு ஸ்ரீ பாஷ்ய மருளிச்செய்து தலைக்கட்டினார். உடையவர் அருளிச் செய்த திவ்ய க்ரந்தங்களெல்லாம் ஆழ்வான் பட்டோலை கொண்டவை என்று பெரியோர் கூறுவர். ஸ்ரீ பாஷ்யத்தில் "இதி ஸ்ரீமத்ராமாநுஜ விரசிதே ஶாரீரக மீமாம்ஸா பாஷ்யே" இத்யாதி வாக்கியங்களை ஸ்ரீ பாஷ்யத்தோடொப்பப் பெரியார் அநுஸந்தித்து வருவது ஆழ்வான் ஸ்ரீ ஸூக்தியென்றேயாம்.

எம்பெருமானார் கோஷ்டியில் உபய வேதாந்த க்ரந்த காலக்ஷேபம் நடவாநிற்க, 'ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வ சேஷத்வங்களில் எது அந்தரங்க நிரூபகம்?' என்று ப்ரஸ்தாவம் நிகழ, எம்பெருமானார் ஸர்வஜ்ஞராய் எழுந்தருளி யிருக்கச் செய்தேயும் இதன் நிஷ்கர்ஷத்தை ஆசார்ய முகேந வெளியிடுவிக்க வேணுமென்று திருவுள்ளம்பற்றி ஆழ்வானைத் திருக்கோட்டியூர்நம்பி பக்கல் அனுப்ப, ஆழ்வானும், நம்பி பக்கல் விடை கொண்டு ஆறு மாஸம் காத்திருந்து ஜ்ஞாத்ருத்வத்திற் காட்டில் சேஷத்வமே அந்தரங்க நிரூபகமென்னும் மஹார்த்தத்தைப் பெற்றுவந்தார். இங்ஙனே இப்பேராசிரியரின் மஹா வைபவங்கள் விரிப்பிற் பெருகும். ஸமய விசேஷங்களில் மற்றவற்றை வெளியிடுவோமாக.

அருளிச் செயல் விசேஷார்த்தங்கள்.

ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்

[முன் தொடர்ச்சி.]

பெரிய திருமொழியில் (5-1-6) "மின்னினன்ன நுண் மருங்குல் வேயேய்தடந்தோள் மெல்லியற்கா, மன்னு சினத்த மழவிடைகள் ஏழன்றடர்த்த மால்." என்ற விடத்துப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில்—"கருமாறி பாய்ந்தும் அணைய வேண்டுமாய்த்து (நப்பின்னைப் பிராட்டியின்) வடிவழகு" என்கிற ஸ்ரீஸூக்தியுள்ளது. கருமாறி பாய்தல் என்பது காஞ்சீபுரத்தில் காமாட்சியம்மனாலயத்தில், குளத்திலே முற்காலத்து நாட்டப்பட்

டிருந்த மிகக் கூர்மையான இரண்டு சூலங்களினிடையே குதித்தலாம். பண்டைக் காலத்தில், ஏதேனும் இஷ்ட ஸித்திபெற வேண்டுவார்க்குப் பந்தயமாக விதிக்கப்படுஞ் செயல் இது என்பர் பெரியோர். இடையில் ஓரடி அவகாசமே உள்ளதாம்படி நெருக்கமாக இரண்டு சூலங்கள் தடாகத்தின் நடுவில் நடப்பட்டிருந்தன. இஷ்டஸித்திபெற வேண்டுவார், மேல் மண்டபத்திலிருந்து அந்தச் சூலங்களினிடையே குதித்து மூழ்கி யெழுந்திருக்கவேண்டும். குடல் கிழிந்து சாகவேண்டும்படியான இவ்வருந்தொழிலை வெகு சாதுரியமாகச் செய்து அபாயமொன்றுமின்றியே உயிர்தப்பி இஷ்டஸித்தி பெறுமவர்கள் மிகச்சிலரேயாவர். மிகக் கடினமான இச்செயலுக்குத் துணிந்தார்களென்றால், இதனால் அவர்கள் பெற விரும்பிய பொருள் மிகச் சிறந்ததென்பதும், 'கிடைத்தால் அப்பொருள் கிடைக்கட்டும், இல்லையேல் உயிரே ஒழியட்டும்' என்று துணிவு கொள்ளுதற்கீடான பெருமேன்மை வாய்ந்ததென்பதும் விளங்குமன்றோ? அப்படியே, நப்பின்னை திருமேனியின் சிறப்பை விளக்கவந்தது இவ்வாக்கிய மென்க. கருமாறி—கர்ப்பத்தை மாற்றும்படியான—(குடலைக் கிழிக்கும்படியான) யந்த்ர விசேஷம் என்றபடி.

(5-5-1) "வெருவாதாள்வாய் வெருவி வேங்கடமே வேங்கடமே யென்கின்றாளால்."—இது திருவரங்கத் திருப்பதி விஷயமான பதிகத்தின் முதற் பாசுரம். இப்போது திருவரங்கநாதன் விஷயமாக ப்ராவண்யம் செல்லாநிற்க, திருவேங்கட மலையின் ப்ரஸ்தாவத்திற்குக் காரணமில்லையே; 'வேங்கடமே வேங்கடமே யென்கின்றாளால்' என்றன்றோ மூலமிருக்கின்றது; இது திருவரங்கப்பதிகமே யன்றித் திருவேங்கடப்பதிகமன்றே. அப்படியிருக்க 'வேங்கடமே வேங்கடமே' என்கைக்கு நிதானமேது? என்று சங்கை பிறக்கக் கூடும்; இங்குப் பெரிய வாச்சான் பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி காண்மின்;—"[வெருவாதாளித்யாதி.] பெரிய பெருமாளுடைய இங்குத்தை வரவாறே பிடித்து ஆற்றாமைக் குடலாம்படி காணும் பிறந்த ப்ராவண்யாதிஶயம்." என்பதாம். இதனை விவரிப்போம்;—மேலுலகத்திலுள்ள ஸ்ரீவைகுண்ட திவ்ய நகரமே இம்மண்ணுலகில் திருவரங்கமாகவும், அவ்விடத்துள்ள விரஜா நதியே திருக்காவேரியாகவும், பரவாஸுதேவனே ஸ்ரீரங்க நாதனாகவும் அவதரித்ததாக மஹர்ஷிகளும்

நம் பூருவர்களும் கூறுவர்கள். பரமபதநாதன், திருவரங் விரைவில் வந்து புகுவதற்காக, அங்கு நின்றும் பயண மெடுத்துவிட்டுஎழுந்தருளுமடைவிலே திருவேங்கட மலையிலே சிறிது இளைப்பாறி நின்று, பின்பு திருவரங்கத்திலே வந்து சாய்ந்தருளினதாக நிர்வஹிப்ப தொருபுடை யுண்டு: திருப்பாணாழ்வாரருளிச் செய்த அமலனாதிபிரான் திவ்ய ப்ரபந்தத்தில் முதற் பாசுரத்தில் "விண்ணவர்கோன் விரையார் பொழில் வேங்கடவன்" என்றார். இதனால், விண்ணவர் கோனான தன்மையில் நின்றும் வேங்கடவனான தன்மைக்கு வந்தமை சொல்லிற்று. அதிலே மேல் மூன்றாம் பாசுரத்தில் "மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான். அரங்கத்தரவினணையான்" என்றார். இதனால், திருவேங்கடமலையில் நின்றும் திருவரங்கத்திலேவந்து பொருந்தினமை சொல்லிற்று. மேலும், திருவேங்கடமுடையான் நின்ற திருக்கோலமாக ஸேவை ஸாதிக்கின்றமையால் 'வெளிப்பயணத்திற்காக நிற்கின்றார் போலும்' என்று தோற்றக் கூடியதாதலாலும், திருவரங்கத்தில் பள்ளிகொண்ட திருக்கோலமாக ஸேவை ஸாதிக்கின்றமையால் 'இனி எங்கும் பயணம்போக நினைவில்லை' என்று தோற்றக்கூடியதாதலாலும், விண்ணுலகில் நின்றும் மண்ணுலகிற்கு எழுந்தருளுமடைவிலே திருமலையிலே நின்று, அங்கிருந்து திருவுள்ளத்திற்குப் பாங்கான விடமாக உபய காவேரீமத்யம் நோக்கிக் கோயிலிலேவந்து சாய்ந்தருளினனென்று நிர்வஹிப்பதில் பொருத்தமும் ஸ்வாரஸ்யாதிசயமுமுள்ளது. ஆக, திருவரங்கத்திற்கும் மூலகந்தம் திருமலையாதலால் இப்போது திருவரங்கத்திலே கலியனுக்குண்டான ப்ராவண்யாதிசயம் அதற்கு வேர்ப்பற்றான திருமலையளவும் சென்றதனால் 'வேங்கடமே வேங்கடமே' என்றது பிரகிருதத்திற்குப் பொருந்தவற்றே.

(5-6-2) "திருத்தண்காலூரானைக் கரம்பனூருத்தமனை." உத்தமனை என்ற இவ்விடத்துப் பெரியவாச்சான் பிள்ளை யருளிச் செய்கிறார்—"வழிக் கரையிலே திருவாசலுக்கு ஒரு கத விடாதே வந்துகிடக்கிறவனை" என்று. இதற்கு அரும்பதவுரைகாரர்—"எல்லாரும் நடக்கும் வழி யாகையாலே ஸேவிப்பார் மிகுகையால் கத விட அவஸரமில்லை யென்று கருத்து" என்றருளியுள்ளார். இங்கே பெரியவாச்சான் பிள்ளை திருவுள்ளம் பற்றின பொருளை அஸ்மதாசார்யர் அருளிச்செய்யக் கேட்டிருந்தபடி யெங்ஙனே

யென்னில்; ஆசாரியர் காலத்தில் உத்தமர்கோவில் ஸம்பத்ஸம்ருத்தி குறையுற்ற திவ்யதேசமாக இருந்ததனால் திருக்கோபுரவாசலுக்குக் கதவு ஏற்படாதிருந்தது. அதனை ஸௌலப்ய பரமகாஷ்டைக்கு அநுகுணமாக ஆசிரியர் திருவுள்ளம்பற்றி வாடூக்தியாக அருளிச்செய்தபடி. இத்தலத்து எம்பெருமானுக்கோ உத்தமனென்று திருநாமம்! பரத்வத்தை மறைத்து ஸௌலப்யத்தை மிகவும் பொலிவுறச் செய்வதற்கே அர்ச்சாவதார ஸந்நிதானமாதலால் ஸௌலப்யத்தில் ஏற்றம் காட்டினாலல்லது உத்தமனென்ற திருநாமத்திற்கு ஸ்வாரஸ்யமிராது. மற்றைத் திருப்பதிகளில் கோபுரவாசலுக்குக் கதவு இருப்பதனால் அது மூடப்பட்டிருக்குங் காலங்களில் பக்தர்கள் பகவத் ஸேவையை இழக்க நேருமாதலால் ஸௌலப்யம் சிறிது குறையுற்றதாம். இத்தலத்திலோவென்னில், அத்தகைய குறைக்கும் அவகாசமறக் கதவுதானே யில்லாமையினால் இவ்விடத்துறையும் பெருமானுக்கே உத்தமனென்ற திருநாமம் நன்குபொருந்தும் என்று இங்ஙனே சமத்காரமாகப் பெரியவாச்சான் பிள்ளை திருவுள்ளம்பற்றி அந்த ஸ்ரீஸூக்தி யருளிச் செய்தபடி.

(5-10-10) "நறைசெய் பொழில் மழை தவழும் நந்திபுர விண்ணகரநண்ணி யுறையும்" என்ற பாசுரத்தில் "உறைகோள் புகராழி" என்றுளது. திருவாழியாழ்வானுக்கு 'உறைகொள்' என்று விசேஷணமிட்டிருக்கின்றதே, இதற்கு என்ன கருத்துக் கூறலாமென்று அறிஞர்காள்! ஆராய்ந்து பாருங்கள். இதனை இயற்கை யடைமொழியாகக் கொள்ளலாமென்றே பலரும் கருதுவர். பெரியவாச்சான்பிள்ளை யருளிச் செய்கிறார் காண்மின்;— "விரோதி நிரஸநத்துக்குத் திருமங்கையாழ்வார் கையில் வேலுண்டான பின்பு, திருவாழி உறையிட்டிருக்குங்காண்" என்று. இப்பாசுரத்தில் மூன்றாமடியில் "கறைவளரும் வேல்வல்ல கலியன்" என்றிருப்பதனால், அதை நோக்கி இப்பொருள் பணித்தது, மிக்க சுவையுடைத்து. கறைவளரும் வேல்வல்லவனான கலியனே விரோதிகளை வென்று உலகத்தை ஆள்கின்றமையால் எம்பெருமானது திருவாழிப் படைக்குக் காரியமொன்று மில்லையாக, அது உறையிலிட வேண்டிற்றாயிற்றென்கை. ஆழ்வாருடைய வேல் அங்ஙனம் உறையில் கிடக்க முடியாது: சத்ருநிரஸநம் பண்ணின கறைகழுவுதற்குங்கூட அவகாசமில்லாமை தோன்றக் "கறை

வளரும் வேல்'' என்றதனால் அது எப்போதும் வியாபரித்த படியே யிருக்குமாம்.

(6-3-3.) "கோனே குறுங்குடியுள்குழகா திருநறையூர்த் தேனே!'' என்ற விடத்துத் திருநறையூர்த் தேனே! என்பதற்குப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி—"பட்டர், திருநறையூர்ப் பெருக்குச் சினையாறு படுகிறதுகிடாய்! என்றருளிச் செய்வர்'' என்பது. இதன் அழகிய கருத்தைக் கேண்மின்;— திருவிண்ணகர்த் திருப்பதிவிஷயமான இத்திருமொழி முடிந்தவுடனே "கண்ணுஞ் சுழன்று'' என்ற திருமொழி தொடங்கிச் "சினவிற் செங்கண்'' என்ற திருமொழி யளவும் நூறுபாசுரங்களினால் திருநறையூரை அநுபவிக்கப் போகிறாரே! ஆழ்வார்; அதற்குள்ளே இப்போது 'திருநறையூர்த்தேனே!' என்று அத்திருப்பதியைப்பற்றி ப்ரஸ்தாவம் செய்வானேன்? என்று நஞ்சீயர் போல்வார் பட்டரைக் கேள்வி கேட்டனர்போலும். அதற்குப் பட்டருளிச் செய்த மறுமாற்றமாமிது: ஆற்றில் பெரு வெள்ளம் வருவதற்குமுன்னே ஆறு பொசிந்து காட்டுவது வழக்கம்; அதுபோலே நூறு பாசுரங்களினால் திருநறையூர்த் திருப்பதி யநுபவமாகிற மஹாப்ரவாஹம் ஸமீபித்திருப்பதனால் அதற்கு முன்னடையாளமாகத் திருநறையூர்த்தேனே! என்று இவ்வாறு பொசிந்து காட்டுகிறது கிடாய் என்கை.

(6-3-4.) "சாந்தேந்து மென்முலையார் தடந்தோள் புணரின்ப வெள்ளத்தாழ்ந்தேன்'' என்ற விடத்து வியாக்கியான ஸ்ரீஸூக்தி:—"விஷயங்களைவிட்டு இவ்வருகே போந்தவிவர் வீதராகர்க்கும் ஸ்ப்ருஹை பிறக்கும்படி சொல்லுவானென்? என்று பட்டர்க்கு விண்ணப்பஞ் செய்ய * முரிக்குக் கிழக்கு * என்னும் போதும் இங்ஙனல்லது இராதுகாண் திருமங்கையாழ்வார் நாவீறு—என்றருளிச் செய்தார்'' என்று. (இதனை விவரிப்போம்.) விஷய போகங்களைக் காறியுமிழ்ந்து பகவத் விஷயத்திலே வந்து சேர்ந்த ஆழ்வார் ஹேயமான அவ்விஷயங்களைப் பற்றிச் சாந்தேந்து மென்முலையார் என்றும் தடந்தோள் புணரின்ப வெள்ள மென்றும் விரக்தர்கட்குங்கூடக் காமம் பிறக்குமாறு ஏதுக்கு வருணித்துப்பேசுகிறார்! என்று சிலர் பட்டரைக் கேட்டார்களாம்; அதற்கு அவர் அருளிச் செய்ததாவது—உலகத்தில் வாக்குப் படைத்தவர்கள் பலவகைப்படுவர்; சிலர் உள்ளதை

உள்ளபடியே பேசுவார்கள்; சிலர் சிறந்த விஷயத்தைப்பற்றிப் பேசத் தொடங்கினாலும் தங்களுக்கு வாக்குத்திறமைபோராமையினால் குறைபடப் பேசுவார்கள்; சிலர் நாவீறுடைமையினால் அற்ப விஷயங்களையும் கனக்கப் பேசுவார்கள். இங்ஙனே, பேச்சில் பல வகைகளுண்டு. பேசுகிறவர்களின் வாக்கின் போக்கை அநுஸரித்து, விஷயங்கள் சிறுத்துப் போவதும், பெருத்துப் போவதுமுண்டென்பது லோகஸித்தம். திருமங்கையாழ்வாருடைய நாவீறு, பரம விலக்ஷணமாகையால் அற்ப விஷயங்களைப் பற்றிப் பேசும்போதும் பெருக்காறு பெருகுமாபோலேயிருக்குமேயன்றி அவ்விஷயங்களின் சிறுமைக்குத் தக்கபடி சிறுத்திராது இவருடைய சொற்போக்கு. "வாணிலாமுறுவல் சிறுநுதல் பெருந்தோள் மாதரார் வனமுலை'' என்றாப்போலே பெருத்திருக்கும்: ஆகவே, விஷயங்கள் அற்பமென்பதில் தடையில்லை. ஆழ்வாருடைய வாக்கு, கனமிடுக்குடையதாதலால் அற்ப விஷயத்தையும் கனக்கப் பேசுகின்றது. [முரிக்குக்கிழக்கு என்னும்போதும் இத்தியாதி. முரியாவது அணை; அதற்குக் கீழ்ப்பட்ட ஜலம் கழிவடை நீராய் அஸாரமாயிருக்குமென்று கொண்டு, அஸாரமென்னும் பொருளில் 'முரிக்குக் கிழக்கு' என்று பிரயோகிப்பது மரபு. "முரிக்குக் கிழக்கு என்னும் போதும்'' என்ற ஸ்தானத்தில் "மேற்கு கிழக்கு என்னும்போதும்'' என்று பாடங்கொள்வார் சிலருளர்; அதாவது, இன்னவிடம் மேற்கு, இன்னவிடம் கிழக்கு என்று ஒருவர் சொல்ல வேண்டில், அதில் ஒரு வர்ணனைக்கு மிடமின்றியே' மேற்கு கிழக்கு' என்றே சொல்ல வேண்டியதாகும். ஆனால்அதனையே திருமங்கை யாழ்வார் வாக்கினால் சொல்வதா யிருந்தால் விலக்ஷணமாகவே யிருக்குமென்கை. இப்பாடம் ஸம்ப்ரதாயம் வல்ல பெரியோர் கொள்ளு மதன்று.

இந்தப் பாசுரத்தின் வியாக்கியானத்திலேயே மற்றொரு வாக்கியமும் குறிக் கொள்ளத்தக்கதுண்டு;—"கிடாம்பியம்மாள் சிறியாண்டான் பெருமாள் பணித்தானாகப் பலகாலும் சொல்லும்: 'நாம் சொல்லுகிற வாசகங்களே யன்றோ! பட்டரும் வ்யவஹரிக்கிறது, என்றிருக்க வொண்ணாது. அங்குத்தைக்கு ஏற்றமுண்டு. முன்னே நின்ற தூணை நாம் தூணென்றவாறே சிரர்யாய்த் தோற்றும்; பட்டர் சொன்னவாறே தளிருப் முறியுமாய்த் தோன்றும்'' என்று.

(6—3—9.) "சொல்லாய் திருமார்பா! உனக்காகித் தொண்டு பட்ட நல்லேனை, வினைகள் நலியாமை நம்பு, நம்பீ!" என்ற விடத்து, பட்டருடைய ஐதிஹ்யம் ஒன்றுண்டு: அதாவது- ஒரு நாள், அழகிய மணவாளன் வேட்டைத் திருநாளுக்காக ஓர் ஆற்றங்கரையில் எழுந்தருளியிருந்தார். அங்கே பல ஸ்ரீவைஷ்ணவர்களும் தாமுமாய் பட்டர் எழுந்தருளியிருந்து பெருமாள் வடிவழகிலே யீடு பட்டு அழகிய ஸ்ரீஸூக்திகளை அருளிச் செய்து கொண்டிருக்கையில், சில அரஸிகர்கள் வந்து 'ஸந்த்யா காலமாயிற்று' என்று விண்ணப்பஞ் செய்தார்களாம்: ஸந்த்யா வந்தநம் அநுஷ்டிக்க வேண்டுமாகையாலே அதற்கு இடையூறாயிருக்கும் இவ்வுபந்யாஸத்தை நிறுத்தியருளவேணுமென்பது அவர்களுடைய கருத்துப் போலும். அப்போது பட்டர் 'நாம் பெருமாளழகிலே துவக்குண்டு இன்றொரு நாள் அநுஷ்டாநத்தில் சிறிது விளம்பித்தோமென்றால் யமனுடைய ஓலையிலே இது ஒரு குற்றமாக ஏறமாட்டாது காணும்; * உனக்காகித் தொண்டு பட்ட நல்லேனை வினைகள் நலியாமை நம்பு நம்பீ! * என்று திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பாசுரம் அறியீர்களோ? அவனுக்காகத் தொண்டுபட்டுப் போது போக்குமவர்களை வினைகள் நலியுமோ? இத்யாதிகள் அருளிச் செய்தாராம். (இவ்வைதிஹ்யம் திருவாய் மொழியில் 10—2—1 * கெடுமிடராய வெல்லாம் * என்ற பாசுரத்தின் ஈடு முப்பத்தாறாயிரப்படியில் காணத்தக்கது.)

வானமாமலை திருவத்யயந உத்ஸவம்

[தே. திருமலாசாரியார் வானமாமலை]

இந்த உத்ஸவம், ஸ்ரீ பாஞ்சராத்ராகமங்களிற் சொல்லியபடி தநுர்மாஸ (மார்கழிமாத)த்தில் உத்தாந ஏகாதஶியில் உபக்ரமித்து பத்துநாள், வடமொழி நான் மறைவாணர், குழாம் குழாமாய் வீற்றிருந்து; திருமுற்றம் தோறும் திரைகடலொலி யொக்க, வேத நான்கையும் விண்ணப்பம் செய்ய, திருவரங்கத்தே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் நம்பெருமாள் திருச்செவிசாய்த்துக் கேட்டருளும் நன்னாளில், உபகாரத்தில்,

மகிழ்மாறனுக்கு கடுத்தவராயினும், தாம், சரமபர்வ நிஷ்டரில் தலைவரானமை தோற்ற, ஆழ்வார்களிற் கடையராயவதரித்த மங்கை மன்னன், அரங்கனுக்கு அரணாக அநேக மதிள்களை கட்டி வைத்தும் திருப்தி பெறாமல் அவன்றனக்கு அரண், ஆழ்வார்கள் வாயிலாக அவதரித்த தென்மொழி மறைகளாகிற அருளிச் செயல்களே! என்றறுதியிட்டு, இருள் தருமா ஞாலத்தைத் தெருள் தருமா ஞாலமாக்கவல்ல தென்மொழி மறைகளையும் அத்யயந உத்ஸவத்தில் வடமொழிமறையோடொக்கத் திருச்செவி சாய்த்துக் கேட்டருள வேண்டுமென்று ப்ரார்த்தித்து, நம்பெருமாள் நியமநம்பெற்று, நல்லார் நவில்குருகூர் நின்றும் நாவீறனைக்கோயிலுக் கெழுந்தருளச் செய்து, தாம் இவ்விபூதியிலிருக்கும் நாளில் அவ்வுத்ஸவத்தை நடத்தி, அப்படியே ஆசந்த்ரார்க்கம், அநுஷ்டித்துப் போரும்படி ஆணையிட்டருளினார். அதன் பிறகு, அநேக காலம் அப்படியே நடந்து வரும் நல்லடிக்காலத்தில், ஆசார்யர்களில் அக்ரகண்யராய், ஆசார்யர்களேற்றம் அருளிச்செயலேற்றமறிவார்களிற் தலைவராய நாதமுநிகளவதரித்து ஏகாதசிக்கு முன் பத்து நாட்களில், இயற்பா தவிர மற்றை ஆழ்வார்களருளிச் செயல்களையும் பெருமாள் திருச்செவி சாய்த்துக் கேட்டருளச் செய்யத் திருவுள்ளம் பற்றி, அதிலும், நம் பெருமாளுடைய ராஜாதி ராஜத்வத்திற்கும், ஸௌகுமார்யத்திற்கு மநுகுணமாக, தேவகாநத்தில் இசையார் பாடலாக்கி விண்ணப்பம் செய்யும்படி ஏற்பாடு செய்தருளினார். அத்தையடியொற்றியே இன்றுவரை அப்படியே நடந்துவருகிறது. திருவரங்கம் பெரிய கோயிலைப் பின்பற்றியே மற்றை திவ்யதேஶங்களிலும் விபவாநுகுணமாக நடந்துவருகின்றது - அப்படி நடைபெற்றுவரும் கோயில்கள் பலவற்றிலும் ப்ரதாநமாய், பராங்குஶருடைய பரகதஸ்வீகாரத்திற்குப் பாங்கான ஔதார்யம் ப்ரவஹிக்கும் வானமாமலையில் விஶிஷ்டாத்வைதஸித்தாந்தப்ர்வர்த்தகாசார்யஸார்வபௌமரான ஸ்ரீராமாநுஜ அபராவதாரரான மணவாளமாமுநிகளின் அஷ்டதிக்கஜங்களில் அக்ரகண்யரா யெழுந்தருளியிருக்கும் ஸ்ரீஸ்வாமி, நடுநாயகரத்நம்போல முன்னணியில் முதன்மையாக வீற்றிருக்க தெருள் கோள் நான்மறை வல்லவர் பலர்வாழ், தெள்ளியார் திருநான்மறைகள் வல்லார்மலி தண்ஸ்ரீவரமங்கை, என்றும், பொய்யில் பாடலாயிரத்திற் புகழப் பெற்றதற்

இணங்க, தென்மொழிக ளாயிரமும் நான்மறை வல்லனக்கார் நல்வேதியரிருநூறு திருநாமங்கள் விநீத பாவத்துடன் பினணியில் பேரோலக்கமாயிருந்து, திவ்யப்ரபந்தங்களை, பாஹோஷம் பாடஹேஊமன்றியில் ஏககண்டராய் பெருவிசும்பில் ஸாமகாநம் பண்ணும் பேரறிவாளர் குழாத்தின் பேரொலியைப் போல, பரவைத்திரைபோல் முழங்க, கோயிற்திருமொழி திருவாய்மொழிகளின் அமுதன்ன பாசுரங்களுக்கிணங்க, தேட்டருமமுதமான திருத்தளிகைகள் கண்டருளச் செய்து, அந்த ப்ரஸாதங்களை அறியக்கற்று வல்லார்களுக்கே, அஸாதாரணமாய் பஹூமானித்து விநியோகிப்பதையும், பகல்பத்து உத்ஸவத்தில் ஒவ்வொரு திருநாளிலும் அருளிச் செயல்களில் ஆழ்வார்கள் ஆர்வமுடன் அநுபவிக்குமவதார லீலைகளுக் கிணங்க, தெய்வ நாயகன், விலக்ஷணமான திருக்கோலம்பூண்டு, திருப்பல்லக்கிலும், ஆஸ்தானத்திலும் எழுந்தருளி, அனைவரும் கட்கண்ணால் கண்டுகளிக்குமாறு, ஸேவை ஸாதிக்குமழகையும், இருள்தருமா ஞாலமான இவ்விபூதியில், தெள்ளியார் திருநான்மறைகள் வல்லார்மலிதண் ஸ்ரீவரமங்கலநகரிலன்றி மற்றெங்கும் காணவரிதென்பது, கையிலங்கு நெல்லிக்கனியாகும்.

வானமாமலை எண்ணெய்க் காப்பு உத்ஸவமும் கனு உத்ஸவமும்.

[ஸ்ரீ. உ. வே. தே. திருமலாசாரியர் வானமாமலை]

ஆழ்வார்களால் மங்களா சாஸநம் செய்தருளப்பட்ட திவ்ய தேசங்களுள், திருநறையூர், ஸ்ரீ வில்லிபுத்தூர் வானமாமலை என்கிற மூன்று திவ்ய தேசங்கள், திருவுக்குத் தன்னரசு நாடாக முறையிடப் பட்டவைகள்.

அது தோன்ற இம்மாநகர்கட்கு அடைவே நாச்சியார் கோவில், நாச்சியார் திருமாளிகை, ஸ்ரீவரமங்கல நகர் எனப்பெயர் வழங்கி வருவதைக் காணலாம். இத்திவ்ய தேசங்களில் கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் நாச்சியார்கள், உத்ஸவாதிகளில் தங்களது ப்ராதாந்யம்தோன்ற, வீதியார எழுந்தருளுவதும், தக்கதோர் சான்றாகும். இத்தை யடியொற்றியே இத்தலங்களில்

நாச்சியார்களுக்கு அஸாதாரணமான நவராத்திரி, எண்ணெய்க்காப்பு, திருநக்ஷத்திர, உத்ஸவங்கள் சிறப்பாய் நடைபெறுகின்றதையும் காணலாம். இத்தலங்கள் மூன்றிலும் முக்யமான இந்த ஸ்ரீவரமங்கல நகரில், ஆண்டு தோறும் அழகாய் அநுஷ்டிக்கப்பட்டு வருகிற எண்ணெய்க் காப்பு உத்ஸவத்தின் வனப்பு, ஒரு தடவை கண்ணாரக் கண்டு ஸேவித்தநுபவித்த ஆஸ்ரிதர்களின் அகக்கண் புறக் கண்களை விட்டு அகலாததென்பது அநுபவத்தினாலேயே அறியத் தக்கதாகும்.

இந்த உத்ஸவம், மார்கழி மாதத்தில் தொடங்கப்பட்டு கனுவைக் கடை நாளாகக்கொண்டு ஏழுநாள் நடைபெறும். ஒவ்வொரு உத்ஸவமும் காலையில் ஸ்ரீவரமங்கல நாச்சியார், பல்கலனணிந்து பவளச் செவ்வாய் திருத்தி அன்னச் சிறகொத்த ஆடையுடுத்து, சவரி, நுணிமுடியிற்சாத்தின பூவோடு கண்ணாடி காணா நின்று கொண்டு, வெள்ளித் திருப்பல்லக்கில் வீதி வலம் வந்து, திருமஞ்சன மண்டபமெழுந்தருளி, விடாயாறி, திருவால வட்டம் திருவெண் சாமரங்கள் வீச, வேதியர்கள் வேதமோத, தூபம் கமழ, சுருளும் கனியும் கரும்பும், கணந்தொறும் கடைக்கண் சாத்தியருளி, திசை தொறும் நறுமணம் வீசுகின்ற தைலத்தை, தேவதேவ திவ்ய மஹிஷி திருமுடியில் திவ்ய கிங்கரிகள் சாத்துமாப்போலே, சீர் பொலிந்த அர்ச்சகர்கள், சுவர்ணமயமான கேசோபகரணங்களுடன், அளக பாரத்தின் ஸௌகுமார்யத்திற்குத் தக்கபடி மெள்ள மெள்ள சாத்த, சாத்திக்கொண்டு, கண்டவர் கண்குளிர, தங்கமயமான தோளுக்கினியானில் வீற்றிருந்து, பல வாத்யங்கள் முழங்க, பண்ணுலாவு மென்மொழியர் நண்ணிசை பாட பத்தி உலாவி யருளி, மண்டபத்தில் வீற்றிருந்து, அலங்காரத் திருமஞ்சனம் கொண்டருளி, மதுரமான தளிகைகள் அமுது செய்து, திரு ஆராதனம் கண்டருளி, திருப்பாவையை, செவிகளாலாரப் பருகி, தமக்குத் தகுதியான ஆஸநங்களில் வீற்றிருந்து வைணவ மங்கையூர், வர மங்கை நாயகியாரின் வைபவக்கும்மியடிக்க, வேதியர்கள், வேதங்களை வேலையில் மிக்கொலிப்ப, பதினெண் வாத்தியம் முழங்க வீதியார எழுந்தருளுவர். கடைசி நாளான கனுவன்று, மங்கையும், மணவாளனோடு மனமகிழ எண்ணெய் சாத்தி மஞ்சனமாடி, திரைகள் மலி சேற்றுத்தாமரையில் அடியரோடு அவபிரதம் குடைந்தாடி, ஆடையுடுத்து, அணிகலனணிந்து

தங்கத் திருப்பல்லக்கேறி மங்கள வாத்தியங்களின் ஒல வார் பாடலொலியும் பாரெல்லாம் பரவ, பாளை, கமுகு, வ பழவகை மலிந்த பரிசுடைப் பந்தலுடைய மங்கைமுனி மடத்திற்கு மாமுனி எதிர்கொள்ள, மன மகிழ்ச்சியுடன் எழுந்தருளி, ஊஞ்சலேறிவீற்றிருந்து, திருவாராதன முகந்தருளி, திருப்பாவை கேட்டு, பழ வகைகள், பதினெட்டுக்கறியமுது, ஏழோஹோரை, பெருந் திருப்பாவாடையுடன் பாலமுதும் அமுதுசெய்து, மாமுநியால் மகிழ்ந்து சமர்ப்பிக்கப்பெற்ற புதிதான பொற்சரிகை மலிந்த பொன்னுடை யுடுத்து, நாயகனும் தாமும் ஊஞ்சலாடி, தமதடியார்க்குப் போனகம் செய்த சேடமருளி, நிகரற்ற மகர கண்டிகையணிந்து, பக்ஷ்யவர்க்கம், பலவர்க்கம், பாலமுதும், அமுதுசெய்து பல்லக்கிலேறி, மாமுனி, ஆத்வாரம் மங்களாசாஸநத்துடன் எழுந்தருள, அவருக்கு மனமார்ந்து மரியாதைகள் செய்தருளி மணவாளனோடு, மங்களவாத்தியங்கள் முழங்க மன்னுபெரும் கோயில் புக, மாமுனியும், மலர்க்கண்ணுக் கிலக்காகும்வரை கண்குளிரக் கண்டிருந்து மனமகிழ்ச்சியுடன் மடமேற எழுந்தருள்வர்.

திருவிண்ணகர்

[ஸ்ரீ. உ. வே. ப. ஸ்ரீ. லக்ஷ்மி நரஸிம்மர் சாரியர்.
சிரோமணி தேவனார் விளாகம்]

"கண்ட வின்பம் துன்பம் கலக்கங்களும் தேற்றமுமாய்,
தண்டமும் தண்மையும் தழலும் நிழலுமாய்,
கண்டு கொள் தற்கரிய பெருமானென்னை யாள்வானூர்,
தெண் டிரைப்புனல்சூழ் திருவிண்ணகர் நன்னகரே"

(திருவாய்மொழி 6 ம் பத்து 3 ம் தசம் 2 வது பாசுரம்.)

என்று ஆழ்வார் திருவிண்ணகர் விஷயமாய் அநுஸந்தித்த பாசுரம். இந்தத் திருவாய்மொழியில் எம்பெருமானுடைய பரத்வத்தையும் ததநுபந்தியான விபூதியோகத்தையும் அநுபவிக்கிறார். ஆழ்வார் சிலவிடங்களில் முற்பட பரத்வத்தையும் பிறகு ஸௌலப்யத்தையும், சிலவிடங்களில் முற்பட ஸௌலப்யத்தையும், பிறகு ப்ரத்வத்தையும் அநுபவிக்கும் கிரமங்களில் கீழ்த் திருவாய்மொழியில் தான் முகங்கொடாது 'போகு நம்பீ' என்றிருக்கச் செய்தே

யும் அவன் தன்ஸௌலப்யத்தைக்காட்டி இவரோடுகலந்து இவரை வசீகரித்தபிறகு, எம்பெருமானுடைய பரத்வத்தையும், ததநுபந்தியான விபூதியோகத்தையும் அநுபவித்துப் பேசுகிறார். அதில் இத்திருவாய்மொழியில் பாசுரங்கள், முதல் இரண்டடிகளிலும் எம்பெருமானுடைய விபூதிகளைப்பேசி, பின் அடிகளில் அந்த விபூதி விசிஷ்டனாய் தன் விஷயத்தில் உபகரித்தவன் எழுந்தருளியிருக்கு திருப்பதியான திருவிண்ணகரைப் பேசி, அவனுடைய குண விசேஷத்தை அநுசந்தித்துத் தலைக்கட்டுவதாக இருக்கின்றன. அப்படி ஒவ்வொரு பாசுரத்திலும் திவ்யதேசத்தைப் புகழ்ந்திருக்கையிலும் இந்தப் பாசுரம் முக்கியமாய் அந்த திவ்யதேசத்தைப் புகழ்ந்து அநுபவிக்கிறதாக இருக்கிறது. அதெங்ஙனே ? எனில்.

முதல் பாசுரத்தில் "செல்வம் மல்கு குடி திருவிண்ணகர்" என்று தான் புகழ்ந்த திருவிண்ணகருக்கு, குடிகளால் ஏற்றமா ? அல்லது குடிகளுக்கு, திருவிண்ணகரால் ஏற்றமா ? என்று விமர்சித்தால் ஒன்றுக்கொன்று அதிசயாதாயகங்களாக இருந்தாலும், இவர் அநுசந்தாநத்தில் எம்பெருமானுட்பட குடிகளுக்குக்கூட அதிசயாதானத்தைத் திருவிண்ணகரே செய்வதாக ஏற்பட்டு, அதைப் பேசியதாக ஏற்படுகிறது பாசுரத்தின் போக்கு.

உலகத்தில், அந்தந்த தேசாதிபதிகளுக்கு வ்யாப்ய வ்யாபக பாவமும், அதடியாக ந்யூநாதிக பாவங்களும், குண பௌஷ்கல்ய வைகல்யாதிகளும் இருப்பது போல், திவ்ய தேசங்களில் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கிற எம்பெருமான்கள் விஷயத்தில் இருப்பதாக நாம் எண்ண நியாயமில்லை. அவரவர்களுடைய ஸ்வரூபம் வேறுபட்டிருப்பது போல், எம்பெருமானுடைய ஸ்வரூபம் பல படியாயிராமல் ஒன்றாக விருப்பதால் அம்மாதிரி ந்யூநாதிக பாவனை செய்யக் கூடாதென்றும், செய்தால் தோஷமுண்டென்றும், அந்த மூர்த்திகளில் எம்பெருமானுடைய திருமேனி பாவனையைத் தவிர்த்து ப்ராக்ருதத்வ புத்தியோ? லோஹ புத்தியோ? எவ்விடத்திலும் எக்காரணத்தாலும் செய்யக் கூடாதென்றும் சொல்லப் பட்டிருக்கிறது. அப்படியிருக்க, சில திவ்ய தேசத் தெம்பெருமானை விசேஷித்து ஆஶ்ரயித்து அபி மதங்களைப் பெறுவதற்குக் காரணம் அந்த திவ்யதேசத்தின் ஏற்றமே ; அதாவது அந்த க்ஷேத்திரத்தின் மாஹாத்மியமே. ஆகையாலேயே எம்பெருமான் ப்ரஹ்மாவைக் குறித்து ஸத்ய வ்ரத

க்ஷேத்ரத்திலே போய் அசுவமேதம் செய்யும்படி நியமித்தான் எம்பெருமான் சிலவிடங்களில் தன்னை ஆராதிப்பவர்களுக்கு பலம் கொடுப்பது, அவன் ஸ்வாதந்திரிய ப்ரயுக்தம் என்று கொள்ள வேணுமானாலும் அதை இன்னும் ஒருபடி தள்ளி ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதாவது அந்த திவ்ய தேசத்திற்கு ஒருவித ஏற்றத்தைத் தன் ஸ்வாதந்திரியத்தால் ஏற்படுத்தி, அதடியாக அதிலே நித்ய ஸான்னித்யத்தைச் செய்து, அதன் முகமாக அங்கு வந்து தன்னை ஆராதிப்பவர்களுக்கு விசேஷாநுக்ரகங்களைச் செய்கிறான் என்று இந்த விசேஷத்தை இந்தப் பாசுரத்தில் அநுசந்திக்கிறார்.

"ஒருவருக்கும் காண வொண்ணாத பெருமையை யுடையவனாய் வைத்து என்னை அடிமை கொள்ளுகிறவனான திருவிண்ணகர் ஸர்வ விலக்ஷண மென்கிறார்" என்று முப்பத்தாறாயிரம்.

கீழ்ப் பாட்டில் "பல் வகையும் பரந்த பெருமானென்னை யாள்வானை செல்வம் மல்கு குடி திருவிண்ணகர்க் கண்டேனே" என்று பேசி விட்டு இதில் "கண்டு கொள்தற்கரிய பெருமானென்னை யாள்வானூர்" என்றபடியால் இவ்விடம் கண்டு கொள்வதற்கெளியவனாயிருப்பவன், அல்லாத விடங்களில் கண்டு கொள்வதற்கரியன் என்று ஏற்படுகிறது. இதை மேல் "என்னப்பன்" என்ற பாசுரத்தில் "திருவிண்ணகர்ச் சேர்ந்தவப்பன் தன்னொப்பாரில்லப்பன்" என்று சேர்த்து அநுசந்தித்தால் ஏற்படும். 'திருவிண்ணகர்ச் சேர்ந்தவப்பனானபடியால் தன்னொப்பாரில்லப்பனானான். என்கிற பாவத்தினால் விளக்கிக்காட்டலாம்.

அப்படிச்சொல்வதற்கேற்பவே இந்த திவ்ய தேசத்தின் விசேஷாதிசயங்கள் ஏதத்காலமும் காணப்படுகின்றன. இந்த க்ஷேத்ர மாஹாத்மியத்தில்.

" நடீஷ்ஹ்ராஜீவணம் விவு தநெ ஈுவிகூம ஹவெஷ |
ஶு-ஷணஷெஜேஹுவாம வாக்ஷும் ஷதும் வுதிஶுணொஜிஷக |
ஆுநீயஷெ ஒயெஷுவண ஶாஷயெ ஒஶ ஶேஹாஶஷெந |
ஶஷுஹும் நாகுஂஷெதேஹிு யாவஹுதுஜிவாக்ஷு |

* * * *

விநாதஷுவணெநகூம ஷுஜுநாஷிகம வுஹொ..............

ஷஷிஷூ என்று குறிப்பிட்டபடி பெருமாள் அலவணமாகவே அமுதுசெய்து வருகிறார். அதற்கு மீறி லவணத்தைக் கோயிலுக்

குள்ளேசீ, அல்லது பெருமாள் பிரசாதத்திலோ, சேர்த்தால் தோஷங்கள் ஏற்படுவதாகக் கூறுவதோடு அவர்களுக்கு திருஷ்டமாகவே சில துக்கங்களும் உடனேயே நேருகிறதாக அநுபவத்தையொட்டிச் சொல்லி வருகிறார்கள். இவ்விடத்தில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்குத் தனிக்கோயில் நாச்சியாருமில்லை; உபய நாச்சியார்களுமில்லை. பூமிதேவி ஒருத்திதான். எல்லாப் புறப்பாடுகளிலும் நாச்சியாருடனே புறப்பாடு. இதுவும், லவணமில்லாமல் அமுது செய்வதும் ஸ்தலபுராணத்தில் நாச்சியாரை வசீகரிக்கைக்கு எம்பெருமான் ஒப்புக்கொண்ட விரதமாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த வரலாறும் ஆழ்வார் பிரபந்தத்தில் சந்தர்ப்பங்களால் சூசிப்பிக்கப்படுகிறது. மின்னிடை மடவாரில் தன்னிடத்தில் ப்ரணயகலுஷிதையான நாயகியை, காலுஷ்யம் தீரும்படி ஸம்ச்லேஷித்து 'என்னை யாள்வான்' என்று பேசும்படி பண்ணியதினால் சூசிப்பிக்கப்பட்டதாக நினைக்கலாம்.

'தெண்டிரைப் புனல்சூழ்' என்று நீர்வளத்தைப் பேசுகிறார். நகரின் அழகுக்காகமட்டும் நீர்வளம் பேசப்படவில்லை. நகரின் புனிதத்தன்மையைக் காட்டவும் பேசப்பட்டது. இது முப்பத்தாறாயிரத்திற் செவ்வனே காட்டப்பட்டிருக்கிறது. தெண்டிரைப்புனல் சூழ்-திவ்ய நதியான விரஜைக்குப் போலியான ஆறுமுண்டாகப் பெற்றது. அங்கிருக்கிறவன் இங்கே வந்து நின்றால் அங்குள்ளவையெல்லாம் இங்கே யுண்டாகத் தட்டில்லையே" என்று. இந்த திவ்ய தேசத்திற்குத் தெற்காக ஓடும் ஆறு "நாட்டாறு" என்று வழங்கப்படுகிறது † நாடு என்ற நிருப பதமான சப்தம் ஸ்ரீ வைகுண்டத்தையே குறிப்பிடுகிற படியால் அவ்விடம் உள்ள நதி, விரஜையானபடியால் இத்திருவிண்ணகரிலே ஓடும் நதிக்கு நாட்டாறு என்ற பெயர் ஏற்பட்டது.

"நகரே" என்றவிடத்திலுள்ள 'ஏ' என்பதை திருவிண்ணகர் என்பதோடு கூட்டி "திருவிண்ணகரே நன்னகர்" என்று ஒரு யோஜனை பண்ணி, அதற்கு உபபாதகமாக, "இவ்வளவில் முகங்காட்டாத ஸ்ரீவைகுண்டமும் ஒரு தேசமாயிற்றதோ, அவன் விரும்பினவிடம் ப்ராப்ய பூமியாமித்தனையிறே" என்றும். அருளிச்செய்யப் பட்டிருக்கிறது. இதனால் அல்லாத விடங்களில்

† ராஜாங்க கணக்குகளிலும் அதன் பெயர் அப்படியே இப்பொழுதும் வழங்கப்பட்டு வருகிறது.

கண்டு கொள்வதற்கரியனை, செல்வம் மல்குகுடி திருவிண் கண்ட படியால், அவன் விரும்பியுறையும் படியான தெண்டி புனல் சூழ் திருவிண்ணகர், ஸர்வ விலக்ஷணம் என்றாயிற்று "தழலு நிழலுமாய் கண்டு கொள்தற்கரிய பெருமான்" என்று சேர்த்து அங்வயித்தால் விருத்தங்களான பதார்த்தங்களை விபூதியாக (சரீரமாக) உடைத்தாயிருக்கும் இருப்பு, இவ்விடத்திலே காணலாம் என்றும் ஏற்படுகிறது. லவணமில்லாமல் அமுது செய்தாலும் லவணத்துடன் அமுது செய்தால் ஏற்படும் சுவைக்குக் குறைவில்லாமை இவ்விடத்திலே தான். இவைகளையே 'கண்டு கொண் மின்கள்' என்று ஸ்பஷ்டமாகவே அருளிச்செய்திருக்கிறார். திருமலையில் அநுஷ்டிப்பதாய் பிரார்த்திருந்தவைகளை இவ்வெம்பெருமான் நியமனம் பெற்று இவ்விடம் அநுஷ்டிப்பதும், இவ்விடத்து பிரார்த்தனைகளை வேறெவ்விடமும் அநுஷ்டியாமலிருப்பதுமாகிற ஒரு வழக்கமும் இதன் ஏற்றத்தை நன்கு புலப்படுத்துகிறது.

இந்த அர்த்தங்களை நாம் ஊஹிக்கும்படியே தாத்பர்ய ரத்நாவளியிலும் இந்தப்பாட்டின் விஷயஸங்கிராஹகமான பதம் விழுந்திருக்கிறது.

"ஸம்வஷ்டாரிஷ்ரூ) ஹாவாஃவஸ-வ ஸ-வக்ரூடுதஃ வத்தந ஶ்ரூாஃ ஹாவாக வ-ணு)ா வ-ணு)ாஃ ஹாவாக க்வ-ஜ-த யா ஸவமுெஶாகாஃ ஹாவாக—ஃவு)ாஃவு)ாஜுவதூாதூ-ா ஃதிஜ ஶண ஞூிஜு ஶதூ-கவ கீதமூ)ா வாயாsஜ்ஞாயாஃ ஹாவாஃ வபிதவடிநம் வரூாஹ க்ரூஷ்ணம் ஶோரிஃ ||"

ஸம்வஷ்டாரிஷ்ரூ)ஹாவாக என்றும்வத்தந ஶ்ரூாஃ ஹாவாக என்றும் கீழும்மேலும் இருப்பதற்கேற்ப "ஃஸ-வ ஸ-வதயா" என்று ப்ரயோகிக்கவேண்டியிருக்க, மூலத்தில் ஸ்பஷ்டமாக இல்லாதிருக்கச் செய்தேயும் 'க்ரூடுதஃ' என்று பிரயோகித்ததற்கு காரணம் நகரின் ஸர்வவிலக்ஷணத்வத்தைச் சொல்லும் பாசுரமானபடியால் அதையும் குறிப்பிடவேண்டியதில் நோக்கமாக இருக்கலாம். 'ஃஸ-வஸ-வ க்ரூடுதஃ' என்பது ஶப்ததஃ 'இன்பம்' 'துன்பம்' என்ற பதங்களுக்கு ஸூசகமாயிருந்தாலும் அநாஶ்ரிதர் ஆஶ்ரிதர் இவர்கள் விஷயத்தில் முறையே அசுகம் ஸுகம் என்பதைச் செய்கிறபடியால் என்று ஏற்படும் அர்த்தத்

தினால் ஏற்பட்ட, 'அநாஶ்ரிதருக்கு முகங்கொடாமல் ஆஶ்ரிதர் திறத்தில் விசேஷாநுக்ரஹம் செய்கிறான், என்ற ஸம்பிண்டிதார்த்தத்தினால் கண்டு கொள்தற்கரிய பெருமான் என்னை யாள்வான் என்றதின் அர்த்தம் காட்டப்பட்டிருக்கிறது. ஃஸ-வஸ-வக்ரூடுத: — நவிஷ்ரூ)டுத ஸ-வம் யெஷாம் என்று ஸுகமில்லாதவர்கள் தன்னை யாச்ரயித்தால் அவர்களுடைய ஆச்ரயணாநுகுணமாக ஸுகத்தைக் கொடுக்கிறான். "ஃநிதூ)ஃஸ-வம்ஶொகஃஃம் வூாவு)" என்ற விடத்துப்போலே ஃஸ-வெ (ஶொகெ) ஸ-வக்ரூடுதஃ ஸுகத்தைச் செய்கையாலும் (பரமபத சுகத்தை அநுபவிக்கும்படி செய்கையாலும், விரஜா நதீ துல்யமான நதியோடுகூடின பரமபத துல்யமான தேசவிசேஷத்தை அபிமானித்து, தான் நித்யவாஸம் செய்து தன்னுடைய கைங்கர்ய ஸம்பத்து அபிவிருத்த மாகும்படி நித்யகைங்கர்ய ரூபமான பரமஸுகத்தைச் செய்கையாலும், அகடிதகடநத்வம் வெளியாகிறது. இந்த லீலா விபூதியில் அதுவும் இக்கலியுகத்தில் பரமபத சுகத்தை யநுபவிக்கும்படி செய்வது அகடித கடகத்வத்தினாலேயே என்பது ஸ்பஷ்டம். கீழும் மேலும் அந்த ராத்மதயா ஸாமாநாதி கரண்யம் பேசப்பட்டு, இவ்விஷயம் மட்டில் 'க்ரூடுதஃ' என்று பேசியிருப்பதற்கு இப்படி ஹாவமிருக்கலாம் என்று நினைக்க இடமுண்டு.

இப்படி இரண்டாம் பாட்டில் திருவிண்ணகரின் வைலக்ஷண்யத்தைப் பேசி இதில் வந்து நித்யவாஸம் பண்ணுகிறவனுடைய காருண்ய ரக்ஷகத்வாதி குணங்களைப் பேசி, தனக்கு அவன் தன தாள் நிழலைக் கொடுத்ததை யனுசந்தித்துக் கடைசியில் இந்தப் பாசுரங்களை யனுசந்திக்கிறவர்களுக்கு வரும் ஏற்றத்தை "கோணையின்றி விண்ணோர்க் கென்றுமாவர் குரவர்களே" (இத்திருவாய்மொழியை வல்லார் அயர் வறுமமரர்களுக்கு நிஸ்ஸம்சயமாக ப்ரதம பூஜ்யராவர்) என்று பேசி, அம்முகங்களாலும் அர்த்தாத் இந்த திவ்ய தேசத்தின் பெருமையை வெளியிட்டருளினார்.

புருஷகார வைபவத்தின் தொடர்ச்சி

த்வயமந்த்ரத்தின் மஹிமை

பத்திராதிபர்

ஈஶ்வரனுடைய நிரங்குஶ ஸ்வாதந்த்ரியத்தில் நோக்காயிருக்கும் சரம ஶ்லோகத்தில், சேதநர்கள் பண்ணும் ஸ்வீகாரமும் மிகையாகும்படி ஸர்வேஶ்வரன் தானே தன்னை யடைவதற்கு ப்ரதி பந்தகங்களா யிருக்கும் பாப விசேஷங்களைப் பாராதே

சேதநர்களை அங்கீகரித்துத் தன் திருவடிகளிலே கொள்ளும் ஈஶ்வரனாலே பேறென்கிறது.

த்வயத்தில், பெரிய பிராட்டியாலே பேறென்கிறது. "ஊனில வாழுயிரே நல்லைபோ உன்னைப் பெற்று" என்று, ஏ! உயிரே உன்னாலல்லவோ நான் இப்பேறு பெற்றேன் என்று கொண்டாடும்படியான உயிராலே பேறென்றும். "தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்" என்று, சேதநர்கள்செய்த பாபங்களையும் புண்யமாக நினைத்து ரக்ஷிக்கும் ஸர்வேஶ்வரனாலே பேறென்றும் சொல்லா நிற்க, த்வயத்தில் பெரிய பிராட்டியாராலே பேறென்கிறதெங்ஙனே? என்னில்.

இவ்வாத்மா, கர்ம பரதந்த்ரனாய் தாபத்ரயாதி அனேக அனர்த்த பரம்பரைகளிலே அகப்பட்டு ஈஶ்வர ஆஜ்ஞா ரூபமான ஶ்ருதி ஸ்ம்ருதி விஹிதங்களாய் பகவத் ப்ராப்தி ரூபமான மோக்ஷத்திற்கு ஸாதநமாயிருக்கும் தர்மங்களை அநுஷ்டிப்பதற்கு அசக்தனான மாத்ரமன்றிக்கே, தேக ஸம்ரக்ஷணார்த்தமாக உண்டியே உடையே என்று உகந்தோடி அதன் காரணமாக ஓடியுழன்று உயிர்களை கொன்றேன் என்று அனேக விதமான பாபங்களைச் செய்து பாபியாய்த் திரியுமவனாகையாலும், ஈஶ்வரன் ஸஏகாகீ ந ரமேத என்று சேதனர்கள் விஷயத்தில் பரமதயையை யுடையனாய், இவர்களுக்காக வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபியாய் நின்றும், அதுபோதாமல் கேஶவாதி ரூபங்களைத் தரித்து, சேதனர்களுடைய ஶரீரங்களில் நின்றும், அதுக்கு மேலே ஆக்கரான தேவர்களும் ஜுகுப்ஸை பண்ணும்படியான இவ்விருள் தருமா ஞாலத்தில் வந்து பிறந்து, படாதன பட்டு, ஒரு சேதனனை, பிராட்டி புருஷகாரமாகக் கைப்பற்றி அவனபசாரங்களையும் மறந்து, ஶாஸ்த்ர மர்யாதையையும் அதிக்ரமித்து, தன்னுடைய ஸ்வாதந்த்ரியத்தாலே சேதனனுடைய ரக்ஷணத்தில் உத்யுக்தனான வளவில் புருஷகாரம் பண்ணிச் சேர்ப்பித்த பிராட்டியே, இவன், இச்சேதனனை ரக்ஷிப்பது நமக்காகவோ? அல்லது தன் போகார்த்தமாகவோ? அல்லது ஆஶ்ரிதரிடத்தில் பக்ஷபாதத்தாலேயோ? என்றறிகைக்காகச் சிதகுரைத்தால் என்னடியாரது செய்யார் என்பன். ஸ்வதந்த்ரர்களும் அந்யஶேஷபூதர்களும் செய்யுமத்தை என்னடியார் செய்வார்களோ? அது உன் ப்ரமம் என்பன். சாக்ஷி உண்டென்றால் அவர்

கள் உன்னடியாரன்றோ! என்னடியார் அன்றோ! அது விஷயத்தில் உனக்கென்ன? நீ கடக்க நில்லு. அது செய்தார் என்று நிர்ப்பந்தித்தாயாகில் ஈஶ்வரனொருவனுண்டென்றும், ஒரு ப்ரமாணமுண்டென்றும், நாம் அறிவின்மையால் செய்த பாபங்களைப் பொறுத்து அவன் ரக்ஷிப்பன் என்றும் நினைக்குமவர்களாகையால் அவர்கள் செய்தது நன்றே என்று அவர்கள் செய்த பாபங்களைப் புண்யமென்றறுதியிட்டும், அவர்களுக்காகத் தூது சென்றும், பெரியபிராட்டியாருக்கு வாஸஸ்தானமாகிய திருமார்பிலே அம்பேற்றும், சாகாமல் நோக்கியும், செத்தாரை மீட்டும், அவ்வளவும்போராதே பிச்சேறின ப்ரஜைமுன்னே நின்றால் தாயை யடிக்கும். அகல நின்றால் தானே முடியும், ஆதலால் அந்தப்ரஜையை விட்டகலவும், முன்னேநிற்கவும் மாட்டாமல் மறைந்து நின்று ரக்ஷிக்கும் மாதாவைப்போலே அந்தர்யாமியாய் நின்று நோக்கியும் போரும் ஸ்வபாவமுடையவனாயிருந்தாலும், இச்சேதனர்கள் செய்யும் பாபத்தைப் பார்த்துக் குளிர்ந்த திருவுள்ளத்திலே சீற்றமுண்டாய் தாநஹம் த்விஷதஃ க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந்—க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவயோநிஷு என்று பிருத்வப்ரயுக்தமான ஹிதத்தையுடைய தன்னுடைய நிரங்குஶ ஸ்வாதந்தர்யத்தால் இவர்களை சிக்ஷித் தல்லது நிற்கவொண்ணாதபடி கலங்கினகாலத்தில் அச்சீற்றத்தால் அமுக்குண்டு கிடக்கும் வாத்ஸல்யாதி குணங்களைத் தலையெடுக்கச் செய்தும், ஸ்தநந்தய ப்ரஜையின் வ்யாதியைப் போக்குவதற்காகத் தான் மருந்துண்ணும் மாதாவைப்போலே அவர்களுக்காகத் தான் சிறையிருந்தும் "தேநமைத்ரீ பவது தேயதி ஜீவிதுமிச்சஸி" என்று ஹிதோபதேஶத்தைப் பண்ணியும், இச் சேதனர்களை அவன் ரக்ஷிக்கைக்கு அநுகூலமான "கிமேதந்நிர்த்தோஷஃ க இஹஜகதி" என்னுமாப்போலே சில உக்தி விசேஷங்களால் அவனைத் திருத்தியும், அதுவும் பலிக்காவிடில் "தஸ்யேயமஸிதேக்ஷணா" என்றும் "பித்தர் பணிமலர் மேற்பார்வைக்கு" என்றும் சொல்லப்படுகிற, அவனையும் மையலேற்றி மயக்கும்படியான தன்னுடைய ஸௌந்தர்யத்தாலே அவனை வஶீகரித்து, இச் சேதநர்களை ரக்ஷிப்பதற்காக அவனைவிட்டகலாமல் நித்யவாஸம் பண்ணும் பெரியபிராட்டியார் புருஷகாரமில்லாவிடில் அவன் ரக்ஷகனாகாமையால் த்வயத்தில் பெரிய பிராட்டியாராலே பேறென்னத் தட்டில்லை.

श्रीः

ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரி [illegible]த்தான்

वर्धिष्णूनां तु पुत्राणां पितरावेव दैवतम् ॥

வ்ருத்தியைக் கோரா நின்ற புத்ரர்களுக்கு
தாய் தந்தையர்களே தெய்வம்.

I. धर्मव्याधचरितम्

1. தர்மவ்யாத சரிதம்.

(1) मिथिला नाम काचन नगरी.
மிதிலை என்று ஒரு பட்டணம் (உளது)

(2) तत्र कश्चन व्याध उवास.
அதில் ஒரு வேடன் வஸித்தான்

(3) तस्यच नामधेयं धर्मव्याध इति.
அவனுக்கு, தர்மவ்யாதன் என்று பெயர்

(4) आमिषविक्रयणं तस्य कृत्यम्.
அவனுடைய தொழில் மாம்ஸ விக்ரயம்

(5) तत एव तस्य जीवनं भवति.
அவனுடைய ஜீவநம் அதனாலேயே ஆகிறது

(6) तस्य भवनं प्रति कश्चन द्विजन्मा समाययौ.
அவனுடைய வீட்டைக் குறித்து ஒரு ப்ராஹ்மணன் வந்தான்

(7) तदात्वे स व्याधः बहिर्निर्गतः आसीत्.
அப்போது அந்த வேடன் வெளியிற் சென்றவனாக இருந்தான்

(8) तत्प्रत्यागमनं प्रतीक्षमाणो विप्रो वितर्दिकायामुपविष्टो वर्ततेस्म.
அவன் வரவை எதிர்பாரா நின்ற ப்ராஹ்மணன் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தான்

(9) सच तपस्वी धर्मेषु किन्नाम? श्रेष्ठमिति बुभुत्सया समायातः
தப்ஸ்வியான அவனும், தர்மங்களில் எது? ஶ்ரேஷ்டமென்று அறிந்துகொள்ள ஆவலினால் வந்தவன்.

(10) स च नाम्ना कौशिकः
அவன், பெயரால் கௌசிகன் (எனப்படுவன்)

(11) धर्मव्याधो गृहंप्रति न्यवर्तत, कौशिकां प्रैक्षत.
தர்ம வ்யாதன் க்ருஹத்தைக் குறித்து திரும்பி வந்தான், கௌஶிகனைப் பார்த்தான்

स्वामिन् भवदागमनप्रयोजनमहं जाने ; अन्तर्गत्वा पुनरिहागच्छेयम् इत्यवादीत्। अन्तः प्रययौ च.
ஓ ஸ்வாமியே! தேவரீருடைய வரவின் ப்ரயோஜனத்தை நான் அறிகிறேன், உள்ளே சென்று மறுபடியும் இங்கு வருவேன்" என்று சொன்னான். உள்ளேயும் சென்றான்

(13) महान् कालोऽतीतः।
வெகு நேரம் கடந்தது

(14) अथ स बहिर्निष्क्रान्तः।
அப்பால் அவன் வெளியில் வந்தான்

(15) कौशिकमन्त नेयतिस्म।
கௌசிகனை உள்ளே அழைத்துச் சென்றான்.

(16) स्वकीयौ मातापितरौ प्रादर्शयत्.
தனது தாய்தந்தையர்களைக் காண்பித்தான்

(17) "इमौ वृद्धवयसौ ; संचरितुमक्षमौ ; अनयोरुपचारमहं अकरवम् एतदेव खलु प्रधानं कृत्यम् ; अतएव विलंबस्समजनि ; क्षम्यतामयं अपराधः' इत्यकथयत्।
இவ்விருவர்கள், முதிர்ந்த வயதுடையவர்கள், நடமாடுவதற்கு அசக்தர்கள், இவர்களுக்குப் பணிவிடை புரிந்தேன். இதுவன்றோ! முக்யமாகச் செய்யத் தகுந்தது. ஆதலால் கால தாமத முண்டாயிற்று. இந்த அபராதம் பொருத்தல் வேண்டும்;! என்று சொன்னான்

(18) तदनु कौशिक आह—' निर्वृत्तम् मदागमनप्रयोजनं ; पित्रोराराधनमेव प्रधानं कर्तव्यम्। एतदहमज्ञासिषम्। गच्छामि पुनर्दर्शनाय'। इति.
உடனே கௌசிகன் சொன்னான்—
"நிறைவேறிற்று என் வரவின் ப்ரயோஜநம். தாய் தந்தையர்களின் ஆராதநமே முக்யமாகச் செய்யத் தகுந்தது (என்கிற) விதத்தை நான் அறிந்தேன் போய் வருகிறேன்" என்று

(19) ततः स्वावसथमुपेत्य चिरं पितरौ पर्यचरत्।
அப்பால் தன்னுடைய க்ருஹத்தை யடைந்து பஹுகாலம் தாய் தந்தையர்களை உபசரித்தான்

(20) तस्मात्—पितरावेव दैवतम्।
ஆகையால் தாய் தந்தையர்களே தெய்வம்.

வர்த்தமானங்கள்

வகுளமாலை :: :: (காஞ்சீ - அண்ணங்கராசார்ய

இப்பெயர் பூண்டதோர் தமிழ்ப் பத்திரிகை திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரத் தொடங்கியுள்ளது. இதன் முதல் தொகுதியின் முதற் பகுதி நிகழும் தை மாதத்தில் வெளிவந்துளது. திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ. உ. வே. ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி M. A. B. L. அட்வகேட் அவர்கள் இப்பத்திரிகைக்கு ஆசிரியராக அமைந்துள்ளார். மேற்குறித்த தமிழ்ச் சங்கத்தின் காரியதர்சியாகிய ஸ்ரீ. உ. வே. ப. ரெ. திருமலை ஐயங்கார் ஸ்வாமியின் நன் முயற்சியினால் இப்பத்திரிகை வெளிவரத் தொடங்கி யிருக்கின்றதென்று அறிகின்றோம்.

பத்திராசிரியராகிய ஸ்ரீ. கேசவய்யங்கார் ஸ்வாமி ஆங்கிலத்தில் அளவு கடந்த வல்லமை பெற்றிருத்தல் போலவே தென்மொழியிலும் வட மொழியிலும் மிகத் தெளிவான விரிந்த நல்லுணர்வைப் பெற்று விளங்குகின்றாரென்பது பெரும்பாலும் நம் நாட்டினர் பலருமறிந்ததே யாகும். அந்த ஸ்வாமி உபந்யாஸவாயிலாக அடிக்கடி அருள்புரியும் அமுத மொழிகளைக் கைரவிணீ க்ஷேத்ரவாஸிகளான மஹான்கள்செவியாரப்பருகிக்களிக்கின்றார்கள். இந்தக் களிப்பை ஆங்காங்கு வெளியூர்களிலுள்ள விவேகிகளனைவரும் எளிதிற் பெறுவதற்கு எம்பெருமான் அவகாசமும் அமைத்தருளியது உண்மையில் ஸ்ரீவைஷ்ணவவுலகின் பெரும் பாக்கியமே.

இப்பத்திரிகை தற்காலம் இரண்டு பாரங்கள் [16 பக்கங்கள்] கொண்டு நடை பெறுகின்றது. விஷயங்கள் மிக விரிவாக இருக்குமாயின் பலரும் வாசிக்கச் சோம்பலுற்று உபேக்ஷையாக விடுத்திடுகின்றனர். அங்ஙனன்றியே மிக்க விரிவில்லாமல் இஃது அமைந்திருப்பது நன்றே. இம் முதற் பகுதியில், 1. வகுளமாலை. 2. நம்மாழ்வார் வைபவம் 3. நெடியோன் குன்றம். 4. மாரனை வென்ற மாறன். 5. சிற்றின்பமும் பேரின்பமும். 6. பன்மணித்திரள்—என்னும் ஆறு விஷயங்கள் மிக அழகிய நடையில் வெளிவந்துள்ளன. ஸ்ரீ உ. வே. பண்டித பூஷணம் தி. சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி, தமிழ் வித்வான் மு. இராகவையங்கார் ஸ்வாமி முதலான சிறந்த பண்டிதர்கள் இப்பத்ரிகைக்கு விஷயமளிப்பவர்களாததால் இதன் சிறப்பைப்பற்றி இன்னமும் நாம் விவரிக்க வேண்டுமோ?

நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் விளக்கத்திற்குறுப்பாக இத்தகைய பத்திரிகைகள் எத்தனை வெளிவந்தாலும் தகுதியே. எம்பெருமான் திருவருளாலும் அடியார்களின் அவ

த்வா த[illegible]க்கியத்தினாலும் இப்பத்திரிகை மிக்க அபிவிருத்தியுடன் நங்க[illegible]வாழவேணுமென்று ஆசாஸிக்கின்றோம். இப்பத்திரிகைக்கு வகுளமாலை யென்று திருநாமம் அமைத்தது பெரிதின்சுவை. இதன் முதற்பகுதியில் பத்திராசிரியரது வியாஸத்திற்காணும் சில அமுதமொழிகளை அறிஞர்கட்கு எடுத்தூட்டவிரும்புகின்றோம்;—

வகுளமாலை யெனத் திருநாமம் சாற்றிய இப்பத்திரிகையை மாதமொருமுறை நம் சங்க வெளியீடாக விரித்து வளர்க்கக் கருதியுள்ளோம். ஒலிக்காத சங்கம் பயன் பயக்காது. செந்தமிழ் ஒலித்தலே சங்கத்தின் வன்மை............மாறனில் மிக்குமோர் தேவுமுளதே என்னுமதே மங்கல மோங்கிய சங்கத்தமிழொலி. மால்தனில் என்றது மாறன் கருத்தால். மாறனில் என்றே எம் சங்கம் கருதும். இக்கருத்தைத்தான் இச்சங்கம் முழங்கப் புகுந்தது. மாறன்முதற்றே சான்றோருலகு என்றே எம்சங்கம் முழங்காநின்றது.'' என்பன அவை.

இவ்வாக்கியத்திலுள்ள ஒரு ரஸவிசேஷத்தை ரஸிகர்கள் குறிக்கொள்ளவேணும்; (அதாவது) திருவாய்மொழியில் (2-2-3.) * ஏறனைப்பூவனை * என்னும் பாசுரத்தில் ''மாறனில் மிக்குமோர் தேவுமுளதே'' என்பது ஈற்றடி. அங்கு ஆழ்வார் திருவுள்ளம் 'மால்தனில்' என்கிற பதவிபாகம். அங்ஙனம் பிரிக்காமல் 'மாறனில்' என்றே கொண்டு, நம்மாழ்வாரில் மிக்க தெய்வமில்லை என்கிறபொருளும் கொள்ளவேணுமென்பது தேவுமற்றறியேனென்றிருக்கும் மதுரகவிகள் போல்வாரது துணிபு. இதனை ஈண்டு அபூர்வமாக எடுத்துக்காட்டிய பத்திராசிரியரின் மேதையின் மாண்பு மிக வியக்கத்தக்கதே.

இப்பத்திரிகைக்கு வருடச்சந்தா ரூபாய் ஒன்றே.

கிடைக்குமிடம்:— P. R. திருமலை ஐயங்கார்.
42, A. வெங்கடரங்கம் பிள்ளைத்தெரு, திருவல்லிக்கேணி.

தேவஸ்தாந பத்ரிகை:—இப்பெயர் பூண்ட பத்ரிகை திங்கட்கிழமை தோறும் ஸ்ரீரங்கம்தேவஸ்தாந ஆபீசிலிருந்து வெளிவருகின்றது. இதற்கு பத்ராதிபர் ஸ்தாநீகம் பார்த்தசாரதி அய்யங்கார். இம்மஹாநுபாவர் திருவரங்கம் பெரிய கோவில் என்கிற பத்ரிகையை நடத்திவந்தவர். இப்பத்ரிகை, சிவாலயம் விஷ்ணுவாலயம் என்கிற பேதமின்றியில் அந்தந்த. ஆலயங்களில் உத்ஸவங்கள் நடக்கும் காலங்களை அறிவிக்குமதாயிருப்பதால் நமது ஹிந்து சமூஹத்திற் கின்றியமையாததாயிருக்கு மென்பதில் ஐயமில்லை. இதன் வருஷச் சந்தா மூன்றே (3-0-0) ரூபாய்கள்.

தேவஸ்தாந ஆபீஸ், ஸ்ரீரங்கம்.

T. சேள. ஸ்ரீநிவாஸா சாரியர் சிரோமணி.

திருக்கண்ணபுரம் மாசிமக உத்ஸவம் :—மயர்வற மத
மருளப்பெற்று பரமபக்தி நிஷ்டர்களான ஸ்ரீ பராங்குஶ, பர
கால, குலசேகர, விஷ்ணுசித்த, கோதை ஆகிய ஐந்து திருநாமங்க
ளாலும் அடைவே வைகுந்தம் கோடுக்கும் பிரான், மைவளர்க்கும்
மணியுருவம் மரதகமோ ? மழைமுகிலோ, தேவரையு மசுரரையும்
திசைகளேயும் படைத்தவனே, கண்ணபுரத்தமுதே, கண்ணபுர
நகர் வாட்டமின்றி மகிழ்ந்துறை வாமநன் என்று சரண்ய முகுந்
தத்வ, ஸர்வாங்கஸுந்தர திவ்ய மங்கள விக்ரஹத்வ, ஸகல ஜகத்
காரணத்வ, நிரதிஶய போக்யத்வ, பரமகாருணிகத்வாதி திருக்
குணங்கள் சிறந்த ஸர்வேஶ்வரனுகந்துவர்த்திக்குமதாய் நின்திரு
வெட்டெழுத்தும் கற்று நான் என்று ஸகலார்த்த தாத்பர்யமான
அஷ்டாக்ஷரமஹாமந்த்ரப்ரதமாயுமுள்ள, உத்பலாவதக க்ஷேத்ர
மென்கிற திருக்கண்ணபுரத்தில் கோயில் கொண்டெழுந்தருளி
யிருக்கும் சௌரிராஜப் பெருமாளுக்கு, சில வருஷங்களாக நித்
யொத்ஸவாதிகள், அதிகாரிகளின் அஶ்ரத்தையால் நடைபெரு
மல் நின்றிருந்தன. சென்னைமாநகரிலுள்ள ஸ்ரீ சௌரிராஜப்
பெருமாள் கைங்கர்ய ஸம்ரக்ஷண ஸபையாரின் பெரு முயற்சியி
ஞல் சென்ற கார்த்திகை மாதத்தில் ரிலிஜியஸ் எண்டோவ்மெண்டு
போர்ட்டில் வியாஜ்யம் துடரப்பட்டு ஷை சன்னிதி விஷயமாய்
ஸ்கீம் ஒன்று ஏற்பட்டு, மானேஜரும் நியமிக்கப்பட்டு, ஒருமாத
மாக கோயில் கார்யங்களைக் கவனித்து வருகிறார்கள். புதிய
ட்ரஸ்டிகள் இன்னும் நியமன மாகாததால் நாளது வருஷ மாசிமக
உத்ஸவம் ஊரிலுள்ள பக்த ஜநங்களின் பெரு முயற்சியால் மிகவும்
சிறப்பாக நடைபெறுமென்று தெரியவருகிறது. வரும் மாசிமாதம்
5-உ (16-2-37)-ல் அங்குரார்ப்பணம் ஆரம்பித்து 14உ (25-2-37)
மகஉத்ஸவம்:—அன்று ஆலங்குடிச் சேரிமண்டபத்திலெழுந்
தருளி, அப்பால் திருமலைராஜன் பட்டணம் வெள்ளைமண்டபத்தி
லிருந்து பெரிய திருவடியின்மீது எழுந்தருளி, சமுத்திரத்தில்
தீர்த்தம் ஸாதித்து 15-உ மறுபடியும் ஆலங்குடிச்சேரி மண்டப
மெழுந்தருளி, திருமகல் வழியாக சந்நிதிக் கெழுந்தருளி, 16-உ
சத்தாவரணமாய் 17-உ விடாயாற்றி உத்ஸவமும் நடைபெற்று
18-உ (1-3-37)-ல் நூதனமாக அழகாக அமயப் பெற்ற தெப்பத்
தில் தெப்ப உத்ஸவமும் நடைபெறும். பங்குனி-மீ 5-உ (8-3-37)
ஸ்ரீ கோபாலன் ரோகணி உத்ஸவம் - அன்று குதிரை வாஹநம்.

திருக்கச்சி நம்பி உத்ஸவம் தை 30-உ (11-2-37) தொடங்கி
மாசி 9-உ 20-2-37-ல் சாற்றுமுறை.

ஸம்ப்ரோக்ஷணம் :— "சித்திரத் தேர்வலவா!" என்று
த்வாதஶர் ஆழ்வார் படும்படி அன்று பாரதப்போரில் பார்த்தன்
நன்குமீதர் முன்னின்று பார்த்த ஸாரதி யென்றே தனக்கு நிரூபக
மாம் படியான கீதாசார்யன், பின்னுனர் வணங்குஞ் சோதியாய்க்
கைரவிணீக்ஷேத்ர மென்கிற திருவல்லிக்கேணியில் ஸேவை தந்தரு
ளும் ஸந்நிதியில் விமானத் திருப்பணி நடைபெறுவதற்காக ஒரு
ஸம்வத்ஸரமாய் பாலாலயத்தில் எழுந்தருளியிக்கிறு ரென்பதும்,
இதுபற்றியே நித்யநைமித்திக மஹோத்ஸவங்களும் நின்றிருக்கின்
றன வென்பதும் உலகமறிந்ததே. ஷை ஸந்நிதியின் தர்மகர்த்தாக்
களில் ஒருவராகிய ராவ்பஹதூர். வேமூர் ரங்கநாதம் செட்டியா
ரவர்களின் பெரு முயற்சியினுல் ஷை திருப்பணி பெரும்பாலும்
நிறைவேறியது. பாலாலய ப்ரதிஷ்டை நடந்து ஒரு ஸம்வத்ஸரம்
ஆகிறபடியால் ஆகம முறைமைப்படிப்புநர்பாலாலய ப்ரதிஷ்டை
நடைபெற வேண்டுமென்று நிஷ்கர்ஷித்துச் சென்ற வாரத்தில்
அது நடந்தேறியது. நாளது பங்குனி மீ 2உ அச்விநீநக்ஷத்தி
ரத்தில் அங்குரார்ப்பணமாகி 8உ புநர்வஸு நக்ஷத்திரம்
ஞாயிற்றுக்கிழமையன்று சுப லக்கினத்தில் ஆனந்த நிலய
விமாந மஹா ஸம்ப்ரோக்ஷணம் நடை பெறுமாறும், உடனே
சென்ற வருஷத்திய ப்ரஹ்மோத்ஸவமும், அதற்கு அடுத்தபடி
திருப்பவித்ரோத்ஸவமும் நடை பெறுமாறும் நிச்சயிக்கப்பட்டி
ருக்கின்றதென்று அறிகின்றோம். பல தேசங்களிலிருந்து விலக்ஷண
ஸ்வாமிகள் குழாங் கூடிக்களித்து மண்ணு மணமுங் கொள்வதற்கு
இது வொரு வாய்ப்பான ஸமயமென்று நாம் குதுகலிக்கின்றோம்

ப்ராணஸுத

(சிறந்த டானிக்)

நண்பர்களே ! பல
ஹீனத்தினுல் என் கவ
லைப்படுகிறீர்கள் ? இதோ
எங்களுடைய ஸவரனைப்
போன்ற டானிக் ராஜா-
"பிராணசுத" இருக்
கிறது. இது ரத்தக் குறை
வினுலும், மூளையைச் செ
லுத்தி வேலை செய்வதா
லும், இன்னும் பலவித காரணங்களாலும் ஏர்ப்பட்ட பல
ஹீனத்தைப் போக்கடித்து விடும். ரக்த புஷ்டியைத் தரும்.
பலத்தையும், தாது விருத்தியையும் புதிதாய் தரும்.

ஒரு புட்டியை உபயோகித்துப் பார்த்தால் ஆச்சரியப்படு
வீர்கள். எல்லாரும் உபயோகப்படுத்தலாம். கேட்லாக் இனும்.

விலை புட்டி 1க்கு 2—8—0

மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்

107, பிராட்வே, சென்னை



உத்திரவாதம் 5 வருஷம் உத்திரவாதம்

பிரகாசத்திலேயும் நிறத்திலேயும் தங்க நகைகளுக்கு
எந்த விதத்திலும் தாழ்ந்ததல்ல

டி. சி. என். கோல்டன் மெட்டல்

ஒ ட் டி யா ண ங் க ள்

		ரு.	அ.	பை.
1.	பெரிய சைஸ் சாதா சதங்கை யில்லாதது ஒன்றுக்கு ...	12	0	0
	ஷை சின்ன சைஸ் ...	8	0	0
2.	பெரிய சைஸ் சாதா சதங்கை கட்டினது	20	0	0
	ஷை சின்ன சைஸ் ...	15	0	0
3.	பெரிய சைஸ் ஒரு பக்கம் வங்கி சதங்கை கட்டினது ...	20	0	0
	ஷை சின்ன சைஸ் ...	15	0	0
4.	பெரிய சைஸ் இரண்டு பக்கமும் வங்கி சதங்கை கட்டினது ...	20	0	0
	ஷை சின்ன சைஸ் ...	15	0	0
5.	பெரிய சைஸ் ஜாலர் ஒட்டியாணம் ...	35	0	0
	ஷை சின்ன சைஸ் ...	25	0	0

பெரிய சைஸ் 1க்கு வி. பி செலவு ரு. 1—4—0
சின்ன சைஸ் 1க்கு வி. பி. செலவு ரு. 0-12—0

சரக்கு பிடித்த மில்லையானால் ஒரு வாரத்திற்குள் திருப்பி யனுப்பினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இரண்டணு பெறுமானமுள்ள அழகிய படங்கள் நிறைந்த எமது கேட்லாக்கு இனமாக அனுப்பப்படும்.

டி. சி. நாகலிங்கப்பா

அன் கம்பெனி

280, வால்டாக்ஸ் ரோடு, பார்க் டவுன் P.O., மதராஸ்

நிபந்தனைகள்

த்வாதச ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந சபையின் சார்பாக நங்கூஜீப் பத்திரிகை நடைபெறும்.

2. உபயஸம்ப்ரதாயத்திலுமுள்ள ஆசார்யர்களின் திவ்யஸூக்திகளில் பொதிந்துள்ள அருமையான அர்த்த விசேஷங்கள் மிக எளிய நடையில் இதில் வெளிவரும்.

3. எந்த சம்ப்ரதாயத்தைப்பற்றியும் இழிவான வாசகம் எக்காரணத்தை யிட்டும் இதில் ப்ரசுரிக்கப்பட மாட்டாது.

4. ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் விரும்பி வாசிக்கக்கூடிய ஸத்விஷயங்களை சிற்றறிவுடைய என் போல்வார்களுக்கும் சிறிது பயன் படுமாறு வித்வான்கள் எழுதி யநுக்ரஹித்தால் அவை இதில் ப்ரசுரிக்கப்படும்.

5. கடிதத்தில் இங்கியால் ஒரே பக்கத்தில் எழுதல் வேண்டும்.

6. கூட்டெழுத்துக்களாகவோ சந்தேகத்திற் கிடமுண்டாகும் படியாகவோ எழுதக் கூடாது.

7. அவ்வாறு எழுதியதாலேற்படும் தவறுகளுக்கு ஒருவிதத்தாலும் பத்திராதிபர் கடமைப்படமாட்டார்.

8. அது பத்ராதிபரின் இஷ்டத்தைப் பொறுத்தது.

9. ஷை சபையில் அங்கத்தினராகச் சேர இஷ்ட முடையவர்கள் ப்ரவேசக் கட்டணமாக ரூ. 1—0—0 தயவு செய்தால் அது சபைக்கு மூலதனமாக ஆகும்.

10. வருஷத்திற்கு 5 ரூ. கொடுக்குமவர்கள் போஷகர்களாவார்கள்.

11. (25) இருபத்தைந்து ரூபாய் கொடுக்குமவர்களை ஜீவியச் சந்தாதாராகக் கருதி அவர்களுக்கு மாதந்தோறும் பத்திரிகை பணமன்றியில் அனுப்பிக்கொண் டிருக்கப்படும்.

விளம்பரம்

முழுப்பக்கம் ஒரு தடவைக்கு	...	5	0	0
அரைப்பக்கம் ,,	...	3	0	0
கால்பக்கம் ,,	....	2	0	0

பத்ராதிபர்.

THE INDIAN INDUSTRIAL CO., LTD.,

DEALERS IN INDIAN MADE GOODS.

363, ESPLANADE : : MADRAS.

Registered No. M. 3401

பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின்
ஔஷத ரத்னங்கள்

ஜீ வா ம் ரு த ம்

(தேகாரோக்யத்திற்கும்
பல விருத்திக்கும்)

ரத்தமிழந்து, ஜீவனற்று, பலஹீனத்துடன் வாழ்க்கையை வெறுக்கும் வாலிபர்களுக்கு இவ்வௌஷதம் ஓர் வரத்தைப் போன்றதே. இதை உபயோகிக்க ஆரம்பிக்கும் பொழுதே அளவற்ற நக உணர்ச்சியை யூட்டி, மிகுந்த ரத்த புஷ்டியை உண்டாக்கி, புத்துயிரைக் கொடுத்து, வாழ்க்கைக்கே இன்பத்தை விளைவிக்கின்றது. அளவற்ற தேகபலம் குறைவற்ற ஆரோக்கியம் முதலியவற்றை மேன்மேலும் செழிக்கச் செய்கின்றது.

விலை பெரிய புட்டி	ரூ 3-4-0
சிறியது	1-12-0

பா ல பா ஸ் க ர

(குழந்தை ஈரல் குலைக்கட்டி
வியாதிகளுக்கு அற்புத நிவாரணி.)

குழந்தைகளின் ஈரல் (Liver) குலை (Spleen) பெருக்கங்களை அதி விரைவில் கரைத்து பூர்ண ஆரோக்யத்தை யளிக்கும் அரிய சஞ்சீவி. இதர மருந்துகளால் பயனற்றுப் போன விடங்களில் ஆச்சரியத்துடன் பலன் தந்துள்ளன. தவறுதலின்றி குணங் கொடுப்பதென்று பிரக்யாதி யடைந்தது. ஆரம்ப நிலைமைக் கென்றும், முதிர்ந்த நிலைமைக் கென்றும் இருதிறத்தி லுள்ளது.

ஆரம்ப நிலைமை மருந்து 1 மாதம்	4-0-0
முதிர்ந்த நிலைமை	8-0-0

விபரங்களுக்கு எழுதவும்.

தயாரிப்பவர்கள் :— **ஆயுர்வேதாஸ்ரம**
தபால் பெட்டி 287.
151, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

Edited & Published by Vadakarai, Ramanujachariar, 24, Chandrappa Mudali St and Printed at the Liberty Press, 7, Sunkurama Chetty St, Madras.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

1 APR 1937 MADRAS

ஸ்ரீ ராமாநுஜ

ஸித்தாந்த வைஜயந்தி

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபன ஸபையின் சார்பாக
மாதந்தோறும் வெளிவரும்
ஸத் ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசந பத்ரிகை

தொகுதி 2	தாது ஸூ மாசி மீ	பகுதி 4

பத்ராதிபர் :
வடகரை ராமாநுஜாசாரியார்

24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

*

1937ஸூ பிப்ரவரி மீ

வருஷச் சந்தா ரூ 1—12—0] [தனிப்ரதி விலை ரூ. 0—3—0

விஷய ஸூசிகை

விஷயங்கள்

1. மாசி மாதத்தின் மஹிமை 99
—பத்திராதிபர்

2. மாசி மிருக சீர்ஷம் 101
—ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்

3. ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் 108
—ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்

4. தினந்தோறும் தேவாலயம் தொழுவது ராலவும் நன்று 111
—ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்

5. வித்வான்களுக்கு ஓர் விண்ணப்பம் 113
—ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்

6. வர்த்தமானங்கள் 114

7. ராமாயணச் சுலோகார்த்தங்கள் ... ...
—திருமலை அநந்தாண் பிள்ளை ஸ்ரீ. உ. வே. கோவிந்தப்பங்கார்.

8. கோதாஸ் துதி வியாக்கியானம் ....
—ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்

P. KOTHANDARAM PILLAI,
SON OF LATE
P. S. PONNUSAWMY PILLAI,
HIGH CLASS CABINET MAKER AND UPHOLSTERER,
Established in 1854.
Ponnusawmy Pillai's Buildings
39 & 44, Esplanade West :: (Rattan Bazaar) :: P. T., MADRAS

C. V. CUNNIAH CHETTY & Co.
SILK WOOLLEN AND COTTON PIECE GOODS MERCHANTS,
288, ESPLANADE ROW, MADRAS.

FOR COTHOOR BRAND SOYA BEANS

G. பெருங்காயம்.

நங்கநிவாரு வீட்டிற்கு மின்றியமையாதது மனிதர்களுக்கு ஆரோக்கியத்தை அளிப்பது

L. G.
பெருங்காயம்.
எங்கும் கிடைக்கும்.
ப்ரபல பெருங்காய வியாபாரிகள்:
பம்பாய், சென்னை, கும்பகோணம்.

லால்ஜீ கோது & கம்பெனி,
8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதருஸ்.

அம்ருதாஞ்சனம்.

ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வியாதிகளின் உபசமனத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக்கூடும். அக்காலத்தில் அமிருதாஞ்சனம் கைவசமிருக்குமே யாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டா மென்பதை அனைவரு மறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.

அம்ருதாஞ்சனம் டிபோ.

பம்பாய். மதராஸ். கல்கத்தா

சலோனுடைவர் பிராண்

போர்ட்லாண்ட் சிமெண்ட்

காரண்டீட்

பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட்

ஸ்பெஸிபிகேஷன்

மேற்கண்ட சிமெண்ட் அனேக ஹார்பர்வேலைகளுக்கும் ரயில்வே வேலைகளுக்கும், மதராஸ் கார்ப்பரேஷனிலும், இன்னும் பிரபல வியாபாரிகளும் கண்ட்ராக்டர்களும் உபயோகித்து வருகிறார்கள்.

மேல் கண்ட சிமெண்டை உபயோகிக்கவும்

சோல் ஏஜெண்ட்

M. குப்புசாமி நாயக்கர்

83, செம்புதாஸ் தெரு,

மதறாஸ், ஜி. டி.

த்வாதஶ
நங்கூ

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶக பத்ரிகை

தொகுதி 2.	பத்ராதிபர் வடகரை. இராமாநுஜாசாரியார்	பகுதி 4.

ஸ்ரீரஸ்து

ஸ்ரீரங்கநாதாய நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
ய: ஸ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ||
வேதவேதாந்த வேதாங்க ஸூத்ரார்த்தப்ரதிபாதிநீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

மாசிமாதத்தின் மஹிமை

(பத்திராதிபர்)

இம்மாசிமாதம், கேஶவாதிவ்யூஹாந்தரங்களில் மூன்றாவதான மாதவனுடைய அம்ஶமாயிருக்கும். ஆதலின் இம்மாத ஏகாதஶியன்று உபவசித்து, மாதவனை ஆராதித்து, த்வாதஶியன்று ப்ராத: காலத்தில் பாரணை செய்யுமவர்கள், ராஜஸூய யாகத்தைப் பண்ணியதால் பெறக்கூடிய பலனை யடைவார்கள்.

> த்வாதஶ்யாம் மாகமாஸேது மாமுபோஷ்யது மாதவம்
> பூஜயேத்யஸ் ஸமாப்நோதி ராஜஸூயபலம் ந்ருப

மற்றோரிடத்தில்

> அஹோராத்ரேண த்வாதஶ்யாம் மாகமாஸேது மாதவம்
> ராஜஸூயமவாப்நோதி குலம் சைவ ஸமுத்தரேத்

இன்னமும், இம்மாதத்தில் வரும் ஶுக்லபக்ஷத்வாதஶீ. வராஹத்வாதஶீ என்று சொல்லப்படுகிறது.

ஸர்வரக்ஷகனை ஸர்வேஶ்வரனுடைய அவதாரங்களின் வகைகளில் துஷ்ட நிக்ரஹ ஶிஷ்டபரிபாலநத்தின் பொருட்டு பண்ணிய மத்ஸ்யாதி அவதாரங்களை விபவாவதாரமென்பர்கள் பெரியோர்கள். அவ்விபவாவதாரத்தில் வராஹ அவதாரம் மூன்ருவது அவதாரமாகும். இவ்வவதாரம் லோககண்டகனை ஹிரண்யாக்ஷன் என்கிற அஸுரனைக்கொன்று, ஸமுத்திரத்தில் ஆழ்ந்து போன பூமியை உத்தரித்து, உலகை வாழ்விக்கைக்காக ஸர்வேஶ்வரனங்கீகரித்த ஓர் அத்விதீயமான உருவமாகும்.

இவ்வவதாரத்தைப்பற்றி ஆழ்வார்கள்

தீதறு திங்கள்பொங்கு சுடரும்பரும்பர் உலகேழினேடு முடனே
மாதிரமண்சுமந்து வடகுன்றுநின்ற மலையாறு மேழுகடலும்
பாதமர்சூழ் குளம்பின கமண்டலத்தினேருபாலோடுங்க வளர்சேர்
ஆதிமுனேனமாகி யரணாயமூர்த்தி அதுநம்மை யாளுமரசே. என்றும்

கோலவராஹமொன்ருய் நிலம்கோட்டிடைக் கொண்ட வெந்தாய்
என்றும்

எறிதிரை வையம்முற்றும் ஏனத்துருவாயிடந்தபிரான் என்றும்

கொண்டாடி ஞானப்பிரானையல்லாலில்லை நான்கண்ட நல்லதுவே எனநீடுபடா நிற்பர்கள்.

பூமிப் பிராட்டியை உத்தேஶித்து உலகுக்கு ஞானத்தை உபதேஶித்து, அத்தாலே ஞானப்பிரான் என்று கொண்டாடும் பெருமையை வாய்ந்த இவ்வராஹாவதாரத்தைப்பற்றி பாரதாதி கிரந்தங்களில் ஆங்காங்கு விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது விஷயம் ராமாநுஜ ஸித்தாந்தம் என்கிற அடியேனுடைய வ்யாஸத்தில் யதோசிதம் தெரிவித்துக்கொள்ளப்படும்.

ஸர்வேஶ்வரன் இவ்வுருவை அங்கீகரித்த திநம், மாசிமாத ஶுக்லபக்ஷத்வாதஶி ஆகும். அதனாலேயே இந்தத்வாதஶீ வராஹத்வாதஶீ என்று சொல்லப்படுகிறது. ஆதலின், இந்தத்வாதஶிக்குமுன் திநமாகிய ஏகாதஶியன்று வராஹரூபியான பகவானை எழுந்தருளச் செய்து, அவன் முன்னே ஒரு கும்பத்தை தூப தீபாதிகளால் அர்ச்சித்து, ஸ்வர்ணத்தாலோ? வெள்ளியினாலோ? செம்பினாலோ? செய்யப்பட்ட வராஹ ப்ரதிமையை அக்கும்பத்தில் ப்ரதிஷ்டை செய்து, பூஜித்து, அன்றிரவு ஜாகரணத்தைச் செய்து (விழித்துக்கொண்டிருந்து) மறுநாள்

த்வாதஶியன்று ப்ராதஃகாலத்தில் ஸ்நாநாதி நித்ய கர்மாநுஷ்டானங்களைச் செய்து, வேத வேதாங்கங்களையப்யஸித்த பரமஸாத்விகனை ஒரு ஸ்ரீ வைஷ்ணவனை ஆராதித்து, அக் கும்பத்தை வராஹப்ரதிமையுடன் அவனுக்கு ஸமர்ப்பித்துப் பிறகு,தாம், பாரணை செய்யுமவர்கள், இஹலோகத்தில் ஸகலவிதமான ஸௌபாக்யத்தையு மடைந்து தேஹவியோகாநந்தரம் அர்ச்சிராதிமார்க்கமாகப் பரமபதமடைந்து பரமாநந்தமடைவார்கள். இது விஷயம் வ்ராஹ புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இன்னமும் நமது விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த ப்ரவர்த்தகாசார்ய பங்க்தியாகிற ஹாரத்தில் நடுநாயகம்போல் விளங்காநின்ற யதிராஜனுக்கும், ஹிதமான ஆறு வார்த்தைகளைப் பேரருளாளனிடம் கேட்டருளிச்செய்த மஹாநுபாவரும், ஆளவந்தார் ஶிஷ்யருமாகிய திருக்கச்சி நம்பிகளவதரித்ததும் இம்மாதத்திலேயாகும்.

மாசி மிருகசீர்ஷம்.

(ஸ்ரீகாஞ்சி. ஸ்ரீ அண்ணங்கராசாரியார்.)

ஆழ்வார்களுள் குலசேகரப் பெருமாளும் ஆசாரியர்களுள் திருக்கச்சி நம்பிகளும் திருவவதரிக்கப் பெற்றதனால் மாசிமாதம் சிறப்புற்றதென்று ஸ்ரீவைஷ்ணவர்கள் கொள்ளப்ராப்தம். நமது வைஜயந்தியின் சென்ற வருடத்து மாசி மாத ஸஞ்சிகை புனர்பூசத்தினன்று வெளியாகி ஸ்ரீகுல சேகரப் பெருமாளுடைய குணாநுபவத்தைச் சிறிது செய்திருக்கின்றது. இவ்வாண்டு மாசி மாதத்தில் வெளிவருமிந்த ஸஞ்சிகை மாசி மிருக சீருடத்தினன்று அவதரித்த திருக்கச்சி நம்பிகளின் திவ்ய குணாநுபவத்தில் சிறிது அவகாசம் பெறுகின்றது.

நம்பிகளின் திருவவதாரஸ்தலம் பூவிருந்தவல்லி யென்னும் க்ஷேத்ரமென்பது ஸுப்ரஸித்தம். "கிஉவு)த்ராஹிஜாயஜெ யொமிநஸ்வபியொகிஷு-வு)கூ)க்ஷிதாக்நாயாநாம் ஜெநஷாம் விஷ்ஹு)ம் கூஷ்யாதிகஶு—கிமப்யத்ரா பிஜாயந்தே யோகிநஸ் ஸர்வ யோகிஷு. ப்ரத்யக்ஷிதாத்மநாதாநாம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம்." என்று நம் ஆசிரியர்கள் உதாஹரித்தருளியுள்ள பிரமா

ணத்தின்படி, இவர் திருவவதரித்த வருணம் எது? என்கிற விசாரத்தில் நாம் வாய் வைப்பது அநபேக்ஷிதம். எக்குலத்தினும் சிறந்ததான தொண்டக்குலமே இவர்தாம் அவதரித்த திருக்குலமாகும்.

இவர், ஆளவந்தார் திருவடிகளில் ஆச்ரயித்து, ஸாமாந்ய விசேஷ சாஸ்த்ரங்களனைத்தையும் அதிகரித்துப் பரம விலக்ஷணராயினர். அர்ச்சாவதார எம்பெருமானுக்குத் திருவாலவட்டத் திருத்தொண்டு செய்வதில் இவர்க்கு இயற்கையான அபிநிவேசமுண்டாயது. திருவரங்கம் பெரியகோயிலில் அழகிய மணவாளனுக்கு அந்தத் திருத்தொண்டைச் செய்யப் புகுந்தார். அப்போது பெரிய பெருமாள் "* தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையாலடிவருடப் பள்ளி கொள்ளும் நமக்குத் தாபம் இல்லாமையால் இங்கு உமது திருத்தொண்டு அபேக்ஷிதமாக இல்லையே" என்றருளிச் செய்ய, அங்கு நின்றும் திருவேங்கடமலை யேறப் போந்து, அங்கே திருவேங்கட முடையானுக்கு அந்தத் திருத்தொண்டைச் செய்யப் புகுந்தார். அப்பெருமானும் "குளிரருவி வேங்கடத்தில் குளிரநிற்கும் நமக்கும் இந்தத் திருத்தொண்டு அபேக்ஷிதமாக இல்லையே; * அயமேத வேள்வியில் அவதரித்த அத்திகிரி யருளாளப் பெருமாளுக்கு இது அபேக்ஷிதமாயிருக்கக்கூடும்; அங்கேறச் சென்று தொண்டு செய்து வாழ்வீராக" என்று நியமிக்க, அங்கு நின்றும் ஸ்ரீஹஸ்திசைல சிகரோஜ்ஜ்வல பாரிஜாதனை பேரருளாளனுடைய திருவடி வாரத்திலே விடை கொண்டு திருவாலவட்டமும் கையுமாய் ஒழிவில் காலமெலா முடனாய் மன்னி அத்தாணிச் சேவகம் செய்து கொண்டிருந்தனர்.

இவருடைய ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பத்ஸம்ருத்தியையும் பக்தி விரக்திகளின் விலக்ஷண பரிபாகத்தையும் கண்டு வியந்த எம்பெருமானார், தாம் இவரது திருவடிகளில் ஆச்ரயத்து உய்வுபெற வேணுமென்று பாரித்து, இவரை எவ்வளவோ அநுவர்த்தித்தும் மநோரத ஸித்தி பெற்றிலர். ஒருநாள் "போனகஞ் செய்த சேடம் தருவரேல் புனிதமன்றே" என்ற தொண்டரடிப் பொடியாழ்வார் பாசுரத்தின்படி நம்பிகள் பக்கலில் திருப்போனக சேடம் பெற வேணுமென்று பாரித்தும், எம்பெருமானார்க்கு அதுதானும் ஸித்தித்ததில்லையாக, பேரருளாளப் பெருமாள் அர்ச்சாவதாரஸமாதியைக் கடந்து நம்பிகளோடே ஸல்லாபம் செய்தருளுகிறபடியையறிந்த

அவ்வெம்பெருமானார், தமக்கு சாஸ்த்ரார்த்தங்களிலே சில ஸந்தேஹங்கள் இருப்பதாகவும், அவற்றின் பரிஹாரத்தைத் தேவப் பெருமாள் மூலமாகப்பெற நினைத்திருப்பதாகவும் நம்பிகள் பாடே விஜ்ஞாபிக்க, நம்பிகளும், அன்றிரவு தேவப்பெருமாளுடனே வார்த்தையாடுமளவில் எம்பெருமானார்க்கு ஸந்தேஹ பரிஹாரமாகப் பெற்று வெளியிட்டவை ஆறுவார்த்தைகள் என்று ஸம்ப்ரஸித்தமாயிருக்கும்.

"அஹமேவ பரம் தத்வம் தர்சநம் பேதமேவ ச ।
உபாயேஷு ப்ரபத்திஸ்ஸ்யாத் அந்திமஸ்ம்ருதி வர்ஜநம் ॥
தேஹாவஸாநே மோக்ஷஸ்ஸ்யாத் பூர்ணாசார்யஸமாச்ரய:"

என்று ச்லோக ரூபமாகவும்,

செப்புகின்ற பரதத்வம் யானே யென்னச் செப்புதிவே
றேப்பிலாதாய்! தரிசனமும் பேதமென்றேயுரைத்திடுகே
தப்பிலாத வுபாயமதும் ப்ரபத்தியென்றே சாற்றிடுகே
அப்ப புகல்கவிவையன்றி நினைவும் வேண்டா அந்திமத்தில்.

இந்தச் சரீரவவதானந் தன்னிலிசையும் மோக்கமது
அந்தமில்லாக் குணத்தினனுக் காசாரியனும் பெரியநம்பி
சிந்தையுள்ளே இவையெல்லாந் தெளிந்து நோக்கி யிளையாழ்வான்
முந்த நினைந்தானிவையிவையே மொழிந்து வருக போ யென்றான்."

என்று பாசுரங்களாகவும் பெரியோர் வழங்குவர்.

இந்த ஆறுவார்த்தைகளின் ஸாரப்பொருளை யின்று ஸம்க்ஷேபமாக வுணர்ந்துவோம்;

1. அஹமேவ பரம் தத்வம்.

ஸ்ரீமந்நாராயணனே பரதத்வமென்பது முதல்வார்த்தை. எது ஜகத்காரண வஸ்துவோ அதுவே உபாஸ்யமென்றும் அதுவே முழுமுதற்கடவுள் என்றும் உபநிஷத்துக்களின் கொள்கையாகும். எது ஜகத்காரணவஸ்துவென்று ஆராயப் புகுமளவில், சாந்தோக்யோபநிஷத்தில் "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் ஏகமேவாத்விதீயம்" என்று ஸத் என்ற சப்தத்தாலே மூலப்பொருள் ஓதப்பட்டது. அதனால் ஒரு நிஷ்கர்ஷம் பிறக்க வழியில்லை. மற்றும் உபநிஷத்துக்களை ஆராயுமிடத்தில்

வாஜஸநேயகத்தில் "ப்ரஹ்ம வா இதமேக ஏவாக்ர ஆஸீத்" என்று ஓதப்பட்டது. முதற்காட்டிய உபநிஷத்தில் மூலப்பொருள் ஸத் சப்தத்தாலே கூறப்பட்டது; இதில் ப்ரஹ்ம சப்தத்தாலே கூறப்பட்டது. அந்த வஸ்து மிகவும் பெரிது என்று இதனால் ஏற்பட்டது. இன்னமும் உபநிஷத்துக்களை ஆராயுமளவில் ஐதரேயத்தில் "ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத்" என்றுளது. இதனால், அந்த மூலப்பொருள் அறிவுடையது என்றுமாத்திரம் ஏற்பட்டது. இந்திரன் சந்திரன் ஸூர்யன் யமன் வாயு வருணன் குபேரன் சிவன் பிரமன் என்று சொல்லப்படுகின்ற ஆத்மவர்க்கங்களில் ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஸ்ருஜ்யத்வமே சாஸ்த்ரங்களிற் கூறப்பட்டிருத்தல் குறிக்கொள்ளத்தக்கது. ஒரு ஸர்வேச்வரனுடைய ஆஜ்ஞைக்கு அஞ்சி நடப்பாருமாய், அவனை ஆராதித்துப் பதவிகள் பெற்றாருமாய், சாஸ்த்ரங்களின் அநுவர்த்தந-அதிவர்த்தநங்களாலே புண்யபாபங்களைப் பெற்று அவ்வவற்றின் பயனாகிய சுகதுக்கங்களை அநுபவிப்பாருமாய், ஓரளவுபட்ட ஐச்வர்யங்களை யுடையவர்களாகச் சொல்லப்படுகையாலே அஸ்மதாதிகளைப்போலே, அல்லது நம்மைக் காட்டிலும் சிறிது மேம்பட்டவர்களாகவுள்ள தேவர்கள் ஜகத்காரணபூதர்களாயிருக்கத் தகுதியுடையரல்லர். * ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாந: இத்யாதியாகவுள்ள மஹோபநிஷத்வாக்யத்தில் நாராயணனே மூலப்பொருளென்று ஸுஸ்பஷ்டமாக ஓதப்பட்டுளது. முந்துற உதாஹரிக்கப்பட்டுள்ள ச்ருதிவாக்யங்களில் ஸத், ப்ரஹ்ம, ஆத்ம பதங்களால் விவக்ஷிக்கப்பட்ட வஸ்து நாராயணனேயாக வடுக்கும். ஏன்? ஸாமாநாதிகரண்ய ந்யாயத்தாலே காரண வாக்யங்களெல்லாவற்றுக்கும் ஏகவிஷயத்வம் வேண்டுகையாலே "பஶுநா யஜேத" என்று நாற்கால் விலங்குகளையெல்லாம் சொல்லக்கடவதான [ஸாமாந்யமான] பசுசப்தம் ஸாமாந்யவாசிஶப்தாநாம் விஶேஷே பர்யவஸாநம் என்கிற ஸூத்ரத்தின்படி ஸாஸ்நாதிமத்த்வ ரூப விசேஷத்திலே பர்யவஸிக்குமாபோலே ஸத் ப்ரஹ்ம ஆத்ம பதங்கள் நாராயண ரூபவிசேஷத்திலே பர்யவஸித்துநிற்கும் இந்தத் தெளிவைத் தேவப்பெருமாள் அஹமேவ பரம் தத்வம். என்ற முதல்வார்த்தையினால் உண்டாக்கியருளினன்.

2. தர்சநம் பேத ஏவ ச.

இது நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு அந்தரங்கமானதொரு வார்த்தையாகும். உபநிஷத்துக்களில் "நேஹ நாநாஸ்தி கிஞ்சந" "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" இத்யாதிகளான வாக்கியங்கள் ப்ரஹ்மமொன்றேயுள்ளதென்றும் வேறு எந்தப்பொருளுமில்லையென்றும் தெரிவிக்கின்றன. "க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக:" "த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா" இத்யாதிகளான உபநிஷத் வாக்யங்களோவென்னில் சித்து அசித்து ஈச்வரன் என்ற மூன்று தத்வங்களும் உள்ளனவென்று தெரிவிக்கின்றன. ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், முந்துறக்காட்டிய அபேத ச்ருதிவாக்யங்களையே முக்கியமாகக் கொண்டு அத்வைதக்கொள்கையை ப்ரவசனம் செய்தார்கள். அவர்களுடைய கொள்கையின்படி உண்மையில் ஒரு தத்துவமே உள்ளதென்றும் சேதந-அசேதந-ஈச்வரபேதேந தத்வத்ரயம் கிடையாதென்றும் தேறுகிறது. அது தவறு என்று காட்டுவது இந்த வார்த்தை. சேதநாசேதநங்கள் ஈச்வரனுக்கு சரீரங்களாகையாலே உலகத்தில் சரீர சரீரிகளை ஒற்றுமை நயத்தினால் கூறும் வழக்கில் அபேத ச்ருதிகள் அவதரித்தனவே யல்லது உண்மையில் தனியே மூன்று தத்துவங்கள் இல்லையென்று மறுக்க வந்தவையல்ல. சரீராத்மபாவத்தாலே அபேதம் நிர்வஹிக்கப்படுகிறது. ஸம்ஸாரதசையோடு முக்தி தசையோடு வாசியற எங்கும் பாரமார்த்திகமாகவே ஜீவபரபேதம் உண்டுஎன்று இதனால் விளக்கிற்றாயிற்று. கம்ப ராமாயண யுத்தகாண்டக் காப்புச் செய்யுளில் "ஒன்றேயென்னின் ஒன்றேயாம் பலவென்றுரைக்கிற் பலவேயாம்" என்றதும் இதுபற்றியேயென்க.

3. உபாயேஷு ப்ரபத்திஸ் ஸ்யாத்.

பகவத்கீதை முதலிய சாஸ்திரங்களில் கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகம் ப்ரபத்தியோகம், எனப் பல உபாயங்கள் எம்பெருமானைப் பெறுதற்கு வழியாக வகுக்கப்பட்டுள்ளன. ப்ரபத்தி தவிர மற்ற உபாயங்கள் ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமுமே வடிவாகவுள்ள ஸ்ரீ வைஷ்ணவாதிகாரிக்கு ஸ்வரூபவிருத்தங்களாகையாலே ஸ்வரூபஜ்ஞர்களான அதிகாரிகள் அவ்வுபாயங்களை

அநுஷ்டிக்கத் தகுதியுடையாரல்லர்; "ப்ராபகாந்தரபரித்யாகத்துக்கு அஜ்ஞாந அசக்திகளன்று, ஸ்வரூப விரோதமே ப்ரதாந ஹேது" என்று ஸ்ரீவசந பூஷணத்தில் பிள்ளையுலகாசிரியர் அருளிச் செய்தபடிக்கும், "பத்தி முதலாமவற்றில் பதியெனக்குக் கூடாமல், எத்திசையு முழன்றோடியிளைத்து விழுங்காகம்போல், முத்திதரும் நகரேழில் முக்கியமாங் கச்சிதன்னில், அத்திகிரியருளாளர்க்கு அடைக்கல நான் புகுந்தேனே" என்று தேசிகன் பணித்தபடிக்கும் சரணாகதியே ஸ்வரூபோசிதமான உபாயமென்பது இந்த வார்த்தையின் கருத்து. முமுக்ஷுப்படியில் சரமச்லோகப்ரகரணத்தின் உபக்ரமத்தில் "இனி சில உபாய விசேஷங்களை யுபதேசிக்க' என்று தொடங்கி அருளிச்செய்துள்ள சூர்ணையும் இங்கு நோக்கத் தக்கது.

4. அந்திமஸ்ம்ருதி வர்ஜநம்.

ப்ரபந்நாதிகாரிகள் சரீரவியோக மடையுங்காலத்தில் "மடி வழிவந்து நீர்ப்புலன்சோர வாயிலட்டிய கஞ்சியும் மீண்டே; கடைவழிவாரக்கண்ட மடைப்பக் கண்ணுறக்கமதாவது" இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே மனமொழி மெய்களாகிய கரணத்ரயமும் சிதிலமாய் எம்பெருமானை நினைக்கவும் முடியாதபடியிருந்து அப்படியே பிராணவியோகமாய்விட்டால் அன்னவர்களுக்கு ஸத்கதி கிடையாதோ? வென்று சங்கிக்கவேண்டா;

"ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே ஶரீரே ஸதி யோ நர: |
தாது ஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விஶ்வரூபம் ச மாமஜம் ||
ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்டபாஷாண ஸந்நிபம் |
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம் ||" என்கிற

வராஹசரமச் லோகத்தின்படிக்கும் "எய்ப் பென்னைவந்து நலியும் போது அங்கேது நானுன்னை நினைக்க மாட்டேன், அப்போதைக் கிப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளியானே" என்ற அருளிச் செயலின்படிக்கும், யோக்யகாலங்களில் மனோவாக்காயங்களை நல்வழிப்படுத்தின மஹான்களுக்கு சரீராவஸாநகாலத்தில் நல்லஸ்மரண மில்லை யாயினும் குற்றமில்லை யென்பது இந்த வார்த்தையின் கருத்து. "அந்திம ஸ்ம்ருதிவர்ஜநம்" என்றிருப்பதால் அந்திம காலத்தில் ஸ்மரணம் இருக்கவே கூடாதென்று நிஷேதிப்பதாகச் சிலர் பொருள் கொள்ளக் கூடும். அது

வன்று பொருள். அந்திமஸ்மிருதி இருந்தே தீரவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை—என்னுமளவிலேயே இதற்குத் தாத்பரியமாகும்.

5. தேஹாவஸாநே மோக்ஷஸ்ஸ்யாத்:—

ப்ரபந்நாதிகாரிகளுக்கு ப்ராரப்தகர்மாநுபவ சேஷம் இருக்குமாகில் அதனை யநுபவித்துத் தீர்ப்பதற்காக மீண்டும் பிறத்தல் வேண்டியிருக்குமோ என்கிற சங்கையைத் தவிர்ப்பது இந்த வார்த்தை. சாந்தோக்யோபநிஷத்தில் (6—14) "தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே" என்று ஓதியுள்ளபடியே வர்த்தமாந சரீரத்தின் முடிவோடு ப்ராரப்தகர்மங்களின் அநுபவத்தினுடைய முடிவையும் எம்பெருமான் ஸங்கல்பித்து "மரணமானால் வைகுந்தங் கொடுக்கும் பிரான்" என்கிறபடியே மறுபிறவியற அநுக்ரஹித்தருள்வது திண்ண மென்றபடி. இவ்வுறுதியைத் திருவுள்ளம் பற்றியே தேசிகனும் "ஸ தேஹாவஸாநே மாம் த்வத்பாதம் ப்ராபய ஸ்வயம்" என்று நியாஸ தசகத்திலும் "ததநு திவஸேஷ்வேவ ஜீவ தேஹாந்தரா" என்று நியாஸதிலகத்திலுமருளிச் செய்தனர்.

6. பூர்ணாசார்யஸமாச்ரய:—

எந்த ஆசிரியர் திருவடிகளில் ஆச்ரயித்து உய்வதென்று எம்பெருமானார் திருவுள்ளத்திலிருந்த சிந்தனைக்கு ஸமாதாநமாகப் பெரிய நம்பி திருவடிகளில் ஆச்ரயிக்க வடுக்கு மென்று இதனால் தெளிவித்தபடி.

இன்னமும் நம்பிகளின் பெருமைகள் பலவுண்டு. வல்லார் வாய்க் கேட்டுணர்க.

"ஸ்ரீகாஞ்சீபூர்ணமிஶ்ரேண ப்ரீத்யா ஸர்வாபிபாஷிணே |
அதீதார்ச்சாவ்யவஸ்தாய ஹஸ்த்யத்ரீஶாய மங்களம் ||"

என்கிற மணவாளமாமுனிகளின் திவ்யஸூக்தியை அநுஸந்தித்து இவ்வளவிலே நிற்போமாக.

ஸ்ரீமத் வேதாந்த தேசிகன்.

(ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதி பயங்கரம். அண்ணங்கராசாரியரின் உபந்யாஸ ஸங்க்ரஹம்.)

[20-ம் பக்கத்தின் தொடர்ச்சி.]

(2)

பிருதாவளிகள் பெறுதல்.

ஸ்வாமி தேசிகனுக்கு வேதாந்தா சார்யர் என்றும், கவி தார்க்கிக கேஸரி யென்றும், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் என்றும், ஸமஸ்யா ஸஹஸ்ரீ என்றும் இங்ஙனே பல பிருதுகள் ப்ரஸித்த மாய் நிகழ்ந்தன. இவற்றுள், வேதாந்தா சார்யர் என்கிற பிருது ஸ்ரீரங்கநாதனால் அளிக்கப்பட்ட தென்னுமிடம் ஸ்வாமியின் திவ்ய ஸூக்திகளினாலேயே தெரியவருகின்றது. ஸங்கல்பஸூர் யோதய ப்ரஸ்தாவனையில்—"ஸ்ரீரங்கராஜ திவ்யாஜ்ஞா [illegible]" என்றும், அதிகரண ஸாராவளியின் தொடக் கத்தில் "ஸ்வஸ்தி ஸ்ரீரங்க[illegible]" என்னும் ச்லோகத்தில் "[illegible]" என்றும் அருளிச் செய்யப்பட்டுள்ளவை காண்க. ஸ்தோத்ர பாஷ்யத்தின் முடிவில் "[illegible]" என்ற ச்லோகத்தில் ஹரிபதத்தினாலும், தயாசதகத்தின் முடிவில் "வேதாந்த தேசிகபதே விநிவேச்ய பாலம் தேவோ தயாசதகமேததவாதயந்மாம்" என்ற ச்லோகத்தில் தேவபதத்தினாலும் ஸ்ரீரங்க நாதனே குறிக்கப்படுகிறுரென்றும் கொள்ளக் கடவது. [illegible]த்தால் ஸமந்வயம் காண்க.

ஸர்வதந்த்ர ஸ்வந்த்ரர் முதலிய மற்ற பிருதுகள் வித்வான் களால் அளிக்கப்பட்டன. இதுவும் ஸ்ரீதேசிக திவ்ய ஸூக்தி களினாலேயே தெரிகின்றது; ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் மேலே குறித்த விடத்தில் "[illegible]" என்றும், ஸ்தோத்ர பாஷ்ய ஸமாப்தியில் "[illegible] ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர:" என்று முள்ள ஸ்ரீஸூக்திகள் காண்க. ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் என்கிற பிருது ஸ்ரீரங்க நாச்சி யாரால் அளிக்கப்பட்ட தென்றுஞ் சொல்லுவதுண்டு.

ஸமஸ்யா ஸஹஸ்ரீ என்கிற பிருது மற்ற பிருதுகளைப் போல் ஸுப்ரஸித்தமாக ஸ்வாமிக்கு வழங்குவதில்லை யாயினும், அக் காலத்தில் ஸதஸ்ஸுகளில் வித்வான்களால் வழங்கி வரப்பட்ட தென்று விளங்குகின்றது. ஒரு ச்லோகத்தின் ஏகதேசத்திற்கு 'ஸமஸ்யா' என்று பெயர். ஸமஸ்யா பூரணம் என்பது மஹா கவி களின் கோஷ்டிகளில் ப்ரஸித்தம். ஒருவர் ஒரு பாதத்தையோ சில பதங்களையோ தாம் கவனஞ்செய்து வெளியிட்டால், மற்றொரு வர் அப்போதே பூர்ண ச்லோகமாம்படி அதனைப் பூர்த்தி செய்து வெளியிடுதல் ஸமஸ்யா பூரணமெனப்படும். இங்கு இதற் கொரு சிறு த்ருஷ்டாந்தம் காட்டுவோம்;—"[illegible]" என்று ஒருவர் ஸமஸ்யை கொடுத்தால், அந்த ஒரு பாதத்திற் கூறப்பட்டுள்ள பொருளை உபபந்நமாம்படி நிரூபித்து ச்லோக பூரணம் செய்வது ஸமஸ்யா பூரணமாகும். மேற்குறித்த ஸமஸ்யையின் பொருளாவது—ஒரு யானையானது நண்டுவளையில் இருந்து கொண்டு சிங்கத்தைக் கொல்லுகின்றது என்பதாம். யானை சிங்கத்தைக் கொல்வது அஸம்பாவிதம். அது நண்டு வளையில் இருந்து கொண்டு அச் செயலைச் செய்கிற தென்பது ஸுதராம் அஸம்பாவிதம். இப்படிப் பட்ட விசித்திரப் பொருளை அமைத்து ஸமஸ்யை கொடுத்து விட் டாலும் மஹா கவிகள் புத்தி சமத்கார விசேஷத்தினால் இது ஸமந்விதமாம்படி பூரணம் செய்து விடுவார்கள். கவிகளுக்கு இது வொரு விநோதமான போது போக்கு.

தேசிகன் ஸமஸ்யைகள் கொடுப்பதிலும், பிறர் கொடுக்கும் ஸமஸ்யைகளைப் பூரணம் செய்வதிலும் நிகரற்ற வல்லவர் என்பது விளங்க இவர்க்கு "ஸமஸ்யா ஸஹஸ்ரீ" என்ற விருது தோன்றிய தென்பர். அங்ஙனே ஸ்வாமி அருளிச் செய்த ஸமஸ்யைகளோ தத்பூரணங்களோ இப்போது ஒன்றும் கிடைக்காததனால் லுப்தங் களாயின வென்று சொல்லக் கேள்வி.

கிணறு கட்டுதல்.

ஸ்வாமி ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரென்று பிருது வஹித்து விளங்கிவந்ததில் பொறாமை கொண்ட ஒரு கொத்தன், ஸ்வாமி திருவயிந்திரபுரத்தில் எழுந்தருளியிருக்கும் போது ஒரு நாள் அருகே வந்து, தேவரீர் எல்லாக் காரியங்களும் செய்ய வல்லமை பெற்றிருந்தாலன்றோ ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரென்று விருதுதிப்

புறப்படலாம்; நான் கிணறு கட்டுவேன்; அது கட்ட உமக்குத் தெரியாதல்லவோ? அப்படியிருக்க அந்த விருதை நீர் எங்ஙனே வஹிக்கலாம்?' என்று க்ஷேபிக்க, ஸ்வாமியும் புன்முறுவல் செய்துகொண்டே அவன் முன்னிலையிலேயே ஒரு கிணறு நிர்மாணஞ் செய்து அவனது செருக்கை யடக்கினர். இந்தக் கிணறு நாளைக்கும் பக்தர்கள் ஸேவிக்கக் கூடிய நிலைமையிலுள்ளது.

பாம்பாட்டியை வென்றது.

மற்றொருகால் ஒரு பாம்பாட்டி, ஸ்வாமி ஸந்நிதானத்தில் விடை கொண்டு 'நீர் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரராகில் கொடிய பாம்புகளை ஆணையிட்டுக் கட்டுந்திறனும் உமக்குத் தெரிந்திருக்க வேண்டுமே; அந்த வல்லமையைக் காட்டுவீராகில் நீர் மெய்யே ஸர்வதந்த்ர ஸ்வதந்திரரே' என்று சொல்லிக் கொண்டே தான் ஜீவநார்த்தமாக வைத்திருந்த சில பாம்புகளைப் பெட்டியில் நின்றும் திறந்து விட, அவையும் சீறிக்கிளம்ப, அப்போது ஸ்வாமி இனி,!தாம் வெறுமனிருக்கலாகாதென்று கருதி ஸ்ரீவைநதேய மந்த்ர ஜபத்துடனே தம்மைச் சுற்றிச் சில கோடுகள் போட, மிகக் கொடிய ஒரு ஸர்ப்பம் மாத்திரம் கோடுகளைக் கடந்து ஸ்வாமியை நெருக்கின வளவிலே, ஸ்வாமி உடனே ஹ்ருதயத்தினால் பக்ஷிராஜனை ஆஹ்வாநம் செய்தருள, அவனும் சடக்கென வந்து தோன்றி அந்த அரவங்களைக் கவ்விக்கொண்டு அகலவே, பாம்பாட்டி தான் பங்கப் பட்டது மல்லாமல் தனது ஜீவநார்த்தமாக வைத்திருந்த பாம்புகளும் தொலைந்ததனால் பரிதாபம் மிக்கு ஸ்வாமி திருவடிகளிலே விழுந்து வேண்டிக்கொள்ள, ஸ்வாமியும் திருவுள்ளமிரங்கி மீண்டும் அந்தப் பாம்புகள் அவனுக்குக் கிடைக்குமாறு அநுக்ரஹஞ் செய்தருளினர்.

திருக்குமாரர் திருவவதரித்தல்.

ஸகல வகைகளாலும் ஸ்வாமியை நிகர்த்தவரான ஒரு திருக்குமாரர் நள ஸம்வத்ஸரம் ஆவணி மாதத்து ரோஹிணீ நக்ஷத்ரத்தில் திருவவதரிக்க, அவர்க்கு வரதாசாரியர் என்று திருநாமமிடப்பட்டது. இவரும் ப்ராப்த காலங்களில் உபநயநாதி ஸம்ஸ்காரங்களைப் பெற்று "யஸ்யாஷைவ ஸ்யா ஸவஷம் ஸாஸ்த்ரமே தாஹி நாத்ருதஃ" என்று இவர்தாமே பேசியுள்ளபடி ஸ்வாமி ஸந்நிதியிலேயே ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் அதிகரித்து விளக்கில் கொளுத்தின தீவட்டி போலே விளங்கி வந்தார். (தொடரும்)

ஸ்ரீ

ஒரு விண்ணப்பம்

வைஜயந்தீ சந்தாதாரர்களிற் சிலர் ஸமஸ்க்ருத பாஷையிலும் சில விஷயங்கள் வெளிவந்தால் நலமாயிருக்கு மென்று அபிப்ராயப் பட்டதை உத்தேசித்தும் நமது ஸித்தாந்தத்திற்கு தென் கலையும், வட கலையும் இரண்டு கண்கள் போல இன்றியமையாததாயிருத்தலையும் உத்தேசித்து ஸமஸ்க்ருதாலாப சர்ச்சா என்று ஒரு பாகம் தமிழில் பொருள் விளக்கத்துடன் சென்ற தைமாத ஸஞ்சிகை தொடங்கி அச்சிடப்பட்டிருக்கிறது. மேலும் ஸ்ரீ. உ. வே. அநந்தாண் பிள்ளை கோவிந்தப்பங்கார் ஸ்வாமி அநுக்ரஹிக்கும் ஸ்ரீ ராமாயண ஶ்லோகார்த்தம், சில ஶ்லோகங்களுக்கே யாயிருந்தது. ஸம் க்ஷேப ராமாயண ஶ்லோகங்களெல்லாவற்றையுமே அவ்வாறு அச்சிட வேண்டுமென்று மற்றும் சிலர் கருதியபடி அந்த ஸ்வாமியினால் அநுக்கிரஹிக்கப் படாத சில ஶ்லோகங்களுக்கு உரை அடியேனால் எழுதப்பட்டு வந்தது. அதற்குமேல் ஸ்ரீகோவிந்தராஜர் வியாக்யாநத்தையும் அத்துடன் சேர்த்து ப்ரசாரம் செய்தால் ஸம்ஸ்கிருத பாஷையில் பரிசயத்தைப் பண்ண ஆவலுடையார்க்கு மிகவும் உபயோகமாயிருக்குமென்று நினைத்து ஸம்ஸ்கிருத பாஷாமயமான கோவிந்தராஜர் வ்யாக்யாநமும் அச்சிடப்படுகிறது. —பத்திராதிபர்

संस्कृतालापचर्चा ।

प्रत्यहं भगवत्सद्मसेवनम् भृशमुत्तमम् ।

தினந்தோறும் தேவாலயம் தொழுவது சாலவும் நன்று.

परमभक्तचरितम् ।

1. **मधुपुरी नाम कश्चिदग्रहार** :—மதுபுரீ என்கிற ஒரு அக்ரஹாரம் (இருந்தது)
2. **तत्र प्रतीच्यां दिशि कोऽपि देवालयो लघीयान्**— அதில் மேற்கு திக்கில் ஒரு தேவாலயம் சிறியதாக (இருந்தது.)
3. **नासीत् तत्र विग्रहाराधनम्** அக் கோயிலில் விக்ரஹாராதனம் நடைபெறுவதில்லை.

4. **कस्य देवस्यायमालय इति नावगम्यते** எந்த தேவதையினுடைய ஆலய மென்று அறியப்படவில்லை.

5. **तस्मिन्नग्रहारे कश्चन कुटुम्बी वर्ततेस्म** அந்த அக்ரஹாரதில் ஒரு கிரஹஸ்தனிருந்தான்.

6. **तस्य नामधेयं परमभक्तः** அவனுடைய பெயர் பரமபக்தன்.

7. **निर्दिष्टपूर्वदेवालयं प्रति स प्रत्यहं प्रयाति.** முன் குறிப்பிடப்பட்ட தேவாலயத்தைக் குறித்து அவன் தினந்தோறும் போய்க் கொண்டிருந்தான்.

8. **बहिरेव स्थित्वा स्तुत्वा प्रणमति पुनः प्रतिनिवर्तते स्वं सदनम्** வெளியிலேயே நின்று ஸ்தோத்திரம் பண்ணி வணங்குவான் மறுபடியும் திரும்புவான் தன்னுடைய கிரஹத்தைக்(குறித்து,)

9. **आग्रहारिकास्सर्वेऽपि तं परिहसन्ति** அக்ரஹாரத்திலுள்ளாரனைவரும் அவனை பரிஹஸிப்பார்கள்.

10. **अथापि स नैव त्यजति नित्यक्रममिमम्** ஆனாலும் அவன் விடுவதே கிடையாது இந்த நித்யக்கிரமத்தை.

11. **काले गते तं देवालयं तत्पार्श्वस्थिता भूमिंच स क्रीणाति स्म** (இவ்வாறு) காலம் செல்லாநின்ற வளவில் அந்த தேவாலயத்தையும் அதன் பக்கத்திலிராநின்ற பூமியையும் அவன் கிரயம் வாங்கினான்.

उद्यानवनम् परिकल्पयामास (அதை) உத்யாநவநமாகப் பண்ணுவித்தான்.

12. **तत्र कश्चित् अन्धकूप आसीत्** அங்கொரு பாழ்ங்கிணறுஇருந்தது

13. **स तं परिष्कर्तुमैच्छत्** அவன் அக்கிணற்றை பரிஷ்கரிக்க விரும்பினான்.

14. **कदाचिदयं परमभक्तस्सुष्वाप** ஒருகால் இந்த பரமபக்தன் அயர்ந்து நித்திரை செய்தான்.

15. **स्वप्ने कश्चन महान् एवमुवाच** ஸ்வப்நத்தில் ஒரு மகா புருஷன் பின்வருமாறு சொன்னார்.

16. **"त्वया परिष्कर्तुमिष्टे शून्यकूपे अपरिमितद्रव्यभरितो निधिरास्ते अर्धं भवता स्वीक्रियताम्। अर्धं देवालयार्थमस्तु। कूपे भगवद्विग्रहोऽपि वर्तते" इति।** உன்னால் செப்பனிட விரும்பப்பட்ட பாழ்ங்கிணற்றில் அளவற்ற திரவியங்கள் நிறைந்த

புதையலுள்ளது. பாதி உன்னால் கிரகிக்கப்படட்டும். பாதி தேவாலயத்தின் பொருட்டு ஆகட்டும். கிணற்றில் பகவானுடைய விக்ரஹமும் இருக்கின்றது என்று.

17. **अपरेद्युः परमभक्तः कूपं खनति स्म** மறுநாள் பரமபக்தன் கிணற்றைத் தோண்டினான். **यथोक्तमासीत्** சொன்னபடியே இருந்தது.

18. **सच यथोदितमेव चकार** அவனும் கட்டளைப்படியே செய்தான்.

19. **भगवन्मन्दिरं सुष्ठु निर्मापितमासीत्** தேவாலயம் செவ்வையாக நிர்மாணிக்கப்பட்டது.

20. **विग्रहाराधनं च विशेषतस्संपद्यते** விக்ரஹாராதநமும் விசேஷமாக நடைபெறுகின்றது.

21. **उत्सवादिकं विजृंभते** உத்ஸவம் முதலானதும் விருத்தியடைகின்றது.

22. **सोऽपि महान् इभ्यस्समजनि** அவனும் பெரிய தனிகனாக ஆனான்.

23. **तस्मात्—प्रत्यहं भगवत्सन्निसेवनं भृशमुत्तमम्—**

— —

வித்வான்களுக்கு ஓர் விண்ணப்பம்

(ஸ்ரீகாஞ்சீ. ப்ர. அண்ணங்கராசாரியர்)

ஸஹஸ்ர நாமத்தில் *அம்ருதஶ்ஶாஶ்வத: ஸ்தாணுர்வராரோஹோ மஹாதபா:* என்ற விடத்தில் வராரோஹ: என்ற திருநாமத்திற்கு மிக விரிவாக பாஷ்ய மருளிச் செய்யா நின்ற பட்டர் (ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில்).

"அத: ஶ்ரீஜநஸ்ய [illegible] ஶ்ரீவத்ஸ [illegible] விரக்திதயா [illegible] [illegible] [illegible] [illegible] வர்ஜிதநாய: வர்ஜிதம் [illegible]. [illegible] [illegible] [illegible]"

என்கிற ஸ்ரீஸூக்திகளை அருளியிருக்கக் காண்கிறோம். மேற்குறித்த வாக்ய ராசியில் * [illegible] வர்ஜிதநாய: வர்ஜிதம் [illegible] * என்பதற்கு இன்னது பொருளென்றே

விளங்கவில்லை. மஹான்களைக் கேட்டால் "பங்க்தி அப்படியிராது, பாடம் மாறுபட்டிருக்கும்" என்றிவ்வளவே ஸாதித்து விடுகிறார்கள். இதை நன்கு விமர்சித்துத் தெளிவு பிறப்பிக்க வேணுமென்று வித்வச்சிகாமணிகளை ப்ரார்த்திக்கின்றேன்.

வர்த்தமானங்கள்

ஸ்ரீரங்கம் பங்குனி 3. (16-3-37) திருமுளை 17-3-37 நகர சோதனை 18-3-37. ஆதிப்ரஹ்மோத்ஸவ ஆரம்பம். த்வஜாரோஹணம். 3-வது உத்ஸவம் ஜீயர்புரம் அம்மையார் தண்ணீர்ப்பந்தல். 4-வது ரெட்டியார் மண்டபம் ராத்திரி கருட சேவை. 5-வது ஆதிசேஷன் கல்பவிருக்ஷம். 6-வது உறையூர். 7-வது சூர்ணாபிஷேகம். நெல் அளவு. உபயநாச்சிமாரோடு பூந்தேர். நாச்சியார் ஸந்நிதியில் திருமஞ்சனம். 8-வது எல்லைக் கரை மண்டபம் பாரிவேட்டை 9-வது காலை பல்லக்கு தாயார் ஸந்நிதியில் ப்ரணயகலஹம். ஆழ்வார் எழுந்தருளி ஸமாதாநம். கத்யத்ரயகோஷ்டி. சாற்றுமுறை திருமஞ்சநம். கோரதம். 10-வது ஸப்தாவணம். உடையவர் ஸந்நிதிக்கெழுந்தருளுதல். த்வஜாவரோஹணம்-பங்குனிஹஸ்தம் திருவரங்கத்தமுதனார். பங்குனி 15 (28-3-37) விடாயாற்றி ஆளும் பல்லக்கு-7-4-37. ஸர்வ ஏகாதசி திருமஞ்சநம் 10-4-37. அமாவாஸ்யை 11-4-37 ரேவதி-ரேவதீ மண்டபத்தில் திருமஞ்சனம்-பங்குனி 30-(12-4-37) ஸம்வத்ஸராதி ஆழ்வாராசாரியர்கள் எழுந்தருளிய பிறகு புறப்பாடு திருமஞ்சநம் புதுப்பஞ்சாங்கம் வாசித்தல்.

திருநாராயணபுரம். (மேலக்கோட்டை) பங்குனி 9 (22-3-37) வைரமுடி ஸேவை.

வானமாமலை. பங்குனி 12 (25-3-37) தங்கக்கோரதம்.

மன்னார்குடி: பங்குனி 4 (17-3-37) வெண்ணெய்த்தாழி 18-3-37 திருத்தேர்.

ஸ்ரீ வில்லிபுத்தூர்: 13 (26-3-37) ஆண்டாள் திருக்கல்யாணம்.

ஸ்ரீ பெரும்பூதூர்: பங்குனி 25 (7-4-37) உடையவர் உத்ஸவ ஆரம்பம்.

(பரதன் முதலானவர்களால் நீயே அரசாள வேண்டும் என்று வேண்டிக்கொண்டாலும்) ராஜ்யபோகங்களில் பற்றில்லாதவனாயுமிருக்கிற ராம:—இராமன், நாகரஸ்ய ஜநஸ்ய—நகரத்திலுண்டான ஜநங்களுடைய தத்ர—அந்த சித்ர கூட பர்வதத்தில் புந: ஆகமநம் ஆலக்ஷ்ய—மறுபடியும் வரவை ஆலோசித்து (அந்ததேசத்தை விட்டு) ஏகாக்ர:—பித்ருவசநபரிபாலநமொன்றையே முடிவாகக் கொண்டவனாய், அன்றிக்கே விரோதிகள் மலிந்திராநின்ற தேசமானதால் மிகவும் ஜாகரூகனாய், தண்டகாந் (தண்டகன் என்கிற அரசனுக்கு வாஸஸ்தானமாயிருந்த நகரம் ஶுக்ர ஶாபத்தால் காடாயிற்றானாலும் அக்காட்டிற்கு தண்டகாரண்ய மென்றே வழங்கப் பட்டு வருகிறது. அந்த, தண்டகாவநத்தை ப்ரவிவேஶ அடைந்தான்—ஹ என்று ருஷி வருந்துகிறார்.

இவ்வளவாக ஸ்ரீராமனுடைய விருத்தாந்தத்தால் பித்ருவசநபரிபாலநரூப ஸாமாந்ய தர்மமும், பரதாழ்வானுடைய விருத்தாந்தத்தால் சேஷ பூதனுக்கு சேஷி விஷயமான கைங்கர்ய வ்ருத்தியே ஸ்வரூபமென்பதும், ப்ரபந்நனுடைய பகவத்பாரதந்த்ரியமும், ஸ்ரீ ஶத்ருக்நாழ்வானுடைய விருத்தாந்தத்தால் பாகவத பாரதந்த்ரியமும் ஸூசிப்பிக்கப்பட்டது.

ப்ரவிஶ்ய து மஹாரண்யம் ராமோ ராஜீவலோசந:
30 விராதம் ராக்ஷஸம் ஹத்வா ஶரபங்கம் ததர்ஶ ஹ
ஸுதீக்ஷ்ணம் சாப்யகஸ்த்யம் ச அகஸ்த்யப்ராதரம் ததா

ப்ரவிஶ்யது மஹாரண்யம் ராமோ ராஜீவலோசந:
விராதம் ராக்ஷஸம் ஹத்வா ஶரபங்கம் ததர்ஶ ஹ
ஸுதீக்ஷ்ணம்சாப்ய கஸ்த்யம்ச அகஸத்ய ப்ராதரம் ததா.

ராம: மஹாரண்யம் ப்ரவிஶ்ய ராஜீவலோசந: ஸர்வேஷாம் ஸம்ஸாரிணாம் நயநாநந்தநோ விகஸித நயநாரவிந்த: ததைவ உக்தோ விராதம் ராக்ஷஸம் ஹத்வா ததநந்தரம் உபஹாரீக்ருத்ய ஶரபங்கம் ததர்ஶ | ததநுஜயா ஸுதீக்ஷ்ணம் ச அகஸ்த்யம் ச ஸாந்நித்யாத் அகஸ்த்யப்ராதரம் ச ததர்ஶ-த்ருஷ்டவாந்.

தச்ச்லோகீ—விராதவதாநந்தரமேவ ஶரபங்காஶ்ரமம் ஜ்ஞாத்வா விராதவதவ்ருத்தம் ஶரபங்காஶ்ரமே "ஸிக்ஷமேஷு

[illegible]

இராமன், (அநேக விதமான விருக்ஷஸமூஹங்கள் அடர்ந்திரா நின்ற) பெரிய காட்டையடைந்து, அபூர்வமான ஸந்நிவேஶங்களைப் பார்ப்பதாலுண்டான ஆநந்தத்தால் அலரா நின்ற தாமரைக் கண்களையுடையனாய், அந்த உத்ஸாஹத்தினாலேயே விராதன் என்கிற ராக்ஷஸனைக்கொன்று, அவனுடைய வதத்தைக் காணிக்கையாகக் கொண்டு; ஶரபங்க மஹருஷியைக் கண்டார். அவருடைய ஆஜ்ஞையினால், ஸுதீக்ஷ்ணரையும் ஸுதர்ஶநர் என்கிற அகஸ்த்யரின் ஸஹோதரரையும் கண்டார். தனி—விராதனைக் கொன்று ஶரபங்கரைக் கண்டார் என்றதால் விராதவதம், ஶரபங்கர் முதலான ருஷிகளைக் காண்பதற்கு "அரசனையும் 'தெய்வத்தையும் பெரியோரையும் வெறுங்கையோடு அடையக் கடவனல்லன்" என்று ஶாஸ்த்ரங்களில் விதிக்கப் பட்ட காணிக்கையாக வாயிற்று என்பது தோற்றா நிற்கின்றது.

32 [illegible]

அகஸ்த்யவசநாச்சைவ ஜக்ராஹைந்த்ரம் ஶராஸநம்
கட்கம்ச பரமப்ரீத: துணீசாக்ஷய ஸாயகௌ

[illegible]

இராமன், ஜகதேக வீரனான தனக்குத்தகுந்த ஆயுதங்களையடையப்பெற்றதாலுண்டான நிரவதிகமான ஆனந்தத்தை யுடையனாய்க்கொண்டு அகஸ்த்யரின் ஆஜ்ஞையினாலேயே (தான் ப்ரார்த்திக்காமலே) இந்த்ரனால் கொடுக்கப்பட்ட (பாணங்களை யிரைக்கப்படுவதால் ஶராஸநம் என்று சொல்லப்படுகிற) வில்லையும், கத்தியையும், (யுத்தத்தில் ஆயிரக்கணக்காக அள்ளியிரைத்தாலும் குறையாத பாணங்களை யுடைய அம்பறாக் கூடுகளையும் அங்கீகரித்துக் கொண்டான். அகஸ்த்ய வசநத்தால் அங்கீகரித்துக் கொண்டான் என்றதால், கத்தி முதலான ஆயுதங்களை ஆகஸ்த்யர் எடுத்துக் கொள் என்று காட்டினாரே யல்லாமல் தொட்டு எடுத்துக் கொடுக்கவில்லை யென்பது சொல்லப்படுகிறது.

33 [illegible]

வஸதஸ் தஸ்ய ராமஸ்ய வநே வநசரைஸ் ஸஹ
ருஷயோப்யாகமந் ஸர்வே வதாயாஸுர ரக்ஷஸாம்

[illegible]

அவ-இந்தப்ரகாரம் விரோதி நிரஸநத்திற்கு (அழிக்கைக்கு) பெருமாளின் ஆநுகூல்யத்தை யறிந்தவளவில், அடையப்பட்ட அவஸரத்தை யுடைய முநிஜநங்களின் ப்ரார்த்தனையைச் சொல்லுகிறார். வஸத: என்கிற ஶ்லோகத்தால்.

ஶரபங்கவநத்தில் வஸியாநின்ற அந்தராமனுடைய (ஸமீபத்தை) ஸமஸ்தமானவாலகில்யாதி மஹரிஷிகள், சித்ரகூட பம்

பாவநம் முதலான வநங்களில் வஸியாநின்ற ருஷிகளோடு கூட, அன்றிக்கே, வநவாஸிகளோடுகூட வநத்தில் வசியாநின்ற ராமனுடைய ஸமீபத்தை, ஸமஸ்தமான ருஷிகளும், அஸுரப்ருக்ருதிகளான ராக்ஷஸர்களுடைய, இத்தால் ராக்ஷஸ குலத்தில் பிறந்திருந்தாலும் ராக்ஷஸ க்ருத்யமில்லாததால் தர்மஸ்வபாவன் என்று சொல்லும்படியான ஸ்ரீவிபீஷணனும்வான் விலக்கப்படுகிறார். அன்றிக்கே ப்ராணன்களை அபஹரியாநின்ற ராக்ஷஸர்களுடைய வதத்தைப்பண்ணுவிக்கைக்கு (ப்ரார்த்திப்பதற்கு) அபிமுகமாக வந்தார்கள். ஶரணாகதியென்பது, ரக்ஷகனுடைய அபிமுகமாகச் செல்லுமதைக்காட்டிலும் வேறன்று. ஸத்துக்களிடம் கார்யத்தைக்கொள்ள வேண்டுமென்கிற புருஷர்களுடைய முன்னிற்றலே போதுமானது.

34 ஸ தேஷாம் ப்ரதிஶுஶ்ராவ ராக்ஷஸாநாம் ததா வநே

ஸ தேஷாம் ப்ரதிஶுஶ்ராவ ராக்ஷஸாநாம் ததா வநே

அத முநீநாம் து:க்கபரிஹாரோத்யுக்தோ ராமோ விரோதிநிரஸநம் ப்ரதிஜ்ஞாதமித்யாஹ.

ஸ:-ராம: ராக்ஷஸாநாம்வநே-ஸ்தாநகாரணே தேஷாம் ருஷீணாம் ததா ப்ரதிஶுஶ்ராவ (யதா தைர்யாசிதம்) ததா ப்ரதிஜஜ்ஞே.

அவ—முநிகளுடைய பரிதாபகரமான நிலைமையைப்பார்த்து விரோதி நிரஸநம் ப்ரதிஜ்ஞை பண்ணப்பட்டது.

அந்த ராமன் ராக்ஷஸர்களுக்கு வாஸஸ்தாநமான தண்டகாவநத்தில், அந்த ருஷிகளுக்கு, அவர்களால் எவ்வாறு வேண்டிக் கொள்ளப் பட்டதோ? அவ்வாறே ப்ரதிஜ்ஞை பண்ணினான்.

ப்ரதிஜ்ஞாதஶ்ச ராமேண வத: ஸம்யதி ரக்ஷஸாம்
35 ருஷீணாமக்நிகல்பாநாம் தண்டகாரண்யவாஸிநாம்

ப்ரதிஜஞாதஶ்ச ராமேண வதஸ் ஸம்யதி ரக்ஷஸாம்
ருஷீணாமக்நிகல்பாநாம் தண்டகாரண்ய வாஸிநாம்

அத ருஷிபிர்யாசித: ராமேண ப்ரதிஜ்ஞாதஶ்சார்த்த இத்யாஹ ப்ரதிஜ்ஞாதஶ்சேதி........................ராமேண ப்ரதிஜ்ஞாதோ(அ)ர்த்த:, "அக்நிகல்பாநாம்—ஈஷதூநாக்நி ஸாத்ருஶ்யம்

ப்ராப்தாநாம் (அதஏவ) தண்டகாரண்யவாஸிநாம் ருஷீணாம் சதுர்த்யர்த்தே ஷஷ்டீ. ஸம்யதி-யுத்தே ரக்ஷஸாம் வத:".

அவ—ருஷிகளால் வேண்டிக்கொள்ளப் பட்டதும், ராமனால் ப்ரதிஜ்ஞை பண்ணப்பட்டதுமான பொருள் எது? என்கிற ஶங்கையிற் சொல்லுகிறார். ப்ரதிஜ்ஞாதஶ்ச என்று

இராமனால்ப்ரதிஜ்ஞை பண்ணப்பட்ட பொருளாவது, சிறிது அக்நியோடு ஸாம்யத்தை யடைந்தவர்களாய், (ஆகையாலேயே) தண்டகாரண்யத்தில் வஸியா நின்றவர்களான ருஷிகளின் பொருட்டு யுத்தத்தில் ராக்ஷஸர்களுடைய வதம் (ஆகும்.)

தேந தத்ரைவ வஸதா ஜநஸ்தாநநிவாஸிநீ
36 விரூபிதா ஶூர்ப்பணகா ராக்ஷஸீ காமரூபிணீ

தேந தத்ரைவ வஸதா ஜநஸ்தாநநிவாஸிநீ
விரூபிதா ஶூர்ப்பணகா ராக்ஷஸீ காமரூபிணீ

அத ப்ரதிஜ்ஞாநிர்வாஹபீஜமுபக்ஷிபதி தேநேதி. தத்ரைவ-ஜநஸ்தாநே வஸதா தேந-ராமேண, ஜநஸ்தாநநிவாஸிநீ, காமேந-இச்சயா ரூபமஸ்யாஸ்தீதி காமரூபிணீ, ஶூர்ப்பவத் நகா யஸ்யா: ஸா ஶூர்ப்பணகா-ஶூர்ப்பணகாக்யா ராக்ஷஸீ, விரூபிதா-கர்ணநாஸிகாச்சேதேந, வைரூப்யம் ப்ராபிதா. அத்ர ஶூர்ப்பணகாயா: வைரூப்யம் லக்ஷ்மணேந க்ருதமபி "ராமஸ்ய தக்ஷிணோ பாஹு:" இதி லக்ஷ்மணஸ்ய ராமபாஹுத்வாத் ராமேண விரூபிதா இத்யுக்தம்.

அவ—ப்ரதிஜ்ஞையை நிறைவேற்ற அடியிடுகிறார் தேநேதி.

அர்த்தம் - ஜநஸ்தாநத்தில் வஸியா நின்ற ராமனால், ஜநஸ்தாநத்தில் வஸியா நின்றவளாயும் நினைத்தபடி உருக்கொள்ள வல்லளாயுமிருக்கும் ஶூர்ப்பணகா என்கிற ராக்ஷஸீ, காதும்மூக்கும் அறுக்கப்பட்டதால், வைரூப்யத்தை அடைவிக்கப் பட்டாள். வைரூப்யம், லக்ஷ்மணனால் பண்ணுவிக்கப்பட்டாலும், லக்ஷ்மணனை ராமனுடைய வலது கையாகச் சொல்லுகையால், ராமனால் வைரூப்யத்தை அடைவிக்கப் பட்டாள் என்று சொல்லப் பட்டது.

37 [illegible]

ததஶ் ஶூர்பணகாவாக்யாத் உத்யுக்தாந் ஸர்வராக்ஷஸாந்
கரம் த்ரிஶிரஸம் சைவ தூஷணம் சைவ ராக்ஷஸாந்
நிஜகாந ரணே ராம: தேஷாம் சைவ பதாநுகாந்

[illegible]

அர்-ஶூர்ப்பணகையின் வைரூப்யத்தைச் செய்தபின், ஶூர்பப்ணகையின் வார்த்தையினால் யுத்தத்திற்கு ஸந்நத்தர்களாய் வரா நின்ற பதினாலாயிரம் ராக்ஷஸர்களையும், அவர்களில் ப்ரதாநர்களான கர, தூஷண, த்ரிஶிரர்களையும், இவர்களெல்லாருக்கும் அநுசரர்களானவர்களையும் யுத்தத்தில் கொன்றான். அன்றிக்கே, கரன் முதலானவர்களையும் அவர்களின் அநுசரர்களான அகில ராக்ஷஸர்களையும் கொன்றான் என்றும் யோசிக்கலாம்.

38 [illegible]

வநே தஸ்மிந் நிவஸதா ஜநஸ்தாந நிவாஸிநாம்
ரக்ஷஸாம் நிஹதாந்யாஸந் ஸஹஸ்ராணி சதுர்தஶ

[illegible]

அவ—(ராமனால் கொல்லப்பட்ட ராக்ஷஸர்களை கணக்கிடுகிறார். வநே-என்று.

அர் - அந்த வநத்தில் வஸியா நின்ற ராமனாலே, ஜநஸ்தாநத்தில் வஸியா நின்ற ராக்ஷஸர்களுடைய பதினாலாயிரமும் (ராக்ஷஸர்கள் பதினாலாயிரவர்களும்) கொல்லப் பட்டவர்களாக ஆனார்கள்.

வநத்தில் வஸியா நின்ற ராமனாலே என்றதால், ராமனுக்கு வநம் தன்னிலமன்றென்பதும், பார்த்தவர்கள் மனதிலுண்டான சோகத்தை நீக்கி ஆநந்தத்தை யுண்டுபண்ணக்கூடிய ரமணீயமான திருவுருவை யுடைத்தா யிருக்கும் தன்மையும், ஏகவசநத்தால் நிஸ்ஸஹாயத்வமும் சொல்லப்பட்டன. ஜநஸ்தாநத்தில் வஸியா நின்ற என்றதால், அரண்யம் ராக்ஷஸர்களுக்குத் தன்னில மாயிருக்கும் தன்மையும், ராக்ஷஸர்கள் என்றதால் பார்த்தவர்கள் மனது பதறும் படியான பயங்கரமான ரூபத்தை யுடையவர்கள் என்பதும், பதினாலாயிரம், என்றதால் ராக்ஷஸர்களின் அளவு கடந்த எண்ணிக்கையும் குறிக்கொள்ளத்தக்கன.

39 [illegible]

ததோஜ்ஞாதிவதம் ஶ்ருத்வா ராவண: க்ரோத மூர்சித:
ஸஹாயம் வரயாமாஸ மாரீசம் நாம ராக்ஷஸம்

[illegible]

அவ—இந்த ப்ரகாரம் ராமனுடைய ஸத்ய ப்ரதிஜ்ஞத்வம் சொல்லப் பட்டதும், ஸீதையின் புருஷாகார த்வத்தைச் சொல்ல அடியிடுகிறார். ததஇதி

அர்—கரன் முதலான ராக்ஷஸர்களுடைய வதத்தின் பிறகு, தனக்கு ஜ்ஞாதியான கரனுடையவதத்தை (அகம்பனன் சூர்ப்பணகையாகிய இருவர்களின் வார்த்தையால் தெரிந்து கொண்டு, ராவணன், உலகத்தை அழப்பண்ணுகையாலே அல்லது ரவணன் எனப்படுகிற விஶ்ரவஸ்ஸின் புத்ரனாகையாலே: ராவணன் எனப் படுவான், கோபத்தால் (யுக்தா யுக்த மறியாத) மூடனாய்,மாரீசன் என்கிற பெயரையுடைய ராக்ஷஸனை, (ஸீதையை அபஹரித்துக் கொண்டு வருவதற்கு) ஸஹாயமாக யிருக்கும்படி வேண்டிக் கொண்டான்.

40 𑌵𑌾𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌸𑍍𑌸𑍁𑌬𑌹𑍁𑌶𑍋 𑌮𑌾𑌰𑍀𑌚𑍇𑌨 𑌸 𑌰𑌾𑌵𑌣𑌃
𑌨 𑌵𑌿𑌰𑍋𑌧𑍋 𑌬𑌲𑌵𑌤𑌾 𑌕𑍍𑌷𑌮𑍋 𑌰𑌾𑌵𑌣 𑌤𑍇𑌨 𑌤𑍇

வார்யமாணஸ் ஸுபஹுஶோ மாரீசேந ஸ ராவண:
நவிரோதோ பலவதா க்ஷமோ ராவண தேந தே

𑌵𑌾𑌰𑍍𑌯𑌮𑌾𑌣 𑌇𑌤𑌿 𑌅𑌥 𑌸 𑌰𑌾𑌵𑌣𑌃, 𑌹𑍇𑌰𑌾𑌵𑌣! 𑌤𑍇-𑌤𑌵, 𑌬𑌲𑌵𑌤𑌾 𑌖𑌰𑌾𑌦𑌿 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌵𑌧𑍇𑌨 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌵𑌦𑌾𑌨𑌵𑌤𑌾 𑌬𑌲𑍀𑌯𑌸𑌾 𑌤𑍇𑌨 𑌰𑌾𑌮𑍇𑌣, 𑌵𑌿𑌰𑍋𑌧𑌃 𑌨 𑌕𑍍𑌷𑌮𑌃-𑌨 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌇𑌤𑌿, 𑌮𑌾𑌰𑍀𑌚𑍇𑌨 𑌸𑍁𑌬𑌹𑍁𑌶𑌃-𑌬𑌹𑍁𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌂 𑌵𑌾𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌃 (𑌅𑌭𑍂𑌤𑍍)

அர்—(இதன் கடைசியில்) அந்த ராவணன், "ஹேராவண! உனக்கு, கரன் முதலான பதினாலாயிரம் ராக்ஷஸர்களுடைய வதத்தினால் அறியப்பட்ட வ்ருத்தாந்தத்தை யுடைய பலவானை அந்த ராமனோடு விரோதம் யுக்தமன்று" என்று அடிக்கடி தடுக்கப்பட்டவனாக (ஆனான்.)

41 𑌅𑌨𑌾𑌦𑍃𑌤𑍍𑌯 𑌤𑍁 𑌤𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌰𑌾𑌵𑌣𑌃 𑌕𑌾𑌲𑌚𑍋𑌦𑌿𑌤𑌃
𑌜𑌗𑌾𑌮 𑌸𑌹𑌮𑌾𑌰𑍀𑌚𑌃 𑌤𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌮𑌪𑌦𑌂 𑌤𑌦𑌾

அநாத்ருத்யது தத்வாக்யம் ராவண: காலசோதித:
ஜகாம ஸஹமாரீச: தஸ்யாஶ்ரமபதம் ததா

𑌰𑌾𑌵𑌣𑌃, 𑌕𑌾𑌲𑌚𑍋𑌦𑌿𑌤𑌃-𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌨𑌾 𑌪𑍍𑌰𑍇𑌰𑌿𑌤𑌸𑍍𑌤𑍁 𑌤𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌂-𑌮𑌾𑌰𑍀𑌚𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌅𑌨𑌾𑌦𑍃𑌤𑍍𑌯-𑌸𑌹𑌮𑌾𑌰𑍀𑌚𑌃-𑌮𑌾𑌰𑍀𑌚𑌸𑌹𑌿𑌤𑌃 𑌤𑌦𑌾-𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌕𑌾𑌲𑍇 𑌤𑌸𑍍𑌯-𑌵𑌾𑌸𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌦𑌿 𑌸𑌂𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍇𑌨 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌯 𑌆𑌶𑍍𑌰𑌮𑌪𑌦𑌂-𑌆𑌶𑍍𑌰𑌮𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌜𑌗𑌾𑌮-𑌪𑍍𑌰𑌾𑌪,

श्रीरस्तु ॥
श्रीमते हयग्रीवाय नमः
श्रीमते रामानुजाय नमः ।
श्रीमते निगमान्तगुरवे नमः ।

श्रीमन्निगमान्तमहादेशिकैरनुगृहीता

गोदास्तुतिः ।

[श्रीकाञ्ची-प्रतिवादि भयङ्कर-अण्णङ्गराचार्यकृत-
भावार्थबोधिनी टीका समेता ।]

ஸ்ரீமந் நிகமாந்த தேசிகன் அருளிச்செய்த

கோதாஸ்துதி.

[ஸ்ரீகாஞ்சீ. ப்ர. அண்ணங்கராசாரியர் எழுதிய
வியாக்கியானத்தோடு கூடியது.]

श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी ।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ.
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி.

श्रीविष्णुचित्तकुलनन्दनकल्पवल्लीं श्रीरङ्गराजहरिचन्दनयोगदृश्याम् ।
साक्षात् क्षमां करुणया कमलामिवान्यां गोदामनन्यशरणः शरणं प्रपद्ये ॥ १ ॥

ஸ்ரீவிஷ்ணுசித்தகுலநந்தந கல்பவல்லீம்
ஸ்ரீரங்கராஜஹரிசந்தநயோகத்ருஶ்யாம்.
ஸாக்ஷாத்க்ஷமாம் கருணயா கமலாமிவாந்யாம்
கோதாமநந்யஶரண: ஶரணம் ப்ரபத்யே.

வியாக்கியான அவதாரிகை.

கவிதார்க்கிகஸிம்ஹ மென்னும் விருதுபடைத்த ஸ்ரீமந்நிகமாந்த தேசிகன் அந்த விருதை ஸார்த்தக மாக்குதற்குப் பற்பல திவ்ய க்ரந்தங்களை இயற்றியருளினார். அத்தகைய திவ்யக்ரந்தங்களின் பாகுபாடுகளில் ஸ்தோத்ரங்கள் என்பது ஒரு பாகுபாடு.

அநேக சாஸ்த்ர க்ரந்தங்களில் பலகால் பரிச்ரமப்பட்டு மிகவருந்தித் தெரிந்துகொள்ள வேண்டிய வேதாந்த ஸம்ப்ரதாயார்த்த ஸாரங்களை நம்போன்ற அலஸர்களான அல்பமதிகளும் எளிதில் உணர்ந்து உய்யும் வண்ணம் பலபல ஸ்தோத்ர க்ரந்தங்களை அமுதிலுமாற்ற வினிதாக அவதரிப்பித்தருளினர். இவற்றை அர்த்தத்துடன் நன்கு அதிகரித்துக் கண்டபாடமாக தரிக்கப் பெறில் ஸர்வஜ்ஞத்வம் ஸித்தமாகுமென்பது அதிஶயோக்தியன்று.

ஸ்வாமிதாமே தசாவதார ஸ்தோத்திரத்தில் ஶ்ருதி அருளிச் செய்யுமிடத்து “[illegible]” என்று ஒரு சிறிய ஸ்தோத்ரத்தைக் கற்க நினைக்குமளவிலேயே பஹுமுக பாண்டித்யமும் பக்தியும் தூய்மையும் புகழுமாகிய இவையெல்லாம் ஒருங்கே விளையுமென்றார். உண்மையில் ஒவ்வொரு ஸ்தோத்ரமும் இத்தனை பெருமை வாய்ந்ததென்னுமிடத்தில் ஸம்ஶயலேஶமுமில்லை.

அந்த திவ்யஸ்தோத்ரங்களின் அரும் பெரும் பொருள்களை அனைவரும் அழகாக அறிந்து கொள்ளுமாறு அநதிஸம்க்ஷிப்த விஸ்த்ருதமான வியாக்கியானத்தை யெழுத மஹான்களின் நிய மனத்தினால் ப்ரவர்த்திக்கும் பாக்கியம் பெற்ற அடியேன் இப்போது, சூடிக்கொடுத்த சுடர்க்கொடி விஷயமாக ஸ்வாமி அருளிய **கோதாஸ்துதியை** வியாக்கியானிக்கப் புகுகின்றேன். ஸ்வாமி தக்ஷிண திவ்யதேச யாத்திரையாக எழுந்தருளுமடைவில் ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு எழுந்தருளியிருக்கையில் அங்கு ஆண்டாள் விஷயத்திலுண்டான பக்தி பரீவாஹரூபமாக அருளிச்செய்தது இந்தஸ்துதி—என்று பெரியோர் கூறுவர்.

முதல் ஶ்லோகம்

(அந்வயக்ரமம்.) **ஸ்ரீவிஷ்ணு சித்தகுல நந்தந கல்பவல்லீம்’ ஸ்ரீரங்கராஜ ஹரிசந்தநயோகத்ருச்யாம், ஸாக்ஷாத் க்ஷமாம், கருணயா அந்யாம் கமலாம் இவ (ஸ்திதாம்) கோதாம், அநந்யஶரணः (அஹம்) சரணம் ப்ரபத்யே.**

(உரை.) பெரியாழ்வாருடைய திருவம்ஶமாகிற நந்தன வனத்தில் தோன்றிய கற்பகக்கொடிபோன்றவளும், அழகிய மணவாளனாகிற கற்பகத்தருவோட்டைச் சேர்த்தியினால் அழகுபெற்று

விளங்குபவளும், க்ஷமைதானே வடிவெடுத்து வந்தவளென்னலாம்படி யுள்ளவளும், திருவருளினால் பெரிய பிராட்டியாருடைய அபராவதார மென்னலாம்படி யுள்ளவளுமான சூடிக்கொடுத்த நாச்சியாரைப் புகலொன்றில்லா வடியேன் சரண்புகுகின்றேனென்கை.

(விசேஷவுரை) ஸ்ரீகுணரத்ந கோஶத்தில் ஸ்ரீரங்கநாச்சியாரைத் துதிக்கப்புகுந்த பட்டர் *அநுகலதநுகாண்ட* இத்யாதியான மூன்றாவது ச்லோகத்தில் ஸ்ரீமஹாலக்ஷ்மியை ஒரு கற்பகக் கொடியாகவருணித்துப் பேசினகணக்கிலே இவ்வாசிரியர் தாமும் ஆண்டாளைக் கற்பகக் கொடியாக முதலடியிலேயே பேசப்புகுந்தார். கற்பகக் கொடியானது ஸகலார்த்தங்களையும் அளிக்கவல்லது: அதுபோலவே ஆண்டாளும் தனது திவ்யஸூக்திகள் வழியாக ஸகலார்த்தங்களையும் விளங்கச் செய்பவள் என்பது விவக்ஷிதம். தேவேந்திரனுடைய உத்யான வனத்திற்கு நந்தன மென்று பெயர். அங்குத்தான் கற்பகக்கொடி படரும். இவ்வாண்டாளாகிற கற்பகக் கொடியானது * வேயர் தங்கள் குலத்துதித்த விட்டு சித்தன் குடியாகிற நந்தன வனத்தில் தோன்றியதாம். பெரியாழ்வாருடைய திருக்குலம் ஆண்டாள் திருவவதாரத்தினால் மிக்க பொலிவு பெற்றதென்பது கருத்து.

கொடியானது ஒரு கொள்கொம்போடே அணைந்தல்லது நில்லாது. அது போல, இக்கோதைக் கொடியும் ஸ்ரீரங்கநாதனாகிற கற்பகத்தருவை யணைந்து விளங்கா நிற்கும். “எனக்கே தன்னைத் தந்த **கற்பகம்**” என்று ஆழ்வார் எம்பெருமானைக் கல்பவ்ருக்ஷமாக அருளிச் செய்திருப்பது காண்க. அமர கோஶத்தில் “**पञ्चैते देवतरवो मन्दारः पारिजातकः । संतानः कल्पवृक्षश्च पुंसि वा हरिचन्दनम् ॥**” பஞ்சைதே தேவதரவோ மந்தாரः, பாரிஜாதக:-ஸந்தாநः கல்பவ்ருக்ஷஶ்ச பும்ஸிவா ஹரிசந்தநம்” என்று ஐந்து வ்ருக்ஷங்கள் தேவவ்ருக்ஷங்களாகக் கூறப்பட்டன; அவற்றுள் ஏதேனு மொன்றைச் சொன்னாலும் ஐந்தும் சொன்னபடி யாகுமென்பது கவிமரபு, **श्रीरङ्गराज एव हरिचन्दनः—कल्पवृक्षः, तेन सह योगेन—नित्यसंयोगेन दृश्याम्—रमणीयामित्यर्थः ॥** ஸ்ரீரங்கராஜ ஏவ ஹரிசந்தநः- கல்பவ்ருக்ஷः, தேநஸஹயோகேந—நித்யஸம்யோகேந த்ருஶ்யாம்—ரமணீயாமித்யர்த்தः. மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் என்று உறுதி கொண்டபடியே எம்பெருமானையே கணவனைகப் பெற்று மகிழ்ந்தவ ளென்றவாறு.

ஸாக்ஷாத் க்ஷமாம் என்றது இரட்டுற மொழிதல் போலும் (அதாவது) க்ஷமா என்ற பதம் பூமிக்கும் வாசகம், பொறுமைக் குணத்திற்கும் வாசகம். அவ்விரண்டு பொருளும் இங்கு விவக்ஷிதமேயாகும். ஆண்டாள் யோநிஜை யன்றிக்கே ஸீதாபிராட்டி போலே நிலத்தில் தோன்றியவளாதலால் பூமிப் பிராட்டியின் அம்ஶாவதாரமாகச் சொல்லப்படுவள். அதனாலே பூமியென்ற பொருள் விவக்ஷிதம். ஸர்வம்ஸஹையான அந்த பூமியின் குணமான பொறுமை, இவளுக்கு பகவத் பத்நீத்வ ப்ரயுக்த புருஷகாரத்வை காந்திகமாதலால் அப்பொருளும் இங்கு விவக்ஷிதம்.

[கருணயா அந்யாம் கமலாமிவ ஸ்திதாம்.] அந்த க்ஷமாகுணத்திற்கும் ஊற்றுவாயான கருணை, ஆண்டாள் பக்கலிலே குடிகொண்டிருக்கும் படியை நோக்குங்கால் "**देव्या कारुण्यरूपया**" [தேவ்யா காருண்ய ரூபயா] என்னப் பட்ட பெரிய பிராட்டியார் தாமே இப்படியும் ஒரு திருவுருக் கொண்டாள் கொலோ! என்னலாம் படியிருக்குமென்கை. * அல்லி நாள் தாமரை மேலாரணங்கினின் துணைவியிறே!. ஆக இப்படிப் பட்ட ஆண்டாளை யடிபணிகின்றே னென்றாராயிற்று.

இது முதல் இருபத்தேழு ச்லோகங்கள் வஸந்ததிலக வ்ருத்தத்தில் அமைந்தவை. "**उक्तं वसन्ततिलकं तभजा जगौ गः**" [உக்தம் வஸந்ததிலகம் தபஜா ஜகௌ க:] என்பது அதன் இலக்கணம். (க)

वैदेशिकः श्रुतिगिरामपि भूयसीनां वर्णेषु माति महिमा न हि मादृशां ते ।
इत्थं विदन्तमपि मां सहसैव गोदे मौनद्रुहो मुखरयन्ति गुणास्त्वदीयाः ॥ २ ॥

வைதேஶிக: ஶ்ருதிகிராமபி பூயஸீநாம்
வர்ணேஷு மாதி மஹிமா நஹி மாத்ருஶாம் தே
இத்தம் விதந்தமபி மாம் ஸஹஸைவ கோதே
மௌநத்ருஹோ முகரயந்தி குணா: த்வதீயா:

(அந்.) கோதே! பூயஸீநாம் ச்ருதிகிராமபி வைதேசிக: தே! மஹிமா மாத்ருசாம் வர்ணேஷு நஹிமாதி; இத்தம் விதந்தம் அபி மாம் த்வதீயா: குண: மௌநத்ருஹஸ்ஸந்த: ஸஹஸைவ முகரயந்தி.

(உரை.) ஆண்டாளே! பலபல வேதவாக்குக்களுக்கும் எட்டாததான உம்முடைய வைபவமானது என்போன்றவர்களின் (அற்பங்களான) அக்ஷரங்களில் அடங்கமாட்டாது என்கிறவிதனை நான் அறிந்திருக்கச் செய்தேயும் உம்முடைய திருக்கல்யாண

குணங்களானவை என்னை வாய்மூடி நிற்கவொட்டாமல் பலாத்காரமாகவே பேசுவிக்கின்றன வென்கை.

எம்பெருமானுடைய மஹிமை, எப்படி வேதங்களினாலும் எல்லைகாண முடியாததோ! அப்படியே பிராட்டியின் மஹிமையும் வேதங்களாலும் அபரிச்சேத்யம் என்பது ஸர்வஸம்மதம். ஆண்டாள் பிராட்டியின் அம்ஶமென்பதும் ஸர்வஸம்மதம். ஆகவே, 'வேதங்களாலும் அறுதியிடவொண்ணாத உன் மஹிமையை அல்பஜ்ஞனான அடியேன் பேசப்புகுவது மிகவும் பேதைமை' என்று அநுஸந்திக்க ப்ராப்தமாயிற்று. அங்ஙனம் அநுஸந்தித்த ஆசிரியர் 'அடியேன் இந்த ஸ்துதியை விண்ணப்பம் செய்யப்புகுவது வீணான காரியம் போலிருக்கின்றதே!' என்பதைப் பூர்வார்த்தத்தினால் வெளியிட்டு, தாமே ஸமாஹிதராய் ஸ்துதியில் ப்ரவர்த்திக்கிறபடியை உத்தரார்த்தத்தினால் வெளியிடுகிறார். ஆண்டாளே! உனது திருக்குணங்களை யெல்லாம் பேசவேணுமென்கிற ஆவலோடு நான் ப்ரவர்த்திக்கின்றிலேன்; உனது திருக்குணங்கள் ஊமையையும் பேசுவிக்கவல்லவை யாதலால், ஸ்வேச்சயா ஸ்துதியில் ப்ரவர்த்திக்க நினைவில்லாத அடியேனையும் பலாத்காரமாகவே தூண்டுகின்றனவாதலால் பரவசனாய் ப்ரவர்த்திக்கின்றேனத்தனை என்றாராயிற்று.

ச்ருதிகிராமபி அவிஷய: என்ன வேண்டுவதற்குப் பர்யாயமாக, வைதேசிக: என்றது, கம்பீர ப்ரயோகமிருக்கிறபடி. **वैदेशिकः—विभिन्नदेशवर्ती.** [வைதேஶிக:—விபிந்நதேஶ வர்த்தீ.] என்றபடி. "நான்மறைகள் தேடியென்றுங் காணமாட்டாச் செல்வன்" என்றது போலே.

अत्यन्तं बह्वयः—भूयस्यः, तासाम्-भूय सीनाम्। [அத்யந்தம் பஹ்வ்ய:—பூயஸ்ய: தாஸாம் பூயஸீநாம்] வர்ணேஷு என்பதற்கு ஸ்துதிகளில் எனப் பொருள் கூறுதலும் பொருந்தும். * **वर्णो द्विजादौ शुक्लादौ स्तुतौ वर्णं तु वाऽक्षरे इत्यमरः ॥ मौन-द्रुहः**— நான் வாய் திறவாதிருக்கும்படி பார்த்திருக்கமாட்டாதவை என்றபடி. (2.)

त्वत्प्रेयसः श्रवणयोरमृतायमानां तुल्यां त्वदीयमणिनूपुरशिञ्जितानाम् ।
गोदे ! त्वमेव जननि ! त्वदभिष्टवार्हां वाचं प्रसन्नमधुरां मम संविधेहि ॥ ३॥

த்வத்ப்ரேயஸ: ஶ்ரவணயோ ரம்ருதாயமாநாம்
துல்யாம் த்வதீயமணி நூபுரஶிஞ்ஜிதாநாம்

கோதே த்வமேவ ஜநநி த்வதபிஷ்ட வார்ஹாம்
வாசம் ப்ரஸந்நமதுராம் மம ஸம்விதேஹி

(அந்.) ஹே ஜநநி கோதே த்வத் ப்ரேயஸ ச்ரவணயோ: அம்ருதாயமாநாம், த்வதீயமணிநூபுர சிஞ்ஜிதாநாம் துல்யாம் த்வத் அபிஷ்டவ அர்ஹாம் ப்ரஸந்நமதுராம் வாசம் த்வமேவ மம ஸம்விதேஹி.

(உரை) தாயே கோதாய்! உன்னுடைய கொழுநனை எம்பெருமானுடைய திருச்செவிகளுக்கு அமுதம் போல் இனிதாயிருப்பதும், உனது ரத்நமயமான பாதச்சிலம்பின் அழகிய வொலிக்குத் தோள்தீண்டியாயிருப்பதும், உன்னைத் துதிப்பதற்கு ஏற்றிருப்பதும், ப்ரஸந்ந மதுரமுமான வாக்கை நீயே எனக்கு வாய்க்கும்படி அநுக்ரஹிக்க வேணுமென்கை.

இந்த ஸ்துதியானது ஆண்டாளுடைய திருவருளினலேயே பரம மதுரமாக அமைகின்றதென்பதை இதனல் தெரிவிக்கிருர். பட்டர் ஸ்ரீகுண ரத்ந கோசத்தில் " श्रियः श्रीः श्रीरंगेशय तव च हृद्यां भगवतीं श्रियं त्वत्तोऽप्युच्चैर्वयमिह फणामः शृणुतराम्। दृशौ ते भूयास्तां सुखतरलतारे श्रवणतः पुनर्हर्षोत्कर्षात् स्फुटतु भुजयोः कञ्चुकशतम्।" [ச்ரிய: ஸ்ரீ: ஸ்ரீ ரங்கேசய தவசஹ்ருத்யாம் பகவதீம் ஸ்ரீயம் த்வத்தோப்யுச்சை: வயமிஹ பணாம: ச்ருணுதராம்-த்ருசௌதே பூயாஸ்தாம் ஸுகதரளதாரே ச்ரவணத: புநர்ஹர்ஷோத்கர்ஷாத் ஸ்புடது புஜயோ: கஞ்சுகசதம்] என்ற ச்லோகத்திஞல் தெரிவித்தருளின அர்த்தத்தை இதில் முதல் பாதத்திஞல் ஸ்வாமி தெரிவிக்கிருர். எம்பெருமானும் இந்த ஸ்துதியைக் கேட்டருளி மிகவும் திருவுள்ள முவப்பனென்றவாறு.

ஆண்டாள் சிலம்பார்க்க நடக்கப் புக்கால் அந்த ஆர்ப்பு எவ்வளவு போக்ய மாயிருக்குமோ அவ்வளவு போக்ய மாயிருக்கும் இந்த ஸ்துதியின் சப்த ஸந்நிவேசமும் என்பது இரண்டாம் பாதத்தின் உட்கருத்து.

[ப்ரஸந்ந மதுராம்.] விவக்ஷிதமான பொருளை வெகு ப்ரயாஸப் பட்டுத் தெரிந்து கொள்ள வேண்டாமல் எளிதாகவும் தெளிதாகவும் தெரிந்து கொள்ளுதற்குப் பாங்காக அமைந்திருத்தல் ப்ரஸந்நத்வ மாகும். நாரிகேள பாகமாக இருக்கை யன்றியே த்ராக்ஷாபாகமாக இருக்கை மாதுர்ய மாகும்..............................(ங)

कृष्णान्वयेन दधतीं यमुनानुभावं तीर्थैर्यथावदवगाह्य सरस्वतीं ते।
गोदे विकस्वरधियां भवतीकटाक्षात् वाचस्स्फुरन्ति मकरन्दमुचः कवीनाम्॥४॥

க்ருஷ்ணாந்வயேந தததீம் யமுநாநுபாவம்
தீர்த்தைர்யதாவதவகாஹ்ய ஸரஸ்வதீம் தே
கோதே விகஸ்வரதியாம் பவதீ கடாக்ஷாத்
வாசஸ் ஸ்புரந்தி மகரந்தமுச: கவீநாம்

(அந்) கோதே! க்ருஷ்ணாந்வயேந யமுநாநுபாவம் ததீம் தே ஸரஸ்வதீம் தீர்த்தை: யதாவத் அவகாஹ்ய பவதீகடாக்ஷாத் விகஸ்வரதியாம் கவீநாம் மகரந்தமுச: வாச: ஸ்புரந்தி.

(உரை) ஆண்டாளே! ஸ்ரீகிருஷ்ண ஸம்பந்தத்திஞல் 'யமுனைதானே இது?' என்னலாம் படியுள்ள உனது ஸரஸ்வதியை [திவ்யப்ரபந்தத்தை] ஸதாசார்யமுகமாக அதிகரித்து உனது கடாக்ஷத்திஞல் புத்தி விகாஸம் பெறுகின்ற கவிகளுக்கு அம்ருத வர்ஷியான வாக்குக்கள் விளைகின்றன வென்கை.

கண்ணபிரானுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளைப் பரக்கப் பேசியுள்ள திருப்பாவையையும் நாச்சியார் திருமொழியையும் திருவுள்ளம்பற்றி தேஸரஸ்வதீம் என்ருர். ஸரஸ்வதீ என்கிற சொல், வாக்குக்கு வாசக மாயிருப்பது போலவே ஒரு நதீ விசேஷத்திற்கும் வாசக மாதலால் அந்த அர்த்தமும் இங்கு தந்த்ரேண விவக்ஷிதம். ஸரஸ்வதியாயிருக்கச் செய்தேயும் யமுனை போலவுமிராநின்றதென்று ஒரு சமத்காரம் காட்டுகிருர் முதல் பாதத்தில். அதாவது—இவர் தாமே யதிராஜஸப்ததியில் "विगाहे यामुनं तीर्थं साधुवृन्दावनेस्थितम्। निरस्तजिह्मगस्पर्शे यत्र कृष्णः कृतादरः॥" விகாஹே யாமுநம் தீர்த்தம் ஸாது ப்ருந்தாவநே ஸ்திதம்-நிரஸ்த ஜிஹ்மகஸ்பர்சே யத்ரக்ருஷ்ண: க்ருதாதர: என்றருளிச் செய்தபடிக்கும், ஸ்ரீபாகவதாதி கதாப்ரஸித்தியின் படிக்கும் யமுனையானது க்ருஷ்ண ஸம்பந்தத்தைப் பெற்றிருப்பது. க்ருஷ்ண வர்ண ஸம்பந்தம் பெற்றிருப்ப தென்பதும், சொல்தொடையில் தோன்றும் யமுநாதீர்த்தம் கருநிறமுடைய தென்பவாதலால், ஆண்டாளுடைய ஸரஸ்வதிக் குண்டான க்ருஷ்ணாந்வயத்தை விவரிக்க வேணுமோ? பாசுரந்தோறும் க்ருஷ்ண குணநுபவமேயிறே! உள்ளது. ஆக இப்படிப்பட்ட ஸரஸ்வதியை [தீர்த்தை: யதாவத்

அவகாஹ்ய] நதிகளில் இறங்குதற்குரிய துறைகளுக்கும் **தீர்த்த** மென்று பெயர்; ஆசாரியர்களுக்கும் தீர்த்த மென்று பெயர். இங்கு ஆண்டாளுடைய திருவாக்கை ஸரஸ்வதீ சப்தத்தினால் கூறியுள்ள படிக்கிணங்க "**தீர்த்தைః யதாவத் அவகாஹ்ய**" என்கிற பதங்களை ப்ரயோகித்தது பரம ரஸமயம். மஹா நதியில் துறை தவறி இறங்கினால் அபாயமே பலிக்கும். தகுந்த துறைகளில் இறங்கி அவகாஹித்தே பயன்பெற வேண்டும். அதுபோல, இவளுடைய திவ்ய ப்ரபந்தங்களிலும் ஸதாசார்ய முகமாக இழிந்தாலல்லது சிறந்த நற்பொருள்களைப் பெற முடியாதென்று காட்டினபடி. ஆண்டாளுடைய திவ்ய ஸூக்திகள் அதி கம்பீரமான அர்த்தரத்நங்கள் அமையப்பெற்றனவாதலால் அவற்றில் மேலெழ நோக்குவார் பயன்பெறார்கள்; ஆழ்ந்து நோக்குவார்க்கே அரிய பெரிய பொருள்கள் கிடைக்குமென்பதை அவகாஹ்ய என்றதனால் காட்டினர். இங்ஙனம் ஆண்டாளுடைய திவ்யஸூக்திகளில் ஆழங்கால் படுவார்க்கு அவளுடைய கடாக்ஷமே அடியாக நல்லபுத்தி கொழுந்துவிட்டோங்கிப் படருமென்றும், அன்னவர்களும், தேனிலுமினிய செஞ்சொற்கவிகளை இயற்ற வல்லமை பெறுவர்களென்றும் உத்தரார்த்தத்தால் தெரிவித்தபடி. கோதா என்னும் சொல் கோதாவரீ நதிக்கும் பெயராக நிகண்டுகளிலுள்ளது ஆகவே இந்த ச்லோகத்தில் கோதவரீ, க்ருஷ்ணை, யமுனை, ஸரஸ்வதீ என்கிற புண்ய நதிகளைச் சேர்த்துக் கவிபாடிய இன்பமும் அநுபவிக்கவுரியது. ஸமாஸோக்தி யலங்காரத்தில் இதுவொரு பாகுபாடாக ஆலங்காரிகர்கள் நிர்வஹிக்கின்றனர். மேலே "**ப்ராயேண தேவிபவதீவ்யபதேச யோகாத்**" என்கிற பன்னிரண்டாம் ச்லோகத்தில் "**यस्यां समेत्य समयेषु चिरं निवासाद्भागीरथीप्रभृतयोपि भवन्ति पुण्याः**" [யஸ்யாம் ஸமேத்ய ஸமயேஷு சிரம்நிவாஸாத் பாகீரதீ ப்ருப்ருதயோபி பவந்தி புண்யாః] என்று கோதாவரீ நதியைப்பற்றின ஒரு புராண வரலாற்றை யெடுத்துரைக்கிறார். க்ருஷ்ணா யமுநா ஸரஸ்வதீ காவேரீ இத்யாதி நதிகள் சில ஸமயவிசேஷங்களில் கோதாவரீ நதியில் வாஸம் பெற்றுப் புனிதங்களாகின்றனவென்கிற இதிஹாஸம் அங்குக் கூறப்படுகிறது. இந்த ச்லோகத்தில் அந்த நதிகள் கோதாவரியோடு சேர்ந்தனவாகச் சொல் தொடையில் காட்டியிருக்குமழகு வியக்கத்தக்கது..(க)

ஒரு ஆச்சர்யமான அலாரம் டைம்பீஸ்

இந்தியாவில் எல்லா பாகங்களிலும் உள்ளவர் இதை உபயோகிக்கிறார்கள்.

"டாம் டாம்"



சரியான காலத்தைக் காட்டும், அழகியது, நீடித்து உழைக்கும் டைம்பீஸ் என்று சொல்லுகிறார்கள். இவைகளைத்தான் விசேஷ அம்சங்களென்று இதை உபயோகிப்பவர்களே சொல்லுகிறார்கள். இதைவிட உங்களுக்குத் திருப்தியளிக்கக் கூடிய வார்த்தை என்ன இருக்கிறது. ஆகையால் "டாம் டாம்" அலாரம் டைம்பீஸ் வாங்குங்கள். இது சிறிது காலத்துக்கு மட்டுமல்ல, உங்கள் வாழ்நாள் பூராவும் உழைக்கும். இந்த 'டாம்டாம்" 30 லீவர் மூவ்மெண்டுகளால் ஆக்கப்பட்டது. அலாரம் சிறந்த ஓசையுடனும் விடாமலும் விட்டு விட்டு அடிக்கிறமாதிரி உள்ளது.

இரண்டு வருடம் உத்திரவாதம்.

நிக்கல் பெரிய சைஸ் ரூ. 8—0—0.

நிக்கல் மீடியம் சைஸ் ரூ. 6—0—0.

(பாக்கிங் அண்டு போஸ்டேஜ் வேறு)

(ஆர்டர் செய்பவர்கள் ரூ. 2—0—0 முன்னதாக அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.)

ஜலால் அண்டு சன்ஸ்,

கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளாயர்,

ஹெட் ஆபீஸ் :— 46, ரட்டான் பஜார், சென்னை.

ப்ராஞ் ஆபீஸ் :— 190, B. மௌண்ட்ரோட், சென்னை.

" 1242-1, ஆபிட்ரோட், ஹைதராபாத் (டெக்கான்.)

ப்ராணஸுத

நண்பர்களே! பல ஹீனத்தினால் ஏன் கவலைப்படுகிறீர்கள்? இதோ எங்களுடைய ஸவரனைப் போன்ற டானிக் ராஜா- "பிராணசுத" இருக்கிறது. இது ரத்தக் குறைவினாலும், மூளையைச் செலுத்தி வேலை செய்வதாலும், இன்னும் பலவித காரணங்களாலும் ஏற்பட்ட பல ஹீனத்தைப் போக்கடித்து விடும். ரக்த புஷ்டியைத் தரும். பலத்தையும், தாது விருத்தியையும் புதிதாய் தரும்.

(சிறந்த டானிக்)

ஒரு புட்டியை உபயோகித்துப் பார்த்தால் ஆச்சரியப்படுவீர்கள். எல்லாரும் உபயோகப்படுத்தலாம். கேட்லாக் இனாம்.

விலை புட்டி 1க்கு 2—8—0

மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்

107, பிராட்வே, சென்னை

ரங்கூன் வைர நகைகள்



ஸவரன் பொன்னிற்கு
உத்திரவாதத்துடன்
அனுப்பப்படும்.

●

விலை ஜாபிதா இனாம்

பி. கோபாலசுவாமி நாயுடு & சன்ஸ்

பறங்கிமலை P.O., சென்னை.

உத்திரவாதம் 5 வருஷம் உத்திரவாதம்

பிரகாசத்திலேயும் நிறத்திலேயும் தங்க நகைகளுக்கு எந்த விதத்திலும் தாழ்ந்ததல்ல

டி. சி. என். கோல்டன் மெட்டல்

ஒட்டியாணங்கள்

		ரூ.	அ.	பை.
1.	பெரிய சைஸ் சாதா சதங்கையில்லாதது ஒன்றுக்கு	12	0	0
	ஷை சின்ன சைஸ்	8	0	0
2.	பெரிய சைஸ் சாதா சதங்கை கட்டினது	20	0	0
	ஷை சின்ன சைஸ்	15	0	0
3.	பெரிய சைஸ் ஒரு பக்கம் வங்கி சதங்கை கட்டினது	20	0	0
	ஷை சின்ன சைஸ்	15	0	0
4.	பெரிய சைஸ் இரண்டு பக்கமும் வங்கி சதங்கை கட்டினது	20	0	0
	ஷை சின்ன சைஸ்	15	0	0
5.	பெரிய சைஸ் ஜாலர் ஒட்டியாணம்	35	0	0
	ஷை சின்ன சைஸ்	25	0	0

பெரிய சைஸ் 1க்கு வி. பி. செலவு ரூ. 1—4—0
சின்ன சைஸ் 1க்கு வி. பி. செலவு ரூ. 0-12—0



சரக்கு பிடித்த மில்லையானால் ஒரு வாரத்திற்குள் திருப்பியனுப்பினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இரண்டணா பெறுமானமுள்ள அழகிய படங்கள் நிறைந்த எமது கேட்லாக்கு இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. நாகலிங்கப்பா

அன் கம்பெனி

280, வால்டாக்ஸ் ரோடு, பார்க் டவுன் P.O., மதராஸ்

Registered No. M. 3401

பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின் இரண்டு
ஔஷத ரத்னங்கள்

ஜீ வா ம் ரு த ம்

(தேகாரோக்யத்திற்கும்
பல விருத்திக்கும்)

ரத்தமிழந்து, ஜீவனற்று, பலஹீனத்துடன் வாழ்க்கையை வெறுக்கும் வாலிபர்களுக்கு இவ்வௌஷதம் ஓர் வரத்தைப் போன்றதே. இதை உபயோகிக்க ஆரம்பிக்கும் பொழுதே அளவற்ற உணர்ச்சியை யூட்டி, மிகுந்த ரத்த புஷ்டியை உண்டாக்கி, புத்துயிரைக் கொடுத்து, வாழ்க்கைக்கே இன்பத்தை விளைவிக்கின்றது. அளவற்ற தேகபலம் குறைவற்ற ஆரோக்கியம் முதலியவற்றை மேன்மேலும் செழிக்கச் செய்கின்றது.

விலை	பெரிய புட்டி	ரூ 3-4-0
	சிறியது	1-12-0

பா ல பா ஸ் க ர

(குழந்தை ஈரல் குலைக்கட்டி
வியாதிகளுக்கு அற்புத நிவாரணி.)

குழந்தைகளின் ஈரல் (Liver) குலை (Spleen) பெருக்கங்களை அதி விரைவில் கரைத்து பூர்ண ஆரோக்யத்தை யளிக்கும் அரிய சஞ்சீவி. இதர மருந்துகளால் பயனற்றுப் போன விடங்களில் ஆச்சரியத்துடன் பலன் தந்துள்ளன. தவறுதலின்றி குணங் கொடுப்பதென்று பிரக்யாதி யடைந்தது. ஆரம்ப நிலைமைக் கென்றும், முதிர்ந்த நிலைமைக் கென்றும் இருதிறத்தி லுள்ளது.

ஆரம்ப நிலைமை மருந்து 1 மாதம்	4-0-0
முதிர்ந்த நிலைமை	8-0-0

விபரங்களுக்கு எழுதவும்.



தயாரிப்பவர்கள் :— **ஆயுர்வேதாஸ்ரமம**
தபால் பெட்டி 287.
151, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதருஸ்.

Edited & Published by Vadakarai, Ramanujachariar, 24, Chandrappa Mudali St
and Printed at the Liberty Press, 7, Sunkurama Chetty St, Madras

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ரா மா நு ஜ

ஸி த் தா ந் த வை ஜ ய ந் தீ

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபக ஸபையின் சார்பாக
மாதந்தோறும் வெளிவரும்
ஸத் ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசக பத்ரிகை

தொகுதி 2	தாது ஞு பங்குனி மீ	பகுதி 5

பத்ராதிபர் :
வடகரை ராமாநுஜாசாரியார்

24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

✻

1937 ஞு மார்ச் மீ

வருஷச் சந்தா ரூ 1—12—0] [தனிப்ரதி விலை ரூ. 0—3—0

விஷய ஸூசிகை

விஷயங்கள்			பக்கம்
1. பங்குனி மாதத்தின் பெருமை —பத்திராதிபர்	....	....	115
2. பங்குனி உத்திரம் —ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்	....	....	117
3. அருளிச்செயல்களில் பாடபேதங்களின் ஆராய்ச்சி —ஸ்ரீ. உ. வே. வை: கோபால கிருஷ்ணமாசாரியார்.			123
4. திருப்புளி மான்மியம் —திருக்குருகூர் ஸ்ரீ. அ. தே. ராமாநுஜய்யங்கார்	....	...	127
5. சனகன்பெற்றவன்னம் —பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை ஐயங்கார்	....	....	128
6. மறந்தும் புறந்தொழாலம —ஸ்ரீ. உ. வே. தே. திருமலாசாரியார், வானமாமலை.	....	....	130
7. வர்த்தமானங்கள்	....	....	135
8. கோதாஸ் துதி வியாக்கியானம் —ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்	....	....	

ரங்கூன் வைர நகைகள்



சவரன் பொன்னிற்கு
உத்திரவாதத்துடன்
அனுப்பப்படும்.

✻

விலை ஜாபிதா இனாம்

பி. கோபாலசுவாமி நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P.O., சென்னை.

L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது -
மனிதர்களுக்கு ஆரோக்கியத்தை அளிப்பது

L. G.
பெருங்காயம்.
எங்கும் கிடைக்கும்.

ப்ரபல பெருங்காய வியாபாரிகள்:
பம்பாய், சென்னை, கும்பகோணம்.

லால்ஜீ கோது & கம்பெனி,
8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதருஸ்.

அம்ருதாஞ்சனம்.

ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வ்யாதிகளின் உபசமநத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக்கூடும். அக்காலத்தில் அமிருதாஞ்சனம் கைவசமிருக்குமே யாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டா மென்பதை அனைவரு மறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.

அம்ருதாஞ்சனம் டிபோ.

பம்பாய். மதராஸ் கல்கத்தா

சலோனுடவர் பிராண்ட்

போர்ட்லாண்ட் சிமெண்ட்

காரண்டீட்

பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷன்

மேற்கண்ட சிமெண்ட் அனேக ஹார்பர்வேலைகளுக்கும் ரயில்வே வேலைகளுக்கும், மதராஸ் கார்ப்பரேஷனிலும், இன்னும் பிரபல வியாபாரிகளும் கண்ட்ராக்டர்களும் உபயோகித்து வருகிருர்கள்.

மேல் கண்ட சிமெண்டை உபயோகிக்கவும்

சோல் ஏஜெண்ட்

M. குப்புசாமி நாய்க்கர்

83, செம்புதாஸ் தெரு,

மதருஸ், ஜி. டி.

ஸ்ரீ

ராமானுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶன பத்ரிகை

தொகுதி 2.	பத்ராதிபர் வடகரை. இராமானுஜாசாரியார்	பகுதி 5.

ஸ்ரீரஸ்து

ஶ்ரிய:காந்தாய நம:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

தஸ்மை ராமானுஜார்யாய நம: பரமயோகினே |
ய: ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ||
வேதவேதாந்த வேதாம்ஶ ஸத்ஸம்ப்ரதாய ப்ரவர்த்தினீ |
ஸ்ரீராமானுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

ஸ்ரீ கோவிந்தாய நம:

பங்குனி மாதத்தின் பெருமை

[பத்ராதிபர்]

இப்பங்குனி மாதம் வ்யூஹத்தில் நான்காவதான கோவிந்தனுடைய அம்ஶமாயிருக்கும். ஆதலின் இந்த மாதத்தில் ஒருவேளை சாப்பிட்டு ஜிதேந்த்ரியர்களாய் நமோ ப்ரஹ்மண்யதேவாய என்கிற மந்திரத்தை ஜபித்து வ்ரதத்தின் முடிவு தினத்தில் யதாஶக்தி ப்ராஹ்மணர்களைப் பாயஸம் புஜிப்பித்து கோவிந்தனை அர்ச்சிக்கிறவர்கள் விமாநாருடர்களாய் தங்களுக் கிஷ்டமான லோகத்தை யடைவார்கள். இது விஷயம் பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் இம்மாத ஏகாதஶியன்று உபவஸித்து கோவிந்தனைப் பூஜித்துப் பாரணை பண்ணுமவர்கள் அதிராத்ரமென்கிற யாகத்தைப் பண்ணியவர்களுடையும் பலனையடைவார்கள். இது விஷயம் பாரதம் ஆஶ்வமேதிக பர்வம் 114-வது அத்யாயம் 20-வது ஶ்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவருமாறு :-

த்வாதஶ்யாம் பால்குநேமாஸி கோவிந்தாக்யமுபோஷ்யமாம்
பூஜயேத்யஸ்ஸமாப்நோதி ஹ்யதிராத்ரபலம் லபேத்
ஆநுஶாஸந பர்வம் 171- 6-வது ஶ்லோகம்
ததைவ பால்குநே மாஸி கோவிந்தேதிச பூஜயந்
அதிராத்ரமவாப்நோதி ஸோமலோகம்ச கச்சதி

இன்னமும், இம்மாதத்தில்வரும் ஶுக்லபக்ஷ த்வாதஶி ந்ருஸிம்ஹத்வாதஶீ என்று புராணங்களிற் சொல்லப்படுகிறது. இந்த ந்ருஸிம்ஹாவதாரமானது, பரமபாகவதோத்தமர்களில் அக்ரகண்யரான ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வான் அந்தர் பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தித: என்றும் பரந்ததண் பரவையுள்........ கரந்த சிலிடந்தோறு மிடந்திகழ் பொருடோறும் கரந்தெங்கும் பரந்துளன் என்றும் ஶ்ருதிகளில் உத்கோஷியாநின்ற ஸர்வேஶ்வரனுடைய வ்யாப்தியின் பெருமையை, எங்குமுளன் கண்ணன் என்று பேசாநிற்க, அதைக் கேட்டு, ஸஹியாத ஹிரண்யன் எங்குமுளன் என்று உன்னால் சொல்லப்பட்டவன் இங்கிருக்கத் தட்டில்லையே என்று முன்னே தன்னால் அளந்திட்டதொரு தூணைத் தட்ட, அவனால் தட்டப்பட்ட அத்தூணில் தட்டின விடத்திலேயே அப்பொழுதே ஆவிர்ப்பவித்து அவ்விரணியனைக்கொன்று ப்ரஹ்லாதாழ்வானை அநுக்ரஹிப்பதற்காக அவதரித்த ஓரத்விதீயமான திருவுருவமாகும்.

இவ்வவதாரத்தைப்பற்றி ஆழ்வார்கள் என்சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே என்றீடுபடா நிற்பார்கள். இந்த அவதாரத்தைப்பற்றி ராமாநுஜ ஸித்தாந்தத்தில் யதோசிதம் தெரிவித்துக் கொள்ளப்படும்—இந்த ஶுக்லபக்ஷ ஏகாதஶியன்று உபவஸித்து ஒரு தாம்ரமயமான கும்பத்தை ஸ்தாபித்து அதில் ஸ்வர்ணமயமான ந்ருஸிம்ஹப்ரதிமையை ப்ரதிஷ்டித்து யதாவிதி கந்தபுஷ்பதூபதீபங்களாலர்ச்சித்து த்வாதஶியன்று, ஸம்ஸ்கிருத த்ராவிடரூபங்களான வேதங்களை அறியக்கற்று வல்ல ஒரு ஸ்ரீ வைஷ்ணவனை யதாவிதி உபசரித்து, அக்கும்பத்தை ஸமர்ப்பித்துப் பாரணை பண்ணுமவர்கள்

அபுத்ரோ லபதே புத்ரம் தநார்த்தீ லபதே தநம்
ப்ரஷ்டராஜ்யோ லபேத் ராஜ்யம் ம்ருதோ விஷ்ணுபுரம் லபேத்

என்கிறபடி இவ்வுலகிலிருக்கும் காலத்தில் ஸகலவித ஸௌபாக்கியத்தையுமடைந்து ஶரீர வியோகாநந்தரம் நசபுநராவர்த்ததே

என்கிற விஷ்ணு லோகத்தை யடைந்து அந்தமில் பேரின்பமாகிற அளவிலா ஆனந்தத்தை யடைவார்கள். இந்த வ்ருத்தாந்தம் வராஹ புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இன்னமும் இம் மாதம் நமது பூர்வாசார்யர்களில் நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை என்று கொண்டாடப்பெற்ற நஞ்சீயரவதாரத்தால் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மிகவும் போற்றற்குரியது—இந்த நஞ்சீயரது பெருமையைப்பற்றி நன்கறிந்த பெரியோர்கள் வரைய நாம் படித்துநுபவிப்பான் வேண்டி வரையாது நிற்கின்றேன்.

பங்குனி யுத்தரம்

[பெருமாள் கோயில் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்]

இத்திரு நன்னாள், பெரிய பிராட்டியார்க்கு உரியதென்பது உலகப் பிரசித்தம். சென்ற ஆண்டில் இந்நன்னாளில் வெளிவரப் பெற்ற வைஜயந்தி பெரிய பிராட்டியாருடைய குணாநுபவஞ் செய்து போந்தது. இவ்வாண்டில், இத்திரு நன்னாளில் திருவவதரித்த நஞ்சீயருடைய சில திருக்குணங்களை யநுபவிக்கக் காதல் கொண்டுளது.

இப்பெரியார் அத்வைத ஸம்ப்ரதாயத்தில் அவதரித்திருந்தவர். மாதவாசார்யர் என்பது இவருடைய திருநாமமாக இருந்தது. வேதாந்தி என்பது இவர்க்குச் சிறப்புத் திருநாமம். ஷட்தர்ஶநங்களுக்கும் ஷடாஸநமிட்டு நிகரற்ற வித்வானாக மேல்நாட்டில் எழுந்தருளியிருந்தவர் இவர். மதாந்தரஸ்தர்களான வித்வான்கள் பலரையும் திருத்திப் பணிகொண்டருளின எம்பெருமானார் இவரையும் திருத்திப் பணிகொள்ள விரும்பியிருந்தார். ஆனால் அவருடைய வாழ்நாளில் இந்த மநோரதம் நிறைவேறாதொழியவே தமது சரம சமயத்தில் ஆழ்வான் திருக் குமாரரான பட்டரை விசேஷேண கடாக்ஷித்தருளி தர்ஶநஸ்தாபகராக நியமித்தருளின காலத்து "மேல் நாட்டிலுள்ள வேதாந்தியைத் திருத்திப்பணி கொண்டு வாழ்விக்கக் கடவீர்" என்று நியமனம் தந்தருளலாயிற்று. பட்டரும், அதனை நிறைவேற்றுதற்குரிய ஸமயத்தை எதிர் பார்த்திருந்தார்.

இந்நிலைமையில் மேல் நாட்டில் நின்றும் ஒரு அந்தணர் யாத்திரை யடைவிலே நம்பெருமாள் ஸந்நிதிக்கு விடைகொண்டு பட்டரையும் திருவடி தொழுதார். அப்போது வேதாந்தியின் பிரபாவங்களை வார்த்தை யடைவிலே எடுத்துரைத்தார். "மேல் நாட்டில் வேதாந்தியென்று ஒரு பெரிய வித்வான் இருக்கிறார்; அவருடைய வித்யையும் கோஷ்டியும் போலே உமக்கு மிருக்கக்கண்டு களிக்கின்றேன்" என்று பட்டரை நோக்கிக் கூறினர். அவர் திரும்பி ஸ்வதேசத்திற்குச் சென்று வேதாந்தியை நோக்கி 'ஸ்வாமிந்! ஸ்ரீ ரங்கத்தில் பட்டரென்று ஒருவர் எழுந்தருளியிருக்கிறார்; அவர் அத்விதீய வித்வான்; அவருடைய சிஷ்ய கோஷ்டிகளின் பெருமையும் வாசாமகோசரம்' என்று சொல்ல, வேதாந்தியும், "அவர் நமக்கு ஒத்த வித்வானோ? அவர்க்கு என்ன சாஸ்த்ரம் வரும்?" என்று கேட்க; அதற்கு அவ்வந்தணர் "பட்டர் உம்மிலும் சிறந்த வித்வானே யாவர்; தர்க்க வியாகரண மீமாம்ஸைகள் முதலிய சகல சாஸ்திரங்களும் அவர்க்கு வாசோவிதேயங்கள்" என்று கூறினர். வேதாந்தியும் அது கேட்டு "இவ்விபூதியிலே நமக்கு ஒருவரும் எதிரில்லை யென்று ஷட்தர்ஶநத்திற்கும் ஷடாஸநமிட்டு அதன்மேலே உயரவிருந்தோம்; பட்டரென்பவர் நம்மிலும் அதிகர் என்று இவர் சொல்லுகிறாரே!" என்று அன்று தொடங்கி கிடுக்கிட்டிருந்தார்.

அவ்வந்தணர் மீண்டுமொருகால் அங்கு நின்றும் புறப்பட்டுக் கோயிலுக்கு வந்து பட்டரைத் திருவடிதொழுது 'தேவரீருடைய வைபவங்களை யெல்லாம் வேதாந்திக்குச் சொன்னேன்; தர்க்க வியாகரண மீமாம்ஸாதி ஸகல சாஸ்திரங்களும் தேவரீர்க்கு வாசோ விதேயங்களென்று சொன்னேன்; அவரும் அது கேட்டு விஸ்மயப்பட்டிருக்கிறார்' என்று விண்ணப்பஞ் செய்ய, அதற்கு பட்டர் 'திரு நெடுந்தாண்டக சாஸ்திரம் நமக்குத் தெரியும் என்று வேதாந்திகளிடம் சொல்லிற்றிலீரே!' என்றருளிச் செய்ய, அந்தணரும், அப்படியே சொல்லுகிறேனென்று சொல்லிச் சென்று வேதாந்தியிடம் "பட்டர்க்குத் திருநெடுந்தாண்டக சாஸ்த்ரம் அஸாதாரணம்" என்று கூற, அது கேட்ட வேதாந்தி அந்த சாஸ்த்ரம் இன்னதென்று அறியப் பெறாதவராகையாலே அது என்னோ? வென்று வியப்புக் கொண்டிருந்தார்.

இங்ஙனே சில நாள் சென்றபின், எம்பெருமானாருடைய நியமனப்படி வேதாந்தியைத் திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம்பற்றிய பட்டர், நம்பெருமாள் ஸந்நிதியிலே நியமனம் பெற்றுப் புறப்பட்டு மேல் நாட்டிலெழுந்தருளிக் காவேரிக் கரையில் சிறுப்புத்தூரண்டையில் நின்றருள, அப்போது அங்கு எழுந்தருளியிருந்த திருமலை அனந்தாழ்வான், பட்டர் எழுந்தருளின செய்தி யறிந்து சடக்கென வந்து ஸேவித்து 'ஐயோ! ஸுகுமாரரான நீர் காடும்மலையுங் கடந்து இத்தனை தூரம் எழுந்தருளலாமோ?' என்ன, பட்டரும், அனந்தாழ்வான் திருவடியிலே விழுந்து ஸேவித்து "மேல்நாட்டிலே போய் வேதாந்தியைத்திருத்தி நம் தர்சநப்ரவர்த்தகராகும்படி பண்ணென்று நம் உடையவர் நியமித்தருளினரே; அப்படியே நம்பெருமாளும் விடை ஸாதித்து நியமித்தருளினர்" என்று சொல்ல; அனந்தாழ்வானும் 'எங்கள் குடிக்கரசே! வாரும்' என்று பட்டரை மிகவுமுகந்து அழைத்துக் கொண்டுபோய்த் திரு நாராயணபுரத்திலே மஹாவைபவமாக மங்களாசாஸநம் செய்வித்து வேதாந்திகள் விஜயஞ் செய்திருக்கிற ஊர்க்கும் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு சென்றார்.

சிஷ்யர்கள் பலர் பிருதாவளிகள் கூறத் திருப்பல்லக்கிலே பட்டர் எழுந்தருளாநிற்கக் கண்ட அங்குள்ள அந்தணர் சிலர் பட்டரை நோக்கி "நீர் ஆர்? எங்கேற எழுந்தருளுகிறீர்?" என்று கேட்க; அதற்கு பட்டர் "நாம் இராமானுசனடிகள்; வேதாந்திகளுடனே தர்க்கிக்கப் போகிறோம்" என்று கூற, அது கேட்ட அவர்கள் "தேவரீர் இப்படி ஸம்ப்ரமத்துடனே எழுந்தருளினால் வேதாந்திகளைக் காண்பது அருமைப்படும்: அவருடைய சிஷ்யப்ரசிஷ்யர்கள், தலைவாசலிலே யிருந்து, வந்த வித்வான்களுடனே நாலாறுமாதம் தர்க்கித்து அவர்களை உள்ளே புகுறவொட்டாதே புறம்பே தள்ளிவிடுகிறார்கள்: அங்ஙனமாகாமே அவரை நேரிற்கண்டு தர்க்கிக்க ஒருபாய முரைக்கிறோம் கேளும்;

வேதாந்திகள் மிக்க செல்வச் சிறப்புடையவராதலால் தினப்படியாக ப்ராஹ்மண ஸந்தர்ப்பணை வெகு விசேஷமாக நடத்தி வருகிறார். புஜிக்க வருகிற பிராமணர்களுடனே கலந்து தேவரீரும் போஜநசாலையிற் சென்று சேர்தல் நன்று; அங்கு வேதாந்திகள் அவசியம் நிரீக்ஷிக்க வருவர், அப்போது காணலாம்: ஆகையாலே பரிஜந பரிபர்ஹங்களை யெல்லாம் இங்கே நிறுத்தித் தனியே

யெழுந்தருளத்தக்கது" என்று ஸதுபாயம் சொல்லிப் போனார்கள்.

பட்டரும், அவ்விதமாகவே போஜநசாலையிற் சென்று சேர்ந்து, பங்க்தியில் எழுந்தருளியிராமல் வேதாந்திகள் பக்கத்திலேயே நிற்க, அவரும் 'பிள்ளாய்! இங்கு ஏன் நிற்கிறீர்?' என்ன, 'பிக்ஷைக்காக' என்று பட்டர் சொல்ல; எல்லோரும் புஜிக்கிற விடத்திலே போய் உட்காரும்' என்று வேதாந்திகள் சொல்ல, "நான் அன்ன பிக்ஷைக்கு வந்தேனல்லேன்' என்று பட்டர் சொல்ல, அது கேட்ட வேதாந்திகள் இவர் வித்வானாயிருக்கக் கூடும் என்றெண்ணி "கா பிக்ஷா?" என்று கேட்க, பட்டரும், "தர்க்க பிக்ஷா" என்ன வேதாந்திகள் இதைக்கேட்டு திடுக்கிட்டு "முன்னே நாம் கேள்விப்பட்டிருந்த பட்டரல்லது வேறொருவர் நம் முன்னே வந்து கூசாமல் நின்று இங்ஙனே சொல்லப்பெறார்; இவர் அந்த பட்டரேயாயிருக்கக் கூடும்" என்று நிச்சயித்து "நம்மைத் தர்க்க பிக்ஷை கேட்டீர்; நீர் பட்டரோ?" என்ன; அவரும் ஆம் என்ன ; அவ்வளவிலே வேதாந்திகள், இவருடைய வித்யாவைபவம் காண்போமென்று குதூஹலித்துத் தர்க்கிக்கத் தொடங்கினார். ஒருவர்க்கொருவர் மத்தவாரணம் பிணங்குமா போலே தர்க்கிக்க, இங்ஙனே ஒன்பது நாள் சென்றபின் பத்தா நாளில் பட்டர் அத்வைதத்தை ஸஹஸ்ரமுகமாகக் கண்டித்து விசிஷ்டாத்வைதத்தை ஸ்தாபித்து, திருநெடுந்தாண்டகத்தின் விழுமிய பொருள்களையும் அழகாக உபந்யஸித்தருள, வேதாந்திகள் விஸ்மய ஸந்தோஷ விவசராய் எழுந்திருந்து அஞ்சலி ஹஸ்தராய் நின்று "உம்மை மநுஷ்யமாத்ரமே யென்றிருந்தேன் : உமக்கும் நம் பெருமாளோடு வாசியில்லை ; உறங்கும் பெருமாள் அவர், உலாவும் பெருமாள் நீர்" என்று பலவாறு துதித்துத் திருவடிகளிலே விழுந்து தொழுது அடியேனை அங்கீகரித்தருளவேணுமென்று விஜ்ஞாபிக்க, பட்டரும் தாமெழுந்தருளின காரியம் மிக விரைவாகப் பலித்தமைக்குத் திருவுள்ளமுவந்து வேதாந்திகளுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரம் ப்ரஸாதித்தருளி மஹாபாகவதோத்தமராக்கி விசேஷகடாக்ஷஞ் செய்தருளி 'வேதாந்திகளே! நீர் ஸர்வஜ்ஞராயிருந்தீர் ; நாம் உமக்குப் பரக்கச் சொல்லலாவதொன்றுமில்லை : வேதாந்தார்த்தங்களிலே தெளிவுபெற்ற நீர் இனி மாயாவாதரீதியை ஸவாஸநமாகத்யஜித்து, அருளிச்செயல்

களை ஓதி நம் எம்பெருமானார் தர்சநத்தை நிர்வஹித்துப் போரீர்' என்று நியமித்து, அவ்வளவிலே நம்பெருமாள் ஸந்நிதியில்திருவத்யயநோத்ஸவம் அணித்தான படியை ஸ்மரித்தருளி விரைந்து கோயிலேற வெழுந்தருளப் புறப்பட்டு மார்கழிமாதம் அமாவாஸ்யையன்று திருவரங்கம் வந்து சேர்ந்து, அன்றுமாலை நம்பெருமாள் திருமுன்பே விடை கொண்டுநிற்க, பெருமாளும் 'பட்டரே! நீர் புறப்பட்டுப் போன காரியம் என்னாயிற்று?' என்று கேட்டருள, பட்டரும் 'வேதாந்திகள் தேவரீருடைய திருவடிகட்கு அடியவராயினர்' என்று விஜ்ஞாபிக்க, 'அவரைத் திருத்திப் பணிகொண்டபடி எங்ஙனே?' என்று பெருமாள் கேட்க, பட்டர் உடனே 'இங்ஙனே காணும்' என்று சொல்லித் திருநெடுந் தாண்டகத்தைத் திருவோலக்கத்திலே உபந்யஸித்தார். இந்த இதிஹாஸத்தை அடி யொற்றியே நாளைக்கும் நம்பெருமாள் ஸந்நிதியில் திருவத்யயநோத்ஸவத் தொடக்கத்திற்கு முன்னாள் திருநெடுந்தாண்டகத் திருநாளென்று மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றதென்றுபெரியார் கூறுவர்.

இது இங்ஙனமிருக்க, வேதாந்திகள் ஸ்வதேசத்திலே திருமாலடியார்களைப் பூசித்துவரும் நாளில், ஸம்ஸாரத்தில் விரக்தியெய்தி உத்தமாச்ரமத்தை ஸ்வீகரித்து, இனி, பட்டர் திருவடிவாரத்திலேயே நிழலும் அடிதாறுமாக நித்யவாஸஞ் செய்யவேணுமென்று அறுதியிட்டுக் கோயிலை நோக்கியெழுந்தருளா நிற்கையில் சிறுப்புத்தூரிலே அனந்தாழ்வானைக் கண்டு ஸேவித்துநிற்க, அவரும் 'வாரீர் வேதாந்திகளே! ஸுகுமாரரான நீர் இங்ஙனே செய்யலாமோ? வேர்த்தபோது நீராடிப் பசித்தபோது அமுது செய்து பட்டர் திருவடிகளே சரணமென்றிருந்தால் உம்மைப் பரமபதத்தினின்றும் தள்ளி விடுவாருண்டோ? இனி என் ? திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வயைக நிஷ்டராவீர், என்று ஆசீர்வதித்துப் போகவிட்டார். வேதாந்திகளும் பயணகதியிலே போய்க் கோயிலேற எழுந்தருளி பட்டர் திருவடிகளிலே வேரற்ற மரம்போலே விழுந்து கிடக்க, பட்டரும் மிகவுமுகந்தருளி 'நம்முடைய சீயர்வந்தார், என்று வாரியெடுத்துக் கட்டிக்கொண்டருளி ஒருக்ஷணமும் பிரியாமல் தம்முடைய ஸந்நிதியிலேயே வைத்துக்கொண்டு ஸகலார்த்தங்களையும் ப்ரஸாதித்தருள, சீயரும் பட்டரையன்றித் தேவுமற்றறியேன் என்றிருந்தார். [பட்டர் 'நம்

மூடைய சீயர்' என்று சொல்லி அணைத்துக் கொண்ட அன்று தொடங்கி வேதாந்திகளுக்கு நஞ்சீயர் என்று திருநாமம் வழங்கலாயிற்று.] உபதேசரத்தினமாலையில் "நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை யென்பர், அவரவர்தமேற்றத்தால்—அன்புடையோர், சாத்து திருநாமங்கள் தாமென்று நன்னெஞ்சே, எத்தனைச் சொல்லிநீயின்று." என்ற பாசுரம் இங்கு அநுஸந்திக்கவுரியது.

நஞ்சீயருடைய ஆசார்ய ப்ரேமம் பரம விலக்ஷணமானது. ஒரு கைசிக த்வாதசியன்று பட்டர் ப்ரஹ்மரதத்தி லெழுந்தருளித் திருவீதி யலங்கரிக்கப் புறப்பட்டவாறே நஞ்சீயரும் ஸ்ரீபாதம் தாங்கப்புக "உத்தமாச்ரமியாய் த்ரிதண்ட தாரியான வுமக்கு இக் காரியம் தகாது" என்று பட்டர் முதலானோர் மறுத்துக்கூற, அப்போது நஞ்சீயர் 'எனக்கு நீ துணையாகி என்னை ரக்ஷிக்கவேணுமென்னும் பொருளுடையதான ஸவா ஓ மொவாய ஸகா மா கோபாய." என்கிற மந்திரத்தைச் சொல்லி ஸ்வீகரிக்கப்பட்ட இந்த முக்கோல்தானே இன்று எனக்கு விரோதி யாகிறதோ? இக்கோல் எனக்குத் துணையல்லவோ? ஸ்வரூபரக்ஷணத்திற்கு இக் கோல் இடையூறுயின. இஃது எனக்குவேண்டா என்றுசொல்லி த்ரிதண்டத்தை விட்டெறியப் போனாராம்: அப்போது அவருடைய பக்தி விசேஷத்தைக்கண்டு அனைவரும் வியந்தனர்.

பட்டர் திருவணையாட எழுந்தருளுகிறபோது, பகலெல்லாம் வழிநடந்தருளின ஆயாஸத்தாலே ஒரு தூற்றடியிலே நஞ்சீயர் மடியிலே திருமுடியை வைத்துக் கண்வளர்ந்தருள, ஓரிரவெல்லாம் துடைமாறுதல் அசைத்தல் செய்யாதே நஞ்சீயர் இருந்தார் என்பதும் இவருடைய ஆசார்ய ப்ரேமத்தின் கனத்தை விளக்கும்.

நஞ்சீயர் நெடுநாள் வரையில் அருளிச் செயல்களின் வாஸனையையும் அறியாதவராயிருந்து வைத்தும், பட்டரை ஆச்ரயிக்கப் பெற்றபின்பு ஆசார்யகடாக்ஷ விசேஷத்தினால் சிறிதுகாலத்திலேயே திவ்யப்ரபந்தங்க ளெல்லாவற்றையும் ஓதித்தரித்து, அவற்றில் விசேஷார்த்தங்கள் நிர்வஹிப்பதில் நல்ல விரகராய் விளங்கினர்.

சிறிய திருமடலில் "அவட்கு மூத்தோனை வெந்நகரம் சேரவகையே சிலை குனித்தான்" என்ற விதற்கு ஸாமாந்யமாகப் பலரும் பொருள் சொல்லக்கூடிய விதம் என்னெனில்; கரனை

உடையவர் திருமஞ்சன கட்டியம்

(3 ரிகார்டு ஸெட் C. A. 1022 to 1024)

காஞ்சீபுரம் பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியரருளியது.

பூஜைக்குகந்த ரிகார்டுகள்

(அண்ணாத்துரை கனபாடிகள் அருளியது)

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமஸ்தோத்ரம்.
(C. A. 753-755 3 ரிகார்டு ஸெட்)

லக்ஷ்மி அஷ்டோத்தரம் & ஸ்ரீஸூக்தம்.
C. A. 778

கிருஷ்ணாஷ்டோத்தர ஶதநாம ஸ்தோத்ரம்.
& ஆதித்ய ஹ்ருதயம் C. A. 844

தைத்திரீயோபநிஷத் பாகம் 1 & 2.
C. A. 999

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்
மதராஸ்.

யுனைடெட் இந்தியா

லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி.

(லிமிடெட்)

தலைமை ஆபீஸ் : மதராஸ். ஸ்தாபிதம் : 1906

டிரஸ்டி : மதராஸ் அபீஷ்யல் டிரஸ்டி.

பாலிஸிதாரர்களின் நன்மையையே கோரி பணி செய்யப்படுகிறது.

க்ளெய்ம்கள் தாமதமின்றி தீர்க்கப் படுகின்றன. நல்ல சேமிப்பு, திறமை யான நிர்வாகம், லாபகரமான பாலிஸி நிபந்தனைகள், குறைந்த ப்ரீமியம், நிறைந்த போனஸ், இவை

யுனைடெட் இந்தியாவை

ஒரு சிறந்த இன்ஷூரன்ஸ் கம்பெனி யாக்குகின்றன.

பூரா விவரங்களுக்கும் தலைமை ஆபீஸ் :

யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்,

செம்புதாஸ் தெரு, மதராஸூக்கும்

அல்லது

கீழ்க்கண்ட இடங்களிலுள்ள ஆபீஸூகளுக்காவது எழுதவும்.

ஆஸான்ஸல்	டாக்கா	லாகூர்	ராஜமகேந்திர புரம்
பெங்களூர்	டில்லி	பாட்ஞு	ரங்கூன்
பெஜவாடா	கௌஹத்தி	மதுரை	ஸில்கார்
பம்பாய்	கூட்டி	மங்களூர்	தஞ்சாவூர்
கல்கத்தா	ஜௌரா	நாகப்பூர்	திருவனந்த புரம்
கள்ளிக்கோட்	சிட்டகாங்	ஹைதராபாத்	உடுப்பி
சித்தூர்	ஜல்பெய்குரி		

நரகத்திற்கு போக வொட்டாமல் வீரஸ்வர்க்கத்திற்குப் போகச் செய்தார் பெருமாள் என்று. இதற்கு இங்ஙனமல்ல பொருள். வளைந்த வில்லுங்கையுமாய் நின்ற பெருமாளைக் கண்ட கரன் 'நாம் மேலே போய் வேறொரு நரகயாதனை அநுபவிக்கவேண்டா; எல்லா நரக வேதனையும் நமக்கு இங்கே அநுபவித்தாயிற்று' என்று குடல் மறுகும்படி போர்க்களத்திலே அவனைப் படாத பாடு படுத்தினான் என்று பட்டர் அருளிச் செய்யும்பொருள். நஞ்சீயர் பட்டரை ஆஶ்ரயிப்பதற்குமுன்னே ஸ்வதேஶத்தில் வாழுங்காலத்து பட்டருடைய சிஷ்யரொருவர், நஞ்சீயரை ஸங்தித்து வார்த்தையாடும்போது 'எங்களுடைய திவ்யப் பிரபந்தத்தில் "அவட்கு மூத்தோனை வெந்நரகஞ் சேராவகையே சிலை குனித்தான்" என்றிருக்கிறது; வேதாந்திகளே! இதற்கு நீங்கள் என்ன பொருள் சொல்லுவீர்கள்?' என்று கேட்க; அவர் சாமாந்யமாக நெஞ்சிற்பட்ட பொருளைச் சொல்லிவிட்டு, 'உங்களுடைய பட்டர் எங்ஙனே சொல்லுவர்?' என்று கேட்க; இங்ஙனே சொல்லுவர் என்று அவர் கூற, இப்பொருள் கூறவல்ல பட்டரை நாம் ஸேவிக்க வேணுமென்று அவர்க்குக் காதல் கிளர்ந்ததாகப் பெரியோர் கூறுவர். (தொடரும்)

அருளிச் செயல்களில் பாடபேதங்களின் ஆராய்ச்சி.

[ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியர்.]

அடியேன் இந்தப் பத்திரிகையின் 5-வது சஞ்சிகையில்' 'அருளிச் செயல்களில் வழங்கும் பாடங்களைப் பற்றின ஆராய்ச்சி, என்ற தலைப்பின் கீழ்ச் சில எழுதியிருந்தவை வெளி வந்ததைப் பலரும் கண்டிருக்கலாம். அவ்விஷயத்தைக் குறித்துப் பத்ராதிபரின் குறிப்பு உடனே வெளிவந்ததையும் பார்த்திருக்கலாம். அந்தக் குறிப்பைக்கண்ட அடியேன், 'பத்திராதிபருக்கு அடியேன் எழுதியது அஸம்மதமோ?' என்று நினைத்து, பிறகு எழுதாதிருந்தேன். பஶ்சாத், பத்ராதிபர் 'எனக்கு நீ எழுதியதில் அஸம்மதம் இல்லை. எனக்குத் தோற்றியதையே எழுதினேன் ஆகையால், அவசியம் மேலும் எழுதவேணும்' என்று பலமுறை நிர்ப்

பந்தித்து நியமித்தார் என்றாலும், அவகாசக்குறைவு முதலிய காரணங்களால், அப்போது எழுத முடியாதிருந்தது. இப்போது அடியேன் கேட்டறிந்தனவற்றிற் சில விஞ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

அடியேன் விஞ்ஞாபித்துக் கொள்வது ஸ்வகபோல கல்பிதமாக எழுதுவதல்ல. தமிழறிஞர்பாற் கேட்டதையே ஸம்ப்ரதாயஸ்தர்களும் பரிசீலனம் பண்ண வேணுமென்றே விஞ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

முதன்முதலில் பத்ராதிபரின் குறிப்பைக் குறித்து அடியேன் நெஞ்சிலுள்ளதை ஒளியாது விஞ்ஞாபித்துக் கொண்டு பிறகு பாடங்களைப் பற்றின ஆராய்ச்சியாக இரண்டொரு விஷயங்களை விஞ்ஞாபித்துக் கொள்கிறேன்.

ஐந்தாவது சஞ்சிகையிற் குறித்த பாட ஆராய்ச்சிகளில் ஒன்று "ஏழையே தலன்" என்ற பெரிய திருமொழி தசகத்தில் "துளங்கு நீண்முடி" என்ற பாசுரத்தில் 'அங்கோடு நாழிகை' என்பது. இதற்கு பத்திராதிபரின் குறிப்பு—இப்பாடத் திருத்தம் ஸ்ரீ காஞ்சி அண்ணங்கராசாரியர் ஸ்வாமியினுடைய திவ்யார்த்த தீபிகையில் வெளிவந்து முன்னமே உலகிற் பரவி யிருக்கின்றதென்பது. 'அடியேன் ஸ்வதந்த்ரனாக யாதொன்றும் எழுதுகின்றேனல்லேன் தமிழறிந்த பெரியாரின் கருத்தை யொட்டியே காட்டுகின்றேன்' என்று அந்தக் கட்டுரையில் தானே விஞ்ஞாபித்துக் கொண்டுள்ளேன். இப்போதும் அதனை மீட்டும் விஞ்ஞாபித்துக் கொள்ளுகின்றேன். இந்தத் திருத்தம்—முதன் முதலில் அடியேன் அறிந்து கொண்டது எப்படியெனில்?,— ஸ்ரீ உ. வெ. வை. மு. சடகோபராமாநுஜாசார்யர் ஸ்வாமியால் ஸ்ரீ உ. வே. சித்ரகூடம்— கந்தாடை திருவேங்கடாசார்யர் ஸ்வாமி ஹேவிளம்பி வருஷத்தில் [அதாவது இப்போதைக்கு 39-ஸம்வத்ஸரத்திற்கு முன்] பதிப்பித்த நாலாயிரப் பிரபந்தத்தில் ஷை சடகோபராமாநுஜாசார்யஸ்வாமி தமக்கு அவகாசமுள்ளபோது சிற்சில இடங்களிற் பரிசீலித்துப் பார்த்துக் கொடுத்தது உண்டு. அப்படிப்பட்ட பகுதியிற் சேர்ந்தது இது. அப்போது அந்த ஸ்வாமி இந்த விஷயத்தை அடியேனுக்கு க்ருபயா அநுக்ரஹித்தார். பிறகு 1909-ஆம் வருஷத்தில் இந்தப் பதிகம் மெட்ரிக்யுலேஷன் பரீட்சைக்குப் பாடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அப்போது

யூனிவர்ஸிடியார் 'அங்கோடு நாழிகை' என்று தவறாகப் பதிப்பித்தனர் அடியேங்கள் எழுதி ஸ்ரீ உ. வே. வை. மு. சடகோபராமாநுஜாசார்யாரால் பார்த்துத் திருத்தி வெளியிடப்பட்ட அந்தப் பதிகத்து உரையில் அடியோங்கள் 'சுரந்தங்கோடு நாழிகை' என்று மூலத்தைப் படிக்கலாம் அந்தப் பாடம் பொருட்கு பொருந்துவதோடு, முன்பின்னடிகட்கு அளவொத்ததுமாம். அங்கோடு என்ற பாடத்துக்கு 'ஓடு' என்பது ஒடுஎனக் குறுகிய தெனவேண்டும்; அங்ஙனமே யுரைப்பர் அரும்பதவுரைகாரர் என்று எழுதியுள்ளோம். அதன் பின்னரே திவ்யப்ரபந்ததிவ்யார்த்த தீபிகை வெளியாயிற்று என்று நினைக்கிறேன். இப்படிப் பல படியாக ப்ரசாரம் நடந்தும் நன்கு அறிந்த ஸ்வாமிகளும் அங்கொடுஎன்றே அநுஸந்திக்கப் பலகாலும் கேட்டுப் போருவதால், இந்தப் பாட விஷயத்தில் ஸ்வாமிகட்குத் தனியே மனஸ்ஸு செல்லவேணுமென்பதற்காகவே அடியேன் விஞ்ஞாபித்துக் கொண்டதேயன்றி, அபூர்வமாக ஒன்றைக் கண்டுபிடித்த ப்ரதையைப்பெற வேணுமென்று அடியேன் எழுதவில்லை. இது நிற்க, இரண்டாவது தழுவி முழுசி, தழுவாதே முழுசாதே என்று சகரமாகக் காண்கிற விடத்தில் 'தழுவி முழுவி' என்றும் தழுவாதே முழுவாதே' என்றும் வகரமாக அநுஸந்திப்பதென்பது. இங்ஙன் வகர மாகக்கொள்ளாமலிருப்பதற்குப் பத்ராதிபர் இரண்டு காரணங்கள் காட்டுகின்றார். முதற்காரணம் முழுசுதலென்பதற்கும்முழுவுதலென்ற பொருளைக் கொள்ளலாமென்று சில பெரியோர்களின் திருவுள்ளமென்பது. தமிழறிந்த எந்தப் பெரியோர்கள் இவ்வாறு சொல்லுகின்றனர்? எந்த உபபத்தியைக் கொண்டு சொல்லுகின்றனர்? இந்த விஷயத்தை தமிழறிந்தவர்கள் உடன் படுமாறு விளக்கினால், அடியேன் மறுதலித்துச் சொல்லேன். இரண்டாவது காரணம்—ஷை சடகோபராமாநுஜாசார்ய ஸ்வாமி ஆதரிப்பதாகக் கலாசாலைக்கு அந்த ஸ்வாமி வெளியிட்ட குறிப்புரையினால்தெரிகின்றதென்பது, அடியேனுக்குத் தெரிந்த வரையில், அந்த ஸ்வாமி திவ்யப்ரபந்தத்துக்குக் குறிப்புரை யெழுதி வெளியிட்டில்லை. விரிவுரை வெளியிட்டதுண்டு. யூனிவர்ஸிட்டியார் மூலபாடத்தைப் பதிப்பிக்க, அதற்கு ஏற்ப உரை யெழுதி வெளியிட்டுள்ளார். அவ்வுரைகள்யாவும் இப்படித்தான் பாடம் இருக்கவேணுமென்று ஆராய்ந்தே எழுதப்பட்டன என்று சொல்லமுடியாது; அவகாச

மிருந்தால் விசேஷ ஆராய்ச்சி செய்து எழுதுவது உண்டு. அத்துணையே வகரமாக இருப்பின் நலம் என்றும், 'முழுசி, முழுசாதே' என்று படிப்பது சிறவாது என்றும் எனக்கு உணர்த்தியவர்கள், மஹா மஹோபாத்தியாய தாட்சிணாத்திய கலாநிதி டாக்டர் சாமிநாதய்யரவர்கள். ஒருமுறை பாடமாக நேர்ந்த இந்தப் பாகத்தை அச்சிட நேர்ந்தபோது "தழுவாதே முழுவாதே" என்று அவர்கள் பதிப்பித்துள்ளனர். இவ்வரிய விஷயத்தை ஸம்ப்ரதாயஸ்தர்களும் அறியவேணுமென்றே விஞ்ஞாபித்துக் கொண்டது. பிழையிருப்பின் பொருக்க. இனி, சில தமிழறிஞர்கள் தம் ஆராய்ச்சியிற்கண்டு பேசிய பாடங்கள் இரண்டை விஞ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

திருவாய் மொழியில் இரண்டாம்பத்தில் "எம்மாவீடு" என்ற திருவாய்மொழியின் முதற் பாசுரத்தை யனுசந்திக்கையில் "அம்மா வடியேன் வேண்டுவதீதே" என்று அப்பாசுரத்தை முடித்து, "ஈதே யானுன்னை" என்று இரண்டாம் பாசுரத்தைத் தொடங்குகின்றனர், "ஈதேயானுன்னைக் கொள்வதெஞ்ஞான்று மென்மை தோய் சோதிமணிவண்ண வெந்தாய், எய்தாநின்கழல் யானெய்த ஞானக்கைதா காலக் கழிவு செய்யேலே" என்பது. அந்த இரண்டாம் பாசுரம், இப்போது வழங்கும் பாடத்தில் இவ்விரண்டாம் பாசுரத்தின் முதலடியின் முதலெழுத்து நெட்டெழுத்தாயிருக்க, மூன்றாமடியின் முதலெழுத்து குற்றெழுத்தாகவும், இரண்டு நான்காமடிகளின் முதலெழுத்துக்கள் ஐகாரக் குறுக்கமாகவும் காணப்படுகின்றன இங்ஙன் ஓரடியின் முதலெழுத்து நெடியதாகவும், மற்றை மூன்றடிகளின் முதலெழுத்துக்கள் குறியனவாகவும் வருவது எதுகைத் தொடைக்கு ஏற்காது. மேலும் இரண்டாமெழுத்தும் ஏற்ப அமையவில்லை. இரண்டா மெழுத்து எதுகையெழுத்தாயமைய, முதலெழுத்து அளவொத்து இருக்க வேண்டுமென்பது, எதுகை யிலக்கணமாகும். ஆகவே, முதற் பாசுரத்தின் ஈறு 'அம்மாவடியேன் வேண்டுவதிஃதே "என்று முடிவுபெற "இஃதே யானுன்னைக் கொள்வ தெஞ்ஞான்றும் என்று இரண்டாம் பாசுரம் தொடங்கின் எதுகைத் தொடைக்கு ஏற்கும். "ஒரு நாயகமாய்" என்னுந் திருவாய் மொழியின்பத்தாம் பாசுரம் "வீடஃதே" என்று முற்றுப்பெற, அஃதேயுய்யப் புகுமாறு" என்ற அடுத்த பாசுரம் தொடங்குவதையும், இரண்டு

மூன்றாமடிகளில் யகரமாகிய இரண்டாவது எழுத்து ஆய்தத்திற்கு ஏற்ற எதுகையெழுத்தாக அமைந்திருத்தலையும் நோக்குக. சீவக சிந்தாமணியிலும் "செய்க பொருள் யாருஞ் செறுவாரைச் செறுகிற்கு மெஃகு பிறிதில்லை யிருந்தேயுயிரையுண்ணும்" என்பது போன்று சில இடங்களில் ஆய்தமும் யகரவொற்றும் தம்மில் எதுகையாயமைந்திருத்தலையுங் காணலாம். இது ஒன்று.

இனிவேறொன்று கூறுவோம். திருப்பாவையில் நான்காவது பாசுரம் ஆழிமழைக்கண்ணா என்று தொடங்குகின்றது. இங்கு ஆழி மழை மண்டலவர்ஷத்துக்கு, கண்ணா—நிர்வாஹகனே! என்று பொருளுரைக்கின்றனர். இது வ்யாக்யாதாக்களின் திருவுள்ளத்துக்குஏற்றதேயாகும், இனிஆராய்ச்சியாளராகிய சில தமிழறிஞர்கள் "சந்தியுடன் படிக்குமிடத்து ஆழி மழைக்கண்ணா லொன்று நீகைகரவேல் என்று இருந்தது. படிப்போர் லகர வகரத்துக்கு உள்ள ஒற்றுமையால் மயங்கி ஆழிமழைக்கண்ணா வொன்று நீ கைகரவேல்" என்று மாறிப் படிக்கலாயினர். பின்பு பொருள் சொல்லப்புகுமிடத்து ஆழிமழைக்கண்ணா என்று பிரித்துப் பொருளுரைக்கலாயினர். ஆழி மழைக்கு அண்ணல் என்று பிரித்து—மண்டலவர்ஷத்துக்கு நிர்வாஹகனே! என்று உரைத்தல் அமையுமென்பது. இவ்வாறு கூறுவதன் ஔசித்யாநௌசித்யங்களை அறிஞர்கள் ஆராய்வார்களாக.

திருப்புளி மான்மியம்

விசித்ர விருக்ஷம்

[திருக்குருகூர் ஸ்ரீ அ. தே. ராமாநுஜய்யங்கார்.]

ஆழ்வார் திருநகரி ஆழ்வார் கோயில் கட்டிடத்தில் ஒரே வேர் மூலம் ஏழு மரங்களாக ஆதிசேஷாவதாரமாய் ப்ருஹ்மாண்டமாய் வளர்ந்திருக்கும் திருப்புளிய விருக்ஷ மகிமையறியாத ஸ்ரீ வைஷ்ணவர்களிருப்பது அபூர்வமாகும். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளா யிருந்துவரும் இவ்விருக்ஷத்தின் மகிமையை யாவரும் அறிவதும் அத்யாவசிய மாகும். இப் புளியமரம் மற்ற மரங்கள் போலின்றி இரவில் உறங்காமலிருப்பதுடன் இதில் பூ பூத்து காய் காய்த்து பழுக்காமலே உதிர்ந்து விடுவதும் ஆச்

சர்யகரமாகும். இம்மரத்தில் ஏதேனும் சேத மேற்படில் அவ்விடத்திலிருந்து மனிதரது உதிரம்போல் ரத்தப் பெருக்கேற்படுவதும், அர்ச்சகர்களால் சந்தணக் காப்பு சாத்தப்பட்ட பின்பே ரத்தப் பெருக்கு நிற்பதா யிருப்பதும் பிரத்யக்ஷமான அதிசயமாகும். தவிர இதன் பூ காய் முதலியன சாப்பிட அதிமதுரமாயிருப்பதும், இந்நகர் எல்கைக்குள் இருக்கும் சகல புளியமரங்களிலும் காய்கள் பழுக்காமலே உதிர்ந்து விடுவதும் மிகவும் விநோதமாகும்.

இம் மரத்திலேயே ஸ்வாமி நம்மாழ்வார் திருவவதாரமாய் சில காலம் வரை பசிதாகமின்றி மதுரகவி நாதமுனிகட்கு பிரத்யக்ஷமாய் திவ்ய ப்ரபந்தங்களை உபதேசித்து அந்தர்த்யாநமானதாய் சொல்லப்படுவதால் இப் புளியமரத்திற்கு திருப்புளி ஆழ்வார் என்ற திருநாமம் உண்டு.

க்ருதேத்ரி ஸநத்குமாரோ பகவாந் த்ரேதாயாம் ரகுநந்தந:,
த்வாபரே நந்த ஸூநுஸ்ச கலௌதேவ: பராங்குச:

என்றபடி ஸர்வலோக ஸரண்யனை ஸ்ரீமந் நாராயணனே நம்மாழ்வாராயவதரித்து உறங்காத் திருப்புளியென வழங்கும் இவ்விருக்ஷத்தி னடியிலேயே மாயமாய் அந்தர்த்யாநமானதால் இம் மரத்தை எவரும் தூரவிருந்தே சேவித்துச்செல்வர். இதன் பட்டைகள் உதிர்ந்து கிடப்பதை உரைத்துண்போரின் ஸர்வவியாதிகளும் சொஸ்தமாவதாயும் தெரிகிறது. இத்திருப்புளி ஆழ்வார் திருநக்ஷத்ரத்தினத்திலும் பிரதி ஆனித் திருமூலத்தன்றும் மிக விமர்சையாகக் கொண்டாடப்பட்டும் வருகிகிறது.

சனகன் பெற்ற வன்னம்.

(பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.)

விரியும் வார்புனல் மருதம்சூழ் மிதிலையர்கோமான் ஜநகமகாராஜன், இரும்பு அனைய பெரிய நீண்ட கொம்புகளையுடைய இரண்டிடபங்களின் பருமைதங்கிய பெரிய பிடரியின்மீது பளிங்கினாற் செய்த நுகத்தடியைச் சேர்த்து அதனோடு பொருத்தி உரம்பில் மணி பொற்கலப்பையில் வயிரத்தின் கொழுமடுத்திட்டு பூமியை வேள்வியின் பொருட்டு பலசால் உழுதனர். அடியார் செய் மாதவத்தால் செய்யவள் மையறு மலரினின்றுநீங்கி மிதிலையில் அவண் பதுங்கி யிருந்தனள். உழுகின்ற கொழுமுகத்தில் பொலிகின்ற புனிமடந்தை வெளிப்பட்டாற் போலவும், பயோததியில் அமிர்தத்துடன் அவதரித்த திருமகளும் இழிந்து புறத்தொதுங்க ஆதரித்து அமுதில் கோல்தோய்த்து அவயவம் அமைக்குந் தன்மை யாது? எனத் திகைக்கும் அல்லால் மதனற்கும் எழுதவொண்ணா நல் நலத்துப் பெண்ணரசி தோன்றினாள். அழகு இவளைத் தவஞ் செய்துபெற்றதோ? என்றையுறுமாறு நின்றாள் இம்மாமலர்ப் பாவை. சீதை என்ற பெயருடன் விளங்கினாள் இத்திரு. சனகன் யாகசாலையில் கண்டெடுத்து வளர்த்துவந்தகாரணம்பற்றி இத்திருமடந்தை சானகியானாள். சீதையைத் தருதலாலே திருமகளிருந்த செய்யபோதெனப் பொலிந்து தோன்றியது மிதிலைமா நகரம்.

சீதை நடக்க வாரம்பித்தால் செருக்கையுடைய அன்னங்கள் தொழும் தகைமைத்தான மென்னடைக்குத் தோற்று எழுந்து இடை விழுந்து அயரும். நடையால் அன்னம் நாண நடப்பவள் நங்கையர் திலகமான நன்னுதற் சனகி. 'ஓதிமம் ஒதுங்கக்கண்ட உத்தமன் உழையளாகும் சீதை தன்னடையைநோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்'' என்றும் "அன்னமென்னடையாய்'' என்றும் வருதல் காண்க.

திருமணம் புரியுமிடத்தில் வந்து திருமணத்தவிசிலேறி வென்றி நெடுந்தகை வீரனான ஸ்ரீராமபிரானும் ஆர்வத்து இன் துணை அன்னமும் எய்தி இருந்தார். இவ்விருவரும் ஒன்றிய யோகமும் போகமும் ஒத்திருந்தனர். இறைவியை முன்னிட்டுக் கொண்டு இறைவனை யடைதலின் வீரனுக்கு சாத்தியமாகப் பொருந்திய பேரின்ப சுகத்தையும், பிராட்டிக்கு ஸாதநமாகிய தியாகத்தையும் உவமையாக்கினார்.

அன்னத்தின் இயல்பு, பாலும் நீரும் கலந்து வைத்தால் நீரை நீக்கிப் பாலைக்கோள்ளும். நீர் குற்றம். பால் குணம். குன்றனைய குற்றம் செயினும் குணங்கொள்ளும் தன்மையே சான்றோர்க்கணி. பிராட்டியை நலிந்த அரக்கியரைத் துன்புறுத்த எண்ணிய சிறிய திருவடியின் கருத்துணர்ந்த சானகி, அவ் வநுமானுக்கு உரைத்த மாற்றத்தை இவண் நினைக்க.

கோமகன் முன் சனகன் குளிர் நல் நீரை பூமகளும் பொருளும் என, தன் மாமகள் தன்னொடு மன்னுதி என்று தாமரையன்ன தடக்கையின் ஈய்ந்தான். "ஆவியைச் சனகன் பெற்றவன்னத்தை

அமிழ்தின் வந்ததேவியைப் பிரிந்தபின்னைத் திகைத்தனைபோலுஞ் செய்கை'' என்கிறான் வாலி. காகாசுரனினும் மாபாதகன் ஒருவனிருக்க முடியாது. பிராட்டி சாமீப்ய ப்ரபாவத்தால் அவன் காகுத்தனாற் காக்கப்பட்டான். கடிமணத்துக்கு முன் தாடகை வதம் நிகழ்ந்தது. இலங்கைப்பதியில் சானகி இருந்தகாலத்தே வாலி வதம் நடந்தது. எனவே பிராட்டி சம்ச்லேஷத்தால் பெருமாள் காருண்யம் விளங்குகிற தென்றும் அவளது விச்லேஷத்தால் அனர்த்தம் உண்டாகிறதென்றும், அறியலாம். ஸ்ரீ விபீஷணாழ்வானை அங்கீகரித்தற்கு முக்ய காரணம் பிராட்டியின் புருஷகாரமே என்பது ஆழ்ந்து நோக்குவார் அறியும் விஷயம்.

ஊழிதோறும் புதிதொறுங் கீர்த்தியானும், பதினான்கு உலகங்களும் வீவுற்ற ஞான்றும் இன்றென இருத்தியென அநுக்ரஹிக்கப்பெற்றவனுமான் அஞ்சனைமைந்தன் "வாழிசானகி வாழியிராகவன், வாழி நான்மறை வாழியரந்தணர், வாழி நல்லறமென்றற வாழ்த்தினான்."

இத்தால் சனகன் பெற்றவன்னத்தின் சீர்மை இருள்செக எமக்கோரின்னொளி விளக்காய், மணிவரையன்ன நிமலன் திருவுருவினில் அணியமராக மலங்கலாயிலங்கி, அவன்படிக்கெல்லாம் தன்படியேற்க அன்புடன் அவனோடவதரித்தருளி, வேண்டுரை கேட்டு மீண்டவை கேட்பித்து, ஈண்டிடவினைகள் மாண்டிட முயன்று, தனதடி சேர்ந்தமர் அவனை அணுக அவனுடன் சேர்ந்து நிற்கும் அவன் திருவே என்ப.

மறந்தும் புறந்தொழாமை

[ஸ்ரீ. உ. வே. தே. திருமலாசாரியார். வானமாமலை]

இவ்வுலகில் வைஷ்ணவர் என்றசொல்லுக்குப் பலர் பலவாறு கப்பொருள் கூறக் கேட்கிறோம். அஃதெவ்வாறெனில்? ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத் என்பதைக் கொண்டு ஸர்வாந்தர்யாமியான எம்பெருமானது ஸம்பந்த மில்லாத பதார்த்த மொன்று மில்லாமையினால் சேதனா சேதனமான வெப்பொருள்களும் வைஷ்ணவ நாமத்தினால் வழங்குவதற்குரியன என்பர் சிலர்.

மற்றொரு சாரார், விஷ்ணுவினிடத்தில் விசேஷ பக்தியுள்ளவர்கள் வைஷ்ணவரெனப்படுவர்கள் என்கின்றனர். மற்றும் சிலர், விஷ்ணுவையே பரம்பொருளென்றறுதியிட்டிருப்பர் யாவர், அவர்களே வைஷ்ணவர் என்று சொல்லாநிற்பர்கள். வேறு சிலரோவெனில்? பஞ்ச ஸம்ஸ்காரங்களை யுடையாரெவரேனுமவர்கண்டீர்! வைஷ்ணவர் என்று போற்றற்குரிய ரென்றுரைக்கின்றனர். கற்றறிந்த மூதுவர்களோ வென்னில் மேற்கூறப்பட்ட லக்ஷணங்களோடு மாத்திரமன்றி ஸாத்விக ஸ்ம்ருதீதிஹாஸபுராண ஆகமாதிகளிற் சொல்லப்பட்ட (ஙா) பாஹ்யாந்தர லக்ஷணங்களுடன் ஸ்ரீய: பதியைத் தவிர மற்ற தேவதாந்தரங்களைத் தங்களது இஷ்டா நிஷ்டப்ராப்தி பரிஹாரார்த்தமாகக் கண்ணெடுத்துப் பாராத பாகவதோத்தமர்களல்லது மற்றையார் வைஷ்ணவ நாமத்திற்கு முக்யார்த்தமாகத் தக்கவரன்று என்று பணிப்பர். ப்ரக்ருதி பாரவஶ்யத்தாலும், தாபத்ர யாஹிதாபத்தராலும் திருவடி தன்னுமம் மறந்து பிழைத்தாலும் யாதானும் பற்றி நீங்கும் விரதத்தைக் கைக்கொள்ளாமலிருப்பதே உய்யநினை வுடையார்க்கு, உஜ்ஜீவநோபாயமாகும். ஒரு பதிவ்ரதையான ஸ்த்ரீ, தனது ப்ராக்ருத குணங்களாலாவது, பர்த்தாவின் ஸ்வாதந்த்ரிய ப்ரயுக்தமாகவாவது கணவனை மறந்திருந்தாலும் பரபுருஷர்களைக் கண்ணெடுத்துப் பாராமலிருந்தாளேயாமாகில், ஒரு கால விஶேஷத்தில் கணவனுடன் சேர்ந்து களிப்பதற்கும், இக்காசினியோர் புகழ்தற்கும் காரணமாகக் கூடும். அவ்வாறல்லளாகில் மண்ணுலகு விண்ணுலகுகளுக்கு விலக்காகக்கடவள் என்பது, இவ்விஷயத்திற்கோர் சான்றாகும்.

வைஷ்ணவ நாமத்திற்குண்டான இவ்வுண்மைப் பொருளை தர்மராஜன் வெளியிட்டான்.

[illegible] [பரிஹரமதுஸூதந ப்ரபந்நாந் ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம்] என்கிற ஶ்லோகத்தினால். இதன் பொருள்—

நமன், தனது தூதர்களிடத்தில், வைஷ்ணவர் எப்பிறப்பரெக்குலத்தோ ரெவ்வினையராகினுமாம் அவர் திறத்து நம் செங்கோல் விலைச் செல்லவல்ல தன்று காண்! என்றுரைக்க, நமன் தமர்களும், வைஷ்ணவநாமம் யாவர்க்கும் பொதுவாகு பெயரெனப்

பொருள் கொண்டு, அரசே! இவ்வுலகில் வைஷ்ணவரல்லாதார் ஒருவருமில்லையாதலால் நீரும் நாமும், வாளாவிருத்தலே நலம். பொறியில்வாழ் நரகமெல்லாம் புல்லெழுந்தொழியும் என்று சொல்ல, நமனும், தூதர்களை நோக்கி அப்படியன்று, நாம் புகன்றது. பகவான் என்ற பதம், தேவதாந்தரங்களிடத்திலும் மாமுனிகளிடத்திலும் ஔபசாரிகமாக ப்ரயோகிக்கப்படுவதுபோலவும், கள்ளிச் செடிக்கு மஹாவிருக்ஷம் எனப் பெயர் வழங்குவது போலவு மிருப்பதொன்றாயிற்று, இவ்வுலகிற் திரியும் பலர் வைஷ்ணவரெனப் பெயர் பூண்டிருப்பது. வைஷ்ணவ நாமத்தின் உண்மைப்பொருளை உங்களுக்குரைக்கின்றோம் கேண்மின்! யாவர் சிலர், மதுஸூதனனது மலரடிகளில் ந்யஸ்தபராராயிருப்பர்கள் (அவனது திருவடிகளையே உபாயோபேயமாக உறுதிகொண்டு மற்றொன்றை மனதிலும் கனவிலும் காணாதிருப்பர், அவர்களே உண்மையான வைஷ்ணவர்களென உணருங்கோள்! என்றுரைக்க, அதைச்செவியுற்ற நமன் தமரும் களிப்புற்று, தங்களது கடமைகளை முன் போலச் செய்து வரலானார்கள்.

இவ்வரும்பொருளை பிணங்கும் சமயம் பலவற்றிலும் மண்டி, பாக்கியத்தால் உயர்வற வுயர் நலமுடையான், மயர்வறமதிநலமருளப்பெற்ற மழிசைப்பிரான், திறம்பேல்மின் கண்டீர் திருவடி தன்னாமம் மறந்தும் புறந்தொழாமாந்தரை இறைஞ்சியும் சாதுவராய்ப் போதுமின்களென்றான் நமனும் தன்தூதுவரைக் கூவிச் சேவிக்கு என்கிற திவ்ய ஸூக்தியின் வாயிலாக விரித்துரைத்தார்.

இதிஹாஸோத்தமமான மஹாபாரதத்திலும் ப்ரஹ்மாணம் சிதிகண்டம்ச யாஶ்சாந்யா தேவதா: ஸ்ம்ருதா:-ப்ரதிபுத்தா நஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் பலம் என்று முறையிடப்பட்டது. த்ருணீக்ருத விரிஞ்சாதியான திருமழிசைப் பிரான், பிண்டியார் மண்டை யேந்திப் பிறர்மனை திரிந்துண்ணுமவனான காபாலியைக் கண்ணெடுத்துப் பாராமையாலன்றோ! பாரோர்புகழும் பெருமைக்குப் பாத்ரமானார் என்பது, அவரது வைபவ மறிவார்க்கு நன்குணரலாகும்.

பரமபாகவதோத்தமனான அம்பரீஷன்திறத்துத் தனது தாமஸகுணத்திற் கநுகுணமான தேவதாந்தரத்தை யாஶ்ரயித்து தேவேந்த்ரனிடத்தில் விலைச்சென்ற தனது நிக்ரஹத்தினால் நிக

ரற்ற கர்வம் கொண்ட துர்வாஸஸ், நிர்நிபந்தநமாக க்ரோதத்தைச் செலுத்தி அடலாழியினா லல்லற்பட்டுக் காகாஸுரன் போலக் கண்டவிடமெல்லாம் சென்றும் புகலிடமின்றிப் புலம்பி அவனது அருளால் அருமருந்தன்ன வாணாளை யடைந்துய்ந்து போனான் என்பதும் அனைவரு மறிந்த விஷயமே. பெறாப் பெறான இப்பெருமைக்கு அம்பரீஷன் இடமானதும், மறந்தும் புறம் தொழாமையினாலென்பதை நாம் சொல்லவேண்டுமோ?

இவ்வம்பரீஷனது புறந்தொழாமையென்ற பொற்குணத்திற்குப்ரகாஶகமான அவனது வைபவத்தை ஸ்ரீ விஷ்ணு தர்மம் என்ற ஒப்புயர்வற்ற ஸாத்விக புராணமானது விரித்துரைக்கின்றது. அதன்படியாவது.

அம்பரீஷன், அமலனடியிணைகளில் அகில பரங்களையும் ஸமர்ப்பித்து அவனது ஆஜ்ஞாகைங்கர்யமாகிற செங்கோலை, நீதிநெறி தவறாமல் பகவதாராதந புத்தியினால் செலுத்திவரும் காலத்தில் மாற்பால் மனம் சுழிக்க, மண்ணுலகாட்சியில் மனங்கொள்ளாமல் ஒழிவில்கால மெல்லாமுடனாய் மன்னி, மாலடியாகிய முடியை, தனக்கு ஶிரோ பூஷணமாகக் கொள்ள ஒருப்பட்டு அதற்கிடைச் சுவரான புறஞ்சுவரைப் போக்கியருளவேண்டுமென்று மாயவன் மலரடியன்றி மற்றொன்றை நெஞ்சிற் கொள்ளாதே யோகத்திலிருந்துவரும்பொழுது ஸர்வேஶ்வரன், ஸர்வஜ்ஞனாகையால் அம்பரீஷனது மறந்தும் புறந்தொழாமையை அறிந்திருந்தாலும் மற்றுள்ளாரனைவரும் அறிந்து தந்நிஷ்டையுடையர்களாய் உய்யுமாறெண்ணி, ஆயிரங் கண்ணனழகிய உருக்கொண்டு வஜ்ராயுதத்தைக் கையிலேந்தி ஐராவதத்தின்மேலேறி விண்ணோர் புடைசூழ, அடியவர்க்கடியனான, அம்பரீஷன் முன் தோன்றி, உனக்கு வேண்டிய வரத்தை வேண்டிக்கொள்ளுமென்று சொல்ல, அம்பரீஷனும் தன்முன் தோன்றிய புரந்தரனுக்கு நல்வரவு கூறி அதிதி ஸத்காரம் செய்து, அமரர்க்கரசே; உம்மிடத்தில் நான் வேண்டிக்கொள்ளக்கூடிய வரம் ஒன்றுமில்லை. வேண்டுவோர்க்குக் கொடுத்து வீற்றிருக்கக் கடவீர். உம்மைக் கும்பிடுகிறேன். பகவதநுபவத்திற் கிடையூறு செய்யாமற் செல்லக்கடவீர் என்று சொல்ல, புருகூதனும், மறுபடியும் நிர்ப்பந்திக்க, அம்பரீஷனும் ஸர்வேஶ்வரனுடைய முகமலர்த்தியையே முக்கியமாகக்கொண்டு செய்யப்படும் தவம் என்னுடையது. உன்

னைப்போன்ற தேவர்களாலாகக்கூடிய தொன்றுமில்லை என்று சொல்லவே, இந்திரனுருக்கொண்ட பகவான், இன்னமும் இவருடைய புறந்தோழாமையை ப்ரகாசிக்கக் கருதி, அம்பரீஷனைக் குறித்து என்னை யவமதித்த உன்னை இப்போதே இந்த வஜ்ராயுதத்தினலடித்துக் கொன்றுவிடுகிறேன் பார் என்று பயமுறுத்த, அம்பரீஷனும், ஓ அமரர்கோவே! நீர் மூவுலகுக்கும் முடிசூடி மன்னனாய் விளங்குவது, எவனுடைய அநுக்ரஹத்தாலென்பதை யறியீரோ! அனேக தடவை அஸுரர்களால் நலிவுபட்டு எளிவரவுபட்டுத் திரியும் காலத்தில் பிறப்பிலியான தான் பல் பிறவிப்பெருமானாய் உனது அல்லல் தீர்த்தும், துர்மானத்தினடியாக ஏற்பட்ட துர்வாஸஸ்ஸின் சாபத்தால் துன்பத்தை யடைந்தகாலத்து ஆக்கரான அமரர்களுக்கும் அஸுரர்களுக்கும் அந்தர்யாமியாய் நின்றும் ஸுகுமாரமான தனது திருமேனியை கடினமான கமடரூபமாக்கிக் கடல்கடைந்து அம்ருதத்தை யளித்தும், உம்மையும் உம்மைப்போன்ற மற்றுள்ள தேவர்களையும் மற்றுமுள்ள சராசரங்களையும் ப்ரளயகாலத்தில் தம் திருவயிற்றில் வைத்து ரக்ஷித்துப்போந்த ஸர்வேஶ்வரனுடையக்ருபையினு லென்பதை நானறிவன். உம்மிடையாட்டமிங்கு செல்லாது. என்று சொல்லி மாதவனது மலரடிகளையே மனத்திற் கொண்டு முன்போலவே தவத்தைச் செய்யலாயினன். அதைக் கண்ணுற்ற பகவான் பரமாநந்த பரிதனுய் மெய்யடியார்க்கென்றே யமைந்த தமது மெய்யான மெய்யை, வென்றி வில்லும் தண்டும் வாளும் சக்கரமும் சங்கமும் பூந்தண்மாலைத் தண்டுழாயும் பொலிந்து, கநககிரியை யொத்த கருடன் மேல்படிந்த காளமேகம்போலக்காட்டக் கண்ட அம்பரிஷனும், ஆஹ்லாத ஶீதநேத்ராம்புः புளகீக்ருதகாத்ரவாந் — ஸதாபரகுணாவிஷ்டः த்ரஷ்டவ்யஸ்ஸர்வதேஹிபிः என்று சொல்லப்படுகிற நிலையை யுடையனுய் ஜிதம்தே என்று நிலத்தில் வேரற்ற மரம்போல் விழுந்து தண்டனிட்டு மனமுருகி வாயார வாழ்த்தி நின்றவளவில் எம்பெருமானும் அம்பரீஷனது அநந்யதைவத்தில் ஆழங்காற்பட்டு அவனது விருப்பத்தை வினவியருள, அரசனும் உள்ளுவாருள்ளித் தெல்லாமுடனிருந் தறியும் தேவரீருக்குத் தெரியாததொன்றுண்டோ? தேவரீர் திருவடிகளில் நித்யகைங்கர்யத்தைப் பண்ணுவதற்கிடையூறான "கம்பமதயானைக் கழுத்தகத்தின்மே லிருந் தின்பமரும் செல்வமு மிவ்வரசும் யான்

வேண்டேன்" ஆதலின் இத்தை யொழித்து ஏதேவை நிரயாஸ்தாதஸ்தாநஸ்ய பரமாத்மநः என்கிற நித்யவிபூதியில் தேவரீர் திருவடிகளில் நித்ய கைங்கர்யம் செய்துகொண்டிருக்கும்படி அநுக்ரஹிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ள, ஸர்வேஶ்வரனும், அகல்ஞாலம் முழுதுமுய்ய ஆர்த்தர்களான ஆழ்வார்களை இவ்விருள் தருமாஞாலத்தைத் தெருள்தருமா ஞாலமாக்கச் சிறிது காலமிங்கே வைத்தாற்போல ஆர்த்த ப்ரபந்நர்களிற் தலைவனான அம்பரீஷனைக் கொண்டும் தனது ஆராதநக்ரமம் முதலானவைகளை சதாசார்யோபதேச முகத்தால் உலகத்தில் பரவச்செய்யக் கருதி, அரசனை நோக்கி அரசே நம்முடைய அநுக்ரஹத்தால் ஸர்வஜ்ஞரான வஸிஷ்டர் உமக்கு ஸகலரஹஸ்யார்த்தங்களையு முபதேசிப்பர். அவ்வர்த்தங்களை இவ்வுலகி லெங்கும் பரவச்செய்து நமது ஆஜ்ஞாகைங்கர்யமாய் உமது வர்ணத்திற் குறுப்பான செங்கோலைச் செம்மையாகச் செலுத்திவரக் கடவீர்! என்று திருவாய்மலர்ந்தருளி தமது திருநாடுநோக்கி எழுந்தருளினார். இந்தப் புறம் தொழாமை என்ற அர்த்தமே பெரிய திருமந்திரத்தில் ப்ரதம பதத்தில் மத்யமாக்ஷரத்தால் அநந்யார்ஹ சேஷத்வம் என்ற அரும்பொருளாக அருளிச்செய்யப்பட்டது. ஸ ஏவ வாஸுதேவோஸள ஸாக்ஷாத் புருஷ உச்யதே—ஸ்த்ரீப்ராயமிதரத்ஸர்வம் ஜகத் ப்ரஹ்மபுரஸ்ஸரம் என்கிறபடி ஸர்வேஶ்வர னொருவனே புருஷோத்தமன். மற்றவையெல்லாம் அவனுக்குப் பரதந்தரங்கள் ஆகும். ஆதலால் அவனையொழிந்த மற்ற தேவதாந்தரங்களையோ? புறமதத்தவர்களையோ? நிந்திப்பது அவமதிப்பது முதலியனசெய்யாமல் உதாஸீநர்களாய் அவனையே உபாயோபேயமாகக் கருதி மற்றவர்களை மறந்தும் புறந்தொழா திருத்தலே ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு உத்தமமான குணமாகும்.

வர்த்தமாநங்கள்

வானமாமலை லக்ஷதீப மஹோத்ஸவம்

[ஸ்ரீ. உ. வே. தே. திருமலாச்சாரியார் வானமாமலை]

இந்த மஹோத்ஸவமானது திருவநந்தபுரத்தில் அறுபதாண்டாக ஆறு வருஷத்திற் கொருதடவை நடைபெற்று வருகின்றது.

அத்தையடியொற்றி பகவதாராதநம் பாகவதாராதநம் முதலியவைகளால் அந்நகருக்குத் தோள்தீண்டியான அரவிணையம்மான் நகரான இவ்வானமாமலையிலும் ஆறுண்டுக் கொருதடவையாக ஐம்பதாண்டாக நடந்து வருகின்றது.

அவ் வுத்ஸவம், இந்த ஸம்வத்ஸரம், தை அமாவாசை யன்று அதி விலக்ஷணமாக நடைபெற்றது. அன்று அரவிணையம்மானை தேவநாயகன், அஸாதாரணமான ஒரு கோட்டை எண்ணெய்க் காப்பு ஸஹஸ்ரஶங்காபிஷேகம் முதலியன கண்டருளி பொற்சரிகைமலிந்த புதுப் பீதாம்பரங்கள் பரிவாரங்களுடன் பாங்காக அணிந்தருளி, மூடநெய்பெய்த அக்காரவடிசிலமுது செய்து, அடியவர்க்கத்தை விநியோகித்து, அறுசுவை மலிந்த அலங்காரம் கண்டருளி, அடியவர்க ளமுது செய்யக் கண்டு களித்து, ஆதித்யன் மறைந்தது பொய்யெனப் பூவுலகோர் புகழ, அடியார்கள் அணி அணியாக தீபம் ஏற்ற, அவை யனைத்தையும் கண்களாரக்கண்டு தாமும், மங்கையும், கோதையும் அடைவே ஆஞ்சிறைப்புள், அன்னம், கிளி ஆகிய வாஹநங்களில்எழுந்தருளி வேதியர்கள் முன்னும் பின்னுமாக வேதமோத வீதியெல்லாம் வலம் வந்து சந்நிதிக் கெழுந்தருளினார்.

திருவல்லிக்கேணி

ஆனந்த விமாந மஹா ஸம்ப்ரோக்ஷணம்

[பத்திராதிபர்]

ஷை ஸம்ப்ரோக்ஷணம் நளது வருஷம் பங்குனிமாதம் 2-ந் தேதி உபக்ரமித்து 8-ந் தேதி நடைபெற்றது.

அநேக திவ்ய தேசங்களிலிருந்து அனேக ஸ்ரீ வைஷ்ணவர்கள் எழுந்தருளி ஸேவை ஸாதித்தார்கள். இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்தியை ஸேவிக்கப்பெற்றார் பொலிக பொலிக பொலிக என்று ஆழ்வாரைப்போலே மங்களாஸாஸநபரர்களாவார்கள் என்பதில் ஐயமில்லை. ஷை ஸம்ப்ரோக்ஷணத்தில் அர்ச்சர்கள் யதாவிதி ஹோமங்கள் முதலான க்ரியைகளை அழகாக நடத்தினார்கள். அத்யாபகர்கள், ஆழ்வார்க ளருளிச்செய்த அமுதிலுமினிய செஞ்சொற் கவிகளா லமையப்பெற்ற திவ்ய ப்ரபந்தங்களை, கண்டார் கண்களும் காதுகளும் களிப்புறுமாறு அணிஅணியாக வீற்றிருந்து ஏககண்டர்களாய், பெறுமிடறு செய்து ஸேவித்த பெருமையைக் கண்டும் கேட்டும் அநுபவித்து ஆனந்திக்கவேண்டுமே யல்லாமல் பாசுரமிட்டுப் பகரவும் எழுதவு மியலாது. மற்றொரு பக்கம் ருக்யஜுஸ்ஸாமம் என்கிற வேதங்களினொலி கடல்போல் முழங்கப்பட்டது. ஒருபக்கம் பகவத் விஷயம், ஸ்ரீ பாஷ்யம், ஸ்ரீ ராமாயணம் முதலான க்ரந்தங்களை வரிசைவரிசையாக ஸ்ரீகோசங்களை வைத்துக்கொண்டு பாராயணம் செய்த அழகு கண்டார் கண்களைக் களிக்க செய்தது. இவ்வாறே பகலிலும் இரவிலும் நடந்தது. ஸாயங்காலம், திருநாராயணபுரம் திருமலை அணந்தாண்பிள்ளை ஸ்ரீ உ. வே. கோவிந்தப்பங்கார் ஸ்வாமி ஸ்ரீரங்கம் ஸ்ரீ உ. வே. சடகோபாசாரியர் ஸ்வாமி திருமழிசை அப்பனய்யன் ஸ்ரீ. உ. வே. ராமாநுஜாசார்ய ஸ்வாமி பெருமாள்கோவில் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கரா சாரியர் ஸ்வாமி ஆகிய இவர்களின் உபந்யாஸங்கள் நடைபெற்றன. பக்த ஜநங்கள் பெருந்திரளாகக்கேட்டுப் பரமானந்த மடைந்தார்கள். இவ்வாறு ஷை ஸம்ப்ரோக்ஷணைக்கு எழுந்தருளிய ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஸந்நிதியிலும், வானமாமலை மடத்திலும் விசேஷமாக ததீயாராதனை நடத்தப்பட்டது. மற்றும் ஸேவார்த்திகளாக வந்திருக்கும் ப்ராஹ்மணர்களுக்கு ஆங்காங்கு ஸமாராதநம் நடைபெற்றது. இதெல்லாம் ஒருபுறமிருக்க, புஷ்கரிணியைச் சுற்றிப் பசுக்கள் கட்டப்பட்டு அவைகளுக்கு வைக்கோலளித்த அழகு மிகவும் போற்றற்குரியது. இவ்வாறு அதி ஸம்ப்ரமமாக நடக்கும் நல்ல காரியங்களுக்கு ஶ்ரேயாம்ஸி பஹுவிக்நாநி என்கிறபடி இடையூறுகள் ஏற்படுவதும் ஸஹஜமே. அவ்வாறு ஏற்பட்ட இடையூறுக்கும் இடையூறு ஏற்பட்டு ஷை ஸம்ப்ரோக்ஷணம் நிறைவேறியது, பார்த்தனுகன்றருளிய பார்த்தஸாரதியின் கருணையினாலென்பதைப் பகரவும் வேண்டுமோ? ஷை கோஷ்டியிலந்வயித்த உபய வேதாதி பாராயண ஸ்வாமிகளுக்கு வானமாமலை மடத்தில் வைத்து பெருமாள்கோவில் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார், அட்வகேட். ஸ்ரீமான் சம்பகேசய்யங்கார், அப்பா அண்ட் கம்பெனி நாயுடு அவர்கள் முதலானவர்களை முன்னிட்டு அவரவர்கள் வந்து போவதற்கேற்படும்செலவுகளோடு கூட யதோசிதம் ஸம்பாவனையும் ஸமர்ப்பிக்கப்பட்டது. இது இவ்வளவிற்கும் காரணபூதராய் தர்மகர்த்தாக்களிலொருவராய் பகவத் பாகவதாசார்ய கைங்கர்ய துரந்தரராயிருக்கும் ராவ்பகதூர்

ஸ்ரீமான் வேலூர் ரங்கநாதம் செட்டியாரவர்கள் பல்லாண்டு பல்லாண்டாக விருந்து ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமியின் ஸந்நிதி கைங்கர்யத்தைக் குறைவற நடத்திவரும்படி எல்லாம் வல்ல இறைவனான ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி இன்னருள்புரியவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

இவ்வாறு நடந்தேறிய மஹா ஸம்ப்ரோக்ஷணையில் அந்வயித்த உள்ளூர் அத்யாபகர்களுக்கு ஏதோ சிறிது காரணத்தால் சம்பாவனை ஸமர்ப்பிக்கப்படவில்லை. இவ்வளவு பெரிய கோஷ்டியில் அந்வயித்தவர்களிற் சிலருக்கு ஸம்பாவனை ஸமர்ப்பிக்கப்படாதது மிகவும் குறைவாமென்று கருதி தர்மகர்த்தாக்களில் ஒருவராகிய ஸ்ரீ உ. வே. வை. மு. லக்ஷ்மீந்ருஸிம்ஹமாசாரியர் ஸ்வாமி உள்ளூர் அத்யாபகர்களை எழுந்தருளச்செய்து திருப்பரிவட்டத்துடன் யதோசிதம் ஸம்பாவனையும் ஸமர்ப்பித்தார் என்று தெரியவருகிறது. இது மிகவும் போற்றற்குரியதே. ஆயினும் இவ்விரு தர்மகர்த்தர்களும் இப்பெரிய கார்யங்களில் ஒன்றாய்க்கலந்து நடத்தி யிருந்தால் மிகவும் அழகாயிருக்குமென்பதை அடியேன் போல்வார்களால் அறிவிக்காமலிருக்க முடியவில்லை இனிமேலாவது தர்மகர்த்தர்கள் மூவரும் ஒன்றாய்ச்சேர்ந்து கைங்கர்யங்களை நடத்திவருமாறு பார்த்தஸாரதி க்ருபை பண்ண வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

ஸ்ரீரங்கம் சித்திரை 3. (15-4-37) கோடைத்திருநாள் 7—(19-4-37) ஸ்ரீராமநவமி, 13—(25-4-37) சித்திராபூர்ணிமை, 16—(28-4-37) திருமுளை, 21—(3-5-37) கருடசேவை, 25—7-5-37) வண்டலூர்ச்சப்பரம், 26—(8-5-37) திருத்தேர் ரேவதி, 27—(9-5-37) சாற்றுமுறை 10-ஆடும் பல்லக்கு—வைகாசி, 4—(17-5-37) வஸந்தோத்ஸவாரம்பம் 12—(25-5-37) சாற்றுமுறை.

ஸ்ரீ பெரும்புதூர் சித்திரை, 4—(16-4-37) உடைவர் சாற்றுமுறை —(17-4-37) முதலியாண்டான் சாற்றுமுறை.

திருநாங்கூர் சித்திரை, 1—திரு நாராயணப்பெருமாள் உத்ஸவ ஆரம்பம், 7-திருவள்ளூர் கருடசேவை 13-திருமாலிருஞ்சோலைமலை அழகர் வைகைக்கு எழுந்தருளும் சித்திராபூர்ணிமை உத்ஸவம், 15-திருவல்லிக்கேணி பார்த்தஸாரதிப் பெருமாள் கருடசேவை, 19-திருத்தேர், வைகாசி, 4-பவளவண்ணன் உத்ஸவ ஆரம்பம், 12-பெருமாள்கோவில் தேவப்பெருமாள் கருடஸேவை,

இக்கிரந்தம் ஸ்ரீ மணவாளமாமுனிகளின் திருப்பேரனாரான அழகிய மணவாளப்பெருமாள் நாயனார், ஆழ்வார் விஷயமாக அருளிச்செய்தது ஆகும். இந்தக்ரந்தத்திற்கு திருமழிசை அண்ணாப்பங்கார்ஸ்வாமியருளிச்செய்த ஸம்ஸ்க்ருதபாஷாமயமான வ்யாக்யானமொன்றிருப்பதாகத்தெரியவருகிறது. இன்னமும் ஸ்ரீ திருமலை காண்டூர் ரெங்காசாரியஸ்வாமி திருக்குமாரரான கவிவல்லப பாஷ்யகாராசாரியரால் அநுக்கிரஹிக்கப்பட்ட தாளகோஶமொன்றில் ஜகந்நாதாசார்ய ஸ்வாமியினால் அநுக்ரஹிக்கப்பட்டதாக ஒரு ஸம்ஸ்க்ருத வ்யாக்யானமொன்று தெலுங்கு லிபியில் கிடைத்திருக்கிறது. மேலும் கார்க்ய ஸ்ரீ. வெங்கடாசார்ய ஸ்வாமியினாலநுக்ரஹிக்கப்பட்ட ஸம்ஸ்க்ருத வ்யாக்யாநமொன்று ஓரியண்டல் லைபிரியில் கிடைக்கப்பெற்றேன். இவைகளெல்லாம் ஸம்ஸ்க்ருத பாஷாமயமாயிருப்பதால் ஆழ்வார் விஷயமான இந்த நக்ஷத்திரமாலிகை எல்லோருக்கும் உத்தேஶ்யமானமை பற்றி அதனர்த்தத்தை அனைவரும் அறிந்துய்யுமாறு தமிழ்பாஷையில் எளிய நடையில் பெருமாள் கோவில் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசார்யரால் அநுக்ரஹிக்கப்படும் வ்யாக்யாநத்துடன் கூடிய சீக்கிரம் வெளிவரும்

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தி

இப்பத்ரிகையின் சென்றவருஷத்து ஸஞ்சிகைகள் 12-ம் ஒன்றாகப் பயிண்டு செய்யப்பட்டிருக்கின்றன. வேண்டுவோர்கள் ரூ. 1—12—0 மணியார்டர்செய்தால் புஸ்தகம் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

ஸ்ரீரங்கராஜஸ்தவம்

இந்தக்ரந்தம் பரமகாருணிகரான ஸ்ரீ பராஶரபட்டரருளிச் செய்தது. இது பெருமாள்கோவில் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசார்யரால் அநுக்ரஹிக்கப்பட்ட தத்வார்த்த சிந்தாமணி என்கிற வ்யாக்யாநத்துடன் அச்சாய் வெளிவந்திருக்கின்றது. சில ப்ரதிகளே உள்ளன. வேண்டுமவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதுக.

546 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 2—8—0

S. R. S. வைஜயந்தீ ஆபீஸ்

24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

பாலபோத ரஸாயநம்

இது ஸம்ஸ்க்ருத பாஷையைப் பரிசயம்பண்ண விரும்புமவர்களுக்கு இன்றியமையாதது. இதில்கண்ட ஸம்ஸ்க்ருதபதங்களுக்கு தமிழில் அர்த்தமெழுதப்பட்டிருக்கின்றது. ஆதலின் ஆசார்யாபேக்ஷை யன்றியிலேயே அதிஸுலபமாய் ஸம்ஸ்க்ருத பாஷையை அறிந்துகொள்ள ஆவலுடையார்க்கு ரஸாயநம் போன்றது க்ரந்தலிபி. இதன்விலை 0—2—0

தர்க்க ஸர்வஸ்வம்

இது, ஸம்ஸ்க்ருத பாஷையில் கிஞ்சித் பரிசயமுடையவர்களும் தர்க்கஶாஸ்த்ரத்தின் தாத்பர்யத்தை ஸுலபமாய்த் தெரிந்துகொள்ள உபயோகமாயிருக்கும். நாகரலிபியில் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை 0—8—0

ஸதாசார்ய, ஸூக்திரக்ஷா

இது, நமது ஸம்ப்ரதாயத்தின் உண்மைப்பொருளை அறிவிக்குமதாயிருக்கும். ஸம்ஸ்க்ருத பாஷையிலும் தமிழிலும் எழுதப்பட்டுள்ளது.

ஸம்ஸ்க்ருதபாஷை க்ரந்த லிபியிலும் தமிழ் தமிழிலும் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை 0—6—0

S. R. S. வைஜயந்தீ ஆபீஸ்
24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

மெய்யான ஜோதிஷம்

ப்ரஶ்நம் அல்லது ஜாதகம் அனுப்பிக் கேள்வி 1-க்கு ரூ. 1-0-0 வீதம் மணியார்டர்செய்யவும். தமிழ், ஸம்ஸ்க்ருதம், இங்கிலீஷ், ஹிந்தி, தெலுங்கு பாஷைகளில் பதில் தெரிவிக்கப்படும். ஜாதகங்கள், தமிழில் குறித்தனுப்புவதற்கு ரூ. 3—4—0

விலாசத்திற்குக் கடிதமெழுதவும் பொய்யானால் பணம் வாபீசு செய்யப்படும்.

வடகரை K. K. A. ராமாயணம் கிருஷ்ணய்யங்கார்
ஸ்ரீ க்ருஷ்ண ஜோதிஷாலயம்
ஸ்ரீவில்லிபுத்தூர் S. I. R.

**अस्मादृशामपकृतौ चिरदीक्षितानामह्नाय देवि ! दयते यदसौ मुकुन्दः ।
तन्निश्चितं नियमितस्तव मौलिदाम्ना तन्त्रीनिनादमधुरैश्च गिरां निगुम्भैः ॥**

அஸ்மாத்ருசாமபக்ருதௌ சிரதீக்ஷிதாநாம்
அஹ்நாய தேவி தயதே யதஸௌ முகுந்தஃ,
தந்நிஶ்சிதம் நியமிதஸ் தவ மௌலிதாம்நா
தந்த்ரீநிநாதமதுரைஶ்ச கிராம் நிகும்பைஃ.

[हे देवि! अपकृतौ चिरदीक्षितानाम् अस्मादृशाम् (अपि) असौ मुकुन्दः अह्नाय दयते इतियत् तत् तव मौलिदाम्ना तन्त्रीनिनादमधुरैः गिरां निगुम्भैश्च नियमितस्सन् (दयते) इति निश्चितम्]

हे गोदे! भगवद्भागवतापचारेषु चिरादेव बद्धदीक्षाणाम् अस्मादृशानां क्षुद्राणामपि विषये भगवान् अनुग्रहमेव करोति न तु निग्रहम् इत्यत्र किं कारणं स्यादिति विमर्शे कृते एवं निश्चितम्। कथमितिचेत्—स हि भगवान् तव शिरोभूषणभूतया पुष्पमालिकया परमभोग्याभिः श्रीसूक्तिभिश्च वशीकृतोभूत् ; वयं खलु तव (गोदादेव्याः) प्रजास्स्मः । तव सर्वथा वशंवदो भगवान् अस्मादृशाननुगृह्णातीत्येतत् युक्तमेवेति निश्चितमिति भावः ॥

(அ.) ஹே தேவி! அபக்ருதௌ சிரதீக்ஷிதாநாம் அஸ்மாத்ருசாம் (அபி) அஸௌ முகுந்தஃ அஹ்நாய தயதே இதியத், தத், தவ மௌலிதாம்நா தந்த்ரீநிநாதமதுரைஃ கிராம் நிகும்பைஶ்ச நியமிதஸ்ஸந்—இதி நிஶ்சிதம்.

கோதாய்! பகவத் பாகவதாபசாரங்களில் நெடுநாளாகவே ஊன்றியிருக்கின்ற என்போல்வார் விஷயத்திலும் எம்பெருமான் சடக்கென அருள்செய்கின்றானே! இதற்கு யாது காரணம்? என்று ஆராயுமிடத்து, இங்ஙனே அறுதியிடப்படுகின்றது; நீ சூடிக்கொடுத்த பூமாலையினாலும் பாடிக்கொடுத்த பாமாலையினாலும் அப்பெருமான் வஶீக்ருதனாய் விட்டபடியாலே என்று நிச்சயிக்கப்பட்டது.

"அன்னவயற் புதுவை யாண்டாள் அரங்கற்குப் பன்னு திருப்பாவைப் பல்பதியம், இன்னிசையால் பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை, பூமாலை சூடிக்கொடுத்தாளைச் சொல்லு." என்கிற தனியனைப் பெரும்பாலும் அடியொற்றி இந்த ச்லோகத்தின் உத்தரார்த்தம் அமைந்துளது. ஆண்டாள் இரண்டுவகையான மாலைகளினால் எம்பெருமானைக் கட்டுப்படுத்தினள் என்கிறது.

'சூடிக்கொடுத்த நாச்சியார்' என்று தனக்கு ப்ரஸித்தமாக வழங்கும் திருநாமத்திற்கு உரிய ஐதிஹ்யத்தின் படியும் "स्वोच्छिष्टायां स्रजि निगलितं या बलात्कृत्य भुङ्क्ते गोदा— ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகலிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே கோதா." என்று பட்டர் அருளிச்செய்தபடியும் தான் சூடிக்களைந்த பூமாலையைத் தந்தும், தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல்மாலைகளைப் பாடித்தந்தும்—ஆக இவ்விருவகையான மாலைகளாலே எம்பெருமானை உகப்பித்து, அவனைத் தன்னளவில் ஸர்வாத்மநா விதேயனாக ஆண்டாள் ஆக்கிக்கொண்டாள்; நம்போன்றவர்கள் யாவரும் பகவத் பாகவதாபசாரங்களில் நெடுநாளாகவே ஒருப்பட்டிருந்தும், ஆண்டாளுடைய பரிகரமாகையினாலே நம் குற்றங்களைக் கணிசியாமல் ஆண்டாள் பக்கலிலுள்ள அன்பே காரணமாக நம்மிடத்திலும் எம்பெருமான் க்ருபைபண்ணும்படியாகின்றது, என்றருளிச் செய்தாராயிற்று. கொடிய பாவிகளான நாமும், ஆண்டாளுடைய அபிமாநத்திலே ஒதுங்கப்பெறில் எம்பெருமானுடைய திருவருளுக்குத் தவறாது இலக்காகலாம் என்பதும் இதில் ஸூசிதம்.

அபக்ருதேள = இங்குள்ள ஏகவசநம் ஜாத்யேகவசநமாய் அபசார ராஶியைச் சொல்லக்கடவது. இன்னார் விஷயத்தில் அபசாரப்பட்டோமென்று சொல்லாவிடினும் பகவத் பாகவத விஷயங்களிலே என்பது அர்த்தாத் ஸித்தமாகும். [சிரதீக்ஷிதாநாம்] அனேக ஜந்ம பரம்பரைகளாக இப்படியே நாம் அபசாரப்பட்டு வருகிறோமென்று காட்டினபடி. [அஹ்நாய] இது அவ்யயம்; சீக்கிரமாக என்பது பொருள். [தந்த்ரீநிநாதமதுரை:] வீணையின் நரம்பில்நின்றும் தோன்றிய இன்னிசைபோலே மதுரங்கள், ஆண்டாளுடைய திவ்ய ஸூக்திகள் என்க. "முன்னல் யாழ்பயில்நூல் நரம்பின் முதிர் சுவையே" என்று திருவாய்மொழியிலும் இசையின் இனிமைக்குத் தந்த்ரீநிநாதத்தை ஆழ்வார் எடுத்துக் கூறினமை காண்க. (௫)

शोणाऽधरेऽपि कुचयोरपि तुङ्गभद्रा वाचां प्रवाहविभवेऽपि सरस्वती त्वम्।
अप्राकृतैरपि रसै र्विरजास्स्वभावात् गोदापि देवि कमितुर्ननु नर्मदासि॥

சோணாதரேபி குசயோரபி துங்கபத்ரா
வாசாம் ப்ரவாஹவிபவேபி ஸரஸ்வதீ த்வம்,

அப்ராக்ருதைரபி ரஸைர் விரஜா: ஸ்வபாவாத்
கோதாபி தேவி கமிதுர் நநு நர்மதாஸி.

[ननु देवि! (गोदे) त्वम् अधरे शोणापि कुचयोः तुङ्गभद्रा असि; वाचां प्रवाहविभवे सरस्वत्यपि अप्राकृतैः रसैः विरजा असि; स्वभावात् गोदा सत्यपि कमितुः (भगवतः) नर्मदा असि॥]

अनेकनदीस्वरूपत्वं गोदाया अत्रोच्यते। विरोधाभासालङ्कार प्रक्रिया चात्र परमरमणीया। देवि त्वं शोणा सत्यपि तुङ्गभद्रा असि इति विरोधः। अधरे शोणा कुचयोः तुङ्गभद्रा इति वस्तुस्थितिः। ताम्बूलचर्वणादिसंस्कारं विनापि स्वत एव रक्तवर्णेन अधरेण युक्ता; कुचयोः भगवन्नित्यसंश्लेषभूम्ना तुङ्गैः भद्रैर्विशिष्टा चेति विरोधपरिहारः। सरस्वती सत्यपि विरजा असीति विरोधः। दिव्यसूक्तीनां प्रवाहविभवे सरस्वतीतुल्या; अप्राकृतैः रसैः—भगवद्भक्तिभिः विरजाः रजोगुणरहिता, इति विरोध परिहारः। (विरोधोन्नयनसमये विरजेत्यविसर्गं पदम्। तत्परिहारसमये विरजाः इति सविसर्गं पदम्। एतादृशस्थलेषु सकारद्वित्वाभावश्च शास्त्रविदनुमतः।) स्वभावात् गोदा सत्यपि—गोदावरीनदी सत्यपि, नर्मदा भवसीति विरोधः। परिहारस्तु, नाम्ना गोदा त्वम्; भर्तुः नर्मदा—नर्माणि ददातीति नर्मदा; नर्मक्रीडाप्रदायिनीत्यर्थः। परमपुरुषेण सह शृङ्गारचेष्टितानुभवशालिनीति यावत्।

நநு தேவி! த்வம் அதரே சோணாஅபி, குசயோ: துங்கபத்ரா வாசாம் ப்ரவாஹவிபவே ஸரஸ்வதீஅபி, அப்ராக்ருதை: ரஸை: விரஜா அஸி; ஸ்வபாவாத் கோதாஅபி, கமிது: நர்மதா அஸி.

ஆண்டாளே! நீ சோணாநதியாயிருக்கச் செய்தேயும் துங்கபத்ரா நதியாயுமிருக்கின்றாய்: ஸரஸ்வதீ நதியாயிருக்கச் செய்தேயும் விரஜாநதியாயுமிருக்கின்றாய்; இயற்கையில் கோதையாக [கோதாவரீ நதியாக] இருக்கச் செய்தேயும் நர்மதா நதியாக இருக்கின்றாய் என்று விரோதம் தோன்றக் கூறி, அதன் பரிஹாரமும் வெகு அழகாகச் செய்யப்படுகின்றது. எங்ஙனே யென்னில்? சோணா என்றது சிவந்ததென்றபடி. [அதரே சோணா] "கோவை வாயாள்" என்னுமாபோலே பழுத்த உதடு உடையவள் என்றபடி. [குசயோ: துங்கபத்ரா] "கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொருநாள், தங்குமேல் என்னாவி தங்கும்" என்றும்,

"கொம்மை முலைகளிடர்தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல், இம்மைப் பிறவி செய்யாதே இனிப்போய்ச் செய்யும் தவந்தானென்?" என்றும் தான் அருளிச் செய்தபடியே திருமுலைத் தடங்களில் எம்பெருமானுடைய நித்ய ஸம்ச்லேஷமாகிற பேற்றைப் பெற்றதனால் சிறந்த சேம முடையவள் என்றபடி. திருமுலைகளுக்கு உத்துங்கமான க்ஷேமமாவது எம்பெருமானுடைய நித்யஸம்ச்லேஷமேயாகும். [வாசாம் இத்யாதி] ஆண்டாளுடைய திவ்ய ஸூக்திகளை நோக்குமிடத்து ஸாக்ஷாத் ஸரஸ்வதியின் ஆவிர்ப்பாவமே யிவள் என்னலாம்படியிருக்கும். ஸரஸ்வதீ நதியாயிருக்கச் செய்தேயும் விரஜையாயிருக்கின்றாளென்று விரோதம். பரிஹாரமெங்ஙனே யென்னில்? இப்போது ஸரஸ்வதீ சப்தத்தை நதீபரமாகக் கொள்ளாமல் வாக்கின் அதிஷ்டாந தேவதாபரமாக்கக்கொள்ளவேணும். விரஜாஸ்வபாவாத் என்ற விடத்தில் 'விரஜா:' என்று விஸர்க்காந்தமாகப் பதவிபாகம் கொள்ளவேணும். **विगतं रजः यस्यास्सा**—விகதம் ரஜ: யஸ்யாஸ்ஸா விரஜா:, ரஜோகுண மில்லாதவள் என்றபடி. தமோகுணராஹித்யமும் இதனால் அர்த்த ஸித்தம். சுத்த ஸத்வகுணமே வடிவெடுத்திருப்பவள் என்பது கருத்து. [ஸ்வபாவாத்] திருத்துழாய் பரிமளத்தோடே அங்குரிக்குமாபோலே ஸத்வகுணந் தன்னோடே திருவவதரித்தவள் என்றவாறு. ஸ்வபாவாத் என்கிற விதனை மேலோடே கூட்டியுரைக்கவுமாம்: ஸ்வபாவாத் கோதா என்றாகக் கடவது. விரோதோத்பாவந ஸமயத்தில் 'விரஜா' என்று அவிஸர்க்கமாகவும், விரோதபரிஹார ஸமயத்தில் 'விரஜா:' என்று ஸவிஸர்க்கமாகவும் பதவிபாகம் செய்வதற்குப் பாங்காகச் சொல் தொடை அமைக்கப்பட்டிருக்கின்றது. விரஜா பதத்திற்கு அடுத்தபடியாக க வ தவெத)ாதிவண்டாதியான பதங்கள் பிரயோகிக்கப்பட்டிருந்தால் இங்ஙனே இருவகையாகவும் பதவிபாகம் செய்துகொள்ள அமையாது. இங்கு ஸகாராதியான பதம் (ஸ்வபாவாத்) பிரயோகிக்கப்பட்டிருத்தலால் ஒலி வடிவத்தில் விஸர்க்கம் உள்ளதுபோலவும் இல்லாததுபோலவும் ஆகின்றது.

[அப்ராக்ருதை: ரஸை: விரஜா:] ரஸமென்பது இங்கே ச்லிஷ்டம். தீர்த்தத்திற்கும் ஆசைக்கும் பெயர். விரஜாநதியானது அப்ராக்ருதமான தீர்த்தங்களினால் நிறைந்தது. ஆண்டாள்

ப்ராக்ருத பதார்த்த கோசரமல்லாத [பகவதேக விஷயகமான] பல்வகை விருப்பங்களினால் அநவத்யை என்பது இங்கு விவக்ஷிதம்.

[கோதா அபி நர்மதா அஸி] கோதா என்று கோதாவரிக்கும் பெயராதலால் கோதாவரீ நதியாயிருக்கச் செய்தேயும் நர்மதாநதியாக இருக்கின்றாய் என்பது விரோதம். பரிஹாரம் எங்ஙனே யென்னில்: கோதா—கோதை யென்னுந் திருநாமமுடையையாயிருக்கின்றாய்; கமிது: நர்மதா அஸி—(**नर्माणि ददातीति नर्मदा**)—நர்மாணி ததாதீதி நர்மதா) என்று வ்யுத்பத்தியாகக் கடவது. 'நர்ம' என்று ச்ருங்கார லீலைக்கும் பரிஹாஸோக்திக்கும் பெயர். எம்பெருமானுக்கு ச்ருங்கார லீலைகளைக் கொடுப்பவள் என்றும், ப்ரணய ஸமாதியிலே அவன்றன்னோடு பரிஹாஸோக்திகளைப் பேசுமவள் என்றும் கொள்க.

இந்த ச்லோகத்தில் அபிசப்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கும் நிலைமையை நோக்குமிடத்து, சோணா அபி துங்கபத்ரா; துங்கபத்ரா அபி ஸரஸ்வதீ; ஸரஸ்வத்யபி விரஜா; விரஜா அபி கோதா; கோதா அபி நர்மதா என்றிங்ஙனே வாக்ய விந்யாஸம் ஸ்வாமிக்கு விவக்ஷிதமென்று கொள்ளலாம்.

இதில் விரோதாபாஸம், உல்லேகம், ச்லேஷம் என்று மலங்காரங்கள் ஸங்கீர்ணங்களாயிருக்கு மழகு நோக்கத்தக்கது.....(கூ)

वल्मीकतः श्रवणतो वसुधात्मनस्ते जातो बभूव स मुनिः कविसार्वभौमः
गोदे ! किमद्भुतमिदं यदमी स्वदन्ते वक्त्रारविन्दमकरन्दनिभाः प्रबन्धाः॥

வல்மீகத: ச்ரவணதோ வஸுதாத்மநஸ் தே
ஜாதோ பபூவ ஸ முநி: கவி ஸார்வபௌம:,
கோதே! கிமத்புதமிதம் யதமீ ஸ்வதந்தே
வக்த்ராரவிந்த மகரந்தநிபா: ப்ரபந்தா:.

[गोदे ! वसुधात्मनः ते श्रवणतः वल्मीकतः जातः स मुनिः (वाल्मीकिः) कविसार्वभौमो बभूव ; ते वक्त्रारविन्दमकरन्दनिभाः अमी प्रबन्धाः स्वदन्ते इति यत् इदं अद्भुतं किम्]

"श्रोत्रं ह्येतत्पृथिव्याः ; यद्वल्मीकः" इति तैत्तिरीययजुर्ब्राह्मणे आम्नायते । भूदेव्याः श्रोत्रस्थानीयत्वं वल्मीकस्य प्रोक्तम् । गोदादेवी सेयं भूदेव्यंशभूतेति साक्षाद्भूमित्वेनाध्यवसीयते । एवञ्च अस्याः श्रोत्रत्वं

वल्मीकस्य सिद्धम्। वल्मीकादुत्पन्नो वाल्मीकिमुनिः गोदायाः श्रोत्रादुत्पन्न इति च सिद्धम्। तस्य मुनेः कविचक्रवर्तित्वं जगत्प्रसिद्धम्। तदीयः श्रीरामायणप्रबन्धो मधुर इति च प्रसिद्धम्। गोदायाः श्रोत्राज्जातस्य तस्यैव प्रबन्धस्य माधुर्ये सर्वसंप्रतिपन्ने किंपुनर्वक्तव्यमस्याः मुखारविन्दसंभूतमकरन्दनिभदिव्यप्रबन्धमाधुर्यविषये इति श्रीगोदासूक्तिमाधुर्यातिशयस्य श्रीरामायणतोऽप्यतिशयितत्वं सचमत्कारं प्रतिपादितमिह।

(அந்) கோதே! வஸுதாத்மந: தே ச்ரவணத: வல்மீகத: ஜாத: ஸ: முநி: கவிஸார்வபௌம: பபூவ; (தே) வக்த்ராரவிந்த மகரந்த நிபா: அமீ ப்ரபந்தா: ஸ்வதந்தே இதி யத் இதம் அத்புதம் கிம்?.

ஆண்டாளே! பூமிஸ்வரூபையா யிருக்கின்ற உம்முடைய கர்ணஸ்தாநீயமான புற்றில்நின்றும் தோன்றிய அந்த வால்மீகி முனிவர் கவிசக்ரவர்த்தி யென்று ப்ரஸித்தி பெற்றார். (அவருடைய பிரபந்தமாகிய ஸ்ரீ ராமாயணம், உலகுக்கெல்லாம் போக்யமாக இருக்கின்றது.) உம்முடைய காதுக் குரும்பியென்னலாம்படியான அம்முனிவரின் வாக்கே அத்தனை மதுரமாயிருக்கும்போது, உம்முடைய ஸாக்ஷாத் திருவாக்கில் நின்றே தோன்றிய ஸ்ரீ ஸூக்திகள் மதுரங்களா யிருக்கின்றன வென்பதில் என்ன ஆச்சரியம். உமது திருவாய் அரவிந்தம்போன்றது; அரவிந்தத்தில் மகரந்தம் பெருகுவது ஸஹஜமே யாதலால் உமது திவ்ய ப்ரபந்தங்களுக்குள்ள மாதுர்யம் ஒருகாலும் வியக்கத்தக்கதன்று.

தைத்திரீய யஜுர்ப்ராஹ்மணத்தில் "ச்ரோத்ரம் வா ஏதத் ப்ருதிவ்யா: யத்வல்மீக:" என்று ஓதப்பட்டுளது. இதன் பொருளாவது—நிலத்தில் தென்படும் புற்றானது பூமிதேவியின் காது என்றபடி. ஆண்டாள் பூமிப்பிராட்டியின் அம்ஸமாதலால் பூமியென்றே கொள்ளத் தகுதியுடையவள். ஆகவே, புற்று இவளுடைய காதாக ஆயிற்று. புற்றில் நின்றும் தோன்றிய வால்மீகிமுனிவர் ஆண்டாளுடைய காதில் நின்றும் தோன்றினவரென்று சொல்வதற்கு உபபத்தி ஏற்பட்டுவிட்டது. இங்ஙனம் உமது காதில்நின்றும் தோன்றிய ஒருவர், கவியரசர் என்று உலகமெங்கும் புகழ்பெற்றிருப்பதும், அவருடைய பிரபந்தமாகிய ஸ்ரீராமாயணம் மதுரமென்று புகழ்பெற்றிருப்பதும் அப

லபிக்கவொண்ணாத விஷயங்களாம். உலகத்தில், ஒருவருடைய காதில்நின்றுமுண்டான வஸ்துவுக்கு இவ்வளவு அதிஶயம் ஏற்படுவது அப்ரஸித்தம். உம்முடைய காதின்பெருமை லோக விலக்ஷணமாகவுள்ளது. காதினுடைய பெருமையே இதுவானால் திருவாக்கின் பெருமையைப் பற்றிப் பேசத்தானாவதுண்டோ? உமது திருவாயோ! அரவிந்தம்; அரவிந்தத்தில் மகரந்தம் ஸ்ரவிப்பது ஸஹஜமே யாதலால், மகரந்தம்போன்ற திவ்ய ப்ரபந்தங்கள் உமது திருவாக்கில் நின்றும் தோன்றின வென்பதில் வியப்பு ஒன்றுமில்லை கிடீர். ஸ்ரீ ராமாயணத்திற்கு ஏற்பட்டிருக்கும் போக்யதையைப்பற்றி வியக்கவேண்டுமே யல்லது, உம்முடைய திவ்யப் பிரபந்தங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற போக்யதையைப் பற்றிச் சிறிதும் வியக்கவேண்டிய ப்ரஸக்தியில்லை என்பது உள்ளுறை. இதனால், வால்மீகிகோகிலத்தின் சொற்களினும் கிளிமொழிக்கோதையின் சொற்களே பரம மதுரங்கள் என்பது தெறுவிக்கப்பட்டது. (7)

भोक्तुं तव प्रियतमं भवतीव गोदे! भक्तिं निजां प्रणयभावनया गृणन्तः।
उच्चावचैर्विरहसंगमजैरुदन्तैः शृङ्गारयन्ति हृदयं गुरवस्त्वदीयाः॥ ८॥

போக்தும் தவ ப்ரியதமம் பவதீவ கோதே!
பக்திம் நிஜாம் ப்ரணயபாவநயா க்ருணந்த
உச்சாவசைர் விரஹஸங்கமஜை ருதந்தை:,
ஶ்ருங்காரயந்தி ஹ்ருதயம் குரவஸ் த்வதீயா

हे गोदे! त्वदीयाः गुरवः तव प्रियतमं भवतीइव भोक्तुं (इच्छन्तः) निजां भक्तिं प्रणयभावनया गृणन्तस्सन्तः विरहसंगमजैरुच्चावचैरुदन्तैः हृदयं शृङ्गारयन्ति॥

गोदादेव्याः प्रकृत्यैव स्त्रीत्वात् पुरुषोत्तमानुभवस्तावत् अस्यास्सुसंगतोभूत्; ललनायाः पुरुषानुभवस्य प्राप्तत्वात्। अन्ये दिव्यसूरयस्तु प्रकृत्या पुमांसः। तेषां पुरुषोत्तमानुभवस्तु स्वारसिको न भवितुमर्हति। ते खलु गोदादेव्या अनुभववैखरीमवलोक्य असूयाभिभूता इव भवन्ति। 'गोदा यथा परमं पुमांसमनुभवति तथैव तं वयमप्यनुभवेम' इति स्पृहयन्ते। तयैव स्पृहया ते स्वकीयां भक्तिं शृङ्गारवृत्त्या परिणमयन्तस्सन्तः संश्लेषविश्लेषभावनाः प्रकाश्य कथञ्चित्परितुष्यन्ति इति भावः। दिव्यसूरीणामनुभवादपि गोदादेव्या अनुभवो हृदयङ्गम इति स्फोरितं भवति। आरोपितानुभवादपि स्वाभाविकानुभवस्य रमणीयत्वादिति॥

(அங்.) ஹே கோதே! த்வதீயா: குரவ: தவ ப்ரியதமம் பவதீஇவ போக்தும் நிஜாம் பக்திம் ப்ரணய பாவநயா க்ருணந்தஸ் ஸந்த:, விரஹஸங்கமஜை:, உச்சாவசை: உதந்தை: ஹ்ருதயம் ஶ்ருங்காரயந்தி.

ஆண்டாளே! உம்முடைய திருத் தகப்பன்மார்களான பெரியாழ்வார் முதலிய ஆழ்வார்கள் உமது வல்லபரான பெருமானை நீர் அநுபவிப்பது போலவே தாங்களும் அநுபவிக்க விரும்பித் தங்களுடைய பக்தியை அநுராக சைலியிலே மாற்றிப் பேசாநின்றவர்களாய் பலவகைப்பட்ட ஸம்ஶ்லேஷ விஶ்லேஷப் பாசுரங்களினால் தமது திருவுள்ளத்தை ஶ்ருங்கார ரஸாநுபவசாலியாக ஆக்கிக்கொள்ளுகிறார்கள்.

ஆண்டாள் இயற்கையாகப் பெண்ணாய்ப் பிறந்தவள்; ஆழ்வார்களோ வென்னில் அங்ஙனன்றிக்கே ஆண்மக்களாய்ப் பிறந்தவர்கள். புருஷனைப் புருஷர்கள் அநுபவிப்பதிற் காட்டிலும் பெண்டிர் அநுபவிப்பது பாங்குடைத்தாதலால் புருஷோத்தமனை பெருமானை ஸ்த்ரீரத்நமான ஆண்டாளநுபவிப்பது பாங்காக அமைந்தது. அமையவே, இவளுடைய திவ்ய ப்ரபந்தத்தில் "ஊனிடையாழி சங்குத் தமற்கென்று உன்னித்தெழுந்த வென்தட முலைகள்" என்றும், "கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொருநாள், தங்குமேல் என்னாவி தங்குமென்றுரையீரே" என்றும், "கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கைதன்னைக் கிழங்கோடும், அள்ளிப்பறித்திட்டவன் மார்பிலெறிந்து என்னழலைத் தீர்வேனே" என்றும், "கொம்மை முலைகளிடர்தீர" என்றும் உள்ள பாசுரங்கள் பொருத்தமாகவும் ஸஹ்ருதய ஹ்ருதயங்கமமாகவும் விளங்கின. இங்ஙனம் ஆண்டாளைப் போலவே புருஷோத்தமனை நாமும் அநுபவிக்கவேணும், நாமும் பாசுரமிட்டுப்பேசவேணும்—என்று ஆசை கொண்ட ஆழ்வார்கள் என் செய்தார்களென்னில், பரம புருஷ விஷயத்திலே தங்களுக்குண்டான பக்தியை நாயக விஷயத்தில் நாயகிகளுக்குண்டாகும் அநுராகத்தின் ஸமாதியிலே அமைத்து, தாங்களும் ஸ்த்ரீபாவனை கொண்டவர்களாகி எம்பெருமானோடு ஸம்ஶ்லேஷிப்பதும் விச்லேஷிப்பதுமான நிலைமையையும் எய்தி, அந்த ஸம்ஶ்லேஷ விஶ்லேஷங்களுக்கு அநுரூபமான பாசுரங்களையும் பேசி, இங்ஙனே தங்களுடைய ஹ்ருதயத்தையும்

"இந்திரா"

பலவருஷங்கள் உழைக்கக் கூடியது.

இன்று இணையற்று விளங்குவது.

"இந்திரா" கடிகாரங்கள் வெகு நாள் உழைக்கக் கூடியவை சரியான மணியே காட்டும். 8—நாட்களுக்கான பெண்டுலம் மூவ்மெண்ட் எனாமல் டயல் மணி, அரை மணி இனிமையான தொனியில் அடிக்கும்.



10 வருஷம் உத்தரவாதம்

ட்ராப் ஆக்டகன்

8" டயல்	ரூ.	8-8-0
10" டயல்	ரூ.	12-0-0
12" டயல்	ரூ.	15-0-0

ரெகுலேடர்

8" டயல்	ரூ.	15-0-0
10" டயல்	ரூ.	20-0-0
12" டயல்	ரூ.	25-0-0

(பாக்கிங் அண்டு பார்சல் செலவு வேறு.)

(ஆர்டர் செய்பவர்கள் ரூ. 5—0—0 முன்னதாக அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.)

ஜலால் அண்டு சன்ஸ்,

கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்,

ஹெட் ஆபீஸ் :— 46, ரட்டான் பஜார், சென்னை.

ப்ராஞ் ஆபீஸ் :— 190, B. மௌண்ட்ரோட், சென்னை.

,, 1242-1, ஆபிட்ரோட், ஹைத்ராபாத் (டெக்கான்.)

பாரிசவாயுவுக்கு பயப்படவேண்டாம்!

க்ஷீரபலா

(101 தடவை பாகம் செய்தது)

பாரிசவாயுவுக்கு ஸஞ்சீவி. எல்லாவித வாத நோய்களையும் கண்டிக்கும். இதற்கு நிகரான மருந்தே கிடையாது. இதை எங்களுடைய "அயவீரஸிந்தூர"த்துடன் கலந்து உட்கொண்டால் இன்னும் அமோகமான பலன் அதிசீக்கிரத்தில் கிடைக்கும்.

க்ஷீர பலா:—அவுன்ஸ் 1-க்கு 3-8-0. ½-அவுன்ஸ் 1-12-0.
அயவீரம்:—ஒருவாரத்திற்கு போதுமான மருந்து 1-0-0.

மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்
107, பிராட்வே, சென்னை

சாம்பில் பாக்கட் 1-படி 4 அணு.

அசல் கை குத்தல் அரிசி.

ஆரோக்கியத்தையும், வலுவையும் கொடுக்கத்தக்கது. மதருஸ் ப்ரொவின்ஷியல் கோஆபரேடிவ் சொசைடி அவர்களால் தயாரிக்கப்பட்டது.

கிடைக்குமிடம்:—**சி. ரங்கநாயகலு செட்டி,**
நெ. 20, கோவிந்தப்ப நாய்க்கன் தெருவு,
(சௌந்தரிய மஹாலுக் கெதிரில்) ஜி. டி., மதருஸ்.

P. KOTHANDARAM PILLAI,
SON OF LATE
P. S. PONNUSAWMY PILLAI,
HIGH CLASS CABINET MAKER AND UPHOLSTERER,
Established in 1854.
Ponnusawmy Pillai's Buildings
39 & 44, Esplanade West :: (Rattan Bazaar) :: P. T., MADRA

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ராமாநுஜ

ஸித்தாந்த வைஜயந்தி

7-JUN 1937

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபக ஸபையின் சார்பாக
மாதந்தோறும் வெளிவரும்
ஸத் ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசந பத்ரிகை

தொகுதி 2	ஈச்வர௵ சித்திரை௴	பகுதி 6

பத்ராதிபர்:
வடகரை ராமாநுஜாசாரியார்

24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

❋

1937௵ ஏப்ரல்௴

வருஷச் சந்தா ரூ 1—12—0] [தனிப்ரதி விலை ரூ. 0—3—0

விஷய ஸூசிகை

விஷயங்கள் பக்கம்

1. சித்திரை மாதத்தின் சிறப்பு 139
—பத்திராதிபர்

2. சீராரும் சித்திரையில் சித்திரை நாள் 141
—ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்

3. துன்பற்ற மதுரகவி 145
—பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை ஐயங்கார்

4. வர்த்தமானங்கள் 155

5. முதலியாண்டான் வைபவ ஸங்க்ரஹம் ....
—அகரம் கஸ்தூரி கிருஷ்ணமாசாரியார்

6. ராமாயண ச்லோகார்த்தங்கள் ....
—திருமலை அநந்தாண் பிள்ளை ஸ்ரீ. உ. வே. கோவிந்தய்யங்கார்

ரங்கூன் வைர நகைகள்



சவரன் பொன்னிற்கு
உத்திரவாதத்துடன்
அனுப்பப்படும்.

*

விலை ஜாபிதா இனாம்

பி. கோபாலசுவாமி நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P.O., சென்னை.

L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது -

மனிதர்களுக்கு ஆரோக்கியத்தை அளிப்பது
L. G.
பெருங்காயம்
எங்கும் கிடைக்கும்.
ப்ரபல பெருங்காய
வியாபாரிகள்:
பம்பாய், சென்னை,
கும்பகோணம்.

லால்ஜீ கோதூ & கம்பெனி,
8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதராஸ்.

அம்ருதாஞ்சனம்.

ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வியாதிகளின் உபசமனத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக்கூடும். அக்காலத்தில் அமிருதாஞ்சனம் கைவசமிருக்குமேயாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டாமென்பதை அனைவரும் அறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.

அம்ருதாஞ்சனம் டிபோ.

பம்பாய். மதராஸ் கல்கத்தா

சலோனுடவர் பிராண்ட்
போர்ட்லாண்ட் சிமெண்ட்
காரண்டிட்
பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷன்

மேற்கண்ட சிமெண்ட் அனேக ஹார்பர்வேலைகளுக்கும் ரயில்வே வேலைகளுக்கும், மதராஸ் கார்ப்பரேஷனிலும், இன்னும் பிரபல வியாபாரிகளும் கண்ட்ராக்டர்களும் உபயோகித்து வருகிறார்கள்.

மேல் கண்ட சிமெண்டை உபயோகிக்கவும்

சோல் ஏஜெண்ட்

M. குப்புசாமி நாய்க்கர்

83, செம்புதாஸ் தெரு,

மதராஸ், ஜி. டி.

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶக பத்ரிகை

தொகுதி 2.	பத்ராதிபர் வடகரை. இராமாநுஜாசாரியார்	பகுதி 6.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁

𑌶𑍍𑌰𑌿𑌯𑌃𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌤𑌸𑍍𑌮𑍈 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯𑌾𑌯 𑌨𑌮𑌃 𑌪𑌰𑌮𑌯𑍋𑌗𑌿𑌨𑍇 ।
𑌯𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌜𑍍𑌵𑌰𑌮𑌶𑍀𑌶𑌮𑌤𑍍 ॥
𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤 𑌵𑍇𑌦𑌾𑌂𑌗 𑌸𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌷𑌿𑌣𑍀 ।
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤 𑌵𑍈𑌜𑌯𑌨𑍍𑌤𑍀 𑌵𑌿𑌜𑍃𑌂𑌭𑌤𑌾𑌮𑍍 ॥

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

சித்திரைமாதத்தின் சிறப்பு

[பத்ராதிபர்]

இம்மாதம் மாதங்களில் முதல்மாதமா யிருக்கும். அதற்குக் காரணத்தைச் சிறிது ஆராய்வோமேயானால், வ்யூஹத்தில் ஐந்தாவதவதாரமான விஷ்ணுவின் அம்ஶமாயிருத்தலே காரணமாகும்.

பகவதவதாரங்கள் பலவற்றிலும் **மத்யே விரிஞ்சிகிரிஶம் ப்ரதமாவதாரம்** என்கிறபடி ப்ரஹ்ம ருத்ரர்களுக்கிடையே நின்று ஸமஸ்தமான சேதநர்களையும் ரக்ஷித்துப்போரும் **விஷ்ணு**, பகவதவதாரங்கள் எல்லாவற்றிலும் ப்ரதமாவதாரமா யிருக்குமா போலே, அவனுடைய அம்ஶமாயிருக்கும் இம்மாதமும் மாதங்களெல்லாவற்றிலும் முதன்மை பெற்றிருக்கும். மேலும், நாராயண வாஸுதேவாதி பகவந்நாமங்க ளாயிரக்கணககாக இருக்கச்செய்தேயும் பகவத்பக்தியை யுடைய பாகவதர்கள்

இந்நாமத்தைக்கொண்டே [வைஷ்ணவர்களென்றே] அழைக்கப்படுகிறார்கள். இதனாலேயே மற்ற அவதாரத்தின் சம்பத்தைக்காட்டிலும் இந்த அவதாரத்தின் ஸம்பந்தம் மிகச் சிறப்புடையதென்பது ஸர்வ ஸம்மதம். இவ்வளவு பெருமைவாய்ந்த விஷ்ணுவின் அம்ஶமான இம்மாதம் மிகச்சிறப்புடையதென்னத் தட்டுண்டோ? ஆகலால் வைஷ்ண மாதமான இம்மாதத்தில்வரும் ஹரிதிநத்தி (ஏகாதஶியி)ல் உபவஸித்து த்வாதஶியன்று விஷ்ணுவை பூஜிக்குமவன் பௌண்டரீக யாகத்தைச் செய்ததாலேற்படும் பலனையடைவான். இதுவிஷயம் பாரதம் ஆஶ்வமேதிகபர்வம் 114-வது அத்தியாயத்தில 21-வது ஶ்லோகத்தில் ஸ்ரீ கிருஷ்ணன், தர்மபுத்திரருக்கு அருளியதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அது வருமாறு.

த்வாதஶ்யாம் மாஸி சைத்ரே துமாம் விஷ்ணும் ஸமுபோஷ்யய:
பூஜயம்ஸ்ததவாப்நோதி பௌண்டரீகஸ்ய யத்பலம்

இன்னமும் இம்மாத ஶுக்லபக்ஷத்வாதஶீ வாமநத்வாதஶி என்று சொல்லப்படுகிறது.

மேலும் இம்மாதம், பிதாமஹனுக்கும் பிதாவான ஸர்வேஶ்வரன், லோககண்டகனை ராவணனைக் கொன்று உலகை வாழ்விக்கைக்காக பிதரம் ரோசயாமாஸ ததா தஶரதம் ந்ருபம் என்கிறபடி தனக்கொரு பிதாவைத் தேடிக்கொண்டு வந்து தோன்றியதாலும் மிகச் சிறப்புடையதாயிருக்கும். பகவதவதாரத்திற்குப் பாங்கான இம்மாதம், ஆதிகவியான வால்மீகிபகவானாலும் சைத்ரஶ் ஸ்ரீமாநயம் மாஸ: என்று கொண்டாடப்பெற்றது. இன்னமும் அவ்வெம்பெருமானுடைய ஸௌஶீல்ய ஸௌலப்ய ப்ரகாஶகங்களான அபதாநங்களிலாழங்காற்பட்ட ஆழ்வார் விஷயத்திலீடுபட்டு தென்குருகூர் நம்பியென்னக்கால் அண்ணிக்கு மமுதூறு மென்னாவுக்கே என்றீடுபட்ட ஏரார் மதுரகவி யிவ்வுலகில் வந்துதித்ததும் சீராரும் சித்திரையிற் சித்திரை நாளாகும்.

ஆதலின் இம்மாதத்தில், ததோபி ம்ருதஸஞ்சீவிநீம் ராமவ்ருத்தாந்தம் என்றும் மனத்துக்கினியான் என்றும் ஆஶ்ரிதர்களை ஆழங்காற்படுத்தும் ராமவ்ருத்தாந்தமும், ஆழ்வார் விஷயத்திலீடுபட்ட மதுரகவிகளின் பெருமையும் ஸ்ம்ருதி விஷயமானாலும் மத்பக்த பக்தேஷு ப்ரீதிரப்யதிகா மம என்று சரம

பர்வநிஷ்டரின் பெருமை, அவனும் உகக்கும்படியாயிருக்குமாதலால்சரமபர்வநிஷ்டரானமதுரகவியாழ்வாரின் பெருமையைப் பற்றிப் பெரியோர்கள் வரைய நாம் வாசித்து அநுபவிப்போமாக.

சீராரும் சித்திரையில் சித்திரை நாள்.

[பெருமாள் கோயில் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்]

இத்திருநன்னாளில் திருவவதரித்த ஸ்ரீ மதுரகவிகளின் வைபவத்தையும், நிஷ்டையையும் சிறிது அநுபவிப்போம். இவர் ஆழ்வார் திருநகரிக்கு அருகிலுள்ள திருக்கோளூரில் திருவவதரித்தவர். வகுள பூஷண பாஸ்கரோதயத்திற்கு அருணோதயம்போன்றது இவரது திருவவதாரமென்பர் பெரியோர். நம்மாழ்வாரிற் காட்டிலும் திருநக்ஷத்திரத்தில் இவர் மூதுவர் என்பது இதனால் விளங்கும். இவர் வேத சாஸ்திரங்களை இளமையிலே பயின்று செவிக்கினிய செஞ்சொற் கவிகளைப்பாட வல்லவராய் அதனால் மதுரகவி யென்று திருநாமம் பெற்று மெய்யுணர்வினால் அவாவற்று மஹா விரக்தராய் விஷ்ணு பக்தி விஞ்சி யோகநிஷ்டையிலும் தேர்ந்து தீர்த்த யாத்திரை திவ்ய தேச யாத்திரைகளிலே திருவுள்ளமுடையராய்ப் புறப்பட்டு ஸஞ்சரிக்கலுற்று வடநாட்டுத் திருப்பதிகளைச் சேவித்துக்கொண்டு வருகையில், திருவயோத்தியிலிருந்து ஒரு நாளிரவில் திருக்கோளூரெம்பெருமானைத் திசை நோக்கித் தொழக் கருதித் தெற்குத் திக்கில் கண் செலுத்திய பொழுது, அப்பக்கத்திலே வானுற வளர்ந்து விளங்குகின்றதொரு திவ்யமான பேரொளியைக் கண்ணுற்று, அது இன்னதென்றறியாமல் திகைத்து நின்றார். அச்சுடர் முச்சுடரொளியினும் மிக்கு விளங்கியதனால் வெகு வியப்புற்று, அதனை அருகிற்சென்று பார்த்துத் தெளியத் துணிந்து புறப்பட்டு, அச்சோதியையே குறியாகக் கொண்டு விரைவாக நெடுவழி கடந்து நடந்து வந்து ஆழ்வார் திருநகரியையடைந்து, அதில் அவதரித்தருளியுள்ள சடகோப முனிவரது திருமேனி விளக்கத்தைச் சேவித்து, இதுவே அத்தனை நெடுந்தூரம் பிரகாசித்ததென்று அறிந்து வியந்து, அவ்வாழ்வாரது நிலைமை முன்பு தாம் கேள்வியுற்றிருந்தபடியே அப்ராக்ருதமா

யிருக்கக் கண்டு அவர்க்குக் கட்புலனும் வாய்ப்புலனும் உள்ளனவா வென்பதைச் சில உபாயங்களினால் பரிசோதிப்பவரானார். அப்பொழுது காரிமாறப்பிரான் கண் திறந்து கடாக்ஷித்து, இவர் கேட்ட கேள்விக்கு ஏற்றவிடை சொல்லியருள, அது கேட்டு மதுரகவிகள் ஆழ்வாரது ஞான வைபவத்திற்கு அதிசயித்து ஈடுபட்டு அவரையே ஆசாரியராகக் கொண்டு சரணம் புகுந்தனர்.

அவ்வாழ்வார், பக்தி பரீவாஹரூபமாக அருளிச் செய்த சதுர்வேத ஸாரமாகிய நான்கு திவ்ய ப்ரபந்தங்களை இம்மதுரகவிகள் தாம் பட்டோலை கொண்டு கைத்தாள மெடுத்துப் பண்ணிசையோடு அவற்றை எப்பொழுதும் பாராயணஞ்செய்து கொண்டு திருக்குருகூர்நம்பிக்கு ப்ரதாநசிஷ்யராய், பரதாழ்வானுக்கே பணிவிடைபுரிந்தொழுகின சத்ருக்நாழ்வானைப்போல் பகவத் பக்தியினும்பாகவதப்ரதிபத்தியையே பரமாநுஷ்டாநமாகத் தலைக்கொண்டு அவ்வாழ்வார்விஷயமாக 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்ற திவ்ய ப்ரபந்தத்தைப் பாடி முமுக்ஷுக்களுக்கு உபகரித்தருளினர்.

பகவத் பக்தியிற் சிறந்தவர்களையே ஆழ்வார்களென்று சிறப்பித்துக் கூறுதலும், அவர்கள் அருளிய ப்ரபந்தங்களையே திவ்ய ப்ரபந்தங்கள் என்று கூறுவதும், சம்ப்ரதாயமாயிருக்கவும் ஸ்ரீமந்நாதமுனிகள் தொடக்கமான நம்பூருவாசாரியர்கள் இம்மதுர கவிகளை ஆழ்வார்களது கோஷ்டியில் சேர்த்து, இவரருளிய கண்ணிநுண் சிறுத்தாம்பை அருளிச் செயல்களினிடையே சேர்த்தருளினர் என்பது மணவாள மாமுனிகளின் உபதேசரத்தினமாலையில்

"வாய்த்த 'திருமந்திரத்தின்' மத்திமமாம் பதம்போல்
சீர்த்த 'மதுரகவி' செய்கலையை—ஆர்த்தபுகழ்
ஆரியர்கள் தாங்கள் அருளிச்செயல் நடுவே
சேர்வித்தார் தாற்பரியந் தேர்ந்து."

என்ற பாசுரத்தினால் அறியத்தக்கது. இப்பாசுரத்தின் உரையில் பிள்ளை லோகஞ்சீயர்—"இதுதான் * பயிலுஞ் சுடரொளி * நெடுமாற் கடிமை தொடக்கமானவற்றின் அர்த்தத்தை ப்ரதிபாதிக்கையாலே இதின் அர்த்த கௌரவத்தை விசாரித்து, நன்றாயிருப்பதொரு ஹாரத்தைச் சமைத்து அது ஒளிபெறும்படி ச்லாக்யமாயிருப்பதொரு நாயகக்கல்லை அதன் நடுவே பதித்தாற்போலே

அருளிச் செயல்கள் தான் நிறம் பெறும்படி அவற்றின் நடுவே இத்தைச் சேர்த்தார்கள். சேர்த்தசேர்க்கையின் சாதுர்யத்தாலேயிறே! முத்துமாலை தொடக்கமான ஆபரணங்கள் நிறம்பெறுவது. அது போலேயாய்த்து இது."—என்றருளியுள்ள ஸூக்திகளும் குறிக்கொள்ளத்தக்கன.

கம்பர் தாம் ஆழ்வார் விஷயமாகச் சடகோபரந்தாதி பாடுதற்கு, இக்கண்ணிநுண் சிறுத்தாம்பை வழிகாட்டியாகக் கொண்டமையை அவர் தாமே வெளியிட்டுரைத்த

"மன்றேபுகழுந் திருவழுந்தூர்வள்ளல் மாறனைமுன்
சென்றே மதுரகவிப்பெருமாள் செந்தமிழ்த்தொடையில்
ஒன்றே பதிகமுரைத் தவன்பொன்னடி யுற்றுநின்றான்
என்றே பதிகம்பதிகமதாக இசைத்தனனே."

என்னும் பாயிரமும் இங்கு நினைக்கத் தக்கது.

ஆழ்வார்களுடைய நிஷ்டையிற் காட்டிலும் மதுரகவிகளின் நிஷ்டை மிகச் சீரியதாகப் போற்றப்படுகின்றது.

ஸ்ரீவசந பூஷணத்தில் சரம பர்வ நிஷ்டாப்ரகரணத்தில்—"உண்டபோதொருவார்த்தையும் உண்ணாதபோதொரு வார்த்தையும் சொல்லுவார் பத்துப்பேருண்டிறே!. அவர்கள் பாசுரங்கொண்டன்று இவ்வர்த்த மறுதியிடக்கடவது, அவர்களைச் சிரித்திருப்பாரொருவருண்டிறே!. அவர் பாசுரங்கொண்டு இவ்வர்த்த மறுதியிடக்கடவோம்" என்றருளிச் செய்துள்ள திவ்ய ஸூக்தி களை நோக்கினால் தத்வார்த்த நிஷ்கர்ஷ விஷயத்தில் மதுரகவிகளின் ஸ்ரீ ஸூக்தியே சீரிய சிங்காசனத்தில் அமர்ந்திருக்க உரிமையுடையதாகுமென்று நிச்சயிக்கப்படும்.

இவர் நம்மாழ்வாருடைய அருளிச் செயல்களை ஆழ்ந்து நோக்கி பகவத் பக்தியிற் காட்டிலும் பாகவத பக்தியே மிகச் சிறந்ததென்கிற தத்துவப்பொருளை உறுதியாகக் கைக்கொண்டார். ஆழ்வார் முதற்பிரபந்தமாகிய திருவிருத்தத்தில் தமக்கு நிரூபகமாக "திருமால்திருப்பேர்வல்லாரடிக்கண்ணிசூடியமாறன்" என்றருளிச்செய்து, சரமப்ரபந்தமாகிய திருவாய்மொழியின் முடிவில் "வந்தவரெதிர் கொள்ள மாமணி மண்டபத்து, அந்தமில் பேரின்பத்து அடியரோடிருந்தமை" என்று தாம் திருநாட்டிலும் பாகவத கோஷ்டியில் அந்வயிக்கப் பெற்றதையே பேறாக

அருளிச்செய்து தலைக்கட்டினார். இந்தச் சுவடறிந்த மதுரகவிகள் பாகவத நிஷ்டைக்கு மேற்பட்ட புருஷார்த்தமில்லையென்று துணிந்து போந்தார்.

ஸ்ரீ ராமாயண புருஷர் நால்வரில் ஒருவரான சத்ருக்நாழ்வானை இவர்க்கு ஒப்புச் சொல்வர் பெரியோர். வேதத்தின் உபப்ரும்ஹணமாக அவதரித்த ஸ்ரீராமாயணத்தில் ராமலக்ஷ்மண பரத சத்ருக்நர் என்கிற நால்வரும் நான்கு அர்த்தங்களை அநுஷ்டித்துக் காட்டினார். பெரியோர் சொல்வதைச் சிறியோர் செய்யக்கடவர்' என்கிற ஸாமாந்ய தர்ம முறையைப் பித்ருவாக்ய பரிபாலநாதி முகத்தாலே ஸ்ரீராமபிரான் அனுட்டித்துக் காட்டினார். சேஷபூதன் சேஷி விஷயத்தில் கைங்கரியம்பண்ணி ஸ்வரூபலாபம் பெறக்கடவன்' என்கிற விசேஷ தர்மத்தை இளைய பெருமாள் அனுட்டித்தார். பரதாழ்வானும் இந்த சேஷசேஷி முறைமையையே பரிபாலித்தவராயினும் இவர்க்கு விசேஷமுண்டு; நிர்ப்பந்தப்படுத்தி அடிமைசெய்தார் இளைய பெருமாள். இவர் அங்ஙனன்றியே 'சேஷி உகந்த அடிமையே சேஷபூதனுக்கு ஆதரணீயம்' என்னுமிடத்தை அனுட்டித்துக் காட்டினர். பெருமாளைப்பிரிந்து தரித்திருக்கமாட்டாமையாகிற தன் செல்லாமையைப் பாராது, பெருமாளுடைய திருவுள்ளத்தையே பார்த்துச் சித்திரகூடத்தினின்றும் மகிழ்ச்சியுடனே மீண்டாரிறே இவர். அப்படிப்பட்ட பரதாழ்வானை யல்லது வேறொன்றுமறியாதே யிருக்கையாலே பகவச் சேஷத்வகாஷ்டையான பாகவத சேஷத்வத்திலே ஊன்றியிருந்தார் சத்ருக்நாழ்வான்.

சத்ருக்நர்க்கு வால்மீகிமுனிவர் விசேஷணமிடும்போது நித்ய சத்ருக்நः என்றார். பாஹ்ய சத்ருக்களைமாத்திரமேயன்றி ஆந்தரசத்ருக்களான இந்திரியங்களையும் வென்றிருப்பர் என்று அதற்குப் பொருளுரைத்த பெரியவாச்சான்பிள்ளை "அவ்விந்த்ரிய ஜயத்தின் எல்லை எவ்வளவென்னில்? * பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம் என்கிற ராமஸௌந்தர்யத்திலும் துவக்குண்ணுதொழிகை. அதாகிறது - பெருமாளைப் பற்றும்போதும் தன் உகப்பாலேயாதல் அவருடைய வைலக்ஷண்யத்தாலே யாதலன்றிக்கே தனக்கு உத்தேஶ்யனான பரதாழ்வான் உகந்த விஷயமென்று பற்றுகை" என்றருளிச்செய்தார். மதுரகவிகளின் நிஷ்டையும் இப்படிப்பட்டதே யென்பது "தேவுமற்றறியேன்" என்றதனாலும், "திரிதந்தாகிலும்" என்னும் பாசுரத்தினாலும் அறியலாகும்.

"பகவத் பக்தியிற்காட்டிலும் பாகவதபக்தி சிறந்தது" என்று சொல்லுவதன் தத்துவம் சிறிது விவரிக்கப் படுகிறது. ஒருவன் ஒருவஸ்துவினிடத்தில் அன்புவைத்தால் அவ்வன்பு அளவற்றதுமாயிருந்தால் அஃது அவ்வஸ்துவோடே நின்றுவிடாமல் அதனோடு ஸம்பந்தி ஸம்பந்தம் பெற்ற வஸ்துக்களிலும் பெருகிச் செல்லுமென்பதை அனைவரும் தம்தம் அநுபவத்தாலறிவர். அப்படியே பாகவதபக்தியென்பது பகவத்பக்தியின் எல்லை நிலமாகவுண்டாமது. பகவத்பக்தியின் உறைப்பையே பாகவத பக்தி வெளிப்படுத்தும். ஸ்வாமியின் பாதுகைகளிலே நாம் ஆதரம்வைத்து அவற்றைக் கண்களி லொற்றிக்கொள்வதும் தலைமீது அணிந்துகொள்வதும் அலம்பித் தீர்த்தம் பருகுவதும் செய்கிறோம்; இதனால் நமக்கு ஸ்வாமியிடத்துள்ள பக்தி அபாரமானது என்பதேயன்றோ! வெளியாகின்றது. அதுபோலவே, 'எம்பெருமானும் வேண்டா; அவன் உறையும் திருப்பதியும் வேண்டா; ஆழ்வாரும் அவருடைய அருளிச்செயல்களுமே உத்தேஶ்யம், என்று பேசினாலும் பகவத்பக்தியின் முதிர்ச்சியே விளங்கிற்றாகும்.

துன்பற்ற மதுரகவி.

(பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரே. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.)

I திருக்கோளூர் மான்மியம்.

"பூழியர்கோன் தென்னாடு முத்துடைத்து" என்ற முதியார் மொழியின்படி முத்துவளத்தை மிகுதியாக வுடையதும், செந்தமிழ்நாடென்று சிறப்புற்றதுமான தென்பாண்டி நாடு. இந்நன்னாட்டுத் திருப்பதிகள் ஈரொன்பதாம். அவற்றுளொன்று திருக்கோளூர். இங்கு திருவநந்தாழ்வானாகிய திருவணையின்மீது வைத்தமாநிதிப்பெருமாள் (நிக்ஷேபவித்தன்) திருக்கண்வளர்ந்தருளுகிறார். கோளூர்வல்லி நாச்சியார், ஸ்ரீகரவிமாநம், குபேர

தீர்த்தம், தாம்ரபர்ணிநதி, இங்கு உள்ளன. நவநிதிகள் இங்கே ஒளித்துக்கொண் டிருக்கின்றன வென்று அதர்மம் குபேரனுக்குக் கோள்சொல்லிய இடமாதல்பற்றி இத்திருப்பதிக்கு திருக்கோளூரென்று பெயரென்பர். வடமொழியில் 'பிசுனக்ஷேத்ரம்' என்றுபெயர். இது திருநெல்வேலிக்குக் கிழக்கே இருபது மைலில் உளது. ஆழ்வார் திருநகரிக்கு அருகிலுள்ளது. இத்திருப்பதித் தாமோதரனை வணங்க, பிறப்பு, மூப்பு, பிணி, இறப்பு முதலியன அற்று முத்திபெறலாம் என்ப,

II ஏரார் மதுரகவி அவதாரம்.

துவாபரயுகத்தில் எட்டுலக்ஷத்து அறுபத்து மூவாயிரத்து எண்ணூற்றெழுபத்தொன்பதான ஈசுவரவருடம் சித்திரைமாதத்தில் சித்திரை நக்ஷத்திரத்தில் மேற்கண்ட திருக்கோளூரில் ஒருவர் அவதரித்தார். இவர்தான் மதுரகவி. "ஏரார் மதுரகவி இவ்வுலகில் வந்துதித்த, சீராரும் சித்திரையில் சித்திரைநாள்— பாருலகில், மற்றுள்ள ஆழ்வார்கள் வந்துதித்த நாள்களிலும் உற்றது" என்பதை நோக்குக. இவரது அவதாரம் ஆதித்யோதயத்துக்கு அருணோதயம்போலே வகுளபூஷண பாஸ்கரோதயத்துக்குமுன்னே. சீராரும் சித்திரை என்பது 'சைத்ரஶ் ஸ்ரீமாநயம் மாஸ:' என்றதைப்பற்ற. சீராரும் சித்திரைநாள் என்பது 'சித்ரா நக்ஷத்ரம் பவதி' என்று சுருதிப்பிரசித்தமான திரும் என்றபடி. இவரை ஏரார் மதுரகவி என்பதற்குப் பொருள் கூறுதும். ஏர் ஆர் - அழகுநிறைந்த, மதுரகவி செவிக்கினிய செஞ்சொற்கவிகளைப் பாடவல்ல மதுரகவிகள். ஆசார்ய வைபவம் அறியுமவராகையாலும், ஆழ்வார் திருவடிகளிலே நெடுநாள் பரிசர்யைபண்ணி அவருடைய ப்ரஸாத பாத்ரராய்ப் போந்தவராகையாலும், அவர் பண்ணின வுபகாரத்துக்கு பிரதி உபகாரம் உண்டாக நினைத்திராதவராகையாலும் அவரை வாயாரப்புகழ்ந்து அவருடைய உபகாராநுஸந்தாந ப்ரீதிக்குப் போக்குவீடாக ப்ரபந்தமுகத்தாலே ஆழ்வார் வைபவத்தைப்பேசுகையாலும், இவரை ஏரார் மதுரகவி என்னத்தட்டில்லை. ஐசுவரியம்முதலான சகல புருஷார்த்தங்களையும் யதாதிகாரம் விதிக்கிற மர்யாதையிலே நின்றார்கள் ரிஷிகள். சாஸ்த்ரதாத்பர்யமாய் உத்தமபுருஷார்த்தலக்ஷணமான பகவத் ப்ராப்தியிலே நின்றார்கள் ஆழ்வார்கள், பகவத்

விஷயமே புருஷார்த்த சாதநங்களென்று பூர்ணோபதேசம் பண்ணின ஆழ்வாரிற்காட்டில் ஆழ்வாரே புருஷார்த்த பூதராய் அவரைபெறுகைக்கு ஸாதநமும் அவர்திருவடிகளே என்றிருக்கும் ஸ்ரீமதுரகவிகள், ஏரார் மதுரகவியே. ஆழ்வார் பிரதம பருவத்திலே நின்றவர்; இவர் சரமபருவத்திலே நின்றவர். அவர் சங்க்ரஹத்திலே அவதாரணத்திலே நிஷ்டர்; இவர். அதினுடைய விவரணநிஷ்டர். சர்வேசுவரன் புருஷார்த்தம் என்னுமிடத்தில் கிருஷ்ணாவதாரமே புருஷார்த்தமாகவும் அதிலும் கம்சவதத்துக்கு முன்பு வெண்ணெய் களவுகண்டு யசோதைப்பிராட்டியார் கையாலே கட்டுண்டு அவளுக்கு அஞ்சிநின்ற அவஸ்தையையுடைய கிருஷ்ணனே உபாயமும், உபேயமும், விரோதிநிரஸநம் பண்ணுவானும் மற்றுமெல்லா மென்றும் அவனுடைய ஸௌந்தர்ய சீலாதிகளிலே அகப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களே இவ்வாத்மாவுக்கு நாதபூதரும் நிரதிசய புருஷார்த்த பூதருமென்று ஆழ்வார் நிர்ணயித்தார். ஸ்ரீமதுரகவியாழ்வாரும் அத்தைப் பூர்வபக்ஷமாக்கி எம்பெருமான் பக்கலிலும், ஸ்ரீவைஷ்ணவர்கள் பக்கலிலும் ஆழ்வார்பண்ணினதடைய ஆழ்வார் திருவடிகளிலேயாக்கி அது ருசித்து அத்தையே பேசி அநுபவிக்கிறார்.

III. ஸ்ரீ சத்ருக்நாழ்வானும், ஸ்ரீ மதுரகவிஞம்.

வேதோப ப்ரும்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தமான ஸ்ரீராமாயணத்தில் ராமாயண புருஷர்கள் நால்வரும் தர்ம ஸம்ஸ்தாபநார்த்தமாக அவதரிக்கையாலே நால்வரும் நாலர்த்தத்தை அநுஷ்டித்துக் காட்டினார்கள் "ஒருவன் சொல்லிற்றை ஒருவன் செய்யக்கடவன்" என்கிற முறைநேராக அழிந்துகிடக்கையாலே பித்ருவசந பரிபாலநாதிகளாலே சாமாந்ய தர்மத்தையநுஷ்டித்தார் பெருமாள். "நிருபாதிக சேஷியைக் குறித்து சேஷபூதன் கிஞ்சித்கரித்துத்தான் உளனாகக்கடவன்" என்கிற விசேஷதர்மத்தை அநுஷ்டித்தார் இளையபெருமாள். "சேஷியுகந்தவடிமையே சேஷபூதனுக்கு கர்த்தவ்யம்" என்னுமிடத்தையநுஷ்டித்தார் ஸ்ரீ பரதாழ்வான். பகவச் சேஷத்வகாஷ்டையான ததீயசேஷத்வத்தை அநுஷ்டித்தான் ஸ்ரீ சத்ருக்நாழ்வான். பாஹ்ய சத்துருக்களன்றிக்கே ஆந்த்ர சத்துருக்களான விந்திரியங்களையும் ஜயித்தவர் இவர். "ஸ்ரீ சத்ருக்நாழ்வான் பெருமா

ளுக்கு நல்லனானபடி அவனையல்லதறியாத ஸ்ரீ பரதாழ்வானை யல்லது வேறொன்றறியாதபடியானான்" என்று எம்பெருமானார் அருளிச்செய்வர். சத்துருக்கனை 'நீ அரசனாகி' எனப் பரதன் கூறலும் அவன் பதிலுரைத்தல்:—

"காணாள நிலமகனைக் கைவிட்டுப் போவானைக் காத்துப் பின்பு
போவானுமொருதம்பி போனவர்கள் வருமவதி போயிற்றென்னா
ஆனாத வுயிர்விட வென்றமை வானுமொரு தம்பியயலே நாணாதி
யானுமிவ் வரசாள்வ னென்னே யிவ்வரசாட்சி யினிதேயம்மா

"மன்னிற்பின் வளநகரம் புக்கிருந்து வாழ்ந்தானே பரதனென்னும், சொன்னிற்கு மென்றஞ்சிப் புறத்திருந்து மருந்தவமே தொடங்கினாயே, என்னிற் பின்னிவனுளனா மென்றே பின்னடிமையுனக் கிருந்ததேனும், உன்னிற் பின்னிருந்ததுவு மொருகுடைக்கீழிருப்பதுவு மொக்குமென்றான்."

ஸ்ரீ சத்ருக்நாழ்வானைப் போலே யிருப்பதொருவராய்த்து ஸ்ரீ மதுரகவிகள். சத்ருக்நன் ராமகுணத்தில் கால்தாழ்ந்திலன். இவர் கிருஷ்ண குணங்களில் கால்தாழ்ந்திலர். நம்மாழ்வாருக்கு 'நன்மதுரகவி வணங்கும் நாவீறன்' என்றும், "மதுரகவி தம்பிரான்" எனவும் வாழித்திருநாமத்திலிருத்தல் காணலாம். மதுரகவியாழ்வாரை ஆழ்வார் பாதமாக உரைப்பது மரபு. மேலும் இவ்வாழ்வார் நம்மாழ்வாருக்குத் திருவடித் தொண்டராகியொழுகியதுபற்றி அவரது திருவடி நிலை, 'மதுரகவிகள்' என இவர் திருநாமத்தையிட்டு வழங்கப்படுகிறது.

IV. பதிற்றந்தாதிப் பிரபாவம்

'பத்தியுடன் பதினொன்றும் பாடினான்' என்றபடி கண்ணிநுண் சிறுத்தாம்பு அமைந்துளது. இது ஆழ்வாருடைய திவ்ய குணங்களையே முற்றும் பிரதி பாதிக்கிறது. திருவாய்மொழி வேதஸாரமாய், அதனுடைய ஸாரமாய்த் திகழ்வது இப்ரபந்தம். 'தேவு மற்றறியேன்' என்றதை 'வேதந் தமிழ் செய்த மாறன் சடகோபன்' என்றும்; 'காரிமாறப்பிரான்,' 'சடகோபனென்னம்பி,' என்றதை 'மாறன் சடகோபன்' என்றும்; 'பெரியவண் குருகூர்நகர் நம்பிக்காளுரியனாய் அடியேன் பெற்ற நன்மையே' என்றதை 'வண்குருகூரேறெங்கள் வாழ்வாம்' என்றும்; 'எழுமையு மெம்பிரான்

நின்று தன் புகழேத்தவருளினான்' என்றதை 'ஏறெங்கள் வாழ்வாமென்றேத்தும் மதுரகவியார்' என்றும்; 'என்னை யாண்டிடும் தன்மையான்' என்றதை 'எம்மையாழ்வார்' என்றும் 'வேறொன்றும் நானறியேன்'........அரண்' என்ற தனியனில் வந்துள்ளதைக் குறிக்கொள்க. மதுர கவிகளுக்கெல்லாம் ஆழ்வாரே யானாப் போலே நமக்கு எல்லாம் மதுரகவிகள் என்கிறது. ஸ்ரீ தேசிகனாரும்.

"இன்பத்திலிறைஞ்சுதலிலிசையும் பேற்றி
லிகழாத பல்லுறவிலிராக மாற்றில்
தன்பற்றில் வினைவிலக்கிற்றகவோக்கத்திற்
றத்துவத்தை யுணர்த்துத லிற்றன்மையாக்கில்
அன்பர்க்கே யவதரிக்கு மாயனிற்க
வருமறை கடமிழ் செய்தான்றாளேகொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டுந்
தொல்வழியே நல்வழிக டுணிவார்கட்கே"

எனக் கூறுதல் காண்க இன்பம் 'தென்குருகூர் நம்பி என்றக்கால் அண்ணிக்கும் அமுதூறல்' இறைஞ்சுதல் 'மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே; இசையும்பேறு 'தேவபிரானுடைக் கரியகோலத்திருவுருக் காண்பன் நான் பெரியவண் குருகூர்நகர் நம்பிக்கன்பனாய்; இகழாத பல்லுறவு 'அன்னையாய் அத்தனாய்; இராகம் மாற்று 'செம்பொன் மாடத்திருக்குருகூர் நம்பிக்கன்பனாய் அடியேன் சதிர்த்தேன்; 'தன் பற்றில் 'இன்று தொட்டு மெழுமையு மெம்பிரான் நின்று தன் புகழேத்தவருளினான் ; வினைவிலக்கு 'பண்டை வல்வினைபாற்றி'; தகவோக்கம் 'அருள்கொண்டாயிர மின்தமிழ்பாடினான் அருள்கண்டீர்; தத்துவத்தை உணர்த்துதல் 'வேதத்தினுட் பொருள் நிற்கப்பாடி என்னெஞ்சுள் நிறுத்தினான்; தன்மையாக்கல் 'செயல் நன்றாகத் திருத்திப்பணி கொள்வான்' என்று உய்த்துணர்க.

நம்மாழ்வாரைக் குறிக்கையில் 'தென்குருகூர் நம்பி'; பெரியவண் குருகூர் நம்பி'; 'சடகோபன்'; 'திருக்குருகூர் நம்பி'; 'காரிமாறப்பிரான்'; 'ஒண்டமிழ்ச் சடகோபன்'; 'ஆயிரம் இன்தமிழ் பாடினான்'; 'தக்கசீர்ச்சடகோபன்'; என்று வெகு சிறப்பாகக் கூறுகிறார். அவர் தமக்குச் செய்ததைக் குறித்து 'இன்று

தொட்டும் எழுமையும் எம்பிரான் நின்று தன் புகழ் ஏத்த அருளினன்; 'பண்டை வல்வினை பாற்றியருளினன்'; அருளினன் அவ்வருமறையின் பொருள்';'நிற்கப்பாடி என் நெஞ்சுள் நிறுத்தினன்' என்று விளக்கமாகப் பேசுகிறார் எனவே தனக்குக் கிட்டியது 'தேவு மற்றறியேன்' அவன் பாவினின்னிசை பாடித்திரிதல்.'

V. ஆழ்வாரும் மதுரகவியாரும்

நம்மாழ்வார் பகவத் விஷயத்தில் பண்ணும் அநுஸந்தாந ப்ரகாரத்தை மதுரகவியாழ்வார் ஆழ்வார் விஷயத்தில் பண்ணுகிறபடி சற்று நோக்கத்தக்கது. அவர் அப்பொழுதைக் கப்பொழுதென்னாராவமுது' என்றார்; இவர் 'நண்ணித்தென் குருகூர் நம்பியென்றக்காலணணிக்கு மமுதூறு மென்னாவுக்கே' என்கிறார். அவர் 'மலக்கு நாவுடையேற்கு' என்றார்; இவர் 'நாவினால் நவிற்றின்ப மெய்தினேன்' என்றார். அவர் 'அடிக்கீழமர்ந்து புகுந்தேன்'என்றார்; இவர் 'மேவினேனவன் பொன்னடி மெய்ம்மையே, என்றார். 'அவர் கண்ணனல்லால் தெய்வமில்லை' என்றார்; இவர் 'தேவுமற்றறியேன்' என்றார். அவர் 'பாடி இளைப்பிலம்' என்றார் இவர் 'பாடித்திரிவனே' என்றார். அவர் 'இங்கே திரிந்தேற்கிழிக்குற்றென்' என்றார், இவர் திரிதந்தாகிலும்' என்றார். அவர் உரிய தொண்டர் தொண்டர்' என்றார்;'இவர் 'நம்பிக்காளுரியனே'என்றார். அவர் 'தாயாய் தந்தையாய்' என்றார்; இவர்'அன்னையாயத்தனய்' என்றார். அவர் ஆள்கின்றானாழியான்' என்றார்; இவர் 'என்னையாண்டிடும் தன்மையான்' என்கிறார். அவர் 'கடியனைக் கஞ்சனைக்கொன்றபிரான்' என்றார்; இவர் 'தக்கசீர்ச்சடகோபன்' என்கிறார். அவர் 'யானே யென்றனதே யென்றிருந்தேன்' என்றார்; இவர் 'நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்' என்றார். 'எமர்கீழ்மேலெழு பிறப்பும் மாசதிரிது பெற்று' என்றார்; இவர் 'இன்று தொட்டு மெழுமையும்' என்றார். அவர் 'என்னால் தன்னை இன்தமிழ் பாடியவீசன் என்றார்; இவர் நின்று தன் புகழேத்த வருளினன்; என்றார். அவர் 'ஒட்டுமோயினி யென்னை நெகிழ்க்க, என்றார்; இவர் 'என்று மென்னை இகழ்விலன் காண்மின்' என்றார். அவர் 'மயர்வறமதி நலமருளினன்' என்றார்; இவர், 'எண்டிசையுமறிய வியம்புகேன் ஒண்டமிழ்ச் சடகோபனருளையே' என்றார். அவர் 'அருளுடையவன்' என்றார்; இவர் 'அருள் கண்டீரிவ்வுலகினில் மிக்கது' என்றார். அவர் 'பேரேனென்றென் நெஞ்சு நிறையப் புகுந்தான்' என்றார்; இவர் 'நிற்கப்பாடி யென் நெஞ்சுள் நிறுத்தினன்' என்றார். அவர் வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம்' என்றார்; இவர் 'ஆட்புக்க காதலடிமைப் பயன்' என்றார். அவர் 'ஆராத காதல்' என்றார்; இவர் 'ஆட்புக்க காதல்' என்றார். அவர் 'பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி யடிமை கொண்டாய்' என்றார்; இவர் 'பயனன்றாகிலும் பாங்கலராகிலும் செயல் நன்றாகத் திருத்திப்பணி கொள்வான்' என்கிறார். அவர் 'கோல மலர்ப்பாவைக் கன்பாகிய வென்னன்பேயோ' என்கிறார்; இவர் 'தென்குருகூர் நகர் நம்பிக்கன்பனாய்' என்றார். அவர் 'உலகம் படைத்தான் கவி' என்றார்; இவர் 'மதுரகவி' என்றார். அவர் 'உரைக்கவல்லார்க்கு வைகுந்தமாகும் தம்மூரெல்லாம்' என்றார்; இவர் 'நம்புவார் பதி வைகுந்தம் காண்மினே' என்றார்.

VI. கண்ணிநுண் சிறுத்தாம்பு சங்கதி

முதற்பாட்டில் பகவத் விஷயத்திலும் அதிசயிதமானவாழ்வாருடைய போக்யதாப்ரகர்ஷத்தையும், இரண்டாம் பாட்டில் அவருடைய பாசுரமே தேஹயாத்ரையாம்படி தாரகமானபடியையும், மூன்றாம் பாட்டில் ஆழ்வாருகந்த விஷயமென்று தமக்கு பகவத் விஷயம் உத்தேச்யமானபடியையும், நாலாம் பாட்டில் அப்படி உத்தேச்யமாகவிரும்புகைக்கடி தம்மை ஆழ்வார் விஷயீகரித்த விஷயீகாரமென்பதையும், ஐந்தாம் பாட்டில் இதர விஷய ப்ராவண்யத்தைவிட்டு பகவத் விஷயத்தில் நில்லாதே ஆழ்வாரளவும் வரும்படியான சாதுர்யத்தையும், ஆறாம் பாட்டில் ஆழ்வார் தம்மை விஷயீகரித்த விஷயீகாரத்தினுடைய தார்ட்யத்தையும், ஏழாம் பாட்டில் தம்மை விஷயீகரிக்கைக்கடியான ஆழ்வாருடைய க்ருபாப்ரகர்ஷப்ரகாசத்தையும், எட்டாம் பாட்டில் பகவத் க்ருபையினும் ஆழ்வாருடைய க்ருபையே இவ்விபூதியில் விஞ்சியிருக்குமென்பதையும், ஒன்பதாம் பாட்டில் இப்படி ஆழ்வாருடைய க்ருபை இவ்வுலகில் விஞ்சியிருக்கைக்கடி ஸகலவேத ரஹஸ்யார்த்த ஜ்ஞாபகமாய் தம்முடைய பாசுரமான இப்ரபந்தத்தைத் தன் னெஞ்சிலே ஸுப்ரதிஷ்டிதமாக்கினனென்பதையும், பத்தாம் பாட்டில் இப்படி ஆழ்வார் தம் பக்கல் உபகரித்த பிரகாரம் பிரத்யுபகார நிரபேக்ஷமா யிருக்குமென்பதையும் பதினோராம்

பாட்டில் இப்ரபந்தம் கற்றார்க்கு பலம் ஸ்ரீவைகுண்டமென்றும் ஸ்ரீ மதுரகவிகள் திருவாய்மலர்ந்தருளுகிறார்.

VII. மதுரகவி செய்கலை

வேதத்துக்கு ஓமென்னுமதுபோல உள்ள திருப்பல்லாண்டு தொடங்கி கண்ணிநுண் சிறுத்தாம்பு அறுதியாகவுண்டான பிரபந்தங்கள் பிரணவார்த்தமாயும், கண்ணிநுண் சிறுத்தாம்பு நமஸ்ஸினுடைய அர்த்தமாயும், மேலே 'நாராயணா வென்னும் நாமம்' என்று தொடங்கி உபபாதிக்கிற திருமொழி தொடங்கி 'நாராயணா ஓ மணிவண்ணா நாகணையாய் வாராய் என் ஆரிடரை நீக்காய்' என்கிற திருமடல்கள் ஈறாகவுண்டான ப்ரபந்தங்கள் நாராயண சப்தார்த்தமாயும் கைங்கர்யத்வராதிஶய ஸூசகமான சதுர்த்யர்த்தமாயும் அநுஸந்திக்கலாமென்பது ஆன்றோர் பணிப்பு. இதனாலன்றோ! 'வாய்த்த திருமந்திரத்தின் மத்திமமாம் பதம்போல், சீர்த்த மதுரகவி செய்கலையை—ஆர்த்தபுகழ், ஆரியர்கள் தாங்கள் அருளிச்செயல் நடுவே, சேர்வித்தார் தாத்பரியந்தேர்ந்து' என்ற பாசுரமும் எழுந்தது.

ஸ்ரீ வைஷ்ணவ தர்ம ப்ரவர்த்தகரான ஸ்ரீமந் நாதமுனிகள் தமது தேவகாநவல்லமையால் 'கண்ணிநுண் சிறுத்தாம்பைக் கொண்டு ப்ரமுஷிதமாய்ப்போன திவ்யப்ரபந்தங்களை உத்தரிப்பித்தார் என்ப.

VIII ஸஜ்ஜன மதுரகவி.

தேசிகனார் தேறிய மாஞானமுடன் திருக்கோளூரிற் சித்திரையிற் சித்திரைநாள் வந்துதோன்றி, ஆறிய நல்லன்புடனே குருகூர்நம்பிக் கநவரத மந்தரங்க வடிமைசெய்து, மாறனையல்லாலென்று மறந்துந் தேவுமற்றறியேனென்னு மதுரகவி' என இவரைப் புகழ்ந்தேத்துகின்றார். 'போதனார் நெட்டெழுத்து நமனாரிட்ட குற்றெழுத்தும் புனலெழுத்தாய்ப்போக மாறன், வேதமாயிரந் தமிழுமெழுதி யந்நாண் மேன்மைபெறு மதுரகவி' என்றதால் நம்மாழ்வார் வேதத்தின் சாரமாக அருளிச்செய்த திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்களையும் அவரது சீடரான மதுரகவியாழ்வார் பட்டோலை கொண்டனரென்க. "திருவாய்மொழி 1—2—1 'எத்திறம்' என்று ஆறுமாசம் மோஹித்துக்கிடந்தாரென்று பிரஸித்தமிறே; இவர் மோஹித்துக்கிடக்க, பெருமா

ளும் பிராட்டியும் பள்ளிகொண்டருளினவிடத்தை ஸ்ரீ குஹப்பெருமாள் நோக்கிக்கொண்டு கிடந்தாற்போலே, ஸ்ரீ மதுரகவி ப்ரப்ருதி ஸஜ்ஜனங்களடங்கலும் பலிதமான வ்ருக்ஷத்தைப் பக்ஷிஜாலங்கள் மொய்த்துக்கொண்டு கிடக்குமா போலே இவரைச் சூழ்ந்துகிடந்தார்கள்' என்பது ஈடு.

IX நாதமுனிகளும், மதுரகவிகளும்.

மதுரகவிகள் அருளிச்செய்த கண்ணிநுண் சிறுத்தாம்பு என்னுந் திவ்யப்ரபந்தத்தை நாதமுனிகள் பன்னீராயிரம் உரு தேவகாநத்தாற் பாடி நம்மாழ்வாரது திருவருளைப்பெற்று அவர் முகமாகத் திருவாய்மொழிமுதலானவற்றை யடைந்து உலகோர்க்கு உபகரித்தனரென்ப 'ஆரமுதினின்ப மிகு சடகோபன் சொல்லாயிரமுந் தெரிந்தெடுத்தே யடியார்க்கோதி, நாரதனு மனமுருக விசைகள்பாடு நாதமுனி' என வருதல் காண்க.

X ஆழ்வார் பிரசித்தி வெளிப்படல்.

'உத்தர கங்காதீரத் துயர்தவத்தோன்' என்றும் 'ஒளி கதிரோன் தெற்குதிக்க வுகந்துவந்தோன்' என்றும் கூறுகிறபடியால் ஸ்ரீ மதுரகவிகள் திருவயோத்தியை யடைந்து அர்ச்சாவதாரரூபமான ஸ்ரீராமபிரானையும் ஜாநகிப்பிராட்டியையுந் தரிசித்து அங்கு சிலகாலம் வசித்துநிற்க தெற்குதிக்கில் பேரொளியை ஓரிரவு ஸேவித்து அதைநோக்கியே பிரயாணப்பட்டு திருக்குருகூரை யடைந்து அஃது சடகோபமுனிவரது திருமேனி விளக்கமெனக் கண்டு ஸேவித்து அவரையே ஆசாரியராகக்கொண்டு சரணம் புகுந்தார் என்ற வரலாறு விளக்கப்படுகிறது. ஸ்ரீ சடகோப தத்துவம் இன்னதென நன்குணர மதுரகவி தத்துவம் இன்னதென உணரல் வேண்டும். இதனைப் பலர் பலபடியாகக் கூறுப. உண்மைகண்டு தெளிக.

'சேமங்குருகையோ? செய்ய திருப்பாற்கடலோ? நாமம் பராங்குசமோ? நாரணமோ?—தாமந், துளவமோ? வகுளமோ? தோளிரண்டோ? நான்கு, முளவோ? பெருமானுனக்கு" என மதுரச்சங்கத்தாரனைவரும் ஒருங்கேபாடும்படி செய்தவர் மதுரகவியார், இதுவன்றோ உத்தமசீடன்பணி. ஆசாரியன் புத்திமானான சிஷ்யனால் பிரகாசிக்கப்படுகிறான் என்பதற்கு இதனினும் சான்று வேண்டுமோ?

XI தொல்வழி.

திருக்கோளூர் அவதரித்த செல்வனாரே பராங்குசனை பரமென்றுபற்றி மத்திமமாம் பதப்பொருளை விளக்கி துன்பற்ற மதுரகவியானார். இவர்தோன்றக் காட்டும் தொல்வழியே துணிவோர்கட்கு நல்வழி. ஆசார்ய பாரதந்த்ரரான அநந்தாழ்வானுக்கும் சித்திரையில் சித்திரையே திருநக்ஷத்ரமாதலான் அவருக்கு மதுரகவிதாஸர் என்று தாஸ்யநாமம்.

XII பதிற்றந்தாதியும் நூற்றந்தாதியும்.

மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரைச் சரணமடைந்து 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னும் பதிற்றந்தாதியைப் பாடினர். அவரை அடியொற்றி கம்பநாட்டாழ்வாரும் அதற்குப் பத்துமடங்காக சடகோபரந்தாதி என்ற ஆழ்வார் நூற்றந்தாதியைப் பாடினர். கம்பநாடர் தாம் ஆழ்வார் விஷயமாகப் பிரபந்தம் பாடுதற்கு மதுரகவியாழ்வாரை 'மார்க்கதர்சீ மஹர்ஷி:' என்றபடி வழிகாட்டியாகக் கொண்டனர். நம்மாழ்வார் விஷயமாகப் பிரபந்தம்பாடிய சிறப்பினாலேயே கம்பரும் மதுரகவியும் ஆழ்வாரெனப்படுகின்றனர். மதுரகவி ஒரு பதிகம்பாடினர். அதற்கு ஈடாக கம்பர் பத்துமடங்குபாடி விஸ்தார கவியானார். அவர் வடதிசையினின்று ஆழ்வார் திருநகரிக்குச் சென்று சதகம்பாடினர். இவர் திருவரங்கத்திலிருந்தே சதகம்பாடினர், அதன் இறுதிச்செய்யுள் காண்மின்.

'மன்றே புகழுந் திருவழுந்தூர் வள்ளன் மாறனைமுன்
சென்றே மதுரகவிப் பெருமாடென் றமிழ்த் தொடையி
லொன்றே பதிகமுரைத்தவன் பொன்னடியுற்று நின்றா
னென்றே பதிகம்பதிகமாக விசைத்தனனே'.

XIII முடிவு.

மதுரகவிப்பெருமாள் காட்டிய தொல்வழியே நம்மனோர்க்கு நல்வழி. அதன்வழியே ஏகி அதன்வழியே மீள்வோமாக.

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தி

இப்பத்ரிகையின் சென்ற வருஷ ஸஞ்சிகைகள் 12-ம் ஒன்றாகப் பயிண்டு செய்யப்பட்டிருக்கின்றன. வேண்டுவோர்கள் ரூ. 1-12-0 மணியார்டர் செய்தால் புஸ்தகம் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

வர்த்தமானங்கள்

வைஜயந்தீ பத்ரிகாபிமாநிகளான மஹாநுபாவர்களின் நன்கொடைகள்

1. ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி வானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி அநுக்ரஹித்தது ரூ. 25-0-0.

2. பெருமாள் கோவில் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார் விஷயதானமருள்வதோடு நில்லாமல் ஸ்ரீரங்கராஜஸ்தவம் பாலபோத ரஸாயநம் முதலான 30 ரூபாய் பெறுமான க்ரந்தங்களை உபகரித்தருளினார்.

3. சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ உ. வே. S. வரதாசாரியார் 10-0-0 ரூபாய் அநுக்ரஹித்தார்.

4. திருவல்லிக்கேணி அட்வகேட் ஸ்ரீ உ. வெ. C. நரஸிம்மாசாரியார் மாதந்தோறும் தவறாது ரூ. 1-0-0 உபகரித்துவருகிறார்.

5. திருவல்லிக்கேணி அட்வகேட் ஸ்ரீ உ. வே. R. கேசவய்யங்கார் பரதி மாதம் பரம க்ருபையுடன் ரூ. 1 உபகரித்து வருகிறார்.

6. ஸ்ரீமான் P. கோவிந்தராஜுலு ராஜு மாதம் 1-0-0 கொடுத்துதவுகிறார்.

7. நீலிநல்லூர் ஸ்ரீ உ. வே. தோதாத்ரி அய்யங்கார் மாதம் 1-0-0 கொடுத்துதவுகிறார்.

8. சென்னை கொத்தவால்சாவடிக் கெதிரில் காப்பி ஹோட்டல் வைத்திருக்கும் ப்ரஹ்ம ஸ்ரீ கிருஷ்ணய்யரவர்கள் ரூ. 10-0-0 கொடுத்துதவி புரிந்தார்.

9. ஸ்ரீமான் M. V. மாணிக்கமுதலியார் சென்ற வருஷம் ரூ. 7-0-0 கொடுத்துதவினார்.

மற்றும் சிலர் போஷகர்களாக ரூ. 5-0-0 கொடுத்துதவி புரிகிறார்கள்.

மற்றும் பலர் மாதம் 0-4-0 கொடுத்துதவிவருகிறார்கள்.

வேறு சிலர் நமது சபைக்கு ரூ. 1-0-0 கொடுத்துதவியிருக்கிறார்கள்.

மேற்சொன்ன மஹாநுபாவர்களின் பெயரை மற்றொரு சமயம் விவரிப்போமாக.

இன்னமும் சில மஹாநுபாவர்களின் பேருதவியை எதிர்பார்த்திருக்கின்றது வைஜயந்தீ.

ஓர் பத்ரிகை

[தி. ஈ. சடகோபாசாரியார் திருப்பாப்புலியூர்.]

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ பத்ராதிபருக்கு

சென்றமாசிமீ வைஜயந்தீ ஸஞ்சிகையில் ஸ்ரீ. உ. வே. காஞ்சி [illegible]. அண்ணங்கராசாரியார் ஸ்வாமி ஸ்ரீபராசரபட்டர் ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் 'வராரோஹ:' என்கிற திருநாமத்திற்கு வ்யாக்யாநம் செய்தருளுமிடத்தில் "[illegible]" என்கிற வாக்யத்திற்கு ஸரியானபொருள் ஏற்படவில்லையென்றும் மஹான்களைக் கேட்டால் பாடம் வேறு பட்டிருக்க வேண்டுமென்று மட்டில் சொல்வதாகவும், இது விஷயமாய் யாராவது விமர்சித்துத் தெரிவிக்க வேண்டுமென்றும் கூறி யிருக்கிறார். விஶிஷ்ட ஜ்ஞாநவான்கள் நிர்ணயிக்க வேண்டிய விஷயத்தில் அடியேன் போன்றவர்களுக்கு ப்ரவேஶத்திற்கே அதிகாரமில்லாமலிருந்த போதிலும் [illegible] ஒரு கால் இங்கு அவகாஶமிருக்கலாமோ வென்கிற [illegible] இது விஷயமாக இங்கு விஜ்ஞாபநம் செய்வதற்குக் காரணம்.

"[illegible]" என்று [illegible] இருந்திருக்கலாமென்று அடியேனுக்குத் தோன்றுகிறது.

[illegible]த்தால் [illegible] விடப்பட்டும் '[illegible]' என்று சேர்க்கப்பட்டு மிருக்கக்கூடும், பின்வரும் '[illegible]' என்கிற பதத்தில் [illegible] ஏறக்குறைய ஒத்திருப்பதால். இப்படி கைப்பிசகினால் இரட்டித்திருக்கலாம். இப்படியானால் வாக்யத்திற்கு [illegible] என்று அர்த்தம் ஸ்வரஸமாக ஏர்ப்படக்கூடுமென்று தோன்றுகிறது. ஆதலால் இதுவிஷயத்தில் வித்வான்களின் அபிப்ராயமே ப்ரமாணமாகையால் கேவலம் [illegible]மாத்ரம் அடியேனுடைய [illegible]மாகும்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

1. கம்பர் திருநாட்கோண்டாட்டம் :—திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தின் 3-வது கம்பர் திருநாள் கொண்டாட்டம் 26-3-37௳ மாலை 3-30 மணிக்கு திருவல்லிக்கேணி தெள்ளிய

சிங்கப்பெருமாள் கோவில் தவன உத்ஸவபங்களாவில் மிகச் சிறப்பாக ஆரம்பமாகியது. பல கனதனவான்கள் விஜயஞ் செய்திருந்தனர்.

காரியதரிசிபாடிய கடவுள்வாழ்த்துக்குப் பின்னர் சங்கத் தலைவரால் மதுரை அட்வகேட் ஸ்ரீமான் டி. வி. ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கட்கு ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டதுடன் அன்றைய அவைத்தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. ஸ்ரீமான் வி. நரஸிம்மாசாரியாரும் டாக்டர் சாமிநாதையரும் ஆமோதிக்க, அய்யங்கார் அவர்களும் அங்கீகரித்துத் தலைமைதாங்கினார்.

கம்பர் திருநாளை வாழ்த்தி அனுப்பப்பட்டிருந்த பலபாடல்களைப் பாடிய பின்னர் காரியதரிசி வருடநடவடிக்கை வாசிக்க, பலர் எழுதியனுப்பியிருந்த வியாசங்களின் சாராம்சங்களையும் எடுத்துரைத்தபின்னர் ஸ்ரீ. உப வே ஸ்ரீ காழிச்சீராம விண்ணகரம் கம்பராமாயணம் ஆர். சந்தான கிருஷ்ணய்யங்கார் அவர்களால் கம்பராமாயணப்பாக்கள் சில இன்னிசையுடன் அழகாகப் பாடப்பெற்றன. தலைவர்கட்கும் உபந்யாசகருக்கும் சங்கத் தலைவர் பூமாலையிட்டார்.

அவைத்தலைவர் முன்னுரையாக அழகியதோர் சிறு பிரசங்கம் செய்தபின் ஸேதுஸமஸ்தான மஹா வித்வானும் அண்ணாமலை யுனிவர்ஸிடி ரீடருமான பாஷாகவிசேகர ஸ்ரீ. உப, வே ஆர். ராகவய்யங்கார் ஸ்வாமி 'கம்பர் கவித்திறம்' எனும் விஷயம்பற்றி அரியதோர் உபந்யாசம் செய்தார்.

தலைவர் முடிவுரையாகச் சற்றுக்கூறிமுடித்தலும் காரியதரிசி வந்தனோபசாரம் அளிக்க இரவு 7-மணிக்குக் கொண்டாட்டம் இனிது முடிந்தது. சங்கத்தின் சார்பாக 31-3-37௳ ஸ்ரீ. உப வே ராகவய்யங்கார் ஸ்வாமிக்கு நூற்றுமுப்பது ரூபாய் ஸம்பாவனையாக ஸமர்ப்பிக்கப்பட்டது.

2. த்மிழ்த்திருநாட்கோண்டாட்டம் :—ஈசுவர வருடம் சித்திரை மாதம் முதல் தேதி 13-4-37 செவ்வாய்க்கிழமை மாலை 6-30 மணிமுதல் 8-மணிவரை சங்கக் காரியாலயத்தில் தமிழ்த்திருநாட் கொண்டாட்டம் சிறப்பாக நடந்தது. "தமிழின்பெருமை" என்ற விஷயத்தை ஸ்ரீ. உப வே ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி உபந்யசித்தார்.

3. எம்பெருமானர் மஹோற்சவம் சோண்டாட்டம் :—16-4-37௳ முதல் 25-4-37௳ முடிய பிரதிதினம் மாலை 6-30 மணி முதல் 8 மணிவரை சங்கக்காரியாலயத்தில் அடியிற்கண்ட விபரப்படி உபந்யாசங்கள் நடந்தன. 1· ஸ்ரீ. உப வே ஆர். கேச

வய்யங்கார். 17-4-37; 19-4-37; 23-4-37; 24-4-37உகளில் முறையே எம்பெருமானும் வேதவ்யாசரும்; எம்பெருமானும் வால்மீகியும்; எம்பெருமானும் பாணிநியும்; எம்பெருமானும் தேசிகனும் விஷயங்கள். (2) ஸ்ரீ உபவே ஸி. நரஸிம்மாசாரியார் ஸ்வாமி: 16-4-37; 20-4-37; 25-4-37 எம்பெருமானும் ஆழ்வாரும்; எம்பெருமானும் திருமங்கைமன்னனும்; எம்பெருமானும் ஆண்டாளும் முறையே விஷயங்கள். (3) ஸ்ரீ உப வே குரிச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியார் ஸ்வாமி.- 18-4-37உ எம்பெருமானும் ஆளவந்தாரும் விஷயம். (4) ஸ்ரீ உப வே ஸாதுராமாநுஜாசாரியார் ஸ்வாமி. 21-4-37உ எம்பெருமானும் பட்டரும் விஷயம். (5) ஸ்ரீ உப வே ஸ்ரீரங்கம் சடகோபாசாரியார் ஸ்வாமி 22-4-37உ எம்பெருமானும் வரவரமுனியும்.

4. கோச்சி மஹாராஜாவுக்குப் பாராட்டு:—2-5-37உ ஞாயிற்றுக்கிழமை 4-மணிக்கு திருவல்லிக்கேணி ஸ்ரீ வானமாமலை மடத்தில் கொச்சி மஹாராஜாவின் சநாதனதர்மநெறி நிற்கைக்கு விசேஷப் பாராட்டுக் கொண்டாட்ட விழா நடந்தது. ஸ்ரீமான் ஸி. நரஸிம்மாசாரியார் ஸ்வாமி தலைமை வகித்தார். கொச்சி மஹாராஜாவின் உறுதியான சநாதன தர்மநெறி நிற்றலை நன்கு சிலாகித்தும், அன்னார் அரோஹத்ருட காத்ரராய் நெடுங்காலம் தர்மபரிபாலனம் செய்ய வேண்டுமென்றும், அவரது திவான், ஸர். ஆர். கே. ஷண்முகஞ் செட்டியாரின் நடுவுநிலைமையைக் கொண்டாடியும், திருவிதாங்கூர் மஹாராஜா இன்னும் இதுவிஷயத்தில் சாஸ்திர அசம்மதமான காரியத்தில் ஈடுபடுவதை கண்டித்தும், வைசிராயவர்கள் பிராசீனமுறையை நிலைநாட்டி இதை முடிவுசெய்ய வேண்டுமென்றும், கூடல் மாணிக்கம் வைதிகர்களை நன்கு பாராட்டியும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின். ஸ்ரீமான்கள், என்: ஸ்ரீநிவாஸாசாரியார், ஸ்ரீரங்கம் சடகோபாசாரியார், ஆர். கேசவய்யங்கார்: வைத்யநாத ஸ்வாமி ஐயர். ஆர். நாராயணசாமி அய்யர் இவர்கள் ஆதரித்துப்பேசினர். ஸ்ரீமான் யஸ் - லக்ஷ்மி நரசிம்மாசாரியார் அளித்த வந்தனோபசாரத்துடன் சபை மாலை 6-மணிக்கு முடிவடைந்தது

5. அரிய உபந்யாஸம்:—காரியதரிசியின் கனிஷ்ட குமாரன் அப்த பூர்த்திவிழாவை யொட்டி 3-5-37உ காரியாலயத்தில் ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்களால் 'ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்ஹ தத்வம்' எனும் விஷயம் உபந்யசிக்கப்பட்டது. இஷ்டமித்ர பந்துக்களுக்கு இரவில் சிறு விருந்து ஒன்று நடந்தது.

6. அமலனாதிப்பிரான் தோடக்கம்:—இராயப்பேட்டை அய்யாமுதலி தெரு ஆறும் நம்பர் மேன்மாடியில் நடைபெற்று

வரும் தமிழ்வகுப்புகளில் 5-5-37உ புதன்கிழமை சங்கத்தலைவர் 'அமலனாதிப்பிரான்' தொடக்கம் செய்தார். பிரதிவாரம் காரியதரிசியால் இது தொடர்ந்து நடத்தப்படும்.

ப. ரே. திருமலை ஐயங்கார் காரியதரிசி.

மஹா ஸம்ப்ரோக்ஷணை

ஸ்ரீ மன்னார்கோவில் ஸ்ரீ வீர நாராயணப்பெருமாள் ஸந்நிதி நாச்சியார் (மரதகவல்லித்தாயார்) ஸந்நிதி ஜீர்ணோத்தாரணமாய் நாளது௵ வைகாசிமீ 26உ (8-6-37) அங்குரார்ப்பணம் ஆரம்பித்து 29 (11—6—37) ல் மஹா ஸம்ப்ரோக்ஷணை நடைபெறும். மன்னனார், ஸ்ரீ மந்நாதமுநிகள், ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளில் ப்ராவண்யமுள்ள ஆஸ்திகர்களனைவரும் தங்களாலியன்ற பொருளுதவிசெய்து ஷை ஸம்ப்ரோக்ஷணத்தை நடத்திவைத்து தாயார் கடாக்ஷத்தைப் பெறவேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்

S. ஸ்ரீரங்காசாரியார்.	நாட்டு. தி. கிருஷ்ணரெட்டி
நாட்டு. ஜி. விச்வநாத ரெட்டி.	தேவஸ்தாந ட்ரஸ்டிகள்.

உத்ஸவாதிகள்

ஸ்ரீரங்கம்:—வைகாசி 4உ 17-5-37 வஸந்தோத்ஸவ ஆரம்பம். 12 (25-5-37) ஷை சாற்றுமுறை. ஆனி. 11. (24-6-37) ஜேஷ்டாபிஷேகம் 11. (24-6-27) திருப்பாவாடை.

திருமலை:—வைகாசி 4. (17-5-37) கோவிந்தராஜன் ப்ரஹ்மோத்ஸவ ஆரம்பம். 8. (21-5-37) கருடஸேவை. (24-5-37) திருத்தேர். (25—5—37) அவப்ருதம்.

பெருமாள் கோவில்:—வைகாசி 4 (17-5-37) பவழவண்ணன் உத்ஸவ ஆரம்பம் 10. (23-5-37) தேவபெருமாள் உத்ஸவ ஆரம்பம் 12. (25-5-37) கருடஸேவை. 16. (29-5-37 திருத்தேர்.

ஆழ்வார் திருநகரி:—வைசாசி 2. (15-5-37) ஆழ்வார் உத்ஸவ ஆரம்பம். 19-5-37 நவதிருப்பதி கருடஸேவை 21-5-37 உடையவருக்கும், நம்மாழ்வாருக்கும ஏகாஸநத்தில் திருமஞ்சனம் 11. (24-5-37) சாற்றுமுறை.

ஸ்ரீவில்லிபுத்தூர்:—வைகாசி 28. (10-6-37) பெரியாழ்வார் உத்ஸவ ஆரம்பம் ஆனி 6, (24-6-37) சாற்றுமுறை.

திருக்கண்ணபுரம்—வைகாசி 4. உத்ஸவ ஆரம்பம் 7. (20-5-37) கருட ஸேவை 12. (25-5-38) திருத் தேர்.

திதிகள்:—வைகாசி 8. (21-5-37) ஏகாதஸீ. 11. (24-5-37) பௌணர்மி. 23. (5-6-37) ஏகாதஸீ 26. (8-6-37) அமாஸாஸ்யை. ஆனி 6. (19-6-37) ஏகாதஸீ. 10. (23-6-37) பௌர்ணமி.

நிபந்தனைகள்

1. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபக சபையின் சார்பாக இப் பத்திரிகை நடைபெறும்.

2. எந்த சம்ப்ரதாயத்தைப்பற்றியும் இழிவான வாசகம் எக்காரணத்தை யிட்டும் இதில் ப்ரசுரிக்கப்பட மாட்டாது.

3. ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் விரும்பி வாசிக்கக்கூடிய ஸத்விஷயங்களை சிற்றறிவுடைய என் போல்வார்களுக்கும் சிறிது பயன் படுமாறு வித்வான்கள் எழுதி யநுக்ரஹித்தால் அவை இதில் ப்ரசுரிக்கப்படும்.

4. ஷை சபையில் அங்கத்தினராகச் சேர இஷ்ட முடையவர்கள் ப்ரவேசக் கட்டணமாக ரூ. 1—0—0 தயவு செய்தால் அது சபைக்கு மூலதனமாக ஆகும்.

5. வருஷத்திற்கு 5 ரூ. கொடுக்குமவர்கள் போஷகர்களாவார்கள.

விளம்பரம்

முழுப்பக்கம் ஒரு தடவைக்கு		...	5	0	0
அரைப்பக்கம்	,,	...	3	0	0
கால்பக்கம்	,,	....	2	0	0

—பத்ராதிபர்.

ஸ்ரீரங்கராஜஸ்தவம்

இந்தக்ரந்தம் பரமகாருணிகரான ஸ்ரீ பராஸரபட்ட ரருளிச் செய்தது. இது பெருமாள்கோவில் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசார்யரால் அநுக்ரஹிக்கப்பட்ட தத்வார்த்த சிந்தாமணி என்கிற வ்யாக்யாநத்துடன் அச்சாய் வெளிவந்திருக்கின்றது. சில ப்ரதிகளே உள்ளன. வேண்டுமவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதுக.

546 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 2—8—0

S. R. S. வைஜயந்தீ ஆபீஸ்

24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

யுனைடெட் இந்தியா

லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி

(லிமிடெட்)

தலைமை ஆபீஸ் : மதராஸ். ஸ்தாபிதம் : 1906

டிரஸ்டி : மதராஸ் அபீஷ்யல் டிரஸ்டி.

பாலிஸிதாரர்களின் நன்மையையே கோரி பணி செய்யப்படுகிறது.

க்ளெய்ம்கள் தாமதமின்றி தீர்க்கப் படுகின்றன. நல்ல சேமிப்பு, திறமை யான நிர்வாகம், லாபகரமான பாலிஸி நிபந்தனைகள், குறைந்த ப்ரீமியம், நிறைந்த போனஸ், இவை

யுனைடெட் இந்தியாவை

ஒரு சிறந்த இன்ஷூரன்ஸ் கம்பெனி யாக்குகின்றன.

பூரா விவரங்களுக்கும் தலைமை ஆபீஸ் :

யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்,

செம்புதாஸ் தெரு, மதராஸூக்கும்

அல்லது

கீழ்க்கண்ட இடங்களிலுள்ள ஆபீஸூகளுக்காவது எழுதவும்

ஆலீான்ஸல்	டாக்கா	லாகூர்	ராஜமகேந்திர புரம்
பெங்களூர்	டில்லி	பாட்னா	ரங்கூன்
பெஜவாடா	கௌஹாத்தி	மதுரை	ஸில்கார்
பம்பாய்	கூட்டி	மங்களூர்	தஞ்சாவூர்
கல்கத்தா	ஹௌரா	நாகப்பூர்	திருவனந்த பு(ரம்
ள்ளிக்கோட்	சிட்டகாங்	ஹைதராபாத்.	உடுப்பி
கத்தூர் ஓ	ஜல்பெய்குரி		

உடையவர் திருமஞ்சன கட்டியம்

(3 ரிகார்டு ஸெட் C. A. 1022 to 1024)

காஞ்சீபுரம் பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியரருளியது.

பூஜைக்குகந்த ரிகார்டுகள்

(அண்ணத்துரை கனபாடிகள் அருளியது)

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமஸ்தோத்ரம்.
(C. A. 753-755 3 ரிகார்டு ஸெட்)

லக்ஷ்மி அஷ்டோத்தரம் & ஸ்ரீஸூக்தம்.
C. A. 778

கிருஷ்ணஷ்டோத்தர ஶதநாம ஸ்தோத்ரம்.
& ஆதித்ய ஹ்ருதயம் C. A. 844

தைத்திரீயோபநிஷத் பாகம் 1 & 2.
C. A. 999

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்

மதராஸ்.

ராவணன், ம்ருத்யுவினலேவப்பட்டவனய்க்கொண்டு, மாரீசனுடைய வார்த்தையை அநாதரித்து, மாரீசனேடு கூட அப்போதே (கரதூஷணதிகளைக் கொன்றதால் ப்ரஸித்தனை) ராமனுடைய ஆஶ்ரமமிருக்குமிடத்தை அடைந்தான்.

42. 𑌤𑍇𑌨 𑌮𑌾𑌯𑌾𑌵𑌿𑌨𑌾 𑌦𑍂𑌰𑌂 𑌅𑌪𑌵𑌾𑌹𑍍𑌯 𑌨𑍃𑌪𑌾𑌤𑍍𑌮𑌜𑍌
𑌜𑌹𑌾𑌰 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌂 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌗𑍃𑌧𑍍𑌰𑌂 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌜𑌟𑌾𑌯𑍁𑌷𑌂

தேந மாயாவிநா தூரம் அபவாஹ்ய ந்ருபாத்மஜௌ
ஜஹார பார்யாம் ராமஸ்ய க்ருத்ரம் ஹத்வா ஜடாயுஷம்

𑌅𑌨𑍍𑌵𑌯𑌂-𑌮𑌾𑌯𑌾𑌵𑌿𑌨𑌾 𑌤𑍇𑌨 𑌨𑍃𑌪𑌾𑌤𑍍𑌮𑌜𑍌 𑌦𑍂𑌰𑌂 𑌅𑌪𑌵𑌾𑌹𑍍𑌯, 𑌜𑌟𑌾𑌯𑍁𑌷𑌂 𑌗𑍃𑌧𑍍𑌰𑌂 𑌹𑌤𑍍𑌵𑌾, 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌂 𑌜𑌹𑌾𑌰.

𑌅𑌰𑍍𑌥𑌃-𑌤𑍇𑌨 𑌇𑌤𑌿-𑌮𑌾𑌯𑌾𑌵𑌿𑌨𑌾 - 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑌮𑌾𑌯𑌾𑌵𑌤𑌾, (𑌮𑍋𑌹𑌨𑍀𑌯 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌕𑌨𑌕𑌮𑍃𑌗𑌵𑍇𑌷𑌧𑌾𑌰𑌿𑌣𑌾 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃) 𑌤𑍇𑌨 𑌮𑌾𑌰𑍀𑌚𑍇𑌨, 𑌨𑍃𑌪𑌾𑌤𑍍𑌮𑌜𑍌-𑌦𑌶𑌰𑌥𑌪𑍁𑌤𑍍𑌰𑍌, 𑌦𑍂𑌰𑌂 𑌯𑌥𑌾 𑌭𑌵𑌤𑌿 𑌤𑌥𑌾, 𑌅𑌪𑌵𑌾𑌹𑍍𑌯-𑌅𑌪𑌸𑌾𑌰𑍍𑌯 (𑌦𑍃𑌶𑍍𑌯𑌾𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑌯𑌾 𑌰𑌾𑌮𑌂, 𑌰𑌾𑌮𑌸𑌦𑍃𑌶𑌸𑍍𑌵𑌰𑍇𑌣 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌂 𑌚, 𑌦𑍂𑌰𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑌾𑌸𑍍𑌯, 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 (𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍀𑌤𑌾𑌵𑌿𑌮𑍋𑌚𑌨𑌾𑌯 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂) 𑌜𑌟𑌾𑌯𑍁𑌷𑌂-𑌜𑌟𑌾𑌯𑍁𑌨𑌾𑌮𑌕𑌂 𑌗𑍃𑌧𑍍𑌰𑌂, 𑌹𑌤𑍍𑌵𑌾-𑌮𑌰𑌣𑌪𑌰𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌿𑌨𑍀𑌂 𑌹𑌿𑌂𑌸𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾, 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯, 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌂-(𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌪𑌾𑌯𑌿𑌨𑍀𑌂) 𑌸𑍀𑌤𑌾𑌂, 𑌜𑌹𑌾𑌰-𑌹𑍃𑌤𑌵𑌾𑌨𑍍.

𑌅𑌤𑍍𑌰 𑌮𑌾𑌯𑌾𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌾 𑌸𑍀𑌤𑍈𑌵𑌾𑌪𑌹𑍃𑌤𑌾. 𑌸𑍍𑌵𑌯𑌮𑌨𑍍𑌤𑌰𑍍𑌹𑌿𑌤𑌾. 𑌅𑌤𑌏𑌵 𑌮𑌾𑌯𑌾𑌸𑍀𑌤𑌾𑌯𑌾 𑌅𑌗𑍍𑌨𑌿𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌾𑌯𑌾𑌂 𑌨𑌿𑌜𑌸𑍀𑌤𑌾𑌯𑌾𑌃 𑌉𑌤𑍍𑌥𑌾𑌨𑌂. 𑌯𑌥𑌾𑌕𑌥𑌂𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌯𑍋𑌗𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌯𑌾𑌃 𑌵𑌰𑍍𑌣𑌨𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌾𑌰𑌸𑍍𑌯𑌂 𑌉𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇, 𑌇𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌃.

சிறந்த மானின் மாயையையுடைய (ஆசைப்படத் தகுந்த ஆஶ்சர்யமான ஸ்வர்ணமயமான மானுருவைத் தரியா நின்ற) அந்த மாரீசனல், சக்ரவர்த்தியின் திருக்குமாரர்களான ராமலக்ஷ்மணர்களை தூரமாகப் போக்கி (கண்ணுக்கு விஷயமாகும்படி ஸமீபத்தில் நின்றும், கண்ணுக்கு விஷயமாகாதபடி அதி தூரத்திற் சென்று இராமனையும், ராமனுடைய கண்டத்வநியோடொத்த ஶப்தத்தினல் லக்ஷ்மணனையும் தூரமாகச் செல்லும்படி செய்து) நடுவில் ஸீதையை விடுவிக்க வந்த ஜடாயு வென்கிற கழுகரசனை

மரணத்தை யடைவிக்குமதான உபத்ரவத்தைப்பண்ணி, ராமனுடைய (எப்போதும் விட்டுப் பிரியாதவளான) ஸீதையை அபஹரித்தான். இவ்விடத்தில் அபஹரித்தான் என்ற வினைமுற்றிற்கு ராவணன் என்ற பதத்தை வருவித்துக்கொள்ளவேண்டும்.

இவ்விடத்தில், ராவணனுலபஹரிக்கப்பட்ட ஸீதை மாயா ஸீதையே. நிஜ ஸீதை, அக்நியில் அந்தர்ப்பவித்து விட்டாள். ஆகையாலே தான், மாயா ஸீதை அக்நிப்பிரவேஶம் செய்தவளவில், நிஜ ஸீதை அக்நியில் நின்றும் வெளிக்கிளம்பினுள். எவ்விதத்தாலும் லோகாபவாத முண்டானதால் மறுபடியும் காட்டிற்கனுப்புதல் கூடும் என்று சொல்லுகிறார்கள்.

43. க்ருத்ரஞ்ச நிஹதம் த்ருஷ்ட்வா ஹ்ருதாம் ஶ்ருத்வா ச மைதிலீம்
ராகவஶ்ஶோகஸந்தப்தோ விலலாபாகுலேந்த்ரிய:

க்ருத்ரம்ச நிஹதம் த்ருஷ்ட்வா ஹ்ருதாம் ஶ்ருத்வாச மைதிலீம்
ராகவஶ் ஶோகஸந்தப்த : விலலாபாகுலேந்த்ரிய:

அந்வய:-ராகவ:, நிஹதம் க்ருத்ரஞ்ச த்ருஷ்ட்வா, மைதிலீம் ஹ்ருதாம் ஶ்ருத்வா, ஶோகஸந்தப்த: (அதஏவ) ஆகுலேந்த்ரிய: விலலாப—

அர்த்த:-ப்ரதமம்ச மாரீசஹநநம், பர்ணஶாலாயாம் ஸீதாயா: அதர்ஶநேந தத³ந்வேஷணஞ்ச, சகாரேண ஸமுச்சீயதே நிஹதம்-மாரிதப்ராயம், க்ருத்ரம்-ஜடாயுஷம், த்ருஷ்ட்வா, (தந்முகாத்) மைதிலீம்-ஸீதாம், ஹ்ருதாம்-(ராவணேந) அபஹ்ருதாம், ஶ்ருத்வா, ராகவ:, ஶோகஸந்தப்த:-ஶோகேந ஸந்தப்தஸ்ஸந். ஸீதாயா: அதர்ஶநேந தப்த:, ஜடாயுமரணேந ஸந்தப்த: அதஏவ ஆகுலேந்த்ரிய: கலுஷித ஸர்வேந்த்ரியஸ்ஸந் விலலாப-பரிதேவநமகரோத். அத்ர ராகவ மைதிலீஶப்தாப்யாம் குலத்³வயாவத்³யகாரித்வேந ஹரணஸ்ய ஶோகாதிஶயஹேதுத்வம் த்³யோத்யதே.

நநு-விஷ்ணோரவதாரபூதஸ்ய ராமஸ்ய கதம் ஶோகமோஹௌ ஸம்பவத: இதி. ஸம்பவத ஏவ புருஷஶ்ரேஷ்டஸ்ய. யதிஹி, லோகோத்தரகுணவிஶிஷ்டவஸ்துவிநாஶேऽபி தௌ ந ஸ்யாதாம், தர்ஹி ஸ கதம் புருஷஶ்ரேஷ்ட

ஸ்ஸ்யாத். கதமுத்தமதி ஸௌந்தர்யஸ்ஸ்யாத். தயோருபயோரபி நமஸ்கார ஏவஸ்யாத். வக்ஷ்யதி ச மஹாபுருஷகுணவர்ணந ப்ரகரணே, "வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருஶம் பவதி து:கித:" இதி. ஶரத்ஸு வக்ஷ்யதி "..." ராமோ ஹீநோ ... ந து:கேநாவஸீததீ"தி—

தமிழ்நாடு ... காப்பக நூலகம் சென்னை-600 008
218934.

மானுருக்கொண்ட மாரீசனைக் கொன்று, பர்ணஶாலையில் ஸீதையைக் காணுமல் வருந்தி, அவளைத் தேடிக்கொண்டு வாராநின்றவளவில் (பிராட்டியை விடுவிக்க வந்து), தன் ப்ராணனை விடுவான் நின்ற ஜடாயுவைப் பார்த்து, (அதன் வார்த்தையினுல்) ஸீதை ராவணனுலபஹரிக்கப்பட்டாளென்பதைக் கேட்டு ஶோகத்தால் மிகவும் வருந்தினவனுய்க் கொண்டு, (அதனுலேயே) கலுஷிதமான ஸர்வேந்திரியங்களை யுடையவனுய்ப் புலம்பினுன்.

இவ்விடத்தில் ராகவன் மைதிலீ என்கிற ஶப்த ப்ரயோகத்தால் ரகுகுலம் ஜநககுலம் என்கிற இவ்விரு குலத்திற்கு மவத்யத்தை விளைவிக்கக் கூடியது இந்த ஸீதா பஹரணம் என்று, ஶோகாதிஶயத்திற்குக் காரணம் சொல்லப்பட்டது. விஷ்ணுவின் அவதார பூதனை ராமனுக்கு ஶோக மோஹங்களுண்டாயின வென்ப தெங்ஙனே கூடுமென்னில் புருஷ ஶ்ரேஷ்டனுக்கு உண்டாகக் கூடியவைகளே. லோகோத்தரமான குணங்களோடு கூடிய வஸ்துவை யிழந்த காலத்தும் ஶோக மோஹங்களுண்டாகவில்லையே யானுல் அவன் எப்படி புருஷ ஶ்ரேஷ்டனுவான்? அதெங்ஙனே அதிக அழகுடையதாக வாகும்? அவ்விரண்டிற்கும், நமஸ்காரமே யன்றோ! ஆகும்.

"மஹா புருஷகுணஶ்ரேஷ்டவர்ணந ப்ரகரணத்தில் ஸத்புருஷர்களுக்கும் ஸாதாரண மாயிருக்கும் குணங்களைச் சொல்லி தநிக தரித்ர ப்ராஹ்மணுதி பேத மன்றியில் கேவலம் மனித ஜாதியிற் பிறந்தவர்களெவரேனுமவர்களுக்கு வ்யஸந முண்டானுல், அவர்களுக்குண்டான வ்யஸநம் நம் பரிபாலநக் குறைவாலென்றறுதியிட்டு அவர்களைக் காட்டிலும் விஞ்சிய துக்கத்தை யுடையவனுகிறுன்" என்கிற அயோத்யா புரவாஸிகளான மஹா ஜநங்களின் வாக்யத்தாலும், "பிராட்டியை விட்டுப் பிரிந்து சோகத்தால் வருந்தாது ப்ராணனைத் தரித்துக்கொண்டிருக்கும் இராமன் ஒருவரா

னும் செய்யமுடியாத காரியங்களைச் செய்தவனாக ஆகிறான்'' என்கிற திருவடியின் வாக்யத்தாலும் ஶோக மோஹங்கள் ராமனுக்கு அஸாதாரண குணங்களாகச் சொல்லப் படுகின்றமையால் இவைகளை உத்தம குணங்களாகச் சொல்லத் தட்டில்லை—.

44. 𑌤𑌤𑌸𑍍𑌤𑍇𑌨𑍈𑌵 𑌶𑍋𑌕𑍇𑌨 𑌗𑍃𑌧𑍍𑌰𑌂 𑌦𑌗𑍍𑌧𑍍𑌵𑌾 𑌜𑌟𑌾𑌯𑍁𑌷𑌂
𑌮𑌾𑌰𑍍𑌗𑌮𑌾𑌣𑍋 𑌵𑌨𑍇 𑌸𑍀𑌤𑌾𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌂 𑌸𑌂𑌦𑌦𑌰𑍍𑌶 𑌹

45. 𑌕𑌬𑌨𑍍𑌧𑌂 𑌨𑌾𑌮 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌵𑌿𑌕𑍃𑌤𑌂 𑌘𑍋𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌂

ததஸ் தேநைவ ஶோகேந க்ருத்ரம் தக்த்வா ஜடாயுஷம்
மார்கமாணோ வநே ஸீதாம் ராக்ஷஸம் ஸம்ததர்ஶஹ
கபந்தம் நாம ரூபேண விக்ருதம் கோரதர்ஶநம்

𑌅𑌨𑍍𑌵𑌯𑌃- 𑌤𑌤 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌲𑍋𑌕𑌦𑍍𑌵𑌯𑌮𑍇𑌕𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂.

𑌤𑍇𑌨𑍈𑌵 𑌶𑍋𑌕𑍇𑌨 𑌤𑌤𑌃 (𑌰𑌾𑌮𑌃) 𑌗𑍃𑌧𑍍𑌰𑌂 𑌜𑌟𑌾𑌯𑍁𑌷𑌂 𑌦𑌗𑍍𑌧𑍍𑌵𑌾 𑌵𑌨𑍇 𑌸𑍀𑌤𑌾𑌂 𑌮𑌾𑌰𑍍𑌗𑌮𑌾𑌣𑌃 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌵𑌿𑌕𑍃𑌤𑌂 𑌘𑍋𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌕𑌬𑌨𑍍𑌧𑌂 𑌨𑌾𑌮 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌂 𑌸𑌂𑌦𑌦𑌰𑍍𑌶 𑌇𑌤𑍍𑌯𑌨𑍍𑌵𑌯𑌃-

𑌅𑌰𑍍𑌥𑌃-𑌤𑍇𑌨𑍈𑌵 𑌶𑍋𑌕𑍇𑌨-𑌗𑍃𑌧𑍍𑌰𑌹𑌨𑌨𑌜𑌨𑌿𑌤𑍇𑌨𑍈𑌵 𑌶𑍋𑌕𑍇𑌨, (𑌸𑍀𑌤𑌾𑌪𑌹𑌰𑌣𑌜 𑌶𑍋𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌿𑌤𑍇𑌨) 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 𑌤𑌤𑌃-𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 (𑌰𑌾𑌮𑌃) 𑌗𑍃𑌧𑍍𑌰𑌂-𑌤𑌿𑌰𑍍𑌯𑌗𑍍𑌯𑍋𑌨𑌿𑌮𑌪𑌿, 𑌜𑌟𑌾𑌯𑍁𑌷𑌂, 𑌪𑌿𑌤𑍃𑌸𑌖𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌶𑍇𑌷𑌿𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌯 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌪𑍍𑌰𑌾𑌣𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌦𑌗𑍍𑌧𑍍𑌵𑌾-𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌮𑍇𑌧𑍇𑌨 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯, "𑌮𑌤𑍍𑌕𑍃𑌤𑍇 𑌨𑌿𑌧𑌨𑌂 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮- 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍇𑌨 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌲𑍋𑌕𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿" 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌗𑍃𑌹𑍍𑌯, 𑌅𑌤𑍍𑌰, 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌮𑌾𑌨𑍁𑌷𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌇𑌤𑌿 𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌯𑌂 𑌭𑌾𑌵𑌯𑌤𑌃 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯, 𑌕𑌥𑌂 𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌦𑌤𑍍𑌵𑌂? 𑌇𑌤𑍍𑌯𑌾𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌂 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 "𑌸𑌤𑍍𑌯𑍇𑌨 𑌲𑍋𑌕𑌾𑌞𑍍𑌜𑌯𑌤𑌿" 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌰𑍀𑌤𑍍𑌯𑌾 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌜𑌯𑌸𑍍𑌯 𑌮𑌾𑌨𑍁𑌷𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌸𑌂𑌭𑌵𑌾𑌦𑌿𑌤𑌿" 𑌏𑌵𑌂 𑌜𑌟𑌾𑌯𑍁𑌷𑌮𑌨𑍁𑌗𑍃𑌹𑍍𑌯 𑌵𑌨𑍇 𑌸𑍀𑌤𑌾𑌂 𑌮𑌾𑌰𑍍𑌗𑌮𑌾𑌣𑌃-𑌅𑌨𑍍𑌵𑌿𑌷𑍍𑌯𑌨𑍍 𑌸𑌨𑍍, 𑌰𑍂𑌪𑍇𑌣-𑌶𑌰𑍀𑌰𑍇𑌣, 𑌵𑌿𑌕𑍃𑌤𑌂-𑌵𑌿𑌕𑌾𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌂, (𑌕𑍁𑌕𑍍𑌷𑌿𑌨𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌶𑌿𑌰𑌸𑍍𑌕𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃) 𑌘𑍋𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌂-𑌭𑌯𑌙𑍍𑌕𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌂, 𑌕𑌬𑌨𑍍𑌧𑌂 𑌨𑌾𑌮 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌂-𑌕𑌬𑌨𑍍𑌧𑌨𑌾𑌮𑌕𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌂, 𑌦𑌦𑌰𑍍𑌶-𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑍍 𑌹 𑌇𑌤𑌿 𑌖𑍇𑌦𑍇 𑌅𑌮𑍃𑌤𑌮𑌨𑍍𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌾 𑌕𑌾𑌲𑌕𑍂𑌟𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃-

ஸீதாபஹரணத்தாலுண்டான ஶோகத்தைக் காட்டிலும் அதிகமான ஜடாயுவத ஶோகத்தால் வ்யாபிக்கப்பட்ட ராமன், திர்யக்யோநியில் ஜநித்திருந்தாலும் ஜடாயுவை, சக்ரவர்த்தியின் ஸகாவாயிருப்பதாலும், ஶேஷியாகிய தன் பொருட்டு விடப்பட்ட ப்ராணனையுடைத்தா யிருக்கையாலும், ப்ரஹ்மமேத விதியினால் ஸம்ஸ்காரத்தைப்பண்ணி "என்பொருட்டு உனக்கு மரணமேற்பட்டபடியால் என்னுடைய அநுக்ரஹத்தால் நீ விஷ்ணு லோகத்தை யடையக் கடவாய்'' என்று அநுக்ரஹித்தான். இவ்விடத்தில் **ஆத்மாநம் மாநுஷம் மந்யே** என்று மநுஷ்ய பாவனையை பாவியா நின்ற ஸ்ரீ ராமனுக்கு, பராத்பரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு அஸாதாரணமான மோக்ஷப்ரதத்வம் எங்ஙனே கூடும்? என்கிற ஶங்கைக்கு : **ஸத்யேந லோகாந் ஜயதி** என்கிறபடி ஸர்வ லோகத்தையும் தன் வசமாக்கிக்கொள்ளும் பெருமை மனுஷ்யத் தன்மையினு முண்டாகக் கூடுமென்று விடையளிக்கப்படும். இவ்விதம் ஜடாயுவை அநுக்ரஹித்து, வநத்தில் ஸீதையைத் தேடிக் கொண்டு வாராநிற்க ஶரீரஸந்நிவேஶத்தால் விகாரத்தையடைவிக்கப்பட்டவனையும் (வயிற்றில் வைக்கப்பட்ட தலையையுடையனையும்) ஆகையினால் பயங்கரமாகக் காணப்படா நின்றவனையும், கபந்தன் என்கிற பெயரையுடையவனையுமிருக்கிற ராக்ஷஸனைப் பார்த்தான். ஹ—அம்ருதத்தைத் தேடிக்கொண்டு செல்லா நிற்குமவனுக்கு காலகூட விஷமகப்பட்டாற்போல ஸீதையைத் தேடித் திரியாநின்ற இராம லக்ஷ்மணர்களுக்கு ராக்ஷஸனாகிற கபந்தன் நேர்பட்டபடி, அய்யோ! என்று வருந்துகிறார் ருஷி.

𑌤𑌂 𑌨𑌿𑌹𑌤𑍍𑌯 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁𑌃 𑌦𑌦𑌾𑌹 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌤𑌶𑍍𑌚 𑌸𑌃

தம் நிஹத்ய மஹாபாஹு: ததாஹ ஸ்வர்கதஶ்ச ஸ :

𑌅𑌨𑍍𑌵𑌯𑌃-𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁𑌃 (𑌰𑌾𑌮𑌃) 𑌤𑌂 𑌨𑌿𑌹𑌤𑍍𑌯 𑌦𑌦𑌾𑌹 𑌸 𑌚 𑌸𑍍𑌵𑌃 𑌗𑌤𑌃.

𑌅𑌰𑍍𑌥𑌃-𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁𑌃 𑌕𑌬𑌨𑍍𑌧𑌭𑍁𑌜𑌨𑌿𑌕𑍃𑌨𑍍𑌤𑌨𑌕𑍍𑌷𑌮𑌭𑍁𑌜𑌃 𑌰𑌾𑌮𑌃 𑌤𑌂 𑌕𑌬𑌨𑍍𑌧𑌂 𑌨𑌿𑌹𑌤𑍍𑌯, (𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌨𑌯𑌾) 𑌦𑌦𑌾𑌹-𑌦𑌗𑍍𑌧𑌵𑌾𑌨𑍍 𑌸 𑌚-𑌕𑌬𑌨𑍍𑌧𑌶𑍍𑌚, (𑌦𑌾𑌹𑍇𑌨 𑌹𑍇𑌤𑍁𑌨𑌾) 𑌸𑍍𑌵𑌃-𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂, 𑌗𑌤𑌃-𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌵𑌾𑌨𑍍.

கபந்தனுடைய தோள்களைத் துணித்தற்கு யோக்யமான தோள்களையுடைய இராமன், கபந்தனைக்கொன்று அவனுடைய வேண்டுகோளினால் (அவனுடைய ஶரீரத்தை)க் கொளுத்தினான்.

அந்தக் கபந்தனும், கொளுத்தின காரணத்தாலே ஸ்வர்க்கத்தை யடைந்தான்.

46. [illegible]

[illegible]

ஸசாஸ்ய கதயாமாஸ ஶபரீம் தர்மசாரிணீம்

ஶ்ரமணீம் தர்மநிபுணாம் அபிகச்சேதி ராகவ

[illegible]

[illegible]

ஸ்வர்க்கத்தைக் குறித்துச் செல்லா நின்றுகொண்டு கபந்தனும், ராமன் தனக்குச் செய்த உபகாரத்தின் ஸ்ம்ருதியினால் சிறிது காலம் ஆகாஶத்தில் நின்று, குருபரிசர்யை முதலான தர்மங்களைப் பண்ணும் ஸ்பாவமுடையவளாயும், ஆசார்யாபிமாநமென்கிற சரம பர்வ நிஷ்டையையுடையவளாயும், அதிதிஸத்காரம் (விருந்தோம்பல்) என்கிற தர்மத்தைச் செய்வதில் ஸமர்த்தையாயும் (அந்த தர்மத்தின் ஸூக்ஷ்மத்தை யறிந்தவளாயும்) (ராமன் எழுந்தருளப் போகிறார் என்று மதுரமான பழங்களைத் தான் பரீக்ஷித்துப் பார்த்து அவைகளை வைத்திருந்தாள் என்று ப்ரஸித்தமுண்டு) பரிவ்ராஜிகையாயும் (நான்காவது ஆஶ்ரமத்தை அடைந்தவளாயும் இருக்கிற (வைஶ்யனுக்கு க்ஷத்ரிய ஸ்த்ரீயினிடத்தில் உண்டான) ஶபரீ என்கிற ப்ரதிலோம ஸ்த்ரீயை அபி

முகமாகச் செல்லக்கடவாய் என்று ராமனுக்குச் சொன்னான். இவ்விடத்தில் பாகவதர்களிடத்தில் பக்தியுடையவர்கள், குலம் தாங்கு சாதிகள் நான்கிலும் கீழிழிந்தோர்களாயினும், அடையத் தகுந்தவர்கள் என்பது சொல்லப்பட்டது.

விசேஷார்த்த: ஸ்ரீராமஶரத்தாலடியுண்டு தஹிக்கப்பட்ட கபந்தனும், ஶக்லமால்யாம்பரதரனாய் தன்னுடைய ஸ்வரூபத்தை யடைந்து ஆகாஶத்தில் நின்று சொல்லுகிறான். ஹே. ராகவ தேவரீர் ரகுகுலத்திலவதரித்தமையால் ஆசார்யாபிமாநரூபமான சரமபர்வ நிஷ்டரிடத்தில் அபிமானமுடையவர். ஆகையால் தர்மசாரிணீம்-பாதமூலம் கமிஷ்யாமி யாநஹம் பர்ய சாரிஷம் என்று சொல்லும்படி ஆசார்யாபிமானமாகிற சரமபர்வ நிஷ்டையுடையவள். தர்ம நிபுணாம் — அதிதிஸத்காரரூப தர்மத்தில் நிபுணை. (தர்ம ஸூக்ஷ்மத்தை அறிந்தவள்.)

47. [illegible]

[illegible] ||

ஸோப்யகச்சந் மஹா தேஜாஶ் ஶபரீம் தர்மசாரிணீம்

ஶபர்யா பூஜிதஸ் ஸம்யக் ராமோ தஶரதாத்மஜ:

[illegible]

[illegible]

ஆசார்யோபஸேவந மாகிற சரம பர்வ நிஷ்டையிலிரா நின்ற ஶபர்யை யிடத்திலுண்டான ஆசையினால் அதிகமான சந்தோஷத்தை யுடையவனான அந்த ராகவன், (ஆசார்யாநுவர்த்தநத்தாலுண்டான) "உன்னுடைய அநுக்ரஹத்தால் போயபிழையையும், புகுதருவான் நின்ற பிழையையும் ஒழித்து, மறுபடியும் திரும்புதலில்லாத நித்ய விபூதியை அடையப் போகிறேன்" என்று அவள் வாயால் சொல்லும்படி மோக்ஷ ப்ராப்தி ப்ரதி பந்தகமாயிருக்கும் அவளுடைய பாபத்தைப் போக்கினவனாய், நீசத்தன்மைக் கெல்லை நிலமாயிருக்கும் ஶபரியை அபிமுகமாக வந்தடைந்தான். இத்தால் உயர்ந்தவன் தாழ்ந்தவனோடு ஒரு நீராகக் கலக்கும் ஸௌஶீல்யத்தின் பெருமை சொல்லப்பட்டது.

சக்ரவர்த்தியின் திருக்குமாரனான ராமன், ஶபர்யையினால் நன்றாக பூஜிக்கப்பட்டான். இத்தால் ஆயிர வருஷம் அரும்பாடுபட்டுப் பெற்ற சக்ரவர்த்தி, தன்னாதரவு தோற்ற அளிக்கும் அன்னத்தைக் காட்டிலும் அப்போதடைந்த ஶபர்யையினால் ஸமர்ப்பிக்கப்பட்ட பலத்தில் பகவானுக்குண்டான ப்ரேமை சொல்லப்படுகிறது. ஶரபங்காதிகளால் செய்யப்பட்டது பூஜை. ஶபர்யையினால் செய்யப்பட்டது நல்ல பூஜை. "எனக்கு என்னுடைய பக்தர்களிடத்தில் பக்தி பண்ணுமவர்கள் விஷயத்தில் அதிகமான ப்ரீதியுண்டாகும்" என்று பகவானே தன் சோதிவாய் திறந்து அருளிச் செய்திருக்கின்றமையால், அவனடியார்களான ஆசார்யர்களிடத்தில் பக்தியை யுடைய ஶபரியினால் செய்யப்பட்ட பூஜை, பகவானுக்கு அதிகமான ப்ரீதியை யுண்டாக்குமாதலால் ஶபரியினாற் செய்யப்பட்ட பூஜையை நல்ல பூஜை என்னக் குறையில்லை. அன்றிக்கே, இவைகள் பகவானுக்குப் பரம போக்யமாயிருக்குமென்று நன்றாகப் பரீக்ஷிக்கப்பட்ட ரஸங்களை யுடைய பழங்களை அமுது செய்வித்தமையால் நல்ல பூஜை என்றும் சொல்லலாம்.

விஶேஷார்த்த:—ஸ: ராம: தஶரதாத்மஜ:—ரகுகுலத்திலவதரித்து, பல பிறப்பா யொளிவரும் முழுநலம் என்கிறபடி அவாங்நஸகோசரமான தேஜஸ்ஸையுடைய பெருமாள், நீசதைக் கெல்லை நிலமான ஶபரியின் ஆஶ்ரமத்திற் கெழுந்தருள்வதே! அவளுடைய ப்ரதி பந்தகங்களை எல்லா வற்றையும் அழித்து கமிஷ்யாம்யக்ஷயாந் லோகாந் தவத் ப்ரஸாதாத் என்று அவள் வாயால்

அப்பாச்சியாரண்ணா வைபவம்

அப்போது, ஸ்வாமி அண்ணனும், பேரருளாளருக்கு உகப்பாக உடையவர் உகந்து செய்தருளிய சாலைக்கிணற்றுத் திருமஞ்சந கைங்கர்யத்தை, அவருக்குப் பின்பு முதலியாண்டானும் துன்னுபுகழ்க்கந்தாடைத் தோழப்பரும் விரும்பிச் செய்தருளிய திருமஞ்சந கைங்கர்யம் நமது காலத்திலின்றிக்கே யொழியவொண்ணாது என்று சொல்லி அப்பாச்சியாரண்ணாவையும், மற்றும் கைங்கர்யத்தில் ருசியுடைய ஸ்ரீவைஷ்ணவர்களையும் அழைத்துக்கொண்டு அருணோதய காலத்தில் அநுஷ்டாநகுளத்தில் நீராடி நித்யகர்மாநுஷ்டாநங்களை முடித்துக்கொண்டு சாலைக்கிணற்றுக் கெழுந்தருளி, குடங்களைச் சோதித்துத் திருமஞ்சநம் பூரித்துத் திருமுடிகளில் திருமஞ்சநக் குடங்களை வைத்துக்கொண்டு ஆளவந்தாரருளிய ஸ்தோத்ர ரத்நாநுஸந்தாநத்துடன், பேரோலக்கமாய் ஸந்நிதிக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து, பேரருளாளனுக்குத் திருமஞ்சநம் கண்டருளப் பண்ணிவைத்தார். அவ்வாறே தாம் எழுந்தருளியிருந்தவளவும் ப்ரதிதிநமும் கைங்கர்யத்தை நடத்திவந்து தாம் கோயிலுக் கெழுந்தருளும்போது அப்பாச்சியாரண்ணாவைத் தப்பாமல் இக்கைங்கர்யத்தை நடத்திவரும்படி நியமித்தருளினார். அண்ணாவும், அண்ணன் நியமநப்படியே ஸகலவித கைங்கர்யங்களையும் பேரருளாளருக்கும் பெருந்தேவித் தாயாருக்கும் உகப்பாக நடத்தியருளியும், தமது திருமாளிகையில் திருவாராதநப் பெருமாளான தீமநம் கெடுத்தாருக்குகப்பாக என்னைத் தீமநம் கெடுத்தாய் என்கிற பாசுரத்தை இரண்டுதரம் திருமாளிகையில் அநுஸந்தித்தும், தமது திருவடிகளில் ஆஶ்ரயித்த ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஹிதமாக ரஹஸ்யார்த்தங்களையுபதேசித்தும் பஹுகால மெழுந்தருளியிருந்தார். இந்த அப்பாச்சியாரண்ணா, வானமாமலை ராமாநுஜ ஜீயருடைய சிஷ்யர்களில் ப்ரதாநரானவராயும் அவருடைய அஷ்டதிக்கஜங்களில் ஒருவராயுமிருப்பார். பெரிய ஜீயர், வானமாமலை ராமாநுஜஜீயர் ஆகிய இவ்விரண்டு திருநாமங்களினுடைய ஸம்பந்தத்தினால் நம் அப்பாச்சியாரண்ணாவுக்கு ஓர் ஏற்றமுண்டாயிற்று. இதனால் பெரியோர்கள் அந்தத் திருமாளிகையில் பெரிய ஜீயர் தனியனை,

"ஸ்ரீசைலேஶதயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்"
"யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்.'

என்கிற ஶ்லோகத்தையும், வானமாமலை ராமாநுஜ ஜீயர் தனியனை

“ ரம்யஜாமாத்ரு யோகீந்த்ர பாதரேகாமயம் ஸதா
ததாயத்தாத்ம ஸத்தாதிம் ராமாநுஜமுநிம் பஜே ”

என்கிற ஶ்லோகத்தையும் சேர்த்து அநுஸந்திப்பார்கள். அப்பாச்சியாரண்ணா மறு தனியன்,

“ வாநாசல மஹாயோகி வரபாதாப்ஜஷட்பதம்
வாதூலார்ணவபூர்ணேந்தும் வரதார்ய முபாஸ்மஹே ”

அப்பாச்சியாரண்ணா தீர்த்தம் ஜ்யேஷ்ட சுக்ல த்விதீயை.

2. அப்பாச்சியாரண்ணாவின் திருத்தம்பியார் தாசரதி அப்பை. இவருக்கு தாசரதி ஆச்சான் என்று மற்றொரு திருநாமமுண்டு. இவர் திருநக்ஷத்திரம் சித்திரையில் திருவோணம். தீர்த்தம் மாக சுக்ல ஸப்தமி. திருவாராதநம் அழைத்து வாழ்வித்தவர். இவர் தனியன்,

“ ஸ்ரீமத் வதூலகுல ஸிந்து ஸுதாகராம்ஶும் வாத்ஸல்ய ஸிந்து மதிகம் வரதாநுஜம் தம்—வாநாத்ரியோகி பதபங்கஜ ப்ருங்கராஜம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ குருவர்ய மஹம் ப்ரபத்யே.”

இவருக்கு ஆசார்யர் வானமாமலை ராமாநுஜ ஜீயர். இவர் தம்முடைய சிறியதகப்பனாரான பெரிய வேடலப்பையிடம் ஸகல சாஸ்த்ரங்களையும் அதிகரித்தார். இவ்விடத்தில் பெரிய வேடலப்பை, தாசரதி ஆச்சான் ஆகிய இவர்களின் பெருமையைச் சிறிது வரைந்தநுபவிக்கும் அவகாசம் கிடைத்தது:— அதாவது பெரிய ஜீயர் திருவரங்கம் திருப்பதியில் அழகிய மணவாளனுக்கு ப்ரதிதிநம் பல்லாண்டு பாடிக்கொண்டெழுந்தருளியிருக்கும் நாளில் க்ருஷ்ணாநந்தி என்கிற ஏகதண்டி ஸந்யாஸி யொருவன் கோயிலிலே வந்து, தன்னோடு பெரிய ஜீயரை சாஸ்த்ர வாதத்திற்கு வரும்படியழைக்க, பெரிய ஜீயரும், கலையறக் கற்ற மாந்தர் காண்பரோ? கேட்பரோ? என்கிறபடி இவனோடு ஸல்லாபம் பண்ணவும் பார்க்கவும் விரும்பவில்லை. ஆயினும், வாதம் பண்ணா விட்டால் நமது ஸித்தாந்தத்திற்கு ஒரு குறைவு ஏற்படும், வாதம் பண்ணினால் பெருமாள் மங்களாசாஸநத்திற்கு இடையூறாகும், இதற்கென் செய்வது என்று சிந்தியா நின்ற வளவில், பெரிய பெருமாள், முதலியாண்டான் திருவம்சத்திலவதரித்து ஜ்ஞாநாதி குணங்களால் மஹத்தான வைபவத்தையுடைய பெரிய வேடலப்பைக்கு

ஸ்ரீமுகமனுப்பும்படி நியமிக்க, ஜீயரும், அப்படியே ஸ்ரீமுகமனுப்பியருள, வேடலப்பையும் ஸ்ரீமுகத்தை சிரஸாவஹித்து தம்மிடத்தில் ஸகல ஶாஸ்த்ரங்களையும் அதிகரித்து வாக்மியாயிருக்கும் தாசரதி ஆச்சானையும் அழைத்துக்கொண்டு கோயிலுக்கெழுந்தருளி நம்பெருமாளை மங்களாஶாஸநம் செய்து, ஸகல வரிசைகளையும் பெற்று, ஸ்ரீரங்கநாச்சியாரையும் மங்களாசாஸநம் செய்து, அவளுடைய பரிபூர்ண கடாக்ஷமும் ஸம்மானமும் பெற்று ப்ரதக்ஷிணமாக வாராநிற்க, பில்வ வ்ருக்ஷத்தினடியில் ஜபம் பண்ணிக்கொண்டிருக்கும் ஏகதண்டி, இவ்விரண்டு திருநாமங்களையும் கண்டெழுந்திருந்து தனக்கு சாஸ்த்ரார்த்தங்களை கற்பித்த வேடலப்பையைத் தெண்டனிட்டு மிகவும் வணக்கத்துடன் நின்றுக்கொண்டிருக்க, வேடலப்பையும் அவனை குஶலப்ரஶ்நம் பண்ணி இங்குவந்த கார்யமென்? என்று வினவ, அவனும் தான் பெரியஜீயரோடு வாதம் பண்ண வந்திருப்பதாக வறிவிக்க, வேடலப்பையும், பெரிய ஜீயருடைய பெருமையையும் இவனுடைய சிறுமையையும் நினைத்து நீயா? ஜீயரோடு வாதம் பண்ணுகிறவன், அவர் ஆயிரம் நாவுடைய அநந்தன் காண். அவரோடு வாதம் பண்ண உனக்குப்போராது. அப்படி வாதம் பண்ண இஷ்டமிருந்தால், அவருடைய கடாக்ஷ லேசத்தினடியாகப் பெற்ற ஜ்ஞாநத்தையுடைய எங்களோடுவாதம் பண்ணி ஜயித்து அப்பால் ஜீயரோடு வாதம்பண்ணலாம் என்ன, ஏகதண்டியும் உங்களோடு வாதிக்கநானோ சக்தன்? என்று மிகவும் பயந்து அபராதக்ஷாபணம் வேண்டித் தெண்டனிட்டு நின்றான். உடனே வேடலப்பையும், தாசரதி ஆச்சானும் அண்ணன் திருமாளிகைக்கெழுந்தருளி அண்ணனுடன் அமுது செய்தருளினார்கள். க்ருஷ்ணாநந்தி என்கிற ஏகதண்டி, இவர்களுடைய “தருவரேல் புனிதம்” என்கிற ப்ரஸாதத்தை அபேக்ஷிக்க, அப்படியே அவனுக்கு அநுக்ரஹித்தார்கள். அவனும் ப்ரஸாதத்தை ஸ்வீகரித்து தந்யனாய் அநுமதி பெற்றுத் தன்னிருப்பிடம் சென்றான், பின்பு வேடலப்பையையும் தாசரதி ஆச்சானையும் அழைத்துக்கொண்டு அண்ணன், பெரிய ஜீயர்ஸந்நிதியிலெழுந்தருளி தண்டன் ஸமர்ப்பித்து நடந்த வ்ருத்தாந்தத்தை விண்ணப்பம் செய்ய, பெரிய ஜீயரும், அண்ணன், வேடலப்பை, தாஶரதி ஆச்சான் ஆகிய மூவர்களையும் கடாக்ஷித்து மிகவும் உகந்து

உகப்பின் மிகுதியால் முதலியாண்டான் திருவம்ச விஷயமாக இரண்டு ஶ்லோகங்களை அருளிச் செய்து பரிபூர்ணாநுக்ரஹம் செய்தருளி, வேடலப்பையையும் தாசரதி ஆச்சானையும் ஸந்நிதியிலேயே நித்யவாஸம் பண்ணிக் கொண்டிருக்கும்படி நியமித்தருள, வேடலப்பை, தன்னுடையசரீரத்தின் தளர்த்தியினால் அங்கு வஸிப்பதற்கு ஸௌகர்யப்படாமல் தாசரதி ஆச்சானை அங்கே (ஜீயர் ஸந்நிதியில்) இருக்கும்படி நியமித்துத் தாம் ஜீயர் ஸந்நிதியில் நியமநம்பெற்று வேடலுக்கெழுந்தருளினார். பிறகு தாசரதி ஆச்சானும் மஹா வாக்மியாகையாலே பெரிய ஜீயர் ஸந்நிதியிலேயே வாஸம் பண்ணிக் கொண்டு ஸகலரஹஸ்யார்த்தங்களையும் ஜீயரநுக்ரஹத்தால் அதிகரித்துப் பரவாதி நிரஸநம் பண்ணிக்கொண் டெழுந்தருளி யிருந்தார்.

பெரிய வேடலப்பை, எம்பாவினுடைய இரண்டாவது திருக்குமாரர். இவர் விருத்தாந்தம் 8-வது பக்கத்தில் காணலாம். இவர் தனியன்.

“ஸ்ரீரங்கராஜசரணாம்புஜராஜஹம்ஸம் கங்காப்ரவாஹ பரிபந்தி வச:ப்ரரோஹம் — வாதூலவம்ச்யவரமாஶ்ரிதபாகதேயம் பக்த்யா பஜாமி நரஸிம்ஹ குரும்வரேண்யம்''

இவருக்கு மூன்று குமாரர்கள்.

சிறிது காலம் சென்ற பின், ஒருநாள் பெரிய ஜீயர் ஏகாந்தத்தில் தாசரதி ஆச்சானைக் கடாக்ஷித்தருளி, ஆச்சானே! ஆய் அண்ணாவை சேவித்து நெடுநாளாயிற்றே! ஸேவித்து வரவேண்டாவோ! என்ன ஆச்சானும், நியமித்தால் விடைகொண்டு சென்று வருகிறேன் என்ன, பெரிய ஜீயரும், மிகவு முகந்தருளி பூபாலராயனிலே சேர்த்தியில் திருவாராதநம் கொண்டருளும் ஸ்ரீரங்கராஜர் திவ்யமங்கள விக்ரஹத்தை நாச்சிமார்களோடு கூட தாசரதி ஆச்சானுக்கு அநுக்ரஹித்தருளி ஊருக்கு விடை கொடுத்தனுப்பினார்.

தாசரதி ஆச்சானுடைய குமாரர் திருமலை அய்யங்கார். இவர் தனியன்,

“வாதூலதுர்யவரதார்யதயைகபாத்ரம் தஸ்மாதவாப்த நிகமாந்தரஹஸ்யஜாலம் — ஸ்ரீஸ்ரீநிவாஸகுருவர்யஸுதம் வரேண்யம் ஸ்ரீ வேங்கடார்யகுருஶேகரமாஶ்ரயாம:!

அப்பாச்சியாரண்ணா திருவடிகளில் ஆஶ்ரயித்தவர்கள் தாசரதி அப்பை, பிள்ளைகந்தாடை அப்பை, வேடலப்பை. அண்ணாவினப்பங்கார்.

10

அப்பாச்சியாரண்ணா திருக்குமாரர், அண்ணா வினப்பங்கார். இவருக்காசார்யர் இவரது திருத்தகப்பனாரான அப்பாச்சியாரண்ணா. உபயவேதாந்தங்களும் ரஹஸ்யார்த்தங்களும் ஸாதித்தருளினது தாசரதி அப்பையும், கந்தாடை அப்பனும். இவர் திருநக்ஷத்திரம் கும்பமாஸ ஜ்யேஷ்டை. தீர்த்தம் மிதுந க்ருஷ்ணாஷ்டமி. தனியன்

“வாதூலவரதாசார்ய க்ருபாபூர்ணமநோரதம்
ஸ்ரீ வேங்கடகுரும் வந்தே ஸ்ரீலாதிகுணஸாகரம்''

இவருக்கு சிஷ்யர்கள் (1) கோயில் திருவேங்கட ஜீயர் (2) பெரிய கேழ்வி அழகிய மணவாள ஜீயர் (3) சிறிய கேழ்வி ஜீயர் (4) திருவாழி அப்பை (5) அப்பன். மற்றும் பலர்.

11

அண்ணாவினப்பங்கார் ஸ்வீக்ருத குமாரர் அப்பங்கார். இவருக்கு ஆசார்யர் ஸ்வீக்ருத பிதாவான அண்ணாவினப்பங்கார். இவர் திருநக்ஷத்திரம் ஆடியில் உத்திராடம். தீர்த்தம் மீன சுக்ல தசமி. தனியன்,

“வாத்ஸல்யாதிகுணாவாஸம் வாதூலகுலபூஷணம்
வேங்கடார்யக்ருபாபாத்ரம் ஸ்ரீநிவாஸகுரும் பஜே’’

இவர் திருவடிகளில் ஆஶ்ரயித்தவர்களில் ஒருவர் ஒன்றான வானமாமலை ராமாநுஜ ஜீயருக்குப் பின்பு அந்தப் பட்டத்தில் எழுந்தருளி யிருந்தார். இவர் பரமபதம் அடைந்த பின்பு மறுபடியும் அப்பங்காருடைய சிஷ்யர்களில் ஒருவர் வானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி ஸ்தாநத்தில் எழுந்தருளியிருந்தார்.

12

இவர் சிஷ்யர் வேடலப்பை அப்பன் குமாரரான வேடலப்பை அண்ணா. இந்த வேடலப்பை அண்ணா அப்பங்காருடைய ஸ்வீக்ருத குமாரரான அண்ணாவினப்பங்காருக்கு பஞ்ச ஸம்ஸ்காரமும் உபய வேதாந்தமும் ஸாதித்தருளின படியாலே இந்த வேடலப்பை அண்ணா தனியனும் இவ்விடத்தில் அநுஸந்தேயம்.

வேடலப்பை அண்ணா திருநக்ஷத்திரம் ஆனி தன்னில் சோதி. தீர்த்தம் மார்கழி அமாவாஸை. தனியன்,

“வாதூலஸ்ரீநிவாஸார்ய பதபங்கஜ ஷட்பதம்
வரதார்ய மஹம் வந்தே வேங்கடேசார்யநந்தநம்”

13

இவர் சிஷ்யரான அண்ணாவினப்பங்காருக்கு ஸ்வீக்ருதகுமாரர் குமார அண்ணாவினப்பங்கார். குமார அண்ணாவினப்பங்கார் திருநக்ஷத்திரம் தையில் ஆயில்யம். தீர்த்தம் கந்யாமாஸ சுக்ல தசமி. தனியன்,

“வாதூலஸ்ரீநிவாஸார்ய தநயம் விநயோஜ்வலம்
வரதார்யக்ருபாபாத்ரம் வந்தே வேங்கடதேசிகம்”

14

இவருக்கு ஸ்வீக்ருத குமாரர் அண்ணாவினப்பங்கார். இவருக்கு ஜநகபிதா அநந்தாழ்வான். ஆசார்யரும் உபய வேதாந்தம் ஸாதித்தவரும் ஸ்வீக்ருத பிதாவான அண்ணாவினப்பங்கார். தனியன்,

“வாதூலவேங்கடாசார்ய தநயம் தத்பதாஶ்ரயம்
ஸ்ரீநிவாஸகுரும்வந்தே வேதாந்தத்வயதேசிகம்”

15

இவர் குமாரர் அண்ணாவினப்பன் வேங்கடாசார்யர். திருநக்ஷத்திரம் ஆவணியில் திருவோணம். தீர்த்தம் பங்குனி க்ருஷ்ண த்வாதசி. தனியன்,

“ஸ்ரீமத்வதூலகுலவாரிதிபூர்ணசந்த்ரம் ஸ்ரீவாஸஸூரிதநயம் தத்வாப்தபோதம் — ஸ்ரீவேங்கடார்ய பதபங்கஜராஜஹம்ஸம் ஸ்ரீ வேங்கடார்யமநவத்யகுணம் பஜாமி.”

இந்த ஸ்வாமியை பெரியோர்கள் ஒன்றான குமாரவேங்கடாசார்யர் என்று ப்ரஸித்தமாகச் சொல்லுவார்கள்.

16

இவர் திருவடிகளில் ஆஶ்ரயித்தவர் பெருமாள் கோவில் அழகிய மணவாள ஜீயர், இவர் குமாரர் ஸ்ரீநிவாஸ வரதாசார்யர், மற்றும் பலர். ஸ்ரீநிவாஸ வரதாசாரியரின் தனியன்,

“வாதூலவேங்கடாசார்ய ஸூநும் தத்பதாஶ்ரயம்
ததவாப்ததியம் வந்தே ஸ்ரீவாஸ வரதம் குரும்”

17

இவர் குமாரர் ப்ரணதார்த்திஹராசார்யர். இவர் தனியன்,

“ஸ்ரீமத்வதூலகுலவெங்கடஸூரிபௌத்ரம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ வரதார்ய குரோஸ்தநூஜம்—தத்பாதயுக்மஶரணம் ததுபாஸிதாரம் ஸ்ரீமங்நதார்த்திஹரதேசிக மாஶ்ர யாம:”

18

ஸ்ரீநிவாஸ வரதாசார்யரின் தேவிகளுடைய அபிமான புத்ரர் குமார வெங்கடாசார்யர். தனியன்,

“ஸ்ரீமத் வதூலகுல தேசிக வம்ச ஜாதம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ வரதார்யகுரோஸ்ஸுபுத்ரம் — ஸ்ரீவாஸரம்யவரயோகிக்ருபாத்த போதம் ஸ்ரீவேங்கடார்ய குருஶேகரமாஶ்ர யாம:”

19

இவர் குமாரர் ஸ்ரீநிவாஸ வரதாசார்யர். தனியன்,

“ஸ்ரீவாதூலகுல் ப்ரதீபமஹித ஸ்ரீவேங்கடார்யாத்மஜ ஸ்ரீஸம்வாஸவர ப்ரதார்ய தநய ஸ்ரீவேங்கடார்யாத்மஜம்—தத்பாத ப்ரவணம் ரமாநிதிமுநேஸ் ஸம்ப்ராப்த போதோதயம் ஸ்ரீஸம்வாஸ வரப்ரதார்ய மநகம் ஸேவேநிஶம் ஸ்ரீநிதிம்.”

20

இவர் ஸ்வீக்ருதகுமாரர் வேங்கடாசார்யர். தனியன்,

“ஸ்ரீமத்வதூலகுலவாரிதிபூர்ணசந்த்ரம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதிபாதஸரோஜப்ருங்கம் — ஸ்ரீவேங்டார்யதநயம் விநயோஜ்வலம் தம் ஸ்ரீவேங்கடார்யகுருசேகர மாஶ்ரயாம:”.

இவர் கொஞ்சகாலம் எழுந்தருளியிருந்து திருநாட்டை அலங்கரித் தருளினார். அதனால் வேறொரு வெங்கடாசார்யரை த்விதீய ஸ்வீகாரம் பண்ணிக்கொண்டார்.

21

த்விதீயஸ்வீக்ருத புத்ரர் ஸ்ரீவேங்கடாசார்யர். தனியன்,

வாதூலகுலவேங்கடகுரூத்தமபுத்ரரத்நம் ஸ்ரீசைல லக்ஷ்மண முநீந்த்ரதயைகபாத்ரம் — வேதாந்தயுக்மவிசதீகரணப்ரவீணம், ஸ்ரீவேங்கடார்யகுருசேகரமாஶ்ரயாம:”

22

இவர் குமாரர் ஸ்ரீசைலாசார்யர். இவர் தனியன்,

“ஸ்ரீவேங்கடார்ய தநயம் ஶீலாதிகுண ஸாகரம்
வாதூலார்ணவ பூர்ணேந்தும் ஸ்ரீசைலார்ய மஹம் பஜே.”

23

இவருடைய குமாரர்கள் மூன்று திருநாமங்கள். 1. ஸ்ரீரங்காசார்யர் 2. நரஸிம்ஹாசாரியர் 3. முதலியாண்டான்.

ஸ்ரீரங்காசார்யர் கோயிலண்ணனுக்கு ஸ்வீக்ருதரானர். நரஸிம்ஹாசார்யரின் தனியன்,

“ஸ்ரீமத்வதூலகுலவாரிதிபூர்ணசந்த்ரம் ஸ்ரீசைல தேசிக ஸுதம் ஶிரஸாதத்பதாப்ஜம் — தஸ்மாதவாப்தநிகமாந்த ரஹஸ்ய தத்வம் ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ குருசேகர மாஶ்ரயாமஃ”

முதலியாண்டான். தனியன்,

“ஸ்ரீமத்வதூலகுலவாரிதிபூர்ண சந்த்ரம் ஸ்ரீசைல தேசிக குருத்தமபுத்ரரத்நம் — ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகுருவர்யபதாப்ஜப்ருங்கம் வாதூல தேசிக மஹம் ஶரணம் ப்ரபத்யே.”

24

இவர் குமாரர்களிருவர் 1. ஸ்ரீசைலா சார்யர் 2. குமார வேங்கடா சார்யர். குமார ஸ்ரீசைலாசார்யர் தனியன்.

“ஸ்ரீமத்வதூலகுலவாரிதிபூர்ணசந்த்ரம், வாதூல தேசிக குருத்தமபுத்ரரத்நம் தத்பாதயுக்மசரணம் ததுபாஸிதாரம் ஸ்ரீசைல தேசிகமஹம் சரணம் ப்ரபத்யே.
தாஶரத்யார்யதநயம் வாதூலகுலபூஷணம்
ஸ்ரீசைலார்யகுரும் வந்தே தயாதிகுணஸாகரம்.”

பெரிய வேடலப்பை திருவம்சம்

(8-ல் 2) பெரிய வேடலப்பைகுமார் மூன்று திருநாமங்கள் (1) எம்பா (2) வேடலப்பை அண்ணு (3) ஸ்ரீ ரங்கராஜ நாயன்.

9

1. ஜ்யேஷ்டரான எம்பாவுக்குத் திருநக்ஷத்திரம் சித்திரையில் அஶ்விநீ தீர்த்தம் புஷ்ய க்ருஷ்ண சதுர்த்தி. இவர் தனியன்,

“ந்ருகேஸரிகுரோஸ்ஸூநும் நிகமாந்தைகபூஷணம்
வாதுலாந்வயபூர்ணேந்தும் ராமாநுஜகுரும் பஜே”

“இந்திரா”

பல வருஷங்கள் உழைக்கக் கூடியது.

இன்று இணையற்று விளங்குவது.

“இந்திரா” கடிகாரங்கள் வெகு நாள் உழைக்கக் கூடியவை சரியான மணியே காட்டும். 8—நாட்களுக்கான பெண்டுலம் மூவ்மெண்ட் எனுமல் டயல் மணி, அரை மணி இனிமையான தொனியில் அடிக்கும்



10 வருஷம் உத்தரவாதம்

ட்ராப் ஆக்டகன்
8″ டயல் ரூ. 8-8-0
10″ டயல் ரூ. 12-0-0
12″ டயல் ரூ. 15-0-0

ரெகுலேடர்
8″ டயல் ரூ. 15-0-0
10″ டயல் ரூ. 20-0-0
12″ டயல் ரூ 25-0-0

(பாக்கிங் அண்டு பார்சல் செலவு வேறு.)

(ஆர்டர் செய்பவர்கள் ரூ. 5—0—0 முன்னதாக அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.)

ஜலால் அண்டு சன்ஸ்,

கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்.
ஹெட் ஆபீஸ் :— 46, ரட்டான் பஜார், சென்னை.
ப்ராஞ் ஆபீஸ் :— 190, B. மௌண்ட்ரோட், சென்னை.
1242-1, ஆபிட்ரோட், ஹைதராபாத் (டெக்கான்.)

பாரிசவாயுவுக்கு பயப்பட வேண்டாம்!

க்ஷீரபலா

(101 தடவை பாகம் செய்தது)

பாரிசவாயுவுக்கு ஸஞ்சீவி. எல்லாவித வாத நோய்களையும் கண்டிக்கும். இதற்கு நிகரான மருந்தே கிடையாது. இதை எங்களுடைய "அயவீரஸிந்தூர"த்துடன் கலந்து உட்கொண்டால் இன்னும் அமோகமான பலன் அதிசீக்கிரத்தில் கிடைக்கும்.

க்ஷீர பலா:—அவுன்ஸ் 1-க்கு 3-8-0. ½-அவுன்ஸ் 1-12-0.
அயவீரம்:—ஒருவாரத்திற்கு போதுமான மருந்து 1-0-0.

மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்
107, பிராட்வே, சென்னை

சாம்பில் பாக்கட் 1-படி 4 அணா.

அசல் கை குத்தல் அரிசி.

ஆரோக்கியத்தையும், வலுவையும் கொடுக்கத்தக்கது. மதராஸ் ப்ராவின்ஷியல் கோஆபரேடிவ் சொஸைடி அவர்களால் தயாரிக்கப்பட்டது.

கிடைக்குமிடம்:—**சி. ரங்கநாயகலு செட்டி**
நெ. 20, கோவிந்தப்ப நாய்க்கன் தெருவு,
(சௌந்தரிய மஹாலுக்கெதிரில்) ஜி. டி., மதராஸ்.

P. KOTHANDARAM PILLAI
SON OF LATE
P. S. PONNUSAWMY PILLAI,
HIGH CLASS CABINET MAKER AND UPHOLSTERER,
Established in 1884.
Ponnusawmy Pillai's Buildings,
39 & 44, Esplanade West :: (Rattan Bazaar) :: P. T., MADRAS

மதராஸ் எலக்ட்ரிக் ட்ராம்வே

ஸ்பெஷல் விடுமுறைநாள் டிக்கட்டுகள்

ஞாயிற்றுக்கிழமையிலும் ஸ்பெஷல் விடுமுறை நாட்களிலும் நயமான (0—4—0) நாலணா டிக்கட்டை வாங்கி எல்லா செக்ஷன்களிலும் இஷ்டம்போல் பிரயாணம் செய்யலாம்.

மாதாந்தர சீஸன் டிக்கட்டுகள்.

இந்த டிக்கட்டுகளை வாங்கி உபயோகப்படுத்துவதில் செலவு குறைவதோடு அனேக சவுகரியங்களுமுண்டு. டிக்கட்டுகளின் விபரம் அடியிற்கண்ட ஆபீசுகளில் தெரிந்துகொள்ளலாம்.

—: டிக்கட்டு கிடைக்குமிடம் :—

373/5, சைனாபஜார் ரோட் (ஹைகோர்ட்டுக்கு எதிரில்,)
1, ரண்டல்ஸ் ரோட், டிராம்வே ஆபீஸ்.

ரயில்வே கால அட்டவணை

மதராஸ் (எழும்பூர்) – நேர் வழி (Main Line)

	புறப்பாடு	வருகை
இண்டோ-ஸிலோன் எக்ஸ்ப்ரஸ்	9-0 இரவு	6-35 காலை
செங்கோட்டை பாஸன்ஜர்	7-30 காலை	7-0 மாலை
கூடலூர் பாஸன்ஜர்	4-0 மாலை	10-55 காலை
திருவனந்தபுரம் பாஸன்ஜர்	9-30 இரவு	6-0 காலை
திருச்சி (பார்ஸல்) பாஸன்ஜர்	10-25 இரவு	5-15 காலை

குறுக்கு வழி (Chord Line)

	புறப்பாடு	வருகை
திருவனந்தபுரம் எக்ஸ்ப்ரஸ்	8-5 இரவு	7-15 காலை
தனுஷ்கோடி பாஸன்ஜர்	11-35 காலை	2-40 மாலை

மதராஸ் (ஸெண்ட்ரல்)

	புறப்பாடு	வருகை
கல்கத்தா மெயில்	8-30 இரவு	8-0 காலை
க்ராண்ட் ட்ரங்க் எக்ஸ்ப்ரஸ்	7-55 காலை	5-10 மாலை
வால்டேர் பாஸன்ஜர்	......	10-12 காலை
வால்டேர் த்ரூ பாஸன்ஜர்	7-30 இரவு	......
பம்பாய் மெயில்	9-0 இரவு	5-55 காலை
பம்பாய் எக்ஸ்ப்ரஸ்	8-45 காலை	4-55 மாலை
ராய்ச்சூர் பாஸன்ஜர்	9-30 காலை	3-30 மாலை
ரேணிகுண்டா பாஸன்ஜர்	......	9-15 இரவு
பங்களூர் மெயில்	9-30 இரவு	6-10 காலை
பங்களூர் எக்ஸ்ப்ரஸ்	1-0 மாலை	2-0 மாலை
பங்களூர் பாஸன்ஜர்	6-30 காலை	7-42 இரவு
" "	9-40 இரவு	5-30 காலை
ஜோலார்பேட்டை பாஸன்ஜர்	1-5 மாலை	1-45 மாலை
காட்பாடி பாஸன்ஜர்	5-30 மாலை	9-45 காலை
அரக்கோணம் பாஸன்ஜர்	6-30 மாலை	......
மலபார் எக்ஸ்ப்ரஸ்	8-5 இரவு	7-20 காலை
ப்ளூ மௌண்டன் எக்ஸ்ப்ரஸ்	9-15 இரவு	6-30 காலை

பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின் இரண்டு ஔஷத ரத்னங்கள்

ஜீ வா ம் ரு த ம்

(தேகாரோக்யத்திற்கும் பல விருத்திக்கும்)

ரத்தமிழந்து, ஜீவனற்று, பலஹீனத்துடன் வாழ்க்கையை வெறுக்கும் வாலிபர்களுக்கு இவ்வௌஷதம் ஓர் வரத்தைப் போன்றதே. இதை உபயோகிக்க ஆரம்பிக்கும் பொழுதே அளவற்ற உணர்ச்சியை யூட்டி, மிகுந்த ரத்த புஷ்டியை உண்டாக்கி, புத்துயிரைக் கொடுத்து, வாழ்க்கைக்கே இன்பத்தை விளைவிக்கின்றது. அளவற்ற தேகபலம் குறைவற்ற ஆரோக்கியம் முதலியவற்றை மேன்மேலும் செழிக்கச் செய்கின்றது.

விலை பெரிய புட்டி	ரூ 3-4-0
சிறியது	1-12-0.

பா ல பா ஸ் க ர

(குழந்தை ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு அற்புத நிவாரணி.)

குழந்தைகளின் ஈரல் (Liver) குலை (Spleen) பெருக்கங்களை அதி விரைவில் கரைத்து பூர்ண ஆரோக்யத்தை யளிக்கும் அரிய சஞ்சீவி. இதர மருந்துகளால் பயனற்றுப் போன இடங்களில் ஆச்சரியத்துடன் பலன் தந்துள்ளன. தவறுதலின்றி குணங் கொடுப்பதென்று பிரக்யாதி யடைந்தது. ஆரம்ப நிலைமைக் கென்றும், முதிர்ந்த நிலைமைக் கென்றும் இருதிறத்தி லுள்ளது.

ஆரம்ப நிலைமை மருந்து 1 மாதம்	4-0-0
முதிர்ந்த நிலைமை	8-0-0

விபரங்களுக்கு எழுதவும்.



தயாரிப்பவர்கள் :— **ஆயுர்வேதாஸ்ரமம்**

தபால் பெட்டி 287.

151, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதரூஸ்.

Edited & Published by Vadakarai, Ramanujachariar, 24, Chandrappa Mudali St. and Printed at the Liberty Press, 7, Sunkurama Chetty St. Madras.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ராமாநுஜ

ஸித்தாந்த வைஜயந்தீ

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந ஸபையின் சார்பாக

மாதந்தோறும் வெளிவரும்

ஸத் ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசந பத்ரிகை

தொகுதி 2	ஈச்வர ௵ வைகாசி ௴	பகுதி 7

பத்ராதிபர் :

வடகரை ராமாநுஜாசாரியார்

24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

1937 ௵ மே ௴

வருஷச் சந்தா ரூ 1—12—0] [தனிப்ரதி விலை ரூ. 0—3—0

விஷய ஸூசிகை

விஷயங்கள் பக்கம்

1. வைகாசி மாதத்தின் பெருமை 161
—பத்திராதிபர்

2. வைகாசி யனுடம் 162
—ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்

3. ஓர் ஸந்தேகம் 168
—ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்

4. வர்த்தமானங்கள் 173

5. ராமாயண ச்லோகார்த்தங்கள் ....
—திருமலை அநந்தாண் பிள்ளை ஸ்ரீ. உ. வே. கோவிந்தப்பங்கார்

6. கோதாஸ்துதி வியாக்கியானம் ... .
—ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்

ரங்கூன் வைர நகைகள்



சவரன் பொன்னிற்கு
உத்திரவாதத்துடன்
அனுப்பப்படும்.

*

விலை ஜாபிதா இனாம்

பி. கோபாலஸுவாமி நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P.O., சென்னை.

L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது -
மனிதர்களுக்கு ஆரோக்கியத்தை அளிப்பது

L. G.
பெருங்காயம்.
எங்கும் கிடைக்கும்.
ப்ரபல பெருங்காய
வியாபாரிகள்:
பம்பாய், சென்னை,
கும்பகோணம்.

லால்ஜீ கோது & கம்பெனி,
8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதராஸ்.

அம்ருதாஞ்சனம்.

ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வ்யாதிகளின் உபசமநத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக்கூடும். அக்காலத்தில் அமிருதாஞ்சனம் கைவசமிருக்குமேயாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டா மென்பதை அனைவரு மறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.

அம்ருதாஞ்சனம் டிபோ.

பம்பாய். மதராஸ் கல்கத்தா

சலோனுடவர் பிராண்ட்

போர்ட்லாண்ட் சிமெண்ட்

காரண்டீட்

பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட்
ஸ்பெஸிபிகேஷன்

மேற்கண்ட சிமெண்ட் அனேக ஹார்பர்வேலைகளுக்கும் ரயில்வே வேலைகளுக்கும், மதராஸ் கார்ப்பரேஷனிலும், இன்னும் பிரபல வியாபாரிகளும் கண்ட்ராக்டர்களும் உபயோகித்து வருகிறார்கள்.

மேல் கண்ட சிமெண்டை உபயோகிக்கவும்

சோல் ஏஜெண்ட்

M. குப்புசாமி நாய்க்கர்

83, செம்புதாஸ் தெரு,

மதராஸ், ஜி. டி.

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஸந பத்ரிகை

தொகுதி 2.	பத்ராதிபர் வடகரை. ராமாநுஜாசாரியார்	பகுதி 7.

ஸ்ரீரஸ்து

ஸ்ரிய:காந்தாய நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
யஶ்ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ||
வேதவேதாந்த வேதார்த ஸம்ப்ரதாயப்ரவர்த்திநீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

வைகாசி மாதத்தின் பெருமை

பத்திராதிபர்

இந்த வைகாசிமாதம், வ்யூஹத்தில் ஆறுவதான மதுஸூதநனுடைய அம்ஸமாயிருக்கும். மதுஸூதநன் என்கிற இத்திருநாமம் வேதாபஹாரத்தைப் பண்ணிக் கொடிய பாவியாய்த் திரியாநிற்கும் மது என்கிற அஸுரனைக்கொன்று ப்ரஹ்மாவிற்கு வேதத்தை யளித்து உலகை வாழ்வித்த ஸர்வேஸ்வரனைக் குறிப்பிடாநிற்கும்.

ஆதலால் மதுஸூதநனுடைய அம்ஸமாயிருக்கும் இம்மாதத்தில் வரும் ஏகாதஸியன்று உபவஸித்து த்வாதஸியில் ஆஸ்ரித விரோதி நிரஸநஸீலனான மதுஸூதநனை ஆராதித்துப் பாரணை பண்ணுமவர்களின் பாபம், மதுபட்டபாடு படுமென்பது சொல்லாமலே விளங்கும். மேலும் மதுஸூதநனுடைய க்ருபையினால் ஜ்யோதிஷ்டோமயாகத்தைச் செய்தவன் அடையும் புண்யத்தையுமடைவான் என்பது மேலே குறிப்பிடும் மஹாபாரத ஸ்லோகத்தினாலறிய வரும்.

ஶ்லோகம்

த்வாதஶ்யாம் மாஸிவைஶாகே மதுஸூதந ஸம்ஜ்ஞிதம்
உபோஷ்ய பூஜயேத் யோமாம் ஸோக்நிஷ்டோமஸ்ய பாண்டவ

இன்னமும் இம்மாதம் ப்ரபந்நஜந கூடஸ்தரான ஆழ்வாரின் அவதாரத்தாலும், ஆசார்ய சிகாமணியாகிய பட்டருடைய அவதாரத்தாலும் போற்றற்குரியது.

சென்ற வருஷம் வைகாசி விசாகத்தில் வெளி வந்த வைஜயந்தீ ஆழ்வாருடைய பெருமையைப் பேசி நம்மைக் களிக்கச்செய்தது. இவ்வருடத்து வைகாசி வைஜயந்தீ பத்திரிகை ஆசார்ய சிகாமணியாகிய பராசரபட்டரின் பெருமையைப் பேசாநின்ற வ்யாஸத்தை வரவேற்று வைஜயந்தீ வாசகர்களைக் களிக்கச் செய்யாநிற்கின்றது

ஸ்ரீ பராஶர பட்டார்ய: ஸ்ரீரங்கேஶபுரோஹித:
ஸ்ரீவதஸாங்கஸூதஶ் ஶ்ரீமாந் ஶ்ரேயஸே மேஸ்து பூயஸே

ஆழ்வானுக்குப் புத்ரராய் ஸ்ரீரங்கநாதனுக்குப் புரோஹிதரான ஸ்ரீபராசர பட்டார்யர் நம்முடைய அதிகமான ஶ்ரேயஸ்ஸின் பொருட்டு ஆக கடவர்.

வைகாசி யனுடம்

[ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராச்சாரியார்]

நமது ஸம்ப்ரதாயத்தில் எம்பெருமானாருடைய பதவியிலே அபிஷிக்தராய் அவரினும் விஞ்சிய ஞான வைபவத்தை யுடையரான பட்டர் என்னும் ஆசிரியரது திருவவதார நன்னாளாகிய வைகாசி யனுடத்தினன்று நமது வைஜயந்தீ வெளி வருவதனால் அவ்வாசிரியருடைய வைபவக் கடலில் சில சிறு திவலைகளை இன்று ஈண்டு அனுபவிக்க விழிகின்றோம்.

இவ்வாசிர்யர் கூரத்தாழ்வானுடைய திருக்குமாரர் என்றும் ஸ்ரீ ரங்கநாதனுடைய திருக் குமாரர் என்றும் வழங்கப்படுவர் ஆழ்வான் க்ருஹஸ்தாஶ்ரமத்தில் எழுந்தருளியிருக்கச் செய்தேயும் "விஹித விஷய நிவ்ருத்தி தன்னேற்றம்" என்று ஸ்ரீ வசநபூஷணத்திலருளிச் செய்த கணக்கிலே விரக்தாக்ரேஸரராக எழுந்தருளியிருந்தவர். இவர் தமது செல்வத்தை முற்றும் துறந்து

எம்பெருமானார் திருவடிகளில் ஆஶ்ரயித்ததுமுதல் நாடோறும் உபாதாந காலத்திலே ஸ்ரீ ரங்கத்தில் சில திருமாளிகைகளில் உஞ்சவ்ருத்தி செய்து, அது கொண்டு குடும்ப காரியத்தை நிர்வஹித்துக் கொண்டு ஒவ்வொருநாளும் கிடைக்கிற உணவுப் பொருள்களில் மறுநாளைக்கென்று சிறிதும் சேஷப்படுத்தி வைத்துக் கொள்ளாமல் அன்றன்றைக்கு தேஹயாத்திரை நடத்தியருளுகையில் ஒரு நாள் விடாப் பெருமழை பொழிந்ததனால் வெளியே போய் உபாதாநம் செய்துவரக் கூடாமல் போக, அதனால் அன்றைக்கு வெறும் தீர்த்தத்தையே உட்கொண்டு அருளிச் செயலநுஸந்தாநமே தாரகமாகக் கொண்டு வேறு உணவின்றியே யிருந்திட, அன்றிரவு பெரிய பெருமாள் அமுது செய்தருளுகிறபோது உண்டான திருச்சின்ன வொலிகேட்ட வளவில் இவரது தேவியாரான ஆண்டாள் பெருமாளைக் குறித்து, 'உம்முடைய அடியவர் பட்டினி யிருக்க நீர் குலாவிக் குலாவி அமுது செய்தருளுகிறீரோ?' என்று நினைப்பிட்ட வளவிலே ஸர்வஜ்ஞனான ஸ்ரீ ரங்கநாதன் அந்த ஆண்டாள் நினைப்பைத் திருவுள்ளம்பற்றி உடனே தேவஸ்தாந கார்யநிர்வாஹகரான உத்தம நம்பிக்கு அர்ச்சக முகேந கட்டளையிட்டு அப்பொழுது தாம் அமுது செய்த அக்கார வடிசிலை ஸகல பரிஜந பரிவாரங்களுடன் அவரைக் கொண்டு ஆழ்வான் திருமாளிகைக்கு அனுப்பியருள, ஆழ்வானும் இதனை யறிந்து பதறி யெழுந்து எதிர்கொண்டு மஹாப்ரஸாதமென்று அதில் தமக்கும் தமது தேவிக்குமாக இரண்டு திரளைகளை யெடுத்துக் கொண்டு உத்தம நம்பியை அனுப்பி விட்டு பக்தவத்ஸலனான பகவானுடைய வரம்பு கடந்த கருணைத்திறத்தை வியந்து அந்த அடிசிலில் ஒரு பகுதியைத்தாம் அமுது செய்து மற்றதைத் தேவியாருக்குக் கொடுத்தருள, முன்பு தசரத சக்ரவர்த்திக்குப் புத்ரகாமேஷ்டியிற் கிடைத்த பாயஸத்தின் கூறுகளே ஸ்ரீ ராம லக்ஷ்மண பரத சத்ருக்நர்களின் திருவவதாரத்துக்குக் காரணமானதுபோல இப்பொழுது இவர்க்கும் இத்திரளைகளிரண்டுமே இரண்டு திருக் குமாரர்கள் திருவவதரிப்பதற்கு ஹேதுவாயின. முறையே இவர்களின் திருநாமம் ஸ்ரீ.பராசர பட்டர், ஸ்ரீ வேதவ்யாஸ பட்டர் என்பனவாம்.

பராசர பட்டர் என்று திருநாமமாயினும் நமது ஸம்ப்ரதாய க்ரந்தங்களிலெங்கும் பட்டர் என்றே இவ்வாசிரியர் வழங்கப்

படுவர். பட்டர் என்னும் வடசொல் வேத சாஸ்திரங்களை நன்கு கற்றுணர்ந்த வித்வானையும் ஸ்தோத்ரஞ் செய்யும் தொழிலுடையவனையும் சொல்லும். ஹட்டாரகஃ [பட்டாரகஃ] என்னுஞ் சொல்லும் இத்திறத்ததே. 'விளையும் பயிர் முளையிலே தெரியும்,' என்னுமாபோலே ஶிஶுவாயிருந்த தன்மையிலேயே இவருடைய திறமையை நன்குணர்ந்த எம்பெருமானார் இவர்க்குப் பொருத்தமாக பட்டர் என்று திருநாமஞ் சாத்தினதும், அத்திருநாமத்திற்கு மிகப் பொருத்தமாகவே இவரும் ஸர்வஜ்ஞராய் விளங்கிப் புகழ் பெற்றதும் எம்பெருமானுடைய ஸத்ய ஸங்கல்பத்வத்தை ஸத்யமாக்கின போலும்.

இங்ஙனமே நாமகரணம் செய்தருள்வதற்காக உடையவர் எம்பாருடன் ஆழ்வான் திருமாளிகைக் கெழுந்தருளி, குழந்தைகளை எடுத்துக் கொண்டு வாரும் என்று எம்பார்க்கு நியமிக்க அவர் அங்ஙனமே ப்ரபந்நகுலக் கொழுந்தான அக்குழந்தைகளை எடுத்துக் கொண்டு வரும்போது த்ருஷ்டி தோஷாதிகள் தங்காதபடி ரக்ஷையாக த்வய மென்னும் மந்த்ர ரத்நத்தை அநுஸந்தித்து வாழ்த்திக் கொண்டே வந்து குழந்தைகளை எம்பெருமானார்க்குக் காட்டினர்; அவர் மிக்க களிப்புடனே ஆனந்தக் கண்ணீர் துளிக்கத் தம் திருக்கண்களாற் குளிரக் கடாக்ஷிக்கும்போது அத் தெய்வக ஶிஶுக்களின் தேஜோ விசேஷத்தைக்கண்டு வியப்புக் கொண்டு எம்பாரே! இக்குழந்தைகளிடம் த்வயம் பரிமளிக்கின்றதே, இங்ஙனம் ஆகுமாறு என் செய்தீர்?' என்று வினவ, எம்பார் 'குழந்தைகட்குக் காப்பாக த்வயாநுஸந்தாநம் செய்து கொண்டு வந்தேன்' என்ன; உடையவர் அப்படி எம்பார் காப்பிட்டதற்கு உகந்து அவரைப் பார்த்து 'இக்குழந்தைகள் உய்யும் வகையை நாடிச் செய்தற்கு முற்பட்டீராதலால் இவர்கட்கு நீரே ஆசார்யராகக் கடவீர்' என்று நியமித்தருளினரென்றும், அப்படியே அத்திருக் குமாரர்கட்கு எம்பாரே ஆசார்ய க்ருத்யங்கள் செய்தருளினரென்றும், இது பற்றியே, எம்பெருமானார் எம்பார் பட்டர் நஞ்சீயர் என்றிப்படி ஆசார்ய பரம்பரை வருகிற தென்றும் ப்ரஸித்தமாயிருக்கும். இங்ஙனே யிருக்கச் செய்தேயும் ஆழ்வானும் பட்டர்க்கு ஆசார்யராயினர். அது எங்ஙனே யெனில்; ஆழ்வான் திருக்குமாரர்கட்குத் திருவாய் மொழிப்பொருள் கற்பித்து வரும்போது "எண் பெருக்கந்நலத் தொண்பொருளீறில, வண்புகழ் நாரணன், திண்கழல் சேரே," என்கிற பாசுரத்தளவிலே வந்தவாறே, அது திருமந்த்ரார்த்தத்தை விவரிக்கிற பாசுரமாகையினாலும், மந்த்ரார்த்தம் ஆசார்யரிடத்திலேயே கேட்டறியவேண்டியதாதலாலும் அதனை அவர்கட்குச் சொல்லாது நிறுத்தி 'இதனை உங்கள் ஆசாரியர் பக்கலிலே கேட்டுக்கொள்ளுங்கள்' என்றுசொல்ல, அதனை விரைவில் அறிந்துகொள்ள வேணுமென்னும் அவாவினால் உடனே அவர்கள் எழுந்து தம் ஆசாரியரான எம்பார் எழுந்தருளியிருக்குமிடத்தைக் குறித்துப் போகப் புக்கவளவில் ஆழ்வான் "மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள்" என்கிறபடியே யாக்கைநிலையாமையைத் திருவுள்ளம் பற்றி அவர்களையழைத்து 'இன்னபோது இன்னாரிருப்பார் இன்னார் போவாரென்று தெரியாது, ஆதலால் இருந்து கேளுங்கள்' என்று, திருமந்திரத்தைச் சொல்லி அப்பாசுரத்தின் பொருளையும் விவரித்து 'இப்பாசுரத்தைத் திருமந்திரத்தின் அர்த்தமாக நினைத்திருங்கள்' என்று பணித்தருளினமையால் திருக்குமாரர்க்கு ஆழ்வானும் ஒரு ஆசார்யராக அமைந்தருளினர் என்று ஸம்பிரதாயம்வல்ல பெரியோர் கூறுவர். பட்டர் ஸஹஸ்ரநாம பாஷ்யம் அருளிச்செய்யும்போது ஆசார்யவந்தநம் செய்கிற முதல் ஶ்லோகத்தில் "வந்தே கோவிந்ததாதௌ—எம்பாரையும் திருத்தகப்பனாரையும் தொழுகின்றேன்" என்றருளிச் செய்தது உபயஸம்பந்தமும் தமக்கு உண்டானதுபற்றியேயாம். ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்திலும் இரண்டு ஆசிரியர்க்கும் இரண்டு ஶ்லோகங்களை துதியாக இட்டருளினர்,

பட்டரை இளங்குழந்தைப் பருவத்திலேயே ஸ்ரீரங்கநாதன் தனது புத்திரனாக அங்கீகரித்துத் தன்னுடைய ஸந்நிதியிலே திருமணத்தூணினருகே தொட்டிலிடுவித்து ஸ்ரீ ரங்கநாச்சியாரும் தானுமாகச் சீராட்டிவளர்க்க, அங்ஙனம் வளர்கிற அக்குழந்தை தவழ்ந்து சென்று, பெருமாள் அமுதுசெய்வதற்குத் திருமுன்பே கொணர்ந்து ஸமர்ப்பிக்கப்படுகிற 'அடிசிலைக் கைகளால் அள்ளியளைந்து துழாவ, பெருமாள் அதுகண்டு உகந்தருளி, "அமிழ்தினும் ஆற்றவினிதே தம்மக்கள், சிறுகையளாவிய கூழ்" (குறள்) என்றபடி இந்த இன்னடிசிலைமிகவும் பிரியமாக அங்கீகரித்தருள்வராம். இப்படி ரங்கநாதன் தம்மை அபிமானித்

துப் புத்ரஸ்வீகாரம் செய்தருளப் பெற்ற பாக்கியமுடைமையால் பட்டர் **ஸ்ரீரங்கநாத புத்ரர்** என்றும் வழங்கப்பட்டு வந்தார். **“ வானிட்ட கீர்த்தி வளர் கூரத்தாழ்வான் மகிழவந்த, தேனிட்ட தார் நம்பெருமாள் குமாரர்....பட்டர் ”** என்று இவரது சிஷ்யரான பிள்ளைப்பெருமாளையங்கார் (திருவரங்கக் கலம்பகக் காப்புச் செய்யுட்களுள் ஒன்றில்) கூறினர். பட்டர்தாமும் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் பதினேழாம் ஶ்லோகத்தில் “ ஸ்ரீராஜராஜகுமாரவத வாலிதகவு **ஸ்ரீரங்கராஜகமலாபதலாலிதத்வம்** ” என்ற பதத்தினால் இதனை ஸ்பஷ்டமாக்கியருளினதும் உணர்க.

இப்பேராசிரியர் ஸகல சாஸ்திரங்களிலும் அபாரமான பாண்டித்யம் பெற்றவர் என்பது இவர் அருளிச்செய்த க்ரந்தங்களுள் ஸஹஸ்ரநாம பாஷ்யம் ஒன்றுகொண்டே உணரத் தக்கதாகும். இவர் கவித்திறமையில் ஒத்தாரும் மிக்காருமில்லாதவர் என்பது இவர் அருளிய ஸ்ரீ ரங்கராஜஸ்தவ ஸ்ரீ குணரத்ந கோஶாதிகளால் நன்கு விளங்கும்.

அருளிச் செயல்களில் அற்புதமான விசேஷார்த்தங்களை அருளிச்செய்வதற்கு இவ்வாசிரியரே அஸிதர ஸாதாரணமான வல்லமைபெற்றவர் என்பது திவ்யப்ரபந்த வியாக்கியானங்களில் பெரியவாச்சான் பிள்ளை முதலானோர் அடிக்கடி அருளிச்செய்யுமாற்றால் தெரிகின்றது. வியாக்கியானங்களில், “ **என்று பட்டர் அருளிச்செய்வர்**” என வருமிடங்களிலெல்லாம் ஒரு விலக்ஷணமான ரஸாநுபவம் கல்நெஞ்சினர்க்கும் உண்டாவதுவழக்கம். இவரது நிர்வாஹங்களில் இரண்டுமூன்றை எண்டுத்துக் காட்டுவாம்.—

திருநெடுந்தாண்டகத்தில் “ **அறுகால சிறுவண்டே தொழுதேனுன்னை** ” என்ற பாசுரத்தில் வண்டுக்கு ஸ்வாபாவிகமான ஆறுகால்களுள்ளமையை எதற்காகச் சொல்லிற்று? என்று விமர்சிக்கப் புகுந்த சிலர், இரண்டுகாலாகவும் நான்கு காலாகவுமின்றியே விரைந்து செல்லுகைக் குறுப்பாக ஆறு கால்கள் இருக்கப் பெற்ற பாக்கியம் என்னே! என்று வியந்து கூறுவதாக நிர்வஹித்தார்கள். இந்த நிர்வாஹத்தில் ஸ்வாரஸ்யமில்லை; வண்டு செல்லுதற்கு ஸாதனம் சிறகேயன்றிக் கால்கள் அல்லவே; ஆதலால் ‘அறுகால’ என்னும் அடைமொழிக்கி அங்ஙனே கருத்துரைத்தல் பொருந்தாதென்று, பட்டர் அருளிச் செய்வதாவது—**தொழுதேனுன்னை** என்று

மேலே யிருக்கையிலே என் தலையிலே வைப்பதற்கு ஆறுகால்கள் உண்டாகப் பெற்றதே! என்று வியந்து சொல்லுகிறபடி என்பதாம். (இதனை விவரிப்போம்.) தூது சென்று மீண்டு வந்தால் வண்டின் கால்களைத் தன் தலை நிறைய வைத்துக் கொண்டு கூத்தாடக் குதூஹலித்திருப்பதனால் அதற்குச் சேர இங்ஙனே கருத்துரைத்தபடி. ஸ்வாபதேசத்தில் வண்டாகச் சொல்லுவது ஆசார்யர்களை. ஆசாரியனும் ஆசாரியனுடைய தேவியாரும், அவருடைய திருக்குமாரருமாக மூவரும் உத்தேச்யர் என்பது ஆபஸ்தம்ப ஸூத்ரஸித்தம். மூவர்க்கும் சேர்ந்து ஆறு திருவடிகளாதலால் அது தோன்றவே **அறுகால சிறுவண்டே!** என்றது, என்பது பட்டர் திருவுள்ளம். “**கோங்கார் பூந்துழாய் முடி என்குடக் கூத்தர்கென் தூதாய், நுங்கால்கள் என் தலைமேல் கெழுமீரோ நுமரோடே**” என்ற திருவாய் மொழிப் பாசுரத்தின் ஸ்வாபதேஶார்த்தத்திற்கு மிகவுமிணங்கியதாமிது.

“ பரிவதிலீசனைப்பாடி விரிவது மேவலுறுவீர், பிரிவகையின்றி நன்னீர் தூய், புரிவதுவும் புகைபூவே.” என்கிற திருவாய் மொழிப் பாசுரத்தை பட்டர் உபந்யஸிக்கும் போது “ **புரிவதுவும் புகை பூவே**” என்ற ஶப்த ஸ்வாரஸ்யத்தை நோக்கி “ **இவ்விடத்தில்** அகில் புகை யென்றாவது கருமுகைப்பூ என்றாவது சிறப்பித்துச் சொல்லாமையாலே ஏதேனுமொரு புகையும் ஏதேனுமொரு பூவும் எம்பெருமானுக்கு அமையும்; செதுகையிட்டுப் புகைக்கலாம், கண்ட காலிப்பூவுஞ் சூட்டலாம்’ என்று உபந்யஸித்தாராம். அதை நஞ்சீயர் கேட்டு “ நகண்டகாரிகாபுஷ்பம் தேவாய விநிவேதயேத் (கண்ட காலிப்பூவை எம்பெருமானுக்குச் சாத்தலாகாது.) என்று சாஸ்த்ரம் மறுத்திருக்க, இப்படி அருளிச் செய்யலாமோ? என்று கேட்டார்; அதற்கு பட்டர் அருளிச்செய்த ரஸோக்தி:—“சாஸ்த்ரம் மறுத்தது மெய்தான்; கண்ட காலிப்பூ எம்பெருமானுக்கு ஆகாதென்று மறுத்தபடியன்று; அடியார்கள் அப்பூவைப் பறித்தால் கையில் முள் பாயுமே! என்று பக்தர்கள் பக்கலில் தயையினால் சாஸ்த்ரம் நிஷேதித்ததேயன்றி எம்பெருமானுக்கு ஆகாத பூ எதுவுமில்லை—என்றும்.—இப்படியாக இவர் அருளிச் செய்யும் ரஸோக்திகளும் விசேஷார்த்தங்களும் ஸமயவிசேஷங்களில் வைஜயந்தியில் வெளிவந்து கொண்டிருக்கும்.

த்ரிபுவன வீரதேவராயன் என்ற அரசன் பட்டர் வைபவத்தைக் கண்டுங் கேட்டும் அவரிடத்து மதிப்புக் கொண்டு ஒரு நாள் ‘பட்டரே! நீர் நமது அரண்மனைக்கு ஒரு நாள் வந்து போம்’ என்று சொல்ல, அதற்கு பட்டர் சிறிதும் இணங்காமல் “நம்பெருமாள் அஞ்சலென்ற கைமறித்தாலும் அவர் வாசலொழிய வேறொரு போக்கிட முண்டோ எமக்கு” என்று சொல்லி மறுத்து விட்டனர் என்பது ப்ரஸித்தம். தன்னைச் சரணமடைந்தவர்கட்கு ஆவன வெல்லாஞ் செய்து அவர்களைப் பாது காத்தலையே விரதமாகக் கொண்டு அவர்களுக்கு அபயமளிப்பவனை பரமபுருஷனுக்கு அடிமைப்பட்ட நாம் சில சிற்றரசரின் வாசலிலே கிடந்து துவளக்கடவோமல்லோம் என்கிற திண்ணிய அத்யாவஸாயத்தை வெளியிட்டவாறு.

இங்ஙனம் ஞானபக்தி விரக்திகளில் ஒப்புயர்வற்ற இப்பேராசிரியரது ப்ரபாவம் பாற்கடல் போன்றதாதலின் அதில் சில திவலைகளே இப்போது அநுபவிக்கப்ராப்தமாயிற்று.

ஓர் ஸந்தேஹம்

(ஸ்ரீ காஞ்சீ, பிரதிவாதி பயங்கரம்,
ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்)

பலவருஷங்களுக்கு முன் இவ்விஷயத்தை அடியேன் ப்ரகாஶநம் செய்திருந்தும் நிபுண நிரூபகர்கள் கடாக்ஷித்தருளி ஸந்தேஹ நிராகரணம் செய்தருளாமையினால் அதனை மீண்டும் இப்போது விஜ்ஞாபநம் செய்துகொள்ள விரும்புகிறேன்.

“[illegible]—
ஸம்ஸ்ப்ருசந் ஆஸநம் சௌரேः விதுரஸ் ஸ மஹாமதிः.”

என்கிற மஹாபாரத ச்லோகத்தை நம் பூருவாசாரியர்கள் விசேஷமாக எடுத்தாள்கின்றனர். விதுரர் தம்முடைய க்ருஹத்தில் கண்ணபிரானுக்குத் தாமே இட்ட ஆஸனத்தில் தமக்கே அதிசங்கை யுண்டாகி அவ்வாஸனத்தைத் தடவிப் பார்த்தார்” என்று மேற்காட்டிய ஶ்லோகத்திற்குப் பொருள் அருளிச்செய்யப்படுகிறது. திருவாய்மொழியின் ஈடு முப்பத்தாறாயிரப் படியிலும், அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் அருளிச்செய்த திருப்பாவை ஆறாயிரப்படியிலும், ஜநந்யாசார்யரும் மணவாளமாமுனிகளும் அருளிச்செய்த ஸ்ரீவசந பூஷண வியாக்கியானங்களிலும் இந்த இதிஹாஸம் இங்ஙனமே யருளிச்செய்யப்பட்டுள்ளது.

“ஸம்ஸ்ப்ருஶந்” இத்யாதி ச்லோகமும் காட்டப்பட்டுள்ளது, அந்த ஶ்லோகம் ஸ்ரீமஹாபாரதத்தில் உத்யோகபர்வத்தின் உள்ளீடான பகவத்யாந பர்வத்தில் தொண்ணூற்று நான்காமத்தியாயத்தில் அறுபத்து மூன்றாவது ஶ்லோகமாக இக்காலத்திய அச்சுப்புத்தகத்தில் காண்கிறது. “ஸம்ஸ்ப்ருஶந் ஆஸநம் சௌரேர் மஹாமதிருபாவிசத்” என்று மூலத்தில் பாடம் காண்கிறது. “.... விதுரஸ் ஸ மஹாமதிः” என்று நம் ஆசார்யர்கள் உதாஹரித்துளர்; ஜநந்யாசார்யர் மாத்திரம் “மஹாமதிருபாவிஶத்” என்றே பாடம் காட்டியிருக்கிறார். இப்பாடபேதம் ஒரு பெரிதான விஷயமல்ல; எவ்வாறாயினுமாயிடுக. இந்த ச்லோகத்திற்கு நம்மவர்கள் அருளிச்செய்துள்ள பொருள் ப்ரகரணத்திற்குப் பொருந்தாததுபோல் தோன்றுகிறது. விதுரர் தமது திருமாளிகையிலே தாமிட்ட ஆஸனத்தைத் தடவிப் பார்த்ததாகவன்றோ நம்மவர்கள் பொருள் அருளிச்செய்திருப்பது; மூலத்தில் இந்த ஶ்லோகம் எந்த ப்ரகரணத்தில் இராநின்றதென்றால், விதுரர் திருமாளிகையினின்றும் கண்ணபிரான் துரியோதநனது ஸபாமண்டபத்திற்கு எழுந்தருளின பிறகு அங்கு துச்சாஸநன், ஸாத்யகி, கர்ணன், சகுநி, துரியோதனன், கண்ணன், விதுரர் முதலானோர் வீற்றிருக்குமாற்றைக் கூறும் ப்ரகரணத்திலுள்ளது. விதுரர் திருமாளிகை விருத்தாந்தம் தொண்ணூற்றோராவது அத்தியாயத்தில் கூறப்பட்டுளது, அந்த ப்ரகரணத்தில் இந்த ச்லோகம் காணப்படவில்லை. துர்யோதந ஸபையில் நடந்த செய்தியைக் கூறுமிடத்துள்ள ஶ்லோகத்தை மேற்கொண்டு அங்ஙனே பொருள் கூறுதல் எங்ஙனே பொருந்தும்? விதுரர் கண்ணபிரானுக்கு அந்தரங்க பக்தராதலால் அப்பிரானுடைய ஆஸநத்தைத் தொட்டுக் கொண்டு மிகவும் சமீபஸ்தராய் உட்கார்ந்தார் என்றுதான் ப்ரகரணத்திற்குச்சேரப் பொருள் சொல்லத்தக்கதாகத் தோற்றுகின்றது. விதுரர் தமது திருமாளிகையில் கண்ணபிரானுக்கு ஆஸனமிட்டதாகவாவது தாமும் ஆஸனத்திலே உட்கார்ந்ததாகவாவது மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கவில்லை. இப்படியிருக்க, நம் ஆசார்யர்கள் “ஸம்ஸ்ப்ருஶந்” இத்யாதி ஶ்லோகத்திற்கு வேறுவகையாகப் பொருள் அருளிச்செய்தது

என்னே! என்று அடியேனுடைய நெஞ்சம் சங்கா களங்கிதமாயிரா நின்றது.

இதற்கு இங்ஙனே சிலர் விடையளிக்கக்கூடும்: இதிஹாஸ புராணங்களெல்லாம் இக்காலத்தில் பலவகையாக விகாரப்பட்டிருப்பதால் இந்த ஶ்லோகம் மஹாபாரதத்தில் இடம்மாறி அச்சிடப்பெற்றிருக்கலாம்; அச்சுப்புத்தகத்தையே ஆதாரமாகக் கொண்டு பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளில் அதிசங்கை கொள்ளவொண்ணாதென்பர்;—

இதிஹாஸ புராணங்களுக்கு ஆசார்யர்களின் காலத்திலிருந்த ஸந்நிவேஶமும் இப்போதையை ஸந்நிவேஶமும் மிகவும் மாறுபாடுற்றிருக்கின்றதென்பது ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யம்; அத்யாயக்ரமத்திலும் ஶ்லோகங்களின் ஆநுபூர்வியிலும் பாடப்ரக்ரியைகளிலும் வாசாமகோசரமான வைபரீத்யங்கள் ஏற்பட்டிருக்கின்றமையை அடியேன் குவாலாக அறிந்துளேன்; அதில் எள்ளளவும் ஸம்வாதமில்லை. "ஸம்ஸ்ப்ருசந்" இத்யாதிச்லோகத்திற்கு நம் ஆசார்யர்கள் அருளிச்செய்த அர்த்தம் நன்கு பொருந்துமாறு அந்தஶ்லோகம் எந்தப் ப்ரகரணத்தில இருக்க வேண்டுமோ அந்தப் ப்ரகரணத்தில் தானே அந்த ஶ்லோகம் அமையப்பெற்ற மஹா பாரத ஸ்ரீ கோசம் யாரிடத்திலாவது கிடைக்கக் கூடுமா? ப்ராசீநதாள கோஶங்களைச் சேமித்து வைத்திருப்பவர் பலருண்டே! அவற்றில் இந்தஶ்லோகம் க்ரமமான ஸ்தானத்தில் அமைந்திருக்கின்றதாவென்பதை யாரேனுமொரு மஹாநுபாவர் பரிஶ்ரமப்பட்டுக் கண்டறிந்து வெளியிடுவரேல் தலையல்லால் கைம்மாறிலேன்.

இந்தப்ரஸக்தியிலே மற்றொரு விஷயமும் காட்டப்படுகின்றது: ஸ்ரீ வேதாந்த தேசிகனுடைய ரஹஸ்யத்ரயஸாரக்ரந்தத்தில் இருபத்தைந்தாந்தா மதிகாரமான ப்ரபாவவ்யவஸ்தாதிகாரத்தில் "விதுராந்நாநி புபுஜே சுசீநி குணவந்தி ச" என்றிதைக் கேட்டு துர்யோதனன் 'பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய மாஞ்சைவ மது ஸூதந!' கிமர்த்தம் புண்டரீகாக்ஷ! புக்தம் வ்ருஷலபோஜநம்? என்று கேட்க; 'த்விஷதந்நம் ந போக்தவ்யம் த்விஷந்தம் நைவ போஜயேத்' பாண்டவாந் த்விஷஸே ராஜந்! மம ப்ராணா ஹி பாண்டவா꞉' என்று உத்தரமருளிச் செய்கையாலே...." என்கிற வாக்கியங்கள் காணப்படுகின்றன. இதுவும் மூல விருத்தமாயிரா நின்றது'

"விதுராந்நாநி புபுஜே" இத்யாதிஶ்லோகம் முந்தினதாகவும் "த்விஷதந்நம் ந போக்தவ்யம்" இத்யாதிஶ்லோகம் பிந்தினதாகவுமன்றோ தேசிகனால் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. மூலத்தில் அங்ஙனில்லை. உத்யோக பர்வத்தில் தொண்ணூற்றோராவது அத்யாயத்தில் இருபத்தேழாவது ஶ்லோகமாக "த்விஷதந்நம்" என்னும் ஶ்லோகமும் நாற்பத்தைந்தாவது ஶ்லோகமாக "விதுராந்நாநி புபுஜே" என்னும் ஶ்லோகமும் அச்சுப்புத்தகத்திற் காண்கிறது. பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய" என்கிற ஸுப்ரஸித்தமானஶ்லோகம் இந்த ப்ரகரணத்தில் அடியோடு காணப்படவில்லை. விதுருடைய அடிசிலைக் கண்ணபிரான் அமுது செய்த பிறகு அப்பிரானை துர்யோதநன் அதிக்ஷேபித்துக் கேட்பதாக தேசிகன் முதலிய நம்மவர்கள் அருளிச் செய்திருக்கிறபடிக்கிணங்க இப்போதைய மஹாபாரதத்தில் ஶ்லோகங்களின் ஆநுபூர்வி அமைந்திருக்க வில்லை.

இப்படி ஒவ்வொரு விஷயத்தையும் நாம் ஆராயப் புகுங்கால் மூலக்ரந்தங்கள் எல்லை கடந்த விகாரத்தை அடைந்திட்டனவாக அறுதியிடுதல் இன்றியமையாததாகின்றது. மற்றுள்ள புராணங்களிலும் ஸ்ரீ பாஞ்சராத்ர ஸ்ம்ஹிதைகளிலும் நுழைந்து பார்த்தாலோ, அவற்றிலுள்ள விபர்யாஸங்கள் பேச்சுக்கு நிலமல்ல. அந்தணர் நூலாயும் மூலப்ரமாணமாயுமுள்ள வேதங்களின் உபப்ரும்ஹணங்களான இதிஹாஸ புராணாதிகளைப் பரிஷ்காரப்படுத்துதல் நமக்கு முக்கியமான கைங்கர்யமல்லவா? இவ்விஷயந் தன்னை முக்கியமாகக் குறிக்கொள்வாருண்டா?

ஸ்ரீ வசநபூஷணத்தில் இரண்டாம் ப்ரகரணத்தில் "அழகுக்கிட்ட சட்டை அணைக்கைக்கு விரோதியாமாப்போலே" என்ற சூர்ணிகைக்கு அடுத்தபடியாக ஹாரோபி,என்றொரு ஸ்ரீஸூக்தி பிள்ளை லோகாசாரியாரால் உதாஹரிக்கப்பட்டுளது. அவ்விடத்து வியாக்கியாநத்தில் [ஆய்ப்படியிலும் ஜீயர் படியிலும்] "ஹாரோபி நார்பித꞉ கண்டே ஸ்பர்ஶஸம்ரோதபீருணா
ஆவயோரந்தரே ஜாதா꞉ பர்வதாஸ் ஸரிதோ த்ருமா꞉ ||"
ஹாரோபி நார்பித꞉ கண்டே ஸ்பர்ஶஸம் ரோதபீருணா
ஆவயோரந்தரே ஜாதா꞉ பர்வதாஸ் ஸரிதோ த்ருமா꞉
என்று அந்த ச்லோகம் பூர்ணமாக உதாஹரிக்கப்பட்டு வியாக்கியானிக்கப்பட்டுமிருக்கிறது. இது ஸ்ரீராமாயணத்தில் பெருமா

ளுடைய திருவாக்காகத் தெரிகின்றது. ஆனால் இந்தஸ்லோகம் இதுகாறும் வெளிவந்துள்ள ஸ்ரீராமாயணப் பதிப்புகளில் ஒன்றிலும் காணப்படவில்லை. இருபது முப்பது ஒலை ஸ்ரீ கோசங்களை நாநா தேசங்களிலிருந்து ஸம்பாதித்து வைத்துக்கொண்டு சோதித்து ஸ்ரீராமாயணத்தைப் பதிப்பித்தவர்கட்கும் இந்த ஸ்லோகம் கிடைக்கவில்லை. இரண்டொரு வருஷங்களுக்கு முன் அருமையாகக் கிடைத்த ஒரு ஸ்ரீராமாயண தாளகோசத்தில் இந்த ஸ்லோகம் கிடைத்ததாக ஒரு ஆப்தர் காட்டினர். சென்னை ஜி. ஏ. நடேசன் அண்டு கம்பெனியாரால் ஆங்கில மொழி பெயர்ப்புடன் வெளியிடப்பட்ட ஸ்ரீராமாயண ஸம்க்ஷேபத்தில் யுத்த காண்டத்தில் (பக்கம் 330 ல்) இந்த ஸ்லோகம் அச்சிடப் பட்டு மிருக்கிறது. ஆனால், "பூவயோரந்தரே" என்ற விடத்தில் புஜயோரந்தரே என்று காண்கிறது. இருந்தாலும் ஒருவிதமாக ஸ்லோகஸந்நிவேசம் கிடைத்தது பரமானந்தத்தை விளைக்கின்றது.

திருவாய்மொழி ஈட்டில் (2-2-4) பூவும் பூசனையுந் தகுமே என்ற விடத்தில் "[illegible]" என்று ஸ்ரீபீஷ்மர் நெடும்போது அவனுடைய பரத்வத்தை உபபாதித்துக்கொண்டு போந்து" என்ற விடத்தில் அடையவளைந்தா னரும்பதத்தில்,

"இந்த ஸ்லோகம் இப்போதைய மஹாபாரத க்ரந்தங்களில் பீஷ்மருடைய வாக்யமாகக் காணப்படவில்லை யென்றும், வேறொரு இடத்தில் தருமபுத்திரரைக் குறித்து மார்க்கண்டேயருடைய வாக்கியமாகக்காணப்படுகின்றதென்றும் சொல்லுகிறார்கள்." என்று எழுதப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இதனால் முந்நூறு நானூறு வருஷங்களுக்கு முன்னமே இத்தகைய விபர்யாஸங்கள் விளைந்தனவாக அறியலாகிறது.

நமது பூருவாசாரியர்களின் திவ்யக்ரந்தங்களில் உதாஹரிக்கப்பட்டுள்ள ப்ரமாணங்களை மாத்திரமாவது நாம் நன்கு பரிஷ்கரித்து வைத்துக்கொள்வது நலம். இவ்விஷயத்தில் மஹான்கள் முயற்சிகொள்ள வேணும்.

வர்த்தமாநங்கள்

ஸ்ரீவானமாமலை மடாதிபதி ஜீயர் ஸ்வாமிகளின் நவதிருப்பதி யாத்ரா விஜயம்

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி வானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி வைகாசி மகோத்ஸவத்தை உத்தேசித்து ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளி அங்கு ஆழ்வாரை மங்களாஶாஸநம் செய்து விசேஷ மரியாதைகள் பெற்று அங்கிருந்து திருக்கோளூர், இரட்டைத் திருப்பதி, தென் திருப்பேரை, பெருங்குளம், திருப்புளிங்குடி நத்தம், ஸ்ரீவைகுண்டம் முதலிய நவதிருப்பதிகளுக்கும் மங்களாஶாஸந நிமித்தம் எழுந்தருளினர்.

வர்த்தமான வானமாமலை சின்ன மதுரகவி ராமாநுஜ ஸ்வாமிகளின் முதல்யாத்ரை இதுவேயாகும். இவ்வாறு எழுந்தருளிய ஸ்ரீஸ்வாமிகளின் பெருமைக்குத் தக்கபடி திருநகரி, தென் திருப்பேரை, பெருங்குளம் முதலான திவ்ய தேஶங்களில் மடத்து ஶிஷ்யர்களும் மற்றும் பல ப்ரமுகர்களும் குதூஹலத்துடன் வரவேற்று அதிவிமர்ஸையாக ததீயாராதநம், பட்டணப்ரவேஶம் முதலான வைபவங்களை பக்தி ஶ்ரத்தையுடன் விசேஷமாக நடத்திவைத்தார்கள். 21-5-37-ல் வானமாமலையில் நின்று எழுந்தருளி நவதிருப்பதிகளிலும் மங்களாஶாஸம்செய்து விசேஷ மரியாதைகள்பெற்று 30-5-37 ல் வானமாமலைக்கு எழுந்தருளினர்" என்று தெரிவிக்கிறார். ஸ்ரீவைஷ்ணவதாஸன் ஸ்ரீபராங்குசபக்தன்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்

I. அரிய உபந்யாசம்:—16-5-37 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணி முதல 6-30 மணி வரை திருவல்லிக்கேணி ஸ்ரீவாநமாமலை மடத்தில் ஸ்ரீ உ ப வே புரிசை நடாதூர் வரதாசார்ய ஸ்வாமி 'பக்திரசம்' எனும் விஷயம்பற்றி அரியதோர் உபந்யாசம் செய்தார். ஸ்ரீமான் யன். டி. சாமண்ணா, வரகவி சுப்ரமண்யபாரதி முதலியோர் வந்திருந்தனர்.

II. தமிழ் வகுப்பு:—இராயப்பேட்டை அய்யாமுதலி தெரு 6 நம்பர் மேன்மாடியில் நடைபெற்றுவரும் தமிழ் வகுப்பில் காரியதரிசியால் 'அமலன்' என்ற பதார்த்தம் 19-5-37 புதன்கிழமை மாலை 6-30 மணி முதல் 8-30 மணிவரை விளக்கப்பட்டது.

III. ஸ்ரீநரசிம்ம ஜயந்தி:—23-5-37 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணி முதல் 6-மணி வரை திருவல்லிக்கேணி ஸ்ரீ வாநமாமலை

மடத்தில் ''ஸ்ரீ நரசிம்ஹத்தவம்'' எனும் விஷயத்தை ஸ்ரீஉபவே அட்வொகேட் ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி உபந்யாசித்தார்.

IV. நம்மாழ்வார் மஹோற்சவக் கொண்டாட்டம்:—அடியிற் கண்டபடி சங்கக் காரியாலயத்தில் மாலை 6-30 மணிமுதல் 8-30-9 மணி வரை இடைவிடாது 10 தினங்கள் உபந்யாசங்கள் நடந்தன.

ஸ்ரீ உபவே அட்வகேட் ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமியால் 24-5-37; 25-5-37, 31-5-37 இம்மூன்று தினங்களில் முறையே சடகோபதத்வம்; ஆழ்வாரும் வள்ளுவரும்; ஆழ்வாரும் தமிழும் உபந்யசிக்கப்பட்டன.

ஸ்ரீமான் கம்பராமாயணம் ஆர். சந்தான கிருஷ்ணய்யங்கார் அவர்களால் 27-5-37; 1-6-37 களில் ஆழ்வாரும் கம்பரும்; திருவாய்மொழியும் கம்பராமாயணமும்;

26-5-37; 28-5-37; 29-5-37; 30-5-37; 2-6-37களில் பண்டித திருவாலி ராமாநுஜாசாரியார், குறிச்சி சே. ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியார் ஸ்வாமி, பகவத் விஷயம் கீனூர் நரசிம்மாசார்ய ஸ்வாமி; சங்கவித்வான் ஸ்ரீ. வே. ஸ்ரீரங்கம் சடகோபாசாரியார் ஸ்வாமி; ஸ்ரீமான் யஸ். லக்ஷ்மி நரசிம்மாசார்ய ஸ்வாமி இவர்களால்முறையே ஆழ்வாரும் தமிழ்க்கவிகளும்; ஆழ்வாரும் ஆளவந்தாரும்; ஆழ்வாரும் பிராட்டியும்; ஆழ்வாரும் திருமங்கை மன்னனும்; ஆழ்வாரும் எம்பெருமானாரும்.

V. திருவள்ளுவர் திருநாள்:—25-5-37 செவ்வாய்க்கிழமை சங்கக் காரியாலயத்தில் திருவள்ளுவர் திருநாட் கொண்டாட்டம் நடைபெற்றது. காரியதரிசியும் தலைவரும் முறையே 'வள்ளுவர் பெருமை' வள்ளுவரும் ஆழ்வாரும் 'என்ற விஷயங்களைப்பற்றி உபந்யாசம் செய்தனர்.

VI. உபதலைவர் அறுபதாண்டு நிறைவு விழா·—31-5-37 சங்க உபதலைவர் பகவத் விஷயம் அட்வகேட் வி. நரஸிம்மாசார்ய ஸ்வாமி அறுபதாண்டு நிறைவுவிழா சங்கக் காரியாலயத்தில் நடந்தது. செய்யுளிலும், வசனத்திலும் உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. சங்கத் தலைவர் காரியதரிசி, ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியார், திருவாலி ராமாநுஜாசாரியார், லக்ஷ்மி நரசிம்மாசாரியார் ஸ்ரீரங்கம் சடகோபாசாரியார் முதலியோர் அவரது குணங்களை வியந்து கூறினர்.

காரியதரிசி, ப. ரே. திருமலை ஐயங்கார்.

சீர்திருத்தக்காரர்களும் பண்டிதர்களும்

தற்காலச் சீர்திருத்தக்காரர்கள் சிலர் ஸநாதந தர்மா வலம்பிகளான பண்டிதர்களிடம் சில குறைகளிருக்கின்றன வாகவும் அக் குறைகளை அறவே யொழித்துத் தங்களைப்போலப் பிறரும் வாழவேண்டுமென்கிற பரந்த நோக்கங்களை யுடையவர்களாக அவர்களாகவேண்டுமென்றும் பத்ரிகைகளின் வாயிலாகவும் உபந்யாஸ மூலமாகவும் ப்ரசாரம் செய்து வருகிறார்கள். இவ்வாறு சீர்திருத்தக்காரர்களால் சொல்லப்படும் குறைகள் சநாதர்ம ப்ரவர்த்தகர்களான பண்டிதர்களிடமுள்ளனவா? என்பதை நமது வைஜயந்தீ விசாரிக்கப் புகுவான் தொடங்குகிறது—

1. ஸநாதந தர்ம ப்ரவர்த்தகர்களான பண்டிதர்களொவ்வொருவரும் ப்ரதிதிநமும் ராமாயணாதி க்ரந்தங்களை வாசித்து முடிக்கும்பொழுது ஸ்வஸ்தி ப்ரஜாப்ய: பரிபாலயந்தாம் ந்யாயேந மார்கேண மஹீம் மஹீஶா:—கோ ப்ராஹ்மணேப்ய: ஶுபமஸ்து நித்யம் லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகிநோ பவந்து என்று அநுஸந்தாநம் பண்ணி வருகிறார்கள். இவ்வாறு அவர்கள் அநுஸந்திப்பது க்யாதி லாப பூஜைகளைக் காரணமாகக் கொண்டோ? அல்லது பிறர்களுடைய நிர்பந்தத்திற்காகவோ? என்றால் இவ் விரண்டிற்கு மன்று. பின்னை என் கொண்டென்னில்? பரஸம்ருத்தியையே ப்ரயோஜநமாகக்கொண்ட அவர்களுடைய ஸ்வாபாவிகமான குணமே என்பது உற்றுநோக்கத் தெரியவரும்.

இவ்வளவு உயர்ந்த குணங்களையுடைய மஹாநுபாவர்களான பண்டிதர்களைத் தற்காலச் சீர்திருத்தக்காரர்கள் வாய்வந்தபடி பேசுவது அவர்களின் குறுகிய அறிவையே அறிவியா நிற்கிறதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? .

2. இன்னமும் நமது ஸநாதநதர்மாநுஷ்டாநத்தை அநுஷ்டிக்குமவர்கள் க்ருஹங்களில் ஒரு சுபகார்யம் நடந்தால் அக்காலத்தில் கூடியிருக்கும் மஹாநுபாவர்களை அவர்கள் ப்ரார்த்தித்து வேண்டிக்கொள்ளும் ப்ரகாரத்தைச் சிறிது சீர்திருத்தக்காரர்கள் உற்று நோக்குவார்களேயானால் இவ்வாறுபேச முன்வர மாட்டார்களென்று நம்புகிறேன். அக்கூட்டத்திலொருவர் எழுந்திருந்து அஞ்சலிஹஸ்தராய் நின்றுகொண்டு தேஶோயம் நிருபத்ரவோஸ்து. ஸத்யஸ் ஸுவ்ருஷ்ட்யாஸ்ஸர்வே நதநதீதடாகாஸ்ஸம்பூர்ண பூயாஸுரிதி பவந்தோ மஹாந்தோநுக்ருவர்ணந்து. ராஜா

தார்மிகோ விஜயீச பவது. ஸர்வே ஜநாஸ் ஸுகிநோ பவந்து ஸமஸ்த ஸந்மங்ளாநி ஸந்து என்று வேண்டிக்கொள்கிறார். இவர்களையோ சீர்திருத்தக்காரர்கள் திருத்த முயல்வது. இது காலத்தின் கொடுமையே அவர்களை நாம் என்சொல்லுவது.

(இன்னும் வரும்)

உத்ஸவாதிகள்

ஆனி. 4-(17-6-37) திருவல்லிக்கேணித் தெள்ளிய சிங்கப் பெருமாள் உத்ஸவ ஆரம்பம்..6 (19-6-37-ஷை கருடஸேவை.

மதுரை—ஆனிக்கருடன் பரத்வ நிர்ணயம்பண்ணிய பெரியாழ்வாருக்குப் பெருமாள் ஸேவை ஸாதித்த திநமாகும்.

ஆனி. 10-23-6. 7.

ஸ்ரீரங்கம்:—ஜேஷ்டாபிஷேகம்: மன்னார்குடி தெப்ப உத்ஸவம். ஆனி. 11-(24-6-37) ஸ்ரீரங்கம் பெரிய திருப்பாவாடை திதிகள்.

ஆனி. 6. (19-6-37) ஏகாதஸி 10-23-6-37. பௌர்ணமீ-21. (4-7-37) ஏகாதஸி-24 - (7-7-37) அமாவாஸ்யை ஆடி. 4. 19-7-37-ஏகாதஸி. 8. (23-7-37) பௌர்ணமீ

பகவத் விஷயம்

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஆழ்வாரருளிச்செய்த திருவாய்மொழிக்கு திருக்குருகைப்பிரான் பிள்ளான், நஞ்சீயர், வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயர் பெரியவாச்சான் பிள்ளை நம்பிள்ளை ஆகிய இவ்வைந்து திருநாமங்களும் அடைவே அருளிச்செய்த ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, ஈடு முப்பத்தாறாயிரப்படி ஆகிய ஐந்து வியாக்யாநங்களும், அடைய வளைந்தான் அரும்பதமும், ஜீயர் அரும்பதமும் அச்சிடப்பட்டு ஒவ்வொருபத்தும் ஒரு புஸ்தகமாக பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது. சில காப்பிகளே உள்ளன. வேண்டுவோர்கள் அடியில்கண்ட விலாஸத்திற்கு எழுதி முன்னதாக 5-ரூபா மணியார்டர் செய்தால் மீதி வி. பி. மூலம் அனுப்பப்படும். மற்றும் ஸம்ப்ரதாயப் புஸ்தகங்களும் அடியிற்கண்ட விலாசத்தில் கிடைக்கும்.

S. R. S. வைஜயந்தீ ஆபீஸ்,
24, சந்திரப்ப முதலி தெரு ஜீ. டி. மதராஸ்.

ஶ்ருங்கார ரஸைகதாரமாக ஆக்கிக் கொண்டார்கள் என்றதா பிற்று.

...த்தால், அநுகாரரீதியிலே அமைந்த ஆழ்வார்களின் பகவதநுபவத்திற்காட்டிலும், தன் இயற்கைக்கு இணங்கினதாகவே அமைந்த ஆண்டாளுடைய பகவதநுபவம் ரஸவத்தரம் என்பது பெறப்படும்.

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் **"पत्यौ पद्मासहाये प्रणयिनि भजतः पेयसीपारतन्त्र्यं भक्तिः शृङ्गारवृत्त्या परिणमति मुनेर्भाव वन्धप्रथिम्ना"** (பத்யௌ பத்மாஸஹாயே ப்ரணயிநி பஜத: ப்ரேயஸீபாரதந்த்ர்யம் பக்தி: ச்ருங்காரவ்ருத்த்யா பரிணமதி முநேர் பாவபந்த ப்ரதிம்நா) என்று ஸ்வாமி தாமே அருளிச்செய்த ச்லோகமும் இங்கு இரண்டாம் பாதத்திற்குப் பொருத்தமாக அநுஸந்திக்க வுரியதாகும்.

.**'भवतीव'** (பவதீ இவ) என்றவிடத்தில் **"उपमेयात् शतगुण-मुपमानम्—உபமேயாத் சதகுணமுபமாநம்"** என்ற ஆலங்காரிக் ஸமயம் ஸ்மரிக்கத்தகும். ஆழ்வார்களின் அநுபவத்திற்கு ஆண்டாளுடைய அநுபவத்தை உபமானமாகக் கூறியதனால் இதற்குள்ள அதிசயம் விளங்கிற்று.

[உச்சாவசை:] "உஷ்சாவசம் நைகபேதம்" இதி அமர:. [**விரஹஸங்கமஜை: உதந்தை:**] நம்மாழ்வார் பெரியாழ்வார் திருமங்கைமன்னன் முதலானோருடைய திவ்ய ஸூக்திகளில் * அஞ்சிறைய மடநாராய் * ஆடியாடி * முதலான பதிகங்களினால் விரஹவேதனைகளும், * இவையு மவையு முவையும் * இத்யாதிகளான பலபதிகங்களினால் ஸம்ச்லேஷ ஸந்தோஷங்களும் காணத்தக்கன. விச்லேஷத்திலே, தூதுவிடுவது, மடலூர்வது வாய்வெருவுவது முதலிய பலவகைகளும் ஸம்ஶ்லேஷத்திலேயும் இங்ஙனே வேறு பலவகைகளும் உண்டாதலால் "**உச்சாவசை:**" எனப்பட்டது.

"**குரவஸ்த்வதீயா:**" என்றவிடத்தில் சில விவக்ஷிதங்களுண்டு; இங்குள்ள குருசப்தம் பித்ருபர்யாயம். "பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே" என்று நாடோறும் ஸ்ரீவைஷ்ணவ வுலகம் ஸேவிக்கிற வாழித் திருநாமத்தின்படி ஆண்டாள் பெரியாழ்வார்திருமகளென்று ப்ரஸித்திபெற்றிருந்தாலும் ஆழ்வார்கள் பதின்மர்க்கும் இவள் ஒரு திருமகள் என்பது

பூருவாசாரியர்களின் ஒருமிடறான திருவுள்ளம். அதையடியொற்றியே ஸ்வாமி இங்கு குரவ ஸ்த்வதீயா: என்றருளிச்செய்தபடி. மணவாளமாமுனிகளும் உபதேச ரத்தின மாலையில் * அஞ்சுகுடிக்கொரு சந்ததி * என்றருளிச் செய்கிறார் ஆண்டாளை. அஞ்சுகுடியென்றவிதற்கு இரண்டுவகையான பொருள் ஏற்கும்; பொய்கையாழ்வார் தொடங்கிப் பெரியாழ்வாரளவுமுள்ள ஆழ்வார்களைக் கணக்கிட்டால் அவ்வாழ்வார்களின் குடி ஐந்து என விளங்கும்; எங்ஙனேயென்னில், பொய்கை பூதம் பேயாழ்வார் மூவருஞ் சேர்ந்து முதலாழ்வார்களென்று ஒரு ஸமுதாயமாக வழங்கப் பெறுதலால் அம்மூவருஞ் சேர்ந்து ஒரு குடி. திருமழிசைப்பிரான், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார் ஆகிய நால்வரும் நான்கு குடி; ஆகவே அஞ்சு குடியென்பது ஆண்டாளுக்கு முன்னே திருவவதரித்திருந்த ஆழ்வார்களனைவரையும் சொல்லிற்றாகி, அவர்கட்கெல்லாம் ஒரு சந்ததியாகத் தோன்றியவள் ஆண்டாள் என்றதாக ஒரு நிர்வாஹம். இனி மற்றொரு நிர்வாஹமாவது - அஞ்சுகுடி யென்பதை அஞ்சுகின்ற குடி என [வினைத்தொகையாக]க் கொண்டு ஆழ்வார்கள் (பதின்மரை)யும் விவக்ஷிக்கிறபடி. எம்பெருமானுக்கு என்வருகிறதோவென்று அஞ்சுகின்ற தன்மை பெரியாழ்வார்க்கு மிகவும் விசேஷித்து இருப்பினும் ஆழ்வார்கள் பதின்மர்க்கும் அந்த அச்சம் ஸாதாரணமாகவுண்டு. இது "மங்களாசாசனத்தில் மற்றுள்ளவாழ்வார்கள் தங்கள் ஆர்வத்தளவுதானன்றி" என்ற உபதேசரத்தினமாலைப் பாசுரத்திலேயே நன்கு காட்டப்பட்டது. பெரியாழ்வார்க்குப்போலே பொங்கும் பரிவு மற்றையோர்க்கு இல்லையெனினும் மங்களாசாஸனத்தில் ஆர்வம் [அதாவது, அஞ்சுகின்ற தன்மை] அனைவர்க்குமுண்டு என விளங்குதலால் அஞ்சுகுடி யென்ற சொல்லால் ஆழ்வார்களனைவரையுங் கொள்வது பொருத்தமுடைத்தேயாகும். ஆகவே, பதின்மர்க்கும் ஆண்டாள் புதல்வியென்றதாயிற்று. ஆக, குரவஸ் த்வதீயா: என்றவிது ஆழ்வார்கள் பதின்மரையுமே சொல்லிற்றாகும். சில ஆழ்வார்களுக்கு "பக்திம் நிஜாம் ப்ரணய பாவநயா க்ருணந்த:" என்கிற அம்சம் இல்லையாகிலும் ஛த்ரிந்யாயத்தாலே அவர்களையுங் கூட்டிக் கூறக் குறையில்லை யென்க...

मातस्समुत्थितवतीमधिविष्णुचित्तं विश्वोपजीव्यममृतं वचसा दुहानाम् ।
तापच्छिदं हिमरुचेरिव मूर्तिमन्यां सन्तः पयोधिदुहितुस्सहजां विदुस्त्वाम् ॥९॥

மாதஸ் ஸமுத்திதவதீமதிவிஷ்ணுசித்தம்
விஶ்வோபஜீவ்யமம்ருதம் வசஸா துஹாநாம்,
தாபச்சிதம் ஹிமருசேரிவ மூர்த்திமந்யாம்
ஸந்த: பயோதிதுஹிதுஸ் ஸஹஜாம் விதுஸ் த்வாம். 9

हे मातः (गोदे)! अधिविष्णुचित्तं समुत्थितवतीम्, विश्वोपजीव्यम् अमृतं वचसा दुहानां तापच्छिदम् (अत एव) हिमरुचेः अन्यां मूर्तिमिव (स्थिताम्) त्वां सन्तः पयोधिदुहितुः सहजां विदुः ।

श्रीगोदादेवी श्रीमहालक्ष्म्यास्सोदरीति सचमत्कारमत्र प्रतिपाद्यते । अमृतमथनकाले चन्द्रमाः श्रिया सह समुत्पन्न इति प्रथते। तादृशचन्द्र साधर्म्यस्य गोदायां निरूपणमुखेन लक्ष्मीसोदरीत्वमस्यामुपवर्ण्यते । हिमरुचिः चन्द्रमाः अधिविष्णुचित्तं समुत्थितवान्, गोदापि अधिविष्णुचित्तं समुत्थितवती—इति श्लेषभङ्ग्या प्रतिपाद्यते। विष्णोः चित्तं विष्णुचित्तम्; तस्मिन्—अधिविष्णुचित्तम् इति चन्द्रपक्षे। * चन्द्रमा मनसो जातः * इति हि श्रुतिप्रसिद्धिः। अतः विष्णोश्चित्ते जातत्वं तस्य निर्व्यूढम्। गोदा तु विष्णुचित्तसूरौ तनयात्वेन जातेति अधिविष्णुचित्तं समुत्थानं गोदाचन्द्रयोस्समम्। गोदापक्षे, विष्णुः चित्ते यस्येति बहुव्रीहितो व्युत्पाद्यं विष्णुचित्तपदम्। अथ चन्द्रमाः सर्वजनोपभोग्यं अमृतं चन्द्रिकारूपं विस्तृणीते । गोदातु सर्वजातीय भक्तजनाधिकारार्हं परमभोग्यं दिव्यसूक्तिरूपं अमृतमन्वगृह्णात्। [तापच्छिदम्।] हिमरुचिः स्वकीयैः करै रस्मादृशां देहसंतापं छिनत्ति। गोदा तु स्वसूक्तिभिः स्वदिव्यमङ्गलविग्रह सेवाप्रदानतश्च—आध्यात्मिकादितापत्रयहारिणी । इत्येवंविधैरुपपादनप्रकारैः हिमरुचेः पर्यायभूताया गोदादेव्याः तस्यैव पयोधिदुहितृसहजातत्वं सुवचमेव ॥

(அந்.) ஹே மாத:! அதிவிஷ்ணு சித்தம் ஸமுத்திதவதீம் விஶ்வோபஜீவ்யம் அம்ருதம் வசஸா துஹாநாம், தாபச்சிதம் (அத ஏவ) ஹிமருசே: அந்யாம் மூர்த்திம் இவ (ஸ்திதாம்) த்வாம் ஸந்த: பயோதிதுஹிது: ஸஹஜாம் விது:.

தாயாகிய கோதையே! உம்மைப் பெரியோர்கள் பாற்கடல் திருமகளாராகிய பெரியபிராட்டியார்க்கு உடன்பிறந்தவளாக

உணர்கின்றார்கள் ; எங்ஙனேயென்னில் ; தேவர்கட்காக அமுதம் கடைந்தெடுத்தகாலத்தில் "अश्वाप्सरो विषसुधाविधुपारिजात लक्ष्म्यात्मना परिणतो जलधिर्बभूव- அஶ்வாப்ஸரோ விஷஸுதாவிதுபாரிஜாத லக்ஷ்ம்யாத்மநா பரிணதோ ஜலதிர் பபூவ." என்று (அதிமாநுஷஸ்தவத்தில்) ஆழ்வான் அருளிச்செய்தபடியே பிராட்டியோடு கூட சந்திரனும்தோன்றியவன் ; அந்த சந்திரனே நீராக (ஆண்டாளாக) வடிவெடுத்துவந்தாற்போலே யிருத்தலால் உம்மைப் பெரிய பிராட்டியாருடன் பிறந்தவளாகச் சொல்லுதல் பொருந்தும். நீர் திருமேனியின் ஒளிவிளக்கத்தினால் மாத்திரம் சந்திரனை யொத்திருக்கின்றீரல்லீர் ; மற்றும் பலவகைகளாலும் அவனோடு ஸாதர்மியம் பெற்றிராநின்றீர் ; (எங்ஙனேயென்னில்) விஷ்ணு சித்தோதயம் அவனுக்குமுண்டு உமக்குமுண்டு. *வேயர் தங்கள்குலத்துதித்த விட்டுசித்தரிடத்திலே நீர் தோன்றியவராதலால் உம்முடைய விஷ்ணுசித்தோதயம் ப்ரஸித்தம். "சந்த்ரமா மநஸோ ஜாத:" என்ற சுருதியின்படி அவன் விஷ்ணுவின் சித்தத்தில் தோன்றியவனாதலால் அவனுடைய விஷ்ணுசித்தோதயமும் ப்ரஸித்தம். ஸகலஜனங்களும் விரும்பி ஆதரிக்கத்தகுந்த நிலவாகிற அமுதத்தை அவன் அளிக்கின்றான் ; நீரும் ஸகல ஜாதியபக்தஜனங்களும் வாசியற அதிகரிக்கலான அருளிச்செயலமுதத்தை அளித்திட்டீர். அவன் தனது கிரணங்களினால் ஸகல ஜநங்களினுடைய தேஹதாபத்தைத் தவிர்க்கின்றான் ; நீரும் ஸ்ரீஸூக்திகளாலும் திவ்யமங்களவிக்ரஹ ஸேவையை யளிப்பதனாலும் எங்களுடைய ஆத்யாத்மிகம் ஆதிதைவிகம் ஆதிபௌதிகம் என்கிற தாபத்ரயத்தைத் தவிர்த்தருளாநின்றீர். ஆக இவ்வகைகளாலே சந்திரனோடு நீர் ஒற்றுமை பெற்றிருத்தலால் லக்ஷ்மீஸஹஜாதத்வம் சந்திரனுக்குப் போலவே உமக்கும் அழகிதாகப் பொருந்துகின்றது என்றாராயிற்று.

'பெரிய பிராட்டியார்தாமே ஆண்டாளாக வந்துபிறந்தாள்' என்று சொல்லுவதும், 'பெரிய பிராட்டியார்க்கு ஆண்டாள் திருத்தங்கையார்போல வந்து பிறந்தாள்' என்று சொல்லுவதும் ஸம்ப்ரதாயத்திலுண்டாதலால் இந்த கோதாஸ்துதியில் மேற்குறித்த இரண்டுவகையான வார்த்தைகளையும் ஸ்வாமி ஆதரித்துப் பேசுகிறார். முதல் ஶ்லோகத்தில் "கமலாமிவாந்யாம்" என்றார் ; இதில் "ப்யோதி துஹிது: ஸஹஜாம்" என்றார்.

இரண்டுபடியும் சொல்லக்குறையில்லையென்று காட்டினபடி. ஆண்டாள் பெரிய பிராட்டியார்க்கு உடன்பிறந்தவள் என்கிற ப்ரஸித்தியை இங்ஙனே ஶ்லேஷ வகையினால் மூதலித்தருளின சமத்காரம் வியக்கத்தக்கது. ஆண்டாளுக்குச் சந்திரனோடு ஸாதர்மியத்தை நிர்வஹித்து அம்முகத்தாலே இவளுடைய லக்ஷ்மீஸஹஜாதத்வத்தை நிரூபித்திருப்பதனால் விலக்ஷணமான கவிசாதுர்யம் விளங்காநின்றது.

இதில், 1. அதி விஷ்ணு சித்தம், 2 விச்வோபஜீவ்யம் 3. அம்ருதம், 4. தாபச்சிதம் என்னும் பதங்களில் சிலேடை அமைந்திருக்குமழகு குறிக்கொள்ளத் தக்கது. (1) விஷ்ணு சித்தரிடத்திலே, விஷ்ணுவினுடைய மநஸ்ஸிலே என்று இரண்டு அர்த்தம். மற்றவை ஸுஸ்பஷ்டம். (௯)

तातस्तु ते मधुभिदः स्तुतिलेशवश्यात् कर्णामृतैस्स्तुतिशतैरनवाप्तपूर्वम् ।
त्वन्मौलिगन्धसुभगामुपहृत्य मालां लेभे महत्तरपदानुगुणं प्रसादम् ॥ १० ॥

தாதஸ் து தே மதுபித: ஸ்துதிலேஶவஶ்யாத்
கர்ணாம்ருதை: ஸ்துதிஶதை ரநவாப்த பூர்வம்,
த்வந்மௌலிகந்தஸுபகா முபஹ்ருத்ய மாலாம்
லேபே மஹத்தரபதாநுகுணம் ப்ரஸாதம். 10

(हे गोदे !) ते तातस्तु स्तुतिलेशवश्यात् मधुभिदः कर्णामृतैः स्तुतिशतैरनवाप्तपूर्वं महत्तरपदानुगुणं प्रसादं त्वन्मौलिगन्धसुभगां मालामुपहृत्य लेभे ॥

गोदादेव्याः पिता श्रीभट्टनाथसूरिः सकलदिव्यसूरिमध्ये महायोगी (பெரியாழ்வார்) इति प्रथते । कथमस्य महत्त्वम् ? न तावद्वयसा ज्यैष्ठ्यात् ; सरोयोगिप्रभृतिदिव्यसूर्यपेक्षया अस्य कनीयस्त्वात् । नाप्यधिकसंख्याकदिव्यगाथाप्रणेतृत्वप्रयुक्तं महत्त्वम् ; श्रीपराङ्कुशपरकालयोरेव तद्योगात् । तथापि भगवत्प्रसादभूम्ना महायोगीति बिरुदमनेन लब्धम् । तादृशभगवत्प्रसादजनने किं बीजम् ? गोदादेव्याः कुन्तलबन्धसंसक्त सुगन्धबन्धुरदिव्यमाल्योपहरणमेव बीजमित्युल्लिख्यतेऽनेन श्लोकेन । गोदादेव्या अवयवैकदेशप्रभाववर्णनमत्र कृतमिति ध्येयम् ॥

(அ)—(ஹேகோதே!) தே தாதஸ் து ஸ்துதிலேஶவஶ்யாத் மதுபித: கர்ணாம்ருதை: ஸ்துதிஶதை: அநவாப்தபூர்வம் மஹத்

தரபதாநகுணம் ப்ரஸாதம் த்வந்மௌலிகந்த ஸ-ம்பகாம் மாலாம் உபஹ்ருத்ய லேபே.

ஆண்டாளே! உம்முடைய திருத்தகப்பனாகிய பட்டர் பிரான், ஸ்வல்ப ஸ்தோத்திரத்திற்கு வசப்படக் கூடியவனான எம்பெருமானிடத்தில் நின்றும் செவிக்கினிய செஞ்சொற்களாலே முன்பு அடையப் படாததான பெரியாழ்வாரென்னும் சிறப்புப் பெயரை, நீர் சூடிக்களைந்த மாலையை ஸமர்ப்பித்ததனால் அடைந்தனர் என்றவாறு.

ஆழ்வார்களுக்குள்ளே ஆண்டாளுடைய திருத்தகப்பனான பட்டர் பிரான் பெரியாழ்வாரென்று வழங்கப்படாநின்றார். இவ்வாழ்வார்க்கு எந்த அம்சத்தினால் பெருமை? என்று ஆராய வேணும். மற்றுள்ள வாழ்வார்களுக்கு முன்னே வந்துதித்தவர்களான முதலாழ்வார்களும் திருமழிசைப்பிரான் நம்மாழ்வார் முதலானவர்களும் இவரைக் காட்டிலும் திருநக்ஷத்திரத்தில் மிகப் பெரியவர்களாதலால் வயதினால் பெருமை இவர்க்குச் சொல்லவொண்ணாது. இனி, எண்ணிக்கையில் அதிகமான பாசுரங்களையருளிச் செய்வதனாலாகும் பெருமையாவது சொல்லத் தகுமோவென்று பார்க்கில், அவ்விஷயத்திலும் நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாருமே பெருமை பெற்றவர்களாவர். ஆகவே, எக்காரணத்தினால் இப்பட்டர்பிரானுக்குப் பெரியாழ்வாரென்ற பெயர்வழங்கலாயிற்றென்று உணரவேண்டுவது அவசியமாயிற்று. ஆண்டாள் சூடிக்களைந்த பூமாலையை இவ்வாழ்வார் எம்பெருமானுக்கு நாடோறும் ஸமர்ப்பித்து வந்ததனால் மிகவும் திருவுள்ள முவந்த எம்பெருமான் இவர்க்குப் பெரியாழ்வார் என்று விருதளித்தனன்— என்கிறது இந்தச்லோகத்தில்.

இங்ஙனே அருளிச் செய்கிறவிது ஆசிரியர்தாம் செய்தருளும் ஒரு உத்ப்ரேக்ஷை யாயிருக்க வடுக்கும். "மங்களா சாசனத்தில் மற்றுள்ள வாழ்வார்கள், தங்களார்வத்தளவு தானன்றிப்— பொங்கும் பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான், பெரியாழ்வாரென்னும் பெயர்" என்ற ஆசார்ய திவ்ய ஸூக்தியின்படி மற்றையாழ்வார்களிற் காட்டிலும் மங்களாசாஸனத்தில் அளவுகடந்த ஊற்ற முள்ளமை காரணமாகவே இவ்வாழ்வார்க்குப் பெரியாழ்வாரென்ற திருநாமம் வழங்கலாயிற்றென்பது பூர்வாசார்யஸம்ப்ரதாயமாகையாலே, இங்கு இந்த ச்லோகத்தில்

ஸ்வாமி அருளிச் செய்வது ஆண்டாளுடைய ஸ்தோத்ரத்திற்கு அநுகுணமான உத்ப்ரேக்ஷையாகும் என்று பெரியோர்கள் அருளிச் செய்யும்படி. "**मन्ये शङ्के ध्रुवं प्रायो नूनमित्येवमादिभिः। उत्प्रेक्षा व्यज्यते शब्दैः इवशब्दोपि तादृशः** — மந்யே ஶங்கே த்ருவம் ப்ராயோ நூநமித்யேவமாதிபி:, உத்ப்ரேக்ஷா வ்யஜ்யதே ஶப்தை: இவஶப்தோபி தாத்ருஶ:" என்கிற ஆலங்காரிக ஸமயத்தின்படி உத்ப்ரேக்ஷாவ்யஞ்ஜகங்களான மந்யே, ஶங்கே இத்யாதிகளில் ஒன்றும் இந்தஸ்லோகத்திற் காணாமையாலே இதனை உத்ப்ரேக்ஷையாகக் கொள்வதில் அத்தனை ஸ்வாரஸ்யமில்லையாதலால் இது வஸ்துஸ்திதியை அருளிச் செய்தபடியேயாகும் என்பாரு முண்டு. அப்போது, பெரியாழ்வாரென்னும் பெயர் நிகழ்ந்தமைக்கு இரண்டுவகையான காரண நிர்வாஹமும் ஸம்ப்ரதாய ஸித்தம் என்று கொள்ளக் கடவது.

மஹத்தரபதாநகுணம் என்றதற்கு "**नित्यविभूति प्रदानानुरूपम्**" என்று சிலர் வியாக்கியான முரைத்திருப்பது ஆசிரியரின் விவக்ஷைக்கு ஒத்திருக்குமாவென்று ப்ராஜ்ஞர்கள் பராமர்ஶிக்க.

ஸ்துதிலேஶவஶ்யாத் என்பது எம்பெருமானைப்பற்றின ஸ்வபாவோக்தி. தன்னைக்குறித்து இரண்டொரு பாசுரம் பாடினவளவிலேயே மஹத்தரபதாநு குணமான அநுக்ரஹத்தை எம்பெருமான் செய்யவல்லவனாயிருந்து வைத்தும், செவிக்கினிய செஞ்சொற்கள் பலவற்றையும் பாடினவிடத்தும் அது செய்யாதேயிருந்தானென்பதைத் தெரிவிக்கும் பூர்வார்த்தத்தில் "கர்ணாம்ருதை: ஸ்துதிஶதை:" என்ற வ்யஸ்தமான பாடத்திற்காட்டிலும் "கர்ணாம்ருதஸ்துதிஶதை:" என்று ஸமஸ்தமானபாடம் ஆசிரியர் அருளிச்செய்ததாயிருக்கும் என்று சில பெரியோர் பகர்வதுண்டு. இந்த ஸமஸ்த பாடந்தன்னில் என்ன ஸ்வாரஸ்யமென்னில்; [**कर्णामृतानि स्तुतिशतानि येषां ते, कर्णामृतस्तुतिशताः, तैः**] என்று பஹுவ்ரீஹி ஸமாஸமாகி, கர்ணாம்ருதமான ஸ்துதி ஶதங்களைப்பாடின மற்றையாழ்வார்களாலும் [நம்மாழ்வாராலுங் கூட என்றபடி] அடையப்படாததான அநுக்ரஹத்தை இவ்வாழ்வார் பெற்றார் என்னுமிடம் நன்கு புலனாகின்றது. "இன்கவிபாடும் பரமகவிகள்" என்று சிறப்பித்துக் கூறப்பட்ட முதலாழ்வார்களுக்கும், 'பாலேய் தமிழரிசை காரர் பத்தர் பரவுமாயிரம்" என்றும், "தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்

னேன்'' என்றும் ''கேட்டாரார் வானவர்கள் செவிக்கினிய செஞ் சொல்லே'' என்றும் சொல்லுகிறபடியே கர்ணாம்ருத ஸ்துதி ஸந்தங்களைப்பாடின நம்மாழ்வார்க்கும், மற்றும் இத்தகையரான திருமழிசைப் பிரானுக்கும் குலசேகரப் பெருமாளுக்கும் கிடைக்காததான அநுக்ரஹத்தை ஆண்டாள் காரணமாக இவ்வாழ்வார் பெற்றூர் என்கைக்கு ஸமஸ்தமான பாடமே சிறக்குமென்பர்.

த்வந்மௌலிகந்த ஸுபகாம்—உம்முடைய திருக்குழற் கற்றையின் நறுமணத்தினுல் வாஸிதமான என்றபடி ''மஹத்தர பதம் லேபே'' என்னுமல் ''மஹத்தர பதாநுகுணம் ப்ரஸாதம் லேபே'' என்றருளிச் செய்ததற்குக் கருத்து என்னென்னில் 1 பெரியாழ்வார் என்னும் திருநாமத்தை எம்பெருமான் தானே, அளித்திருந்தானுகில் '' மஹத்தரபதம் லேபே'' என்னலாம்; இவரது பெருமையைக்கண்ட மஹநீயர்களே இவர்க்குப் பெரியாழ்வார் என்ற திருநாமத்தை வழங்கத் தொடங்கினராதலாலும்; அதுதான் எம்பெருமானுடைய திருவுள்ளத்தைப் பின்சென்றேயாதலாலும் '' மஹத்தரபதாநுகுணம் ப்ரஸாதம் லேபே '' எனப்பட்டது.

இந்த ச்லோகத்தினுல் ஆண்டாள் சூடிக்களைந்த மாலையின் சிறப்பு வருணிக்கப்பட்டதாயிற்று................................(10)

दिग्दक्षिणापि परिपक्त्रिमपुण्यलभ्यात् सर्वोत्तरा भवति देवि! तवावतारात्।
यत्रैव रङ्गपतिना बहुमानपूर्वं निद्रालुनापि नियतं निहिताः कटाक्षाः ॥ ११ ॥

திக் தக்ஷிணாபி பரிபக்த்ரிம புண்யலப்யாத்
ஸர்வோத்தரா பவதி தேவி த்வாவதாராத்,
யத்ரைவ ரங்கபதிநா பஹுமாந பூர்வம்
நித்ராளுநாபி நியதம் நிஹிதா: கடாக்ஷா:.

हे देवि! (त्वदावासस्थानभूता) दिक् दक्षिणा सत्यपि परिपक्त्रिमपुण्यलभ्यात् तव अवतारात् सर्वोत्तरा भवति। (सर्वोत्तरत्वे हेत्वन्तरं च वर्तते।) निद्रालुनापि रङ्गपतिना यत्रैव (यस्यामेव दिशि) कटाक्षाः बहुमानपूर्वं नियतं निहिताः॥

गोदादेव्या दिव्यदेशो दक्षिणस्यांदिशीति प्रसिद्धमेतत्। अथापि सा दक्षिणा दिक् परमभाग्यफलभूतात्तदवतारात् सर्वोत्तरा भवति—इत्यापाततो विरोध आभासते। दक्षिणा दिक् उत्तरा दिग्भवतीति विरोधः खलु

அசல் பவுனில் கட்டின ரங்கோன் வைர நகைகளும் சுத்தமான வெள்ளிப் பாத்திரங்களும் காரண்டியுடன் கொடுக்கும் ஷாப்பு.

இதுதான்

ராதாகிருஷ்ணா ஜூவெல்லரி எம்போரியம்,

10, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை.

ஸ்ரீ ரங்கராஜஸ்தவம்

இந்தக்ரந்தம் பரமகாருணிகரான ஸ்ரீ பராஸரபட்டரருளிச் செய்தது. இது பெருமாள்கோவில் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசார்யரால் அநுக்ஹிக்கப்பட்ட தத்வார்த்த சிந்தாமணி என்கிற வ்யாக்யானத்துடன் அச்சாய் வெளிவந்திருக்கின்றது. சில ப்ரதிகளே உள்ளன. வேண்டுமவர்கள் எழுதுக.

546 பக்கங்கள் கொண்டது விலை ரூ, 2—8—0

S. R. S. வைஜயந்தீ ஆபீஸ்,
24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

மெய்யான ஜோதிஷம்

ப்ரஶ்நம் அல்லது ஜாதகம் அனுப்பிக் கேள்வி 1-க்கு ரூ. 1-0-0 வீதம் மணியார்டர் செய்யவும். தமிழ் ஸம்ஸ்க்ருதம் இங்கிலீஷ், ஹிந்தி, தெலுங்கு பாஷைகளில் பதில் தெரிவிக்கப்படும் ஜாதகங்கள் தமிழில் குறித்தனுப்புவதற்கு ரூ. 3—4—0

விவரத்திற்குக் கடிதமெழுதவும் பொய்யானல் பணம் வாபீசு செய்யப்படும்.

வடகரை K. K. A. ராமாயணம் கிருஷ்ணய்யங்கார்
ஸ்ரீ க்ருஷ்ண ஜோதிஷாலயம், ஸ்ரீவிலில்புத்தூர், S.I.R.

பாரிசவாயுவுக்கு பயப்படவேண்டாம்!

க்ஷீரபலா

(101 தடவை பாகம் செய்தது.)

பாரிசவாயுவுக்கு ஸஞ்சீவி. எல்லாவித வாத நோய்களையும் கண்டிக்கும். இதற்கு நிகரான மருந்தே கிடையாது. இதை எங்களுடைய "அயவீரஸிந்தூர"த்துடன் கலந்து உட்கொண்டால் இன்னும் அமோகமான பலன் அதிசீக்கிரத்தில் கிடைக்கும்.

க்ஷீர பலா:—அவுன்ஸ் 1-க்கு 3-8-0. ½-அவுன்ஸ் 1-12-0.

அயவீரம்:—ஒருவாரத்திற்கு போதுமான மருந்து 1-0-0.

மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்

107, பிராட்வே, சென்னை

சாம்பில் பாக்கட் 1-படி 4 அணா.

அசல் கை குத்தல் அரிசி.

ஆரோக்கியத்தையும், வலுவையும் கொடுக்கத்தக்கது. மதராஸ் ப்ரொவின்ஷியல் கோஆபரேடிவ் சொஸைடி அவர்களால் தயாரிக்கப்பட்டது.

கிடைக்குமிடம் :—சி. **ரங்கநாயகலு செட்டி,**

நெ. 20, கோவிந்தப்ப நாய்க்கன் தெருவு,

(சௌந்தரிய மஹாலுக் கெதிரில்) ஜி. டி., மதராஸ்

P. KOTHANDARAM PILLAI

SON OF LATE

P. S. PONNUSAWMY PILLAI,

HIGH CLASS CABINET MAKER AND UPHOLSTERER,

Established in 1854.

Ponnusawmy Pillai's Buildings

39 & 44, Esplanade West :: (Rattan Bazaar) :: P. T., MADRAS

சொல்லும்படி செய்வதே! ஸுக்ரீவம் நாதமிச்சதி என்பதற்கு மல்வருகாயிருக்கும் இதொரு ஶீலமிருந்தபடி யென்? என்கிறார் ருஷி. அறுபதினாயிரமாண்டு மலடு நின்று பெற்ற சக்ரவர்த்தி தன்னுதரத்திற்குப் போரும்படி ஸமர்ப்பித்த ம்ருஷ்டாந்நத்தைக் காட்டிலும் விரும்பி, ஶபரிகையினால் ஸமர்ப்பித்ததை அமுது செய்தருளுவதே! என்று மேன் மேலும் சில குணத்தில் ஆழங்கால் படுகிறார். சக்ரவர்த்தி திருமகன் ஶபரி யாஶ்ரமத்தில் ஸம்யக் போஜநம் பண்ணின பின்பே எழிலுமதிஶயித்த தென்கை எங்கட் பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதியிறே!.

48. [illegible]

பம்பாதீரே ஹநுமதா ஸங்கதோ வாநரேண ஹ
ஹநுமத் வசநாச்சைவ ஸுக்ரீவணே ஸமாகத:

[illegible]

[illegible]

[illegible]

அவ—இந்த ப்ரகாரம் (பெருமாளின்) ஸத்ய ப்ரதிஜ்ஞை ப்ரதான மாகவுடைய ஆரண்ய காண்ட விருத்தாந்தத்தை சுருக்கியுரைத்து, நண்பனின் கார்யத்தை நிறை வேற்றுவதில் நோக்க முடைய கிஷ்கிந்தா காண்டக் கதையைச் சுருக்கி யுரைக்கிறார். பம்பாதீரெ என்று......................................

அர்த்தம். பம்பை என்பது ஒரு தாமரைத் தடாகம். அத்தடாகத்தின் கரையில், கொண்டாடப்பட்ட கன்னத்தை யுடைய (வீரவ்ரணத்தாலடையாளம் பண்ணப்பட்ட முகத்தையுடைய) அனுமானென்கிற வானரனோடு கூடினான். (இராமன்) என்கிற பதத்தை இங்கு சேர்த்துக்கொள்ள வேண்டும். காதலியை விட்டுப் பிரிந்த காதலர்களின் ப்ராணனை அபஹரிக்கும் பம்பாஸர ஸமீபத்திலிரா நின்ற உத்யாநவநத்தில், தன்னுடைய காதலியோடு சேர்ப்பிக்கும் கடகருடைய நல் வரவு, திருடர்களால் அரண்யத்திலபஹரிக்கப்பட்ட அகிலார்த்தை யுடையவனுக்கு தன்னுடைய மனிதர்களின் முகாவலோகநம்போல் அத்யாஶ்வாஸந மாகுமாகையால் ஆனந்தமடைகிறார் ருஷி ஹ என்று.

ஹநுமதா என்ற பதத்தால் இப்போது நமக்குப் புகலிடமேதென்று மிகவும் வருந்தா நிற்கின்ற நிலைமையில், விஜய ஸூசக வ்ரணத்தா லடையாளம் பண்ணப்பட்ட முகத்தை யுடைய புருஷனோடு சேருகை, யத்ருச்சையாக ஏற்பட்டது என்பது தோன்றா நிற்கிறது.

வாநரேண என்ற அடை மொழியினால் ராவணனைப் போல மாறுவேடமின்றி சுயரூபத்தோடு வந்தமையால் நம்புவதற்கு யோக்யமான தன்மை குறிக்கொள்ளத்தக்கது.

அனுமானின் வார்த்தையால் ஸுக்ரீவனோடு கூடினான், இத்தால் அநுகூல புருஷ லாபத்தால் ஏகம் துக்கம் ஸுகம் ச ந: என்கிற நண்பனின் லாப மேற்பட்ட தென்பது கருத்து.

விசேஷார்த்த :—பம்பாதீரே ஹநுமதா வாநரேண ஸங்கத: என்றதால் வழிபறியுண்ட விடத்தில் தாய் முகம் காட்டினாற் போலே காணும்! பிராட்டியைப் பிரிந்து வருந்தா நின்ற காலத்தில் திருவடி வந்து முகம் காட்டினபடி.

ஹநுமதா—தளர்ந்து ஆவாரார் துணை யென்று தடுமாறா நின்ற ஸமயத்தில் வெற்றித் தழும்பு சுமந்த ஆண் பிள்ளையோடு கூடப்பெறுவதே.

வாநரேண—ஸந்யாஸி வேடம் பூண்டு வந்து, உயிரைவிட்டு உடலைப்பிரிக்குமாபோலே நித்யாநபாயிநியான பிராட்டியைப் பிரித்து நலிவைப் பண்ணுமவன் போலன்றிக்கே செவ்வியானொருவனோடு கூடப்பெறுவதே.

பம்பாதீரே ஹநுமதா ஸங்கத:—பாதகவர்க்கம் ஸாம்ராஜ்யம் பண்ணும் தேசத்தில் வருந்தா நிற்க தருஷ்டா ஸீதா என்று சொல்லி அவ்வருத்தத்தை நீக்கவல்ல வீரவ்ரணாங்கித மஹா புருஷனோடு முந்துற முன்னம் கூடப்பெறுவதே.

வாநரேண—ஜநயாமாஸுரேவம்தே புத்ராந் வாநர ரூபிண: என்று தன்னுடைய ஸஹாயத்திற் கென்றே ஸ்ருஷ்டிக்கப்பட்டவனோடு கூடப்பெறுவதே.

ஹநுமதா வாநரேண—விக்ராந்தஸ்த்வம் ஸமர்த்தஸ்த்வம் ப்ராஜ்ஞஸ்த்வம் வாநரோத்தம என்று பிராட்டியும் கொண்டாடும் படியான புத்தி விக்ரமாதி குணங்களை யுடையவனோடு கூடப் பெறுவதே.

ஹநுமத் வசநாச்சைவ ஸுக்ரீவேண ஸமாகத:—இவன் வார்த்தை சொன்ன வநந்தரமே இவர பீஷ்டம் ஸித்தித்தபடி. ஸுக்ரீவம் நாதமிச்சதி, வாநரேந்த்ரஸ்ய ப்ரஸாத மபிகாங்க்ஷதே என்றன்றோ! இவரிருப்பது. பாதகவர்க்கம்மலிந்து நலிவைப் பண்ணா நின்ற காலத்தில் மேன்மேலும் அவற்றை நீக்கவல்ல ஸஹாய ஸம்பத்து உண்டாகப் பெறுவதே என்று த்ருஷ்டராகிறார் ருஷி ஹ என்று.

49. [illegible]
[illegible]

ஸுக்ரீவாயச தத்ஸர்வம் ஶம்ஸத் ராமோ மஹாபல:
ஆதிதஸ்தத் யதாவ்ருத்தம் ஸீதாயாஶ்ச விஶேஷத:

[illegible]

[illegible]

அத:-மஹாபல:-வ்ருத்தஸ்மரணகாலிக து:க்கஸஹநே ஸமர்த்த: ராம:, ஆதித:-ஜந்மந: ப்ரப்ருதி தத்-ப்ரவ்ருத்தம் ஸர்வம் வ்ருத்தம் ஸுக்ரீவாய ஶஶம்ஸ-கதயாமாஸ. ஸீதாயா: ஹரண வ்ருத்தம் ச-ராவணக்ருதகவாதிகம் யதாவ்ருத்தம்-வ்ருத்தமநதிக்ரம்ய விஶேஷத:-ஶஶம்ஸ தத்வேஷணஸ்ய அவஶ்ய கர்தவ்யதயா விஶேஷேண கதயாமாஸ. அத்ர மஹாபல:ராம: இத்யநேந ஸஹாயநைரபேக்ஷ்யேண ஸர்வ நிர்வாஹக ஸமர்த்தோऽபி லோகரீதிமநுஸ்ருத்ய ஸுக்ரீவ ஸஹாய ஆகாங்க்ஷயா ஸர்வகதநமிதி த்யோத்யதே.

(ஸீதாபஹரண ஜடாயு மரணாதி) வ்ருத்தாந்தஸ்மரண காலத்திலுண்டான துக்கத்தை யடக்கும் வல்லமை வாய்ந்த ராமன், தன்னுடைய ஜந்மம் முதலாக ப்ரவ்ருத்தமான வ்ருத்தாந்த மனைத்தையும் ஸுக்ரீவன் பொருட்டுச் சொன்னான். ராவணனால் செய்யப்பட்ட ஸீதாபஹரணம் முதலான விருத்தாந்தத்தை நடந்தபடியே விசேஷமாகச் சொன்னான் ஸீதாந்வேஷணம் அவஶ்யமாகப் பண்ணவேண்டு மாகையால். இவ்விடத்தில் மஹாபல:—என்கிற விசேஷணத்தால் ஸஹாய மன்றியிலேயே நிர்வஹிக்கும் வல்லமை வாய்ந்தவனாயினும் மநுஷ்யபாவனைக்கிணங்க ஸுக்ரீவ ஸஹாயத்தைக் கருதி யனைத்தையும் அறிவித்தான் என்பதும் உற்று நோக்க விளங்கும்.

50. ஸுக்ரீவஸ்யாபி தத்ஸர்வம் ஶ்ருத்வா ராமஸ்ய வாநர:
சகார ஸக்யம் ராமேண ப்ரீதஶ்சைவாக்நிஸாக்ஷிகம்

ஸுக்ரீவஶ்சாபி தத்ஸர்வம் ஶ்ருத்வா ராமஸ்ய வாநர:
சகார ஸக்யம் ராமேண ப்ரீதஶ்சைவாக்நிஸாக்ஷிகம்.

அந்வய:-வாநர: ஸுக்ரீவோऽபி ராமஸ்ய தத் ஸர்வம் ஶ்ருத்வா ப்ரீத: ஸந் அக்நிஸாக்ஷிகம் ராமேண ஸக்யம் சகார.

அர்த:-வாநர: ஸுக்ரீவோऽபி ராமஸ்ய (ஸம்பந்தி) தத் ஸர்வம்-வ்ருத்தாந்தம் ஶ்ருத்வா, ப்ரீத:- மஹாபலஸ்ய ராமஸ்ய ப்ரயோஜநாபேக்ஷித்வாத், ராமேணாபி ப்ரயோஜநம் நிர்வர்த்யிஷ்யத இதி ஸந்தோஷாத், அக்நி: ஸாக்ஷீ யஸ்ய தத் அக்நிஸாக்ஷிகம் ராமேண ஸக்யம்-ஸகித்வம் சகார-க்ருதவாந். அத்ர வாநர ராமஶப்தாப்யாம் ஸக்யஸ்ய ஸாத்ருஶ்யம் வ்யஞ்ஜிதம். தேந ராமஸ்ய ஸௌஶீல்யாதிஶய: வ்யஜ்யதே. குஹஸ்ய ஹீந ஜாதிதயா தத்ஸக்யம் ஸௌஶீல்யஹேது:. தத்ராபி ஸ்த்ரீத்வேந ஶபர்யா ஹி ஶரணம் ததஸ்தராம் ஸௌஶீல்யம். ஸுக்ரீவஸ்ய திர்யக்த்வேந ததஸ்தமாம் ஸௌஶீல்யமிதி பாவ:.

கிளைக்குக் கிளை தாவித்திரியும் ஜாதியிற் பிறந்த ஸுக்ரீவனும், ராமனுடைய ஸம்பந்தத்தை யுடைய விருந்தாந்த மனைத்தையும் கேட்டு, மஹா பலவானன ராமன் ப்ரயோஜநத்தை அபேக்ஷித் தவனா யிருக்கையால் நம்முடைய ப்ரயோஜநத்தையும் முடித்து வைப்பான் என்று சந்தோஷத்தை யுடையவனாய்க் கொண்டு, அக்நி ஸாக்ஷிகமாக, ராமனோடு ஸக்யத்தைப் பண்ணினான்.

இவ்விடத்தில் வாநர ராம ஶப்தங்களால் இவ்விருவர்களுடைய தோழமை ஒத்ததன்றென்பது தோற்று நிற்கின்றது. இதனால் ராமனுடைய (உயர்ந்தவன் தாழ்ந்தவனோடு ஒரு நீராகக் கலக்கும்) ஸௌஶீலயத்தின் பெருமை விளங்கா நிற்கும். ஹீந ஜாதியான குஹனோடு தோழமை கொண்டது ஸௌஶீல்யம். நீசத்வத்திற்கெல்லை நிலமாய் அதிலும் ஸ்த்ரீ ஜாதியான ஶபரியை அபிமுகமாகச் சென்றடைந்தது, அதைக்காட்டிலும் மேலான ஸௌஶீல்யமாகும். காபேயமான திர்யக்ஜாதியான ஸுக்ரீவனோடு தோழமை கொண்டது, கீழ்ச்சொன்னவைகளெல்லாவற்றிலும் மேலான ஸௌஶீல்யம் என்பது தோன்றுநிற்கும்.

விசேஷார்த்த:—ராமேண ப்ரீத: ஸுக்ரீவ: பெருமாளோடே தாமும் ஏககண்டராய்த் தம்முடைய வ்ருத்த கீர்த்தநம் பண்ணுமவரென்கிறது.

வாநர:—கிளைக்குக் கிளை தாவித்திரியும் ஒரு வாநரன் நரோத்தமனை ராமனோடு அக்நிஸாக்ஷிகமாகத்தோழமைகொண்டு தான் மஹாராஜர் என்று ப்ரதாநமாய் நின்று ப்ரீதியை யடையும்படி யிருப்பதே! இதொரு ஆஶ்ரித பாரதந்திரிய மிருப்பதே! என்று விஸ்மிதராகிறார் ருஷி என்று இங்கு ஹர்ஷத்யோதகமான காகுவை (ஸ்வரத்தை) அநுஸந்திக்க ப்ராப்தமாகும்.

51. ததோ வாநரராஜேந வைராநுகதநம் ப்ரதி
ராமாயாவேதிதம் ஸர்வம் ப்ரணயாத்து:கிதேந ச

ததோ வாநரராஜேந வைராநுகதநம் ப்ரதி
ராமாயாவேதிதம் ஸர்வம் ப்ரணயாத் துக்கிதேந ச

அந்வய꞉- தத꞉ து꞉கிதேந வாநரராஜேந வைராநுகதநம் ப்ரதி ஸர்வம் ப்ரணயாத் ராமாய ஆவேதிதம்.

அர்த꞉- தத꞉-ஸக்யகரணாநந்தரம் து꞉கிதேந-ஸாஹ்ருத்யேந ராமஸந்நிதாநாத் உத்பூத பூர்வவ்ருத்தஸ்மரணாத் பாஷ்பம் முஞ்சதா வாநரராஜேந-ஸுக்ரீவேண வைராநுகதநம்-வைரஸ்ய-வாலிவிரோதஸ்ய அநுகதநம்-அநுகதநமுத்திஶ்ய கதநம்-ப்ரஶ்நாநுகுணோத்தரமிதி யாவத். ராமேண, வாலிநா ஸஹ தவ கதம் வைரமாஸீத்? இதி ப்ருஷ்ட꞉ க்ருத꞉ தம் ப்ரதி வக்தவ்யம், ஸர்வம்-ரஹஸ்ய ப்ரகாஶரூபம், ப்ரணயாத்-ஸ்நேஹாத் விஸ்ரம்பாத் ராமாய-ஆவேதிதம்-ஆவேதிதவாந் உக்தம் கார்த்ஸ்ந்யேந உக்தமித்யர்த꞉.

ராம ஸுக்ரீவர்களிருவரும் அக்நி ஸாக்ஷிகமாக ஸக்யம் செய்து கொண்ட பிறகு பரம ஸுஹ்ருத்தாகா நின்ற ராமனுடைய ஸந்நிதாநத்தால் ஸ்ம்ருதி விஷய மாகா நின்ற பூர்வ வ்ருத்தத்தை யுடைத்தா யிருக்கையால்) கண்ணீரை விடாநின்ற வாநர ராஜனான ஸுக்ரீவனால், வாலியோடு உனக்கு ஏன் வைரமுண்டா யிற்றென்று கேட்காநின்ற ராமனுக்குச் சொல்லவேண்டிய ரஹஸ்ய ப்ரகாஶ ரூபமான விருத்தாந்தம் எல்லாம் சொல்லப்பட்டது.

52. ப்ரதிஜ்ஞாதம் ச ராமேண ததா வாலிவதம் ப்ரதி
வாலிநஶ்ச பலம் தத்ர கதயாமாஸ வாநர꞉

ப்ரதிஜ்ஞாதம்ச ராமேண ததா வாலிவதம் ப்ரதி
வாலிநஶ்ச பலம் தத்ர கதயாமாஸ வாநர꞉

அந்வயம்- ததா ராமேண ச வாலிவதம் ப்ரதி ப்ரதிஜ்ஞாதம். தத்ர வாநரஶ்ச வாலிந꞉ பலம் கதயாமாஸ.

அர்த꞉ - ததா - வைராநுகதநாநந்தரகாலே ராமேண வாலிவதம் ப்ரதி ப்ரதிஜ்ஞாதம். வாலிவதப்ரதிஜ்ஞா க்ருதா இத்யர்த꞉.

தத்ர-ருஶ்யமூகே ஸுக்ரீவஶ்ச வாலிந꞉ பலம்-ஸூர்யோதயாத் பூர்வம் ஸமுத்ரசதுஷ்டயே ஸந்த்யாவந்தநாதி-

ஜ்யோதிர்ஷோத்காதிகம் வாலிபௌருஷம் (ராமஸ்ய உத்ஸாஹ வர்த்தநாய) கதயாமாஸ உக்தவாந்.

ஸுக்ரீவன், வாலிக்கும் தனக்கு முண்டான வைரத்தை யறிவித்தவுடன், ராமனாலே வாலிவதம் ப்ரதிஜ்ஞை பண்ணப் பட்டது. அந்த ருஶ்ய மூக பர்வதத்தில் ஸுக்ரீவனும், (அருணோதயத்தில் புறப்பட்டு ஸூர்யோதய மாவதற்கு முன் நான்கு ஸமுத்திரங்கட்கும் சென்று வரும்) வாலியினுடைய பௌருஷத்தை (ராமனுக்கு உத்ஸாஹத்தை யுண்டு பண்ணுவதன் பொருட்டு)ச் சொன்னான்.

53. ஸுக்ரீவஶ்ஶங்கிதஶ்சாஸீத் நித்யம் வீர்யேண ராகவே
ஸுக்ரீவஶ் ஶங்கிதஶ் சாஸீத் நித்யம் வீர்யேண ராகவே

அந்வய꞉-ஸுக்ரீவ꞉ ராகவே வீர்யேண நித்யம் ஶங்கித꞉ ஆஸீச்ச.

அர்த꞉-ஸுக்ரீவ꞉ ராகவே விஷயே வீர்யேண ஹேதுநா நித்யம்-ராமதர்ஶநப்ரப்ருதி ஸாலபேதநபர்யந்தம் ஸந்ததம் ஶங்கித꞉ (ராமஸ்ய வாலிஹநந ஸாமர்த்யமஸ்தி வா நவா) இதி ஸந்ததஶங்கிதவாநபூச்ச.

ஸுக்ரீவன், ராமனைக் கண்டது முதல் ஸால விருக்ஷங்களேழையும் ஒரே பாணத்தால் துளைபட எய்ததைக்காணுமளவும் ராகவன் விஷயத்தில் ராமனுக்கு வாலியைக் கொல்லும் வல்லமை யுண்டோ? இல்லையோ? என்று அடிக்கடி ஶங்கித்தவனாயினன்.

ராகவப்ரத்யயார்த்தந்து துந்துபே꞉ காயமுத்தமம்
54. தர்ஶயாமாஸ ஸுக்ரீவோ மஹாபர்வதஸந்நிபம்

ராகவப்ரத்யயார்த்தந்து துந்துபே꞉ காயமுத்தமம்
தர்ஶயாமாஸ ஸுக்ரீவோ மஹாபர்வதஸந்நிபம்

அந்வய꞉-ஸுக்ரீவ꞉ ராகவப்ரத்யயார்த்தம் மஹாபர்வத ஸந்நிபம் துந்துபே꞉ உத்தமம் காயம் தர்ஶயாமாஸ. ராமாய இதி ஶேஷ꞉—

அவதாரிகா-நநுகேவலம் ஶங்கிதோபூச்ச கிந்து ப்ரத்யயார்த்தம் தர்ஶயாமாஸ இத்யாஹ ராகவேதி—

கடீ-ஸுக்ரீவ: ராவவது-க்யாய-ம்-ராவவவிஷய ஜ்ஞாநாய-ம் ராவவவெவலபிஜ்ஞாநாய-ம், யதா ராஜஸ்யஷ விஷய விஸ்வாஸ ஜநநாய-ம் துந்துபெ:-வாலிநாஹதஸ்ய துந்துபேரஸ்யாஸுரஸ்ய உத்தம்-கலியிவம் உஷதம்வா, ஊதவ மஹாவவந்த ஸஞிஹம்காயம்-காயீகாராஸி ராஜாய தலயாஜஸ. "வாலீ ஊதஸி வாதாமெஜ நஸ்ய உஷ்ய-ம் க்ஷிபதி" இத்யுக்த்வாதலயாஜயெஸத்யய-:

அவ—ஸுக்ரீவன் "ராமன் வாலியை ஜயிக்கும் வல்லமை உடையனே? அல்லனே? என்று ஶங்கித்ததோடு நில்லாமல் அத்தை யறியும் பொருட்டு மற்றென்றையும் காண்பித்தான் என்று சொல்லுகிறூர் ராகவேதி.

ஸுக்ரீவன், ராமனுடைய பலத்தை நன்ருக அறிந்து கொள்ள வேண்டி, அன்றிக்கே ராமனுக்குத் தன் விஷயத்தில் விஶ்வாஸ முண்டாவதன் பொருட்டு வாலியினுல் கொல்லப்பட்ட துந்துபி என்கிற அஸுரனுடைய, ஶிதிலமாகாததாய் உன்னதமாயிருக்கையால் பெரியவரையோடொத்த சரீரம் போன்ற எலும்பை, ராமன் பொருட்டு "வாலீ இந்த எலும்பை பாதத்தின் நுனியில் வைத்து மேலே எறிவான் என்று சொல்லி"க் காண்பித்தான்.

உத்ஸ்மயித்வா மஹாபாஹு: ப்ரேக்ஷ்யவாஸ்தி மஹாபல:
55. பாதாங்குஷ்டேந சிக்ஷேப ஸம்பூர்ணம் தஶயோஜநம்

உத்ஸ்மயித்வா மஹாபாஹு: ப்ரேக்ஷ்ய சாஸ்தி மஹாபல:
பாதாங்குஷ்டேந சிக்ஷேப ஸம்பூர்ணம் தஶயோஜநம்

அந்வய:-மஹாபல: மஹாபாஹு: (ராம:) அஸ்தி ப்ரேக்ஷ்ய ஸ்மயித்வா பாதாங்குஷ்டேந ஸம்பூர்ணம் தஶயோஜநம் உத் சிக்ஷேப.

கடீ:-மஹாபல:-அபரிமேயபல: மஹாபாஹு:-பலாநுகுண காயகரண ஸம்ஹநந: ராம:, அஸ்தி ப்ரேக்ஷ்ய ஸ்மயித்வா-கியதிதம் த்ருணதுல்யத்வாத் ஸ்மித்வா, பாதாங்குஷ்டேந ஸம்பூர்ணம்-அந்யூநம்-தஶயோஜநம் உத் சிக்ஷேப உத்ஸ்ருஜ்ய சிக்ஷேபவாலிநா பாதேநக்ஷிப்தம். ராமேண

வேலூர் ஸ்ரீராமாயண காலக்ஷேபம்

இம் மகாநகரம் சிறந்த வியாபார ஸ்தலம். இவ்விடத்திலுள்ளவர்களுக்கு பகவத் பாகவத விஷயங்களில் அன்பும் ஆர்வமும் வரவர அதிகரித்து வருவது எம்பெருமானருளின் பலனே. நகரத்தில் பல விடங்களிலும பகவத் சதா பிரவசனங்கள் அடிக்கடி நடந்து வரும்படியாக நகரவாசிகள் நன் முயற்சி செய்து வருவது போற்றத்தக்கது. இந்நகரில், காஞ்சிபுரம் மஹாவித்வான் ஸ்ரீமத். உ. வே. P. B. அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகள் நான்கு வருஷ காலமாகப் பிரதிமாதமும் ஒரு முறை யெழுந்தருளி இரண்டு உபந்யாஸங்களாக ஸ்ரீராமாயண விசேஷார்த்தங்களை அன்பர்களுக்கு ஊட்டி வந்தார்கள். இந்த ஜுன் மீ 24, 25 தேதிகளில் பட்டாபிஷேகம் நடைபெற்று முடிவாயிற்று. அச்சமயம் பல பல வித்வான்களும் ஆயிரக்கணக்கான பக்தர்களும் விஜயஞ்செய்து கேட்டு மனமுவந்து மெச்சினார்கள். பகவத் விஷய உபந்யாஸங்கள் ஷை அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகளைக்கொண்டு மாதம் ஒரு முறை இந்நகரில் நீடூழி நடத்தி வருமாறு பிரமுகர்கள் முயன்று வருகிறார்கள். ஸ்ரீமத் பரமஹம்ஸ இளங்காடு ஸ்வாமிகள் என்கிற பாதுகாஸேவக ராமாநுஜ ஸ்வாமிகள் தற்சமயம் இந்நகரில் விராடபர்வ காலக்ஷேபம் சாதித்து வருவதும். ப்ரம்மஸ்ரீ (திருச்சி) நாராயண சாஸ்த்ரிகளவர்கள் ஸ்ரீபாகவத உபந்யாஸம் நடத்தி வருவதும் நகரவாஸிகளான பக்தர்களுக்கு மிகவும் ஆனந்தமே. இங்ஙனம் பாகவத விதேயன் வி. செந்தாமரைக்கண்ண ராமாநுஜ தாஸன்.

Retail Branch :



285, China Bazaar.

ஒரு ஆச்சர்யமான அலாரம் டைம்பீஸ்

இந்தியாவில் எல்லா பாகங்களிலும்
உள்ளவர் இதை உபயோகிக்கிறார்கள்

"டாம் டாம்"

சரியான காலத்தைக் காட்டும் அழகியது, நீடித்து உழைக்கும் டைம்பீஸ் என்று சொல்லுகிறார்கள். இவைகளைத்தான் விசேஷ அம்சங்களென்று இதை உபயோகிப்பவர்களே சொல்லுகிறார்கள். இதைவிட உங்களுக்குத் திருப்தியளிக்கக் கூடிய வார்த்தை என்ன இருக்கிறது. ஆகையால் "டாம் டாம்" அலாரம் டைம்பீஸ் வாங்குங்கள். இது சிறிது காலத்துக்கு மட்டுமல்ல. உங்கள் வாழ்நாள் பூராவும் உழைக்கும். இந்த "டாம் டாம்" 30 லீவர் மூவ்மெண்டுகளால் ஆதரிக்கப்பட்டது அலாரம் சிறந்த ஓசையுடனும் விடாமலும் விட்டு விட்டு அடிக்கிறமாதிரி உள்ளது.



இரண்டு வருடம் உத்திரவாதம்

நிக்கல் பெரிய சைஸ் ரூ. 8—0—0.
நிக்கல் மீடியம் சைஸ் ரூ. 6—0—0.

(பாக்கிங் அண்டு போஸ்டேஜ் வேறு)

(ஆர்டர் செய்பவர்கள் ரூ. 2—0—0 முன்னதாக அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.)

ஜலால் அண்டு சன்ஸ்,

கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்,

ஹெட் ஆபீஸ் :— 46, நட்டான் பஜார், சென்னை.
ப்ராஞ் ஆபீஸ் :— 190, B. மௌண்ட்ரோட், சென்னை.
„ 1242-1, ஆபிட்ரோட், ஹைதராபாத் (டெக்கான்.)

யுனைடெட் இந்தியா

லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி

(லிமிடெட்)

தலைமை ஆபீஸ் : மதராஸ். ஸ்தாபிதம் : 1906

டிரஸ்டி : மதராஸ் அபிஷியல் டிரஸ்டி.

பாலிஸிதாரர்களின் நன்மையையே கோரி
பணி செய்யப்படுகிறது.

க்ளெய்ம்கள் தாமதமின்றி தீர்க்கப்படுகின்றன. நல்ல சேமிப்பு, திறமையான நிர்வாகம், லாபகரமான பாலிஸி நிபந்தனைகள், குறைந்த ப்ரீமியம், நிறைந்த போனஸ், இவை

யுனைடெட் இந்தியாவை

ஒரு சிறந்த இன்ஷூரன்ஸ் கம்பெனி யாக்குகின்றன.

பூரா விவரங்களுக்குத் தலைமை ஆபீஸ் :

யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்,
செம்புதாஸ் தெரு, மதராஸுக்கும்

அல்லது

கீழ்க்கண்ட இடங்களிலுள்ள ஆபீஸுகளுக்காவது எழுதவும்

ஆஸான்ஸல்	டாக்கா	லாகூர்	ராஜமகேந்திர புரம்
பெங்களூர்	டில்லி	பாட்னா	ரங்கூன்
பெஜவாடா	கௌஹாத்தி	மதுரை	ஷில்காங்
பம்பாய்	கூட்டி	மங்களூர்	தஞ்சாவூர்
கல்கத்தா	ஹௌரா	நாகப்பூர்	திருவனந்தபுரம்
கள்ளிக்கோட்	சிட்டகாங்	ஹைதராபாத்	உடுப்பி
சித்தூர்	ஜல்பெய்குரி		

Registered No. M. 3401

பண்டிட் D. கோபாலசார்லு அவர்களின் இ[illegible]
ஔஷத ரத்னங்கள்

ஜீவாம்ருதம்

(தேகாரோக்யத்திற்கும் பல விருத்திக்கும்)

ரத்தமிழந்து, ஜீவனற்று, பலஹீனத்துடன் வாழ்க்கையை வெறுக்கும் வாலி பர்களுக்கு இவ்வௌஷதம் ஓர் வரத்தைப் போன்றதே. இதை உபயோகிக்க ஆரம்பிக்கும் பொழுதே அளவற்ற சுக உணர்ச்சியை யூட்டி, மிகுந்த ரத்த புஷ்டியை உண்டாக்கி, புத்துயிரைக் கொடுத்து, வாழ்க்கைக்கே இன்பத்தை விளைவிக்கின்றது. அளவற்ற தேகபலம் குறைவற்ற ஆரோக்கியம் முதலியவற்றை மேன்மேலும் செழிக்கச் செய்கின்றது.

விலை பெரிய புட்டி ரூ 3-4-0
சிறியது 1-12-0

பாலபாஸ்கர

(குழந்தை ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு அற்புத நிவாரணி.)

குழந்தைகளின் ஈரல் (Liver) குலை (Spleen) பெருக்கங்களை அதி விரைவில் கரைத்து பூர்ண ஆரோக்யத்தை யளிக்கும் அரிய சஞ்சீவி. இதர மருந்துகளால் பயனற்றுப் போன விடங்களில் ஆச்சரியத்துடன் பலன் தந்துள்ளன. தவறுதலின்றி குணங் கொடுப்பதென்று பிரக்யாதி யடைந்தது. ஆரம்ப நிலைமைக் கென்றும், முதிர்ந்த நிலைமைக் கென்றும் இருதிறத்தி லுள்ளது.



ஆரம்ப நிலைமை மருந்து 1 மாதம் 4-0-0
முதிர்ந்த நிலைமை 8-0-0

விபரங்களுக்கு எழுதவும்.

தயாரிப்பவர்கள் :— **ஆயுர்வேதாஸ்ரமம்**
தபால் பெட்டி 287.
151, கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தி

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந ஸபையின் சார்பாக
மாதந்தோறும் வெளிவரும்
ஸத் ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசந பத்ரிகை

தொகுதி 2	ஈச்வர ௵ ஆனி மீ	பகுதி 8

பத்ராதிபர் :
வடகரை ராமாநுஜாசாரியார்

24, சந்திரப்ப முதலி தெரு, ஜி. டி. மதராஸ்.

1937 ஜூன்மீ

வருஷச் சந்தா ரூ 1—12—0 | தனிப்ரதி விலை ரூ. 0—3—0

விஷய ஸூசிகை

விஷயங்கள் — பக்கம்

1. ஆனி மாதத்தின் பெருமை 177
   —பத்திராதிபர்
2. திருவாய்மொழி வ்யாக்யாதாக்களான மூன்று ஆசார்யர்களின் ஐககண்ட்யம் 180
   —திருமழிசை கோயில் கந்தாடை அப்பனய்யன் ஸ்ரீ. உ. வே. ராமானுஜாசாரியார்.
3. "விளந்தை வேள்" 184
   —ஸ்ரீ. உ. வே. C. நரசிம் மாசாரியார், அட்வகேட், திருவல்லிக்கேணி.
4. ஸ்ரீஸூக்திகளின் ஆராய்ச்சி 185
   —ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்
5. ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திஸம் ரக்ஷணியும் அத்யமே ச்லோகார்த்த விவாதவிசாரமும் 193
   —ஸ்ரீ. உ. வே. சாமுசேஷய்யங்கார். ஸம்ஸ்கிருத பண்டிட். C. A. C. High School.
6. வர்த்தமானங்கள்
7. கோதாஸ்துதி 196
   —ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்

ரங்கூன்
வைரங்கள்
கல் 1க்கு
0-2-6 0-3-3
பி.கோபாலசுவாமி
நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P.O. சென்னை

ரங்கூன்
வைரங்கள்
நகைகள்
கேட்லாக் இனாம்
பி.கோபாலசுவாமி
நாயுடு & சன்ஸ்
பறங்கிமலை P.O.
சென்னை

L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது

மனிதர்களுக்கு ஆரோக்கியத்தை அளிப்பது

L. G.

பெருங்காயம்.

எங்கும் கிடைக்கும்.

ப்ரபல பெருங்காய வியாபாரிகள்:

பம்பாய், சென்னை, கும்பகோணம்.

லால்ஜீ கோது & கம்பெனி,

8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதராஸ்.

அம்ருதாஞ்சனம்.

ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம் போய் மருந்துகள் வாங்கி வ்யாதிகளின் உபசமனத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக்கூடும். அக்காலத்தில் அம்ருதாஞ்சனம் கைவசமிருக்குமே யாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டா மென்பதை அனைவரு மறிந்திருந்தாலும் இவ் விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும் கிடைக்கும்.

அம்ருதாஞ்சனம் டிபோ.

பம்பாய். மதராஸ் கல்கத்தா

சலோனுடவர் பிராண்ட்

போர்ட்லாண்ட் சிமெண்ட்

காரண்டீட்

பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷன்

மேற்கண்ட சிமெண்ட் அனேக ஹார்பர்வேலைகளுக்கும் ரயில்வே வேலைகளுக்கும், மதராஸ் கார்ப்பரேஷனிலும், இன்னும் பிரபல வியாபாரிகளும் கண்ட்ராக்டர்களும் உபயோகித்து வருகிறார்கள்.

மேல் கண்ட சிமெண்டை உபயோகிக்கவும்

சோல் ஏஜெண்ட்

M. குப்புசாமி நாயக்கர்

83, செப்புதாஸ் தெரு,

மதராஸ், ஜி. டி.

ஸ்ரீ

ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶக பத்ரிகை

தொகுதி 2.	பத்ராதிபர் வடகரை. ராமாநுஜாசாரியார்	பகுதி 8.

ஸ்ரீரஸ்து

ஸ்ரீய:காந்தாய நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
ய: ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ||
வேதவேதாந்த வேதாங்க ஸத்ஸம்ப்ரதாயவர்ஷிணீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

ஆனி மாதத்தின் பெருமை

பத்ராதிபர்

இந்த ஆனி மாதத்தை த்ரிவிக்ரமனுடைய அம்சமென்று சொல்லுவார்கள். த்ரிவிக்ரமனுவான், ஆஶ்ரித ஸம் ரக்ஷணார்த்தமாக பிறப்பிலியான பரமபுருஷன் சீரால் பிறந்து சிறப்பாக வளராது, பேர் வாமனனாய் மஹாபலியின் யஜ்ஞவாடத்திற் சென்று மாவலியை வஞ்சித்து நெஞ்சுருக்கி மூவடி மண் தாராயென்று வேண்டி என்னுடைய பாதத்தால் யானளப்பன் என்று ஓங்கி உலகமளந்து இந்திரனுக்குக் கொடுத்த மஹோபகாரராகனுவான்.

மற்ற அவதாரங்களைக் காட்டிலும் இந்த அவதாரத்தில் "ஓங்கி உலகளந்த உத்தமன்" என்றீடுபடா நிற்பர்கள். இந்த த்ரிவிக்ரமனுடைய அம்சமான ஆனி மாதத்தில் வரும் ஏகாதசி யன்று உபவசித்து த்ரிவிக்ரமனை அர்ச்சித்து, த்வாதசி யன்று பாரணை பண்ணுமவர்கள் பசுமேத யாகத்தின் பலனை அடைவார்கள். இது விஷயம் மஹாபாரதம் ஆஶ்வமேதிக பர்வம் 114வது

அத்யாயத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் தர்மபுத்திரருக்கு அருளிச் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது:—

அது வருமாறு.

“த்வாதஶ்யாம் ஜ்யேஷ்ட மாஸேது மாமுபோஷ்ய த்ரிவிக்ரமம் |
அர்ச்சயேத் யஸ்ஸமாப்நோதி கவாம் மேத பலம் ந்ருப ||

இன்னமும் இம்மாதம் உண்டோ திருப் பல்லாண்டுக் கொப்பதோர் கலைதான் ? உண்டோ பெரியாழ்வார்க் கொப்பொருவர் ? என்று எம்பெருமானுக்கு பல்லாண்டு பாடி நமக்கு உபகரித்து, பெரியாழ்வார் என்று போற்றும் பெருமை வாய்ந்த பரமகாருணிகரான பெரியாழ்வாரவதாரத்தாலும், நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம் என்று நம்முடைய ராமானுஜ ஸித்தாந்தத்திற்குக் கொள் கொம்பாயும், நம்மாழ்வாரின் அநுக்ரஹத்தால், நஷ்டமான நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களையும் அடையப் பெற்று நமக்குபகரித்தவராயுமிருக்கிற நாதமுனிகளின் அவதாரத்தாலும்போற்றற்குரியதாகும்.

பெரியாழ்வார் பெருமையைப் பற்றிச் சென்ற வருடத்து ஆனிதனிற் சோதி நன்னாளி லவதரித்த வைஜயந்தீ யதோசிதம் பேசி அநுபவித்திருக்கிறது. இவ்வருஷ ஆனிமாத வைஜயந்தீ ஸ்ரீமந் நாதமுனிகளின் பெருமையைப் பற்றிச் சிறிது வரைந்தநுபவிக்க ஆசைப்படுகின்றது.

ஸ்ரீ நாதமுனிகளின் வைபவம் குரு பரம்பராதி க்ரந்தங்களில் பரக்கக் காண்கையால் அதைப்பற்றி இங்கு வரைவது எதற்கு என்று நினைக்கக்கூடும். இவ்விடத்தில்

𑌯𑌦𑌿𑌕𑍍𑌷𑌣𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌰𑌿𑌤𑌿 𑌜𑌗𑌤𑌿 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌚𑌰𑌿𑌤𑌂
𑌗𑍁𑌣𑍈𑌰𑍇𑌤𑌾𑌦𑍃𑌗𑍍𑌭𑌿𑌰𑍍𑌜𑌗𑌤𑌿 𑌪𑍁𑌨𑌰𑌨𑍍𑌯𑍋 𑌜𑌯𑌤𑌿 𑌕𑌃
𑌸𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌗𑍁𑌣 𑌗𑌰𑌿𑌮 𑌗𑌮𑍍𑌭𑍀𑌰 𑌮𑌧𑍁𑌰
𑌸𑍍𑌫𑍁𑌰𑌦𑍍𑌵𑌾𑌗𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌃 𑌕𑌥𑌮𑍁𑌪𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑌵𑌯𑌃

யதிக்ஷண்ணம் பூர்வை ரிதி ஜஹதி ராமஸ்ய சரிதம்
குணைரேதாத்ருக்பிர்ஜகதி புநரந்யோ ஜயதி க:
ஸ்வமாத்மாநம் தத்தத்குண கரிம கம்பீர மதுர
ஸ்புரத்வாக் ப்ரஹ்மாண: கதமுபகரிஷ்யந்தி கவய:

வால்மிகி ப்ரப்ருதிகளான பூர்வர்களால், ரகுகுல திலகனான ஸ்ரீ ராமபிரானுடைய சரிதம் சொல்லப்பட்டதென்று நினைத்து தற்காலத்திலுள்ள அக்ஷராஸ்யர்களான பண்டிதர்கள், ராமனு

டைய பெருமையைப் பேசாமல் விடுவார்களே யாயின், கொண்டாடத் தகுந்த குணங்களின் பெருமையினால் கம்பீரமாகவும் மதுரமாகவும் ஸ்புரியாநின்ற வாக்ப்ரஹ்மத்தை யுடைய கவிகள், தாங்கள் படைத்த வாக்கினால் பெறக்கூடிய பயன்பெறுவ தெங்ஙனே ? இந்த லோகத்தில் இப்பேர்ப்பட்ட குணங்களோடு விளங்காநிற்கும் உத்தம புருஷன் ராமனைக் காட்டிலும் வேறொருவனுண்டோ? என்கிற அநர்க்கராகவஶ்லோகம் நினைவுக்கு வருகிறது. நாதமுனிகளவதரித்து நாலாயிரத்தையும் நமக்கருளாவிடில் நமது ராமாநுஜஸித்தாந்தம் எங்ஙனேயோ? இவ்வாறு உபகரித்த நாதமுனிகளவதரித்த இம்மாதத்தி லவரது பெருமையைப் பேசாமலிருக்க முடியுமோ ?

ஸ்ரீதேஶிகனும்

𑌨𑌾𑌥𑍇𑌨 𑌮𑍁𑌨𑌿𑌨𑌾 𑌤𑍇𑌨 𑌭𑌵𑍇𑌯𑌂 𑌨𑌾𑌥𑌵𑌾𑌨𑌹𑌮𑍍
𑌯𑌸𑍍𑌯 𑌨𑍈𑌗𑌮𑌿𑌕𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌹𑌸𑍍𑌤𑌾𑌮𑌲𑌕𑌤𑌾𑌂 𑌗𑌤𑌮𑍍

நாதேந முநிநாதேந பவேயம் நாதவாநஹம்
யஸ்யநைகமிகம் தத்வம் ஹஸ்தாமலகதாம்கதம்

எவருக்கு வேதாந்த விழுப்பொருள் கையிலங்கு நெல்லிக்கனியின் தன்மையை யடைந்ததோ ? அந்த நாதமுனியால் நான் நாதனையுடையவனாக ஆகக்கடவேன் என்றருளிச்செய்தார்.

இந்த நாதமுனிகள் அவதரித்த திவ்யதேசம் வீரநாராயணபுரமென்கிற காட்டுமன்னார் கோவில். இவ்வூரிலவதரித்து, பரித்ராணயப்படியே பரம காருணிகனான ஸர்வேஶ்வரன் துஷ்டநிக்ரஹ ஶிஷ்டபரிபாலநார்த்தமவதரித்துலாவியருளின அயோத்யை முதலான திவ்யதேஶயாத்ரை செய்து மறுபடியும் மன்னனார் திருவடிதொழுது, வீரநாராயணபுரத்தில் மன்னனாருக்குகப்பாக நந்தநவந கைங்கரியம் பண்ணிக்கொண்டு அங்கெழுந்தருளியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களோடு ஶாஸ்த்ர ப்ரவர்த்தநம் பண்ணிக்கொண்டெழுந்தருளியிருந்தார்.

இவ்வாறெழுந்தருளியிருக்கும் நல்லடிக்காலத்தில் மேல்நாட்டிலிருந்து எழுந்தருளின ஸ்ரீவைஷ்ணவர்கள் மன்னனாரை மங்களாஶாஸநம் செய்யும்போது ஆராவமுதே என்கிற திருவாய்மொழியை அநுஸந்தித்து ஆயிரத்துள் இப்பத்தும் என்று முடிக்கக்கேட்ட நாதமுனிகள் ஆயிரமும் உங்களுக்குப்போருமோ ? என்ன, அவர்கள் இப்பத்துப்பாசுரங்களே தெரியவரும். மற்றவைகளை நாங்களறியோம் என்ன, நாதமுனிகள் மற்றெவர்களேனு மறிவா

ருண்டோ? அல்லது உங்கள் நாட்டில் ஸ்ரீகோஶமுண்டோ? என்று கேட்க, ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீகோஶமும் கிடையாது அறிவாருமில்லை என்ன, நாதமுநிகள் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தீர்த்தப்ரஸாதம் ப்ரஸாதித்தனுப்பிவிட்டு, திருவாய்மொழி ஆயிரத்தையும் அறிந்து கொள்ள ஆவலுடையராய் அத்திவ்யப்ரபந்தமவதரித்த ஆழ்வார் திருநகரிக்கெழுந்தருளி விசாரிக்க அங்கும் திருவாய் மொழிகிடைக்கப்பெற்றிலர். ஆனாலும் மதுரகவிகளின் சிஷ்யரான பராங்குசதாஸரிடமிருந்து கண்ணிநுண் சிறுத்தாம்பு என்கிற திவ்யப்ரபந்தம் கிடைக்கப்பெற்றார். அத்திவ்யப்ரபந்தத்தைப் பன்னீராயிரமுரு ஆழ்வார் திருமுன்பே அநுஸந்திக்க ஆழ்வாரும் ப்ரஸந்நராய் நாதமுநிகளுக்குத் திருவாய்மொழி ஆயிரத்தோடுமற்றுள்ள ஆழ்வார்களருளிச்செய்த மூவாயிரத்தையும் அநுக்ரஹித்தருளினர்.

நாதமுநிகளும், வடமொழிமறைக்கு ஸ்ரீவேதவ்யாஸபகவான் உதாத்தாநுதாத்தாதி ஸ்வரங்களோடு உச்சரிக்கும்படி பண்ணினாற்போலே தென்மொழிமறை என்கிற திருவாய் மொழிமுதலான ப்ரபந்தங்களை இயலு மிசையுமாக்கி உலகத்தில் ப்ரஸித்தமாகும்படி செய்தருளினர்.

> 𑌨𑌮𑍋𑌽𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌾𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌰𑌾𑌶𑌯𑍇
> 𑌨𑌾𑌥𑌾𑌯 𑌮𑍁𑌨𑌯𑍇𑌽𑌗𑌾𑌧 𑌭𑌗𑌵𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌿𑌨𑍍𑌧𑌵𑍇.
>
> நமோசிந்த்யாத் புதாக்லிஷ்டஜ்ஞாந வைராக்ய ராஶயே
> நாதாய முநயேகாத பகவத் பக்தி ஸிந்தவே.

திருவாய்மொழி வ்யாக்யாதாக்களான மூன்று ஆசார்யர்களின் ஐககண்ட்யம்

(திருமழிசை கோயில் கந்தாடை அப்பனய்யன் ராமானுஜாசாரியார்)

திருவாய்மொழி, 1,—1,—4 'நாமவன்' என்கிற பாட்டில் நஞ்சீயர் "நாநாவிதமான சொற்களாலே சொல்லப்படுகிற எல்லா பதார்த்தங்களினுடைய ஸ்வரூபஸ்வபாவம் பகவததீநம் என்று ஸாமாநாதிகரண்யத்தாலே சொல்லுகிறது" என்று அவதாரிகையில் அருளிச் செய்தார். நம் பிள்ளைகள் "தேவாதி பதார்த்தங்களை, நாலு மூன்று வகையாலே சேர்த்து அவற்றின் ஸ்வரூபம்

அவனதீநம்" என்று அருளிச் செய்தார். பெரிய வாச்சான் பிள்ளை "இதனுடைய ஸ்வரூபம் தததீநம் என்று ஸாமாநாதிகரண்யத்தாலே சொல்லுகிறார்" என்று அருளிச் செய்தார். இந்த ஸ்ரீ ஸூக்திகளால் சேதநாசேதநங்களுடைய ஸ்வரூபம் பகவததீநம் என்கிற விஷயத்தில் இம்மூன்று ஆசார்யர்களின் ஐககண்ட்யம் விளங்குகிறது.

திருவாய் மொழி 1,—1,—6 'நின்றனர் இருந்தனர்' என்கிற பாட்டிற்கு நஞ்சீயர் "சேதநாசேதநாத்மக ஸமஸ்த வஸ்துக்களுடைய ஸமஸ்த ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் பகவத் ஸங்கல்பாதீநம் என்கிறது" என்றும், நம் பிள்ளை, "அதனுடைய ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியும் பகவத் ஸங்கல்பாதீனம் என்கிறார் இதில்" என்றும், பெரிய வாச்சான் பிள்ளை "ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் பகவத் ஸங்கல்பாதீநைகள் என்று ஸாமாநாதிகரண்யத்தாலே சொல்லுகிறது" என்றும் அவதாரிகை யிட்டருளினார்கள். இந்த ஸ்ரீ ஸூக்திகளாலும் அவ்வாசார்யர்களின் ஐககண்ட்யம் நன்கு காணப்படுகிறது. இங்ஙனமே, பல ஸம்ப்ரதாயார்த்தங்களிலும் இவ்வாசார்யர்களுடைய ஐககண்ட்யத்தைக் காணலாம்.

ஆனால், நஞ்சீயர் ஒன்பதினாயிரப் படியில் "நாலாம் பாட்டிலே ஸ்வரூப தாததீந்யம் ஸித்தமாகையால் இப்பாட்டில் ப்ரவ்ருத்தி நிவ்ருத்யம்ஶ தாததீந்யத்திலே தாத்பர்ய மாயிற்று. 'அருணயா பிங்காக்ஷ்யா ஸோமம் க்ரீணாதி' என்கிற விடத்தில் ஆருண்யாதிகளே விதேய மானாப்போலே" என்றும், பெரியவாச்சான் பிள்ளை இருபத்திநாலாயிரப் படியில் "நாமவன் என்கிற பாட்டிலே ஸ்வரூபம் சொல்லுகையாலே இப்பாட்டில் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி மாத்ரத்தையே நினைக்கிறது. அருணாதி கரணத்தில், ஆருண்யாதிகளே விதேய மானாப்போலே" என்றும் அருளிச் செய்திருக்கின்றனர். நம் பிள்ளைகளோ வென்னில், முப்பத்தாறாயிரப் படியில் "ஆக்ருதி வாசக ஶப்தம் வ்யக்தியிலே பர்யவஸித்து நிற்குமாப்போலே ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு வாசகமான ஶப்தமும் அபர்யவஸாந வ்ருத்யா அவனளவிலே சென்றல்லது நில்லாது. 'அருணயா பிங்காக்ஷ்யா ஸோமம் க்ரீணாதி' என்கிற விடத்திலே குணவிஶிஷ்ட வஸ்து தோன்றா நிற்கச் செய்தேயும் ஆருண்யாம்ஶத்திலே தாத்பர்ய மாகிறாப்போலே, ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்காஶ்ரயமான வஸ்துக்களினுடைய ஸ்வரூபம்

அவனதீநம் என்று முன்னே சொல்லுகையாலே, ப்ரவ்ருத்தி நிவ்ருத்யம்ஶத்திலே நோக்கென்று சொல்லுவாருமுண்டு; அப்போது ஸாமாநாதிகரண்யம் ஸித்தியாது" என்றருளிச் செய்துள்ளார். இங்கு "சொல்லுவாருமுண்டு" என்று நஞ்சீயரையும் பெரியவாச்சான்பிள்ளையையும் உத்தேசித்து அவர்களின் ஸ்ரீ ஸூக்திகளில் அநாதரம் தோற்ற அருளிச் செய்தாப்போல காண்கிறதே; இப்படியாகில் இவ்வாசார்யர்களின் ஐககண்ட்யம் எங்ஙனே ஸித்திக்குமென்னில் இவ்வாக்யத்தில் ஸ்ரீ நம்பிள்ளைகள் "சொல்லுவாருமுண்டு" என்று அநாதரம் தோற்ற அருளிச் செய்தது அவ்விரண்டு ஆசார்யர்களைக் குறித்ததல்ல. எவ்வாறென்றால், நஞ்சீயர், பெரியவாச்சான் பிள்ளை இவ்விருவரும், 4, 6 பாசுர வ்யாக்யானங்களில் ஸாமாநாதிகரண்யத்தை தாம் அங்கீகரித்திருப்பது அவ்வியாக்யாநங்களாலேயே வ்யக்தமாக விளங்குகிறது. அந்த ஸாமாநாதிகரண்யமோ, ஸகல ஶப்தங்களும் அபர்யவஸாந வ்ருத்யா விஶேஷ்ய பூதனை எம்பெருமானைக் காட்டியன்றோ, ஸித்திக்கவேண்டுவது. ஆகவே ஸ்ரீ நம்பிள்ளைகள் தாம் அங்கீகரித்த ராமாநுஜ ஸித்தாந்தத்தையே அவலம்பித்திருக்கிற நஞ்சீயரையும், பெரியவாச்சான் பிள்ளையையும் "சொல்லுவாருமுண்டு" என்று அநாதரம் தோற்ற அருளிச் செய்யாரிறே! ஆனால், அப்பதத்தினால் யாரைக் குறிப்பிடுகிறாரென்னில், ஆக்ருதி வாசக ஶப்தத்திற்கு வ்யக்தி வாசகத்வமில்லை என்று சொல்லுகிற ப்ராபாகர மதாநுஸாரிகளை என்றுணர்மின்!. அருணாதிகரண நியாயத்தை இவ்விரண்டு ஆசார்யர்களும் த்ருஷ்டாந்தமாக எடுத்துக் காட்டியதற்குக் காரணம். அந்த ந்யாயமானது ராமாநுஜ னடியார்க்கும் மற்றோர்க்கும் உள்ளதொன்றாகும். ஆனால் ராமாநுஜ னடியார்கள் விஶிஷ்டபரயென்பர்; மற்றோர்கள் விஶேஷணத்திலேயே பர்யவஸாநம் என்பர். ஆக நம் பிள்ளைகள் தம் வ்யாக்யாநத்தில் 'ப்ரவ்ருத்தி நிவ்ருத் யம்ஶத்திலே நோக்கென்று சொல்லுவாருமுண்டு" என்று குறிப்பிடுகிறது விஶேஷண மாத்ர பர்ய வஸாநம் என்பவர்களையேயாம். விஶிஷ்டபரமென்கிற நஞ்சீயர், பெரியவாச்சான் பிள்ளை ஆகிற ராமாநுஜ ஸித்தாந்திகளைக் குறிப்பிடுவதன்று. "ஸாமாநாதி கரண்யம் ஸித்தியாது" என்று நம் பிள்ளைகள் அருளிச்செய்தது, ஸாமாநாதி காண்யத்தை ப்ராபாகர மதாநுஸாரிகளும் ஒப்புக்கொள்ளவேண்டுவது ந்யாய ஸித்தம் என்கிற நினைவாலே.

மேலும், நம் பிள்ளைகள், "சொல்லுவாருமுண்டு" என்று ப்ராபாகர மதாநுஸாரிகளை உத்தேஶித்தே அருளிச் செய்தார் என்பதை 'நின்றனர் இருந்தனர்' என்கிற பாசுரத்தின் அரும்பதத்திலுள்ள சில வாக்யங்களே வ்யக்தமாகக் காட்டுகின்றன. அவ்வாக்யங்களாவன: "ப்ரவ்ருத்தி நிவ்ருத்யம்ஶத்திலே நோக்கென்றது—ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளைச் சொல்லிற்றென்றபடி. ஆக்ருதி வாசக ஶப்தத்திற்கு வ்யக்தி வாசகத்வமில்லை என்கைக்கு 'விஶேஷ்யம் நாபிதா கச்சேத், க்ஷீணா ஶக்திர்விஶேஷணே' என்றும், 'ப்ரவ்ருத்தி நிவ்ருத்யம்ஶத்திலே நோக்கிதி'—விஶேஷ்ய பூதம் சேதநம், பரம விஶேஷ்ய பூதம் பரமாத்மா தஞ்ச ந ப்ரதர்ஶயதீதி பாவ:" என்பனவாம். இங்கு, நோக்கு என்பதற்கு ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளைச் சொல்லிற்று என்பதானாலும், இதே வாக்யத்தை யெடுத்து: விஶேஷ்ய பூதனை சேதநனையும் பரம விஶேஷ்ய பூதனை எம்பெருமானையும் காட்டவில்லை என்பதனாலும், விஶேஷணமாத்ர பர்யவஸாநம் என்றும் எம்பெருமானைக் காட்டவில்லை என்றும் சொல்லுகிறவர்கள் பராபாகர மதாநுஸாரிகளே யாகையால், "சொல்லுவாருமுண்டு" என்கிற நம்பிள்ளைகளின் ஸ்ரீஸூக்தி அவர்களையே குறிக்கிறது என்பது ஸுஸ்பஷ்டம்.

நம் ஆசார்யர்கள் இருவரும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்யம்ஶ தாதநீன்யத்திலே தாத்பர்யமாயிற்றென்றும், ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி மாத்ரத்தையே நினைக்கிறதென்றும் அன்றோ! அருளிச் செய்தார்கள். விஶேஷண மாத்ர பர்யவஸாநமென்றும் பரம விஶேஷ்ய பூதனை எம்பெருமானைக் காட்டாது என்றும் சொல்லவில்லையே!

ஆக, ஸ்ரீநஞ்சீயர், ஸ்ரீநம்பிள்ளைகள், ஸ்ரீபெரிய வாச்சான் பிள்ளைகள் இம்மூன்று ஆசார்யர்களும் ஸர்வபதங்களுக்கும் விஶிஷ்ட பரத்வத்தை ஒப்புக்கொண்டே ஸாமாநாதிகரண்யத்தை அங்கீகரித்துத் தம் வ்யாக்யானங்களை அருளிச்செய்திருப்பதால், இவர்கள் ஸ்ரீ ஸூக்திகளில் ஒருவித முரண்பாடும் கிடையாது என்பது ஸுநிஶ்சிதம்.

இங்ஙனம் பெரியோர்களிடத்தில் அடியேன் கேட்டிருந்த விஷயத்தை விண்ணப்பித்தேன். ஸம்ப்ரதாய விரோதமில்லாமல் யாரேனும் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளில் முரண்பாடிற்கு ஸமாதானம் காட்டினால் அதையும் அடியேன் அங்கீகரிக்கஸித்தமாயிருக்கிறேன். இங்கு மூன்று ஆசார்யர்களின் ஐக்கண்டயம் காட்டியது மற்ற இருவருக்கும் உபலக்ஷகம்.

"விளந்தை வேள்"

[ஸ்ரீ. உ. வே. C. நரசிம்மாசாரியார் அட்வகேட் திருவல்லிக்கேணி]

பெரியதிருமொழி 6-ம் பத்து 6-ம் திருமொழி 6-ம் பாசுரத்தில் மின்னுடு வேல் ஏந்து விளைந்த வேளை" என்று அச்சுப்புத்த கங்கள் தோறும் அச்சிட்டிருக்கிறது. இப்பாசுரத்துக்கு வியாக் யானம் இட்டபெரியவாச்சான்பிள்ளை இப்பதங்கள் ஒரு குறும்பர சன் பெயர்என்று ஸாதித்துள்ளார். "வேள்" என்றால் அரசன் என்று பொருள்படும். "விளைந்த வேள்" என்று ஓர் அரசனும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் "விளந்தை" என்பது உடை யார்பாளையம் தாலூகாவில் ஆதியில் சேரநாட்டைச் சேர்ந்த ஓர் தலைநகர் என்றும் அந்நகராதிபதிக்கு "விளந்தைவேள்" என்றும் அவனைச் சோழன் போரில் வென்றான் என்றும் சரித்திரவாயிலா கப் பல சாஸனங்களைக்கொண்டு ஸ்ரீமான் மு. இராகவய்யங்கார் நிரூபித்துள்ளார். ஆகையால் "விளைந்தவேள்" என்னும் பாடத்தை மாற்றி "விளந்தைவேள்" என்று சொல்வதே சரி யான பாடம் எனத்தோற்றுகிறது. அறிஞர் ஆராய்க. இவ்வூரர சர்கள் "கச்சியரையர்," என்றும் "கச்சிராயர்" என்றும் பட்டப் பேர்பூண்டனர். உடையார் பாளையம் ஸமஸ்தானாதிபதியும் "கச்சி காளக்க தோளக்க வுடையார்" என்கிற பிருது தாங்கு வதையுங்காணலாம். இவ்வரசர்கள் முன்னோர்கள் ஒரு காலத்தில் கச்சியில் தோன்றியவர்கள் என்று ஊகிக்க இடம் உண்டாகிறது.

பத்ராதிபரின் குறிப்பு

இப்பிழை திருத்தம் பரமாநந்தத்தை யுண்டு பண்ணிற்று. இவ்விடத்தில் திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகையில் ஸ்ரீ. உ. வே அண்ணங்கராசாரியர் எவ்வாறு அநுக்ரஹித்திருக்கின்றார் என் பதைக் கவனிக்க ஆவல்கொண்டேன். 1927-ஆம் வருஷத்தில் வெளிவரப்பெற்ற திவயப்ரபந்த திவ்யார்த்த தீபிகையில் பெரிய திருமொழிவியாக்கியாநம் பக்கம் 829-ல் "விளைந்தவேளை" என்று பாடம் வழங்கி வரினும் "விளந்தை வேளை" எனத்திருத்திக் கொள்ளவேணுமென்பர். விளந்தை என்று ஓர் ஊருக்குப் பெயர் என்று எழுதப்பட்டிருக்கிறதைப் பார்த்துப் பேராநந்தமடைந் தேன். ஸம்ப்ரதாய கிரந்தங்களிலுள்ள இத்தகைய சீர்திருத்தங் களை மஹான்கள் பரமக்ருபையுடன் அநுக்ரஹித்தருள வேண்டு மென்றடிபணிந்து வேண்டிக் கொள்கிறேன்.

ஸ்ரீஸூக்திகளின் ஆராய்ச்சி.

[ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்]

நம்முடைய பூருவாசாரியர்கள் அருளிச்செயல் வியாக்கியா நங்களில் விலக்ஷணமாகச் சில பதப்ரயோகங்கள் செய்தருளி யுள்ளார்கள். அவை தமிழ்ச் சொற்களேயானாலும் மற்றைத் தமிழ் நூற்களில் அந்தப் பிரயோகங்கள் காணக்கிடைப்பதில்லை. 'அவை நமது பூருவாசாரியர்களின் ஸங்கேதத்தினால் மாத்திரம் ஸித்தங் கள்' என்று சொல்லலாம் போல் தோன்றுகிறது. அவற்றை யெல்லாம் ஒரு வரிசையாக எடுத்து ஆராய்ச்சி செய்ய வேணு மென்கிற நோக்கம் அடியேனுக்கு பெரிதுமுண்டு.

"பத்தும்பத்தாக" என்கிற ஒரு பதப்ரயோகம் நமது ஸம்ப்ர தாயக்ரந்தங்களை ஸேவித்தவர்களுக்கு ப்ரஸித்தமாகவே யிருக்கும் 'பூர்ணமாக' என்னும் பொருளில் இச்சொல் பிரயோகிக்கப்பட் டிருப்பதாகக் காண்கிறது. திருவாய்மொழியில் (3-8-4) 'கைகளா லாரத் தொழுது" என்கிற பாசுரத்தில் "மெய் கொள்ளக்காண" என்கிற விடத்தில் ஈடு முப்பத்தாறாயிரத்தில் "பத்தும் பத்தாக மெய்யே காண" எனறும், (ஏழாம்பத்தில்) * ஆழியெழ என்னும் திருவாய்மொழியின் ப்ரவேசத்தில் "பத்தும் பத்தாக விஜய பரம் பரைகளைக் காட்டிக்கொடுக்க" என்றும் உள்ளது காண்க. மேற் குறித்த இரண்டிடங்களிலும் அரும்பதவுரைகாரர்கள் இதற்கு இன்னது அர்த்தம் என்று காட்டியருளவில்லை. 'பூர்ணமாக' என்னும் அர்த்தத்திலேயே இதற்குப்ரயோகம் என்று பெரியோர் கள் அருளிச் செய்யக் கேள்வியுண்டு. இப்பொருள் ஸந்தர்ப்பத் திற்கு இணங்கியதாகவுமுள்ளது. இப்பொருளில் இச்சொல்லை என்ன காரணம்பற்றி உபயோகித்தார்கள் என்கிற ஆராய்ச்சி செய்யவேண்டும்.

இச்சொல்லின் உருவம் சில விடங்களில் மாறுபாடுற்றிருக்கு மாற்றையும் காட்ட விரும்புகின்றேன். பகவத் விஷய ஸ்ரீகோ ஶத்தை முதன் முதலாகப் பலபல மஹா வித்துவான்கள் கூடிப் பரிசோதித்துத் தெலுங்கு லிபியில் பதிப்பித்திருக்கின்ற ஸ்ரீகோ ஶம் உலகமெங்கும் புகழ்பெற்றது. உண்மையில் அந்தப் பதிப்பு ஸுப்ரஸித்த வித்வச்சிகாமணிகள் சேர்ந்து செய்வித்ததாதலால்

பெரும்பாலும் பிழையற்றதென்றே கொண்டாடப்படுகிறது. அப்பதிப்பில் "மெய்கொள்ளக்காண" என்கிற விடத்தில் 'பற்றும் பற்றுக' என்று இச்சொல் வடிவம் காணப்படுகிறது. அவ்விடத்திலுள்ள இரண்டு அரும்பதவுரைகளிலும் இங்ஙனமே ப்ரதீகோபாதாநம் காண்கிறது. 'பத்தும் பத்தாக" என்கிற பாடம் உண்மையானதா? "பற்றும் பற்றுக" என்கிற பாடம் உண்மையானதா? என்று விசாரம் வரில் உபபத்தியைக் காட்டி நிஷ்கர்ஷிக்கவேணும். மேற்குறித்த பதிப்பிலேயே * ஆழியெழவுவேஶத்தில் மாத்திரம் "பத்தும் பத்தாக" என்றே பதிப்பிக்கப்பட்டிருக்கக் காண்கிறது. அதனால் முதலில் (மூன்றும்பத்தில்) "பற்றும் பற்றுக" என்று பதிப்பித்தது பிசகு என்று முத்ராபகர்கள் தாங்களே பிறகு (ஏழாம்பத்தில்) தெளிவு பெற்றார்கள் போலும் என்று ஊஹிக்க இடமுண்டாகிறது. மூன்று நான்கு ஓலை ஸ்ரீ கோஶங்களை ஸம்பாதித்துப் பார்த்ததில் "பற்றும் பற்றுக" என்றே எழுதப்பட்டிருக்கக் காண்கிறது. ஆனால், எந்த ஓலை ஸ்ரீ கோஶத்தையெடுத்துப் பார்த்தாலும் (த்த) என்றிருக்கவேண்டுமிடங்களில் (ற்ற) என்றும், (ற்ற) என்றிருக்கவேண்டுமிடங்களில் (த்த) என்றும் மாறாடியிருப்பவை பெரும்பாலும் காணப்படுதலால் இத்தகைய விஷயங்களில் ஓலை ஸ்ரீ கோஶத்தைக் கொண்டு ஒருவகையாக நிஷ்கர்ஷிப்பதும் அஸாத்யமேயாகிறது. இச்சொல்லுக்கு ப்ரவ்ருத்தி நிமித்தம் என்ன? என்பது தெரிந்தால் அப்போது ஶப்தஸ்வரூப தத்துவம் புலப்படும்.

இது விஷயமாய் அஸ்மதாசார்ய ஸகாஶத்தில் அடியேன் கேட்டிருந்ததை இங்கு விஜ்ஞாபிக்கிறேன்.

"பற்றும் பற்றுக" என்பது சொல்வடிவமன்று. "பத்தும் பத்தாக" என்பதே உண்மையான சொல்வடிவம். அருளிச்செயல்களில் பாணாஸுர பங்கம் கூறப்படுமிடங்களில் "வாணனாயிரந் தோள் துணித்த" என்றும் "வாணன் ஈரைஞ்ஞூறு தோள்களைத் துணித்த" என்றும் வாணனது ஆயிரந் தோள்களையும் எம்பெருமான் துணித்ததாக அருளிச் செய்யப்பட்டுளது. பரமசிவனுடைய வேண்டுகோளுக்கிணங்கி இரங்கிச் சில தோள்களைத் துணிக்காது விட்டிட்டதாகப் புராணவரலாறு உள்ளதனால், ஆயிரம் என்றது பூர்த்தியான ஆயிரத்தைச் சொல்லாது நிற்கின்றது. அவ்வாழ்வார்களே இராவணனது தலைகளைத்

துணித்ததைப் பற்றி அருளிச் செய்யுமிடங்களில் "வாளரக்கர் தலைவன் தலை பத்தறுத்துகந்தான்" என்றும் "தென்னிலங்கைக் கிறைவன் சிரங்கள் ஐயிரண்டும்" என்றும் பத்துத் தலைகளையுமறுத்ததாக அருளிச் செய்கிறார்கள். இங்குப் பத்தும் பத்தாகவே யெண்ணப்படுகிறது. வாணனது தோள்கள் ஆயிரத்தில் சில நின்றதுபோல் இராவணன் தலைகள் பத்தில் சில நின்றனவில்லை. அறுக்கப்பட்டவையும் பத்து; கூறப்பட்டதும் பத்து. இதிலிருந்தே "பத்தும் பத்தாக" என்கிற ஸ்ரீஸூக்தி ஒரு ஸங்கேதமாக அவதரித்தது. இந்த நிரூபணத்தின்படி "குறையற" என்கிற பொருள் செவ்வனே கிடைப்பதால் பூருவாசாரியர்களுக்கு இதுவே திருவுள்ளமாயிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

சிலர் சொல்லுவதாவது—இப்போது என்ன மணி?' என்று ஒருவர் கேட்டால் 'பத்து மணி' என்று அதற்கு ஒருவர் பதிலுரைப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். பத்தெட்டு நிமிஷங்கள் குறைவாக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும் அந்த ஏற்றத்தாழ்வில் நோக்கு இன்றியே 'பத்துமணி' என்பதுண்டு. அப்படியல்லாமல் (அதாவது ஏற்றத்தாழ்வு சிறிதுமில்லாமல்) சரியாகப் பத்துமணியடிக்கும்போது 'இப்போது பத்துமணி' என்றால் அதுவே முக்கியமான அர்த்தபூர்த்தியை யுடையதாகும். பத்து என்றது பத்தாகவே யிருக்கும்படியாக [அதாவது— அநூநாநதிரிக்தமாக] என்றவாறு — என்கிறார்கள். இங்ஙனே லௌகிக வார்த்தையை மூலமாகக் கொண்டு இந்த ஸ்ரீ ஸூக்தி அவதரித்தது என்பதிற் காட்டிலும் முந்துற நிரூபித்தபடி இதிஹாஸ புராணப்ரக்ரியையை மூலமாகக் கொள்வது சிறக்குமன்றோ? எங்ஙனே கொண்டாலும் "பத்தும் பத்தாக" என்பது சொல்வடிவமேயன்றி "பற்றும் பற்றுக" என்பது அன்று என்பதில் யார்க்கும் விவாதம் இராது.

ப்ராசீந பகவத் விஷய ஸ்ரீகோஶ முத்ராபகர்கள் ஸகல ஶாஸ்த்ரங்களிலும் உபய பாஷைகளிலும் மஹா நிபுணர்கள். அன்னவர்கள் பலர் கூடி ஆழ்ந்த ஆராய்ச்சியுடன் பரிஷ்கரித்துப் பதிப்பித்த அந்தப் பதிப்பில் "பற்றும் பற்றுக" என்று விழுந்திருப்பதை அபலபிக்க வொண்ணாது. ஈட்டில் மாத்திரமேயன்றியே இரண்டு அரும்பத வுரைகளிலும் அவ்வண்ணமாகவே பதிப்

பித்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கிடைத்த ஓலை ஸ்ரீ கோசங்களெல்லாவற்றிலும் இங்ஙனமே கிடைத்தது என்றாவது, உள்ளபடி கிடைத்ததையும் முத்ராபகர்கள் ப்ரமித்து மாற்றிவிட்டார்கள் என்றாவது இசைந்தாகவேண்டும்.

பெரிய திருவந்தாதியில் " காலேபொதத் திரிந்து கத்துவராமின நாள் " என்பது ஒரு பாசுரம். சிறந்த தமிழ்ப் பண்டிதர்கள் சோதித்துப் பதிப்பித்த பதிப்புக்களிலும் சிலவற்றில் " கத்துவர் " என்கிற ஸ்தானத்தில் "கற்றுவர்" என்று விழுந்திருப்பதைக் கட்கூடாகக் காணலாம். இப்படிப்பட்ட விபர்யாஸங்கள் ஓலை ஸ்ரீ கோசமே தொடங்கி அபாரமாகக் காணப்படுகின்றன. இதையெல்லாம் ஊன்றி நோக்கவல்ல மஹான்கள், * யானொட்டியென்னுள் பாசுரத்தின் ஈட்டில் இற்றை என்ற சொல்வடிவம் (இத்தை) என மாறுபட்ட தென்பதில் வியப்புக் கொள்ளக் காரணமில்லை.

" இற்றைப் பறைகொள்வான் " " இற்றையிரவிடை யேமுக் தென்னை " இத்யாதிகளான ஆழ்வார் பாசுரங்களில் " இற்றை " என்பதற்குப் பிரயோகங் கண்டாலும் வசனங்களில் (நம்பிள்ளை ஸ்ரீ ஸூக்திகளில்) பிரயோகம் காண்பதுண்டா? என்று சிலர் கேட்பார்கள். அங்ஙனே பல விடங்களுண்டு; "வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம் புகழவே " என்றவிடத்து ஈட்டில் " இற்றை விடிவு மொருவிடிவே" என்கிற ஸ்ரீ ஸூக்தியைக் காணலாம். இங்கு ஓலை ஸ்ரீ கோசங்களில் " இத்தை விடிவும்" என்றே எழுதப்பட்டுள்ளதையும் கண்டிருக்கிறோம்.

திருவாய்மொழியில் (3—1—7) " வாழ்த்துவார் பலராக " என்கிற பாசுரத்தில் " கேழ்த்த சீர் அரன் முதலாக் கிளர் தெய்வமாய்க் கிளர்ந்து " என்ற விடத்து ஈடு முப்பத்தாறாயிரத்தில் "முசுகுவாலெடுத்தாப் போலே கிளர்ந்து " என்றொரு ஸ்ரீ ஸூக்தி காணப்படுகிறது. இவ்விடத்து அரும்பதவுரைகளில்,—

" முசுகு—கோலாங்கூலம். வால்—புச்சம் " என்று எழுதப்பட்டுள்ளது. "முசுகு வாலெடுத்தாப்போலே " என்ற ஈட்டு ஸ்ரீ ஸூக்திக்கு என்ன தாத்பர்யம் தேறிற்றென்று நிரூபகர்கள் விமர்சிக்க வேணும். ஸதாசார்ய பரம்பரையில் காலக்ஷேபம் செய்தருளின மஹான்கள் இங்கு அருளிச்செய்வது என்னவென்றால்; 'முசுகு' என்றொரு தமிழ்ச் சொல் எங்

கும் கண்டதில்லை. 'முசு' என்பதே சொல்வடிவம். " முன்பே வழிகாட்ட முசுக் கணங்கள்" என்ற பெரியாழ்வார் திருமொழியும் காண்க. சீவக சிந்தாமணியில் கேமசரியாரிலம்பகத்தில் மூன்றாவது செய்யுள்—"கனிகொள் வாழைக் காட்டுட் கருமை மெழுகியவைபோன், றினியவல்லா முகத்த முசுவுங் குரங்குமிரிய" என்பதாம். "கரிய மையை மெழுகி வைத்தவை போலு முகத்தவாகிய முசு" என்று அவ்விடத்து உரை. கருங் குரங்கு என்றபடி. கூட்டங்கூடி, காச்சு மூச்சென்று கூச்சல் போடுவது குவாலெடுத்தல்' எனப்படும். குவால் என்னுஞ் சொல் கூட்டம் என்கிற பொருளிலும் அதிகம் எனகிற பொருளிலும் வழங்குவதுண்டு. பிங்கலந்தை நிகண்டில் கூட்டமென்னும் பொருள் காட்டப்பட்டது.

திருவரங்கக் கலம்பகத்தில் " அரும்புன்னைகத் தடங்காவே " என்ற செய்யுளில் "கங்குற்போது குவாலுகமே" என்கிற பிரயோகமும், திருவாய்மொழியில் (2-7-3) "மாதவனென்றதே கொண்டு" என்றவிடத்து ஈட்டில் "இத்தையே திருவுள்ளத்திலே குவாலாகக்கொண்டு" என்கிற ஸ்ரீஸூக்தியும் காணத்தக்கன. இவ்விரண்டு பிரயோகங்களும் அதிகம் என்ற பொருளிலேயாம். கூட்டங்கூடி இரைச்சல் போடுவது என்பதைக் குவாலெடுத்தல் என்ற சொல்லால் நம் முன்னோர்கள் வழங்கிவந்தனராம். குரங்குகள் கூட்டம் போட்டுக் கூச்சலிடுவது பெரும்பான்மையாகக் காணும் விஷயமாதலால் " முசு குவாலெடுத்தாப்போலே" என்று நம்பிள்ளை அருளிச்செய்யலாயிற்று. இதர தெய்வங்கள் குழுமி எம்பெருமானைத் துதிப்பதானது முசு குவாலெடுத்தாப்போலேயுள்ளது என்று விநோதமாக அருளிச் செய்தபடி. இங்கு, முசுகு-வாலெடுத்தாப்போலே என்று அரும்பதவுரைகாரர்கள் பகுத்துரைப்பதன் கருத்து இன்னதென்று அறிகின்றிலோம். அப்போது என்ன தாற்பரியம் என்பதை மஹான்கள் உணர்த்துவார்களாயின் தலையல்லால் கைம்மாறிலேன்.

திருவாய்மொழியில் (5-9-8) "நாடொறும் வீடின்றியே" என்கிற பாசுரத்தில் "தீங்கரும்பும்" என்ற விடத்து "தீ—தித்திப்பு" என்றே இருபத்தினாலாயிரப்படியிலும் ஈடுமுப்பத்தாறாயிரப்படியிலும் எல்லாப் பதிப்புக்களிலும் காண்கிறது. 'தீ' என்ற சொல்லுக்குத் தித்திப்பு என்ற பொருள் ஒரு நிகண்டிலும் காண்ப

தில்லை. 'தீம்' என்னுஞ் சொல்லுக்கே அப்பொருள் உள்ளது. அகநானூறு என்ற நூலில் (239) "நெருநலுந் தீம்பலமொழிந்த" என்றது காண்க. பெரியாழ்வார் திருமொழியில் (3-4-9) "தீங்குழல்வாய் மடுத்து" என்ற விடத்து "தீமென்று இனிமை" என்று மணவாள மாமுனிகள் அருளிச் செய்திருப்பதும் காண்க. ஆகவே, "ஆடுறு தீங்கரும்பும்" என்ற விடத்திலும் "தீம்—தித்திப்பு" என்றே இருக்கவேண்டும். திருமங்கையாழ்வாரும் பெரியதிருமொழியில் (5-2-2) "நறுந்தண் தீம் தேனுண்ட வண்டு" என்றருளினர். மகரமின்றியே தீ என்று மாத்திரம் இருக்குமாறு இனிமை யென்ற பொருள்பட வழியுண்டா? என்று மஹான்கள் விமர்ஶித்து உணர்த்தியருள வேணும்.

பெரிய திருமொழியில் திருக்கோவலூர்ப் பதிகத்தில் (2-10-3) "அழுந்தியமா களிற்றினுக்கு அன்றாழியேந்தி அந்தரமேவரத் தோன்றியருள் செய்தானை" என்றதில் "அந்தரமேவர" என்ற விடத்து 'அந்தரமே, வரத்தோன்றி, என்று பதவிபாகம்போல் மயங்குவார் பலருளர். இவ்விடத்துப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில் "ஏவர—இட மடையும்படி" என்றிருக்கக் காண்கிறது. 'மேவர' என்று எடுத்து அருளிச் செய்திருந்தது 'ஏவர' என்று பாடப்பிறழ்வாக வந்து புகுந்தது என்று பெரியோர்கள் அருளிச் செய்யக் கேட்டிருக்கிறேன். சங்க நூலாகிய குறிஞ்சிப் பாட்டில் (138) "மேவரக் கிளர்ந்து" என்றதைக்காணலாம். மே—வினைப்பகுதி; 'வர' என்பது துணை வினை: மேவ என்றபடி. மேவருதலாவது இடமடையும்படி நிரம்பியிருத்தல். 'ஏவர' என்று கொண்டால் 'இட மடையும்படி' என்கிற பொருள்கொள்ளுதற்கு வழியுண்டா என்பதை மஹான்கள் ஆய்ந்து அருளவேணும்.

திருவாய்மொழியில் (6-8-10) * வந்திருந்தும்முடைய என்ற பாசுரத்தில் "என்னை இன்னவாறிவள் காண்மினென்று" என்ற விடத்து ஈட்டில் "இவள் வைவர்ண்யத்தைத் தன்னுடம்பிலே காட்டவும் வற்றாகாதே யிவை என்று ஜீயரருளிச்செய்வர். அன்றிக்கே, உம்முடைய தேவாரமோ? இவள் அந்தஃ புரபரிகரமன்றோ வென்னுங்கோள்." என்கிற ஸ்ரீ ஸூக்தி காண்கிறது "உம்முடைய தேவாரமோ" என்றதற்கு என்ன பொருளென்று மஹான்கள் விமர்ஶிக்கவேணும். அரும்பதவுரையில், "தேவாரமென்று க்ருஹார்ச்சனையாய் க்ருஹார்ச்சனை எப்படி அர்ச்சகனுக்குப் பரதந்த்ரமாயிருக்கும், அப்படி இவள் உமக்குப் பரதந்த்ரையன்றே; ஆகையாலே பிராட்டி பரிகரமான இவளை இப்படி நோவுபடுத்தலாமோ வென்றபடி," என்றுரைக்கப்பட்டுளது. அதற்குமேல் ஒரு அரையருடைய கதையும் விரிவாக எழுதப்பட்டிராநின்றது.

இங்குப் பெரியோர்கள் அருளிச்செய்யக் கேட்டிருப்பது என்னென்னில்; ஓலை ஸ்ரீகோஶங்களில் (கா) என்பதும் (கர) என்பதும் வாசியின்றியே எழுதப்படுவது வழக்கம். "தேவாரமோ" என்பது [தேவாரமோ] என்றே ஓலை ஸ்ரீ கோஶங்களில் எழுதப்படுகிறது. (தேவாராமோ) என்பதும் (தேவாரமோ) என்பதும் அவிஶேஷமாகவே எழுதப்படும். ரகரத்தை (ா) இவ்விதமாகவே எழுதுவார்கள். தேவாராமோ? என்பது நம்பிள்ளை யருளிய ஸ்ரீஸூக்தி. அது (தேவாராமோ)என்று எழுதப்பட்டு வந்தது: (தேவாரமோ) என்று வாசிக்கப்பட்டதாயிற்று.

"உம்முடைய தேவராமோ? அந்தஃ
புரபரிகரமன்றோ வென்னுங்கோள்"

என்கிற ஈட்டு ஸ்ரீ ஸூக்திக்கு இப்போது பொருள் ஆராய்ந்து காண்மின்; "பேணலமில்லா வரக்கர்" என்ற திரு விருத்தப் பாசுரத்தில் விவரித்துக் கூறியபடி ப்ரயோஜநாந்தர பரர்களாயே உம்மிடம் வருகின்ற (இந்திரன் முதலிய) தேவராக இவளை நினைத்தீரோ? உம்முடைய திருமேனி யொன்றிலேயே ஆசைப் பட்டவளன்றோ விவள்—என்பதே இங்கு விவக்ஷிதம் ஈட்டில் மேலே குறித்த பங்க்திகளுக்குப் பிறகு "அர்ச்சை அர்ச்சகபராதீனையிறே" என்றொரு வாக்கியம் காண்கிறது. இது ஒரு ஓலை ஸ்ரீ கோஶத்திலும் காணப்படுவதில்லை. அரும்பதவுரையிலும் எடுக்கப்படவில்லை. ப்ரக்ஷிப்தம் என்றே நிச்சயிக்க லாகிறது. (இவ்விஷயம் வர்ன மாமலையில் ஒரு வித்வான் ஸ்வாமி சென்ற மாதத்தில் தெரிவித்தருளினது.) இதனையும் மஹான்கள் ஆராய்ந்தருளவேணும்.

திருவாய்மொழியில் (1—8—7) "தண்டாமஞ்செய்து என்னெண்டானுனே" என்றதில் "தண் தாமஞ் செய்து" என்ற விடத்து இருபத்திநாலாயிரப் படியிலும் ஈட்டிலும் "தடப்பத்தை

புடைத்தான" என்றொரு ஸ்ரீஸூக்தி யிருப்பதை ப்ராசீந பகவத் விஷய ஸ்ரீகோசாதிகளில் காணலாம். அங்கு இரண்டு அரும்பத வுரைகளிலும் "தடப்பமென்று குளிர்த்தி" என்றிருப்பதையும் காணலாம். தடப்பம் என்றொரு சொல் தமிழில் இருப்பதாகத் தெரியவில்லை. (ಠಪ್ಪಮ್) என்று ஸ்பஷ்டமாகப பதிப்பித் துள்ளார்கள்; இங்கு உண்மையான சொல்வடிவம் யாதெனில், தட்பம் என்பதேயாம். ஓலை ஸ்ரீகோசம் எழுதுமவர்கள் மெய் யெழுத்தையும் உயிர் மெய்யெழுத்தையும் ஒரு வண்ணமாகவே எழுதுவார்கள். உக்கம் என்பதை உககம் என்றே எழுதியிருப் பர்கள். வாயுந் திரையுகளில் (9) ஈட்டில் "உக்கக்காலுக்கு உலை யக் கடவ" என்கிற ஸ்ரீஸூக்தியை ஒரு ஸ்வாமி "உஹமஹ ஹாலுஹஹா" என்று சோதித்தார் என்கிற ஸம்ப்ரதாயிகமான ஐதிஹ்யமும் இதனை வற்புறுத்தும். தட்பம் என்கிற பதத்தில் டகர வொற்றுக்குப் பின் பகர வொற்றுக்கு ப்ரஸக்தி யில்லையா யினும் இலக்கண மறியாதவர்கள் அங்கு ஒரு வொற்றையும் சேர் த்தே நாளைக்கும் எழுதுவது வழக்கம். தட்ப்பம், காட்ச்சி, சொற்ச்சுவை, கற்க்கண்டு என்றிப்படி யெழுதியிராத ஓலை ஸ்ரீ கோசம் துர்லபமென்றே சொல்லலாம். ஆகவே தட்பம் என் னுஞ் சொல் 'தடபபம்' என்று ஓலைகளில் எழுதப்பட்டு வந்து அது தடப்பம் என்று மஹா வித்வான்களாலும் பதிப்பிக்கப்பட்டு விட்டது. இங்ஙனே நாம் நிரூபிக்கும் காரணம் தவிர வேறு கார ணம் சொல்லமுடியாது, அல்லது, 'தடப்பம்' என்றொரு சொல் வடிவம் உண்டென்றுவது நிரூபிக்கவேணும். உவே. சே. கிருஷ் ணமாசாரியர் ஸ்வாமி பகவத் விஷயம் பதிப்பிக்கும் ஸமயத்தில் இந்த விசாரம் நிகழ்ந்து தட்பம் என்றே பதிப்பிக்கப்பட்டிருப் பதையுங் காணலாம். ஓலை ஸ்ரீகோசங்கள் மஹா மஹா பண்டி தர்களையும் எவ்வளவு மயக்குகின்றதென்பதைக் கண்டறிய இவை காட்டப்பட்டன.

வக்தாவின்மீது நோக்கின்றி விஷயங்களின் மீது மாத்தி ரமே நோக்காக இவற்றையெல்லாம் பெரியார் பராமர்சித் தருள் வது நலம்.

ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணியும் அத்யமே ச்லோகார்த்த விவாத விசாரமும்

ஸ்ரீ. உ. வே. சாமுசேஷய்யங்கார் ஸம்ஸ்க்ருத பண்டிட்.
[C. A. C. High School]

நமது ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்களான மஹாநுபாவர்களி டையே அத்யமே ச்லோகார்த்த விஷயமாக விவாதமேற்பட்டு அத னடியாக அனேக க்ரந்தங்கள் வெளி வந்திருபபது ஸ்ரீ வைஷ்ணவ உலகமறிந்ததே. இதனடியாக வெளி வந்திருக்கும் க்ரந்தங்களை அடியேனுமறிவன். இதைச் சிறிது ஆராயுமிடத்து ஸ்ரீ பட்டர் காலத்தில் ராமாவதாரத்திலும் க்ருஷ்ணாவதாரத்திலுமுள்ள ஸௌலப்யத்தைப்பற்றி ப்ரவ்ருத்தமான ஓரைதிஹ்யம் ஞாபகத் திற்கு வருகிறது. இது நிற்க.

மாசறுசோதியில் ஆழ்வார் மடலெடுக்கக்கடவேன் என்ற தற்கு "சாபமாநய" என்றதை உதாஹரணமாகக் காட்டுகிறார் கள். இதைச் சிறிது பராமர்சிப்போம்.

ஆழ்வார் ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனாயிருக்கும் ஸர்வேச்வர னைச் சரணம் புக்கார். அவன் சிறிது விளம்பித்தவாறே அவ்விளம் பத்தைச் சகியாத ஆற்றாமை மிக்கு தன் ஸ்வரூபத்திற் கநுகுணமல் லாத ஸ்வப்ரவ்ருத்திரூபமான மடலெடுக்கையில் உபக்ரமித்தார்.

அது போலவே பெருமாள் கடலைத் தாண்டுவதற்குக் கடலர சனைச் சரணம் புக்கார்.

"ஆத்மாநம்மாநுஷம் மந்யே" என்கிற சக்ரவர்த்தி திரு மகன் கடலைத் தாண்டுவிக்கும் வல்லமைவாய்ந்த கடலரையனையே சரணம் புக்கதனால் இதை சரணாகதியில்லை யென்று சொல்ல முடி யாதே. இதை சரணாகதியில்லை யென்னுமவர்கள் ராமனை ஸர் வேச்வரனாக நினைத்துச் சொல்லுகிறார்களத்தனை.

ராமனை மனுஷ்யனாகவும் வருணனைத் தேவனாகவும் நினைத் தால் சரணாகதியில்லை யென்று சொல்ல முடியாது. இதை யடி யொற்றியே ராமன் வருணனை வழிவிட வேண்டியதைச் சரணாகதி யென்று அருளிச் செய்தார் பிள்ளை லோகாசாரியர்.

"விஷய நியமமே உள்ளது" என்றது இன்ன காரியத்திற்கு இன்னாரை ஶரணம்புக வேண்டுமென்கிற நியமமேவேண்டும் என்பதே அர்த்தமாகும்.

சரியான ஶரணாகதியானால் ஏன் அவன் வந்து முகங்காட்டவில்லை என்று கேட்குமவர்களை ஆழ்வார் சரணம் புக்கவிடத்து எம்பெருமான் ஏன் முகங்காட்டவில்லை என்று கேட்பார்கள். அதற்கு அனேக காரணங்களைச் சொல்லலாம். அதுபோலே இங்கும் பலவிதமாகச் சொல்ல இடமுண்டு. இது நிற்க.

அவன் முகங்காட்டாவிட்டால் 'சாபமாநய' என்று ஸாகர ஶோஷணத்திலுபக்ரமித்தது ஶரணாகதனான ராமனுக்கு உசிதமாகுமோ? என்று கேட்கலாம்.

இதற்கு எம்பெருமான் முகங்காட்டாவிட்டால் மடலெடுப்பதில் ஆழ்வார் உபக்ரமிப்பது உசிதமாகுமோ? என்பார்கள்.

இதற்கு எம்பெருமான் சிறிது விளம்பித்தவாறே விளம்பத்தைச் சகிக்கவொண்ணாத ஆற்றாமை மிக்கு ஸ்வப்ரவ்ருத்தியாகிற மடலெடுக்கையில் உபக்ரமித்தார். உடனே எம்பெருமான் முகம் காட்டி ஆழ்வாரபீஷ்டத்தை யருளினான் என்று ஸமாதானம் சொல்லவேண்டும்.

அதுபோலே கடலரசன் முகங்காட்டச் சிறிது விளம்பித்தவாறே அவ்விளம்பத்தை ஸஹிக்கவொண்ணாத, பிராட்டியின் விஶ்லேஷத்தால் ஏற்பட்டிருக்கும் ஶோகாதிஶயத்தினால் கடலைத் தாண்டுவதிற்கநுகூலமான ஸாகரஶோஷணமாகிற ஸ்வப்ரவ்ருத்தியிலொருப்பட்டார். அது கண்ட கடலரையன் கடுக ஓடி வந்து வேண்டிய காரியங்களைச் செய்து ஸமுத்ர தரணத்தைச் செய்து வைத்தான்.

இதைத் திருவுள்ளம் பற்றி ஸர்வஜ்ஞரான பிள்ளை லோகாசாரியர் பெருமாள் வருணனை வழிவிட வேண்டியதைச் சரணாகதியென்றும் அதற்குப் பலம் ஸமுத்ர தரணமென்றும் ஸாப்தமாக அருளிச் செய்திருக்கின்றனர்.

இதற்கு வேறுபாடாகச் சொல்லுமர்த்தங்களெல்லாம் [illegible] என்றதற்குப் பொருந்தும்.

ஆத்மாநம் மாநுஷம் மந்யே என்பதற்குச் சேரச் சொல்ல வேண்டுமானால் இவ்வர்த்தமே உசிதமாகும்.

ஆக அபிஸந்திபேதத்தாலிவ்விரண்டு அர்த்தங்களும், அன்றிக்கே, அங்ஙனுமன்றிக்கே என்று நமது பூர்வாசார்யர்களின் நிர்வாஹங்கள் போலவே பொன்னேபோல் போற்றற்குரியதாகும். இவ்வாறிருக்கும் விஷயத்தில் இரண்டு ஸிம்ஹங்கள் வாதம் செய்யா நிற்கின்றன. இது விஷயத்தில் நம் போல்வார்கள் இவர்களின் தாரதம்யத்தைப்பற்றிப் பேசுவது நம்முடைய மாத்ஸர்யத்தைக் காட்டுமேயல்லாமல் அவர்களின் சிறுமை பெருமையைக் காட்டாது என்பது திண்ணம்.

இது விஷயமாக ஸ்ரீதேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷிணீ ஆனி மாத ஸஞ்சிகையில் "பூர்வ நிர்வாஹ பரித்ராணமும் நம் அண்ணாவின் பதில் ஸம்ரம்பமும்" என்று தலையங்கமிட்டு ப்ரசுரிக்கப்பட்ட வ்யாஸத்தில் ப்ரதிஷ்டா, பரித்ராணம் இவ்விரண்டு க்ரந்தங்களைப் படிக்கையில் யஊஹரம் என்று தொடங்கிய 3 ஶ்லோகங்களும் வஊவஊ மனதிற்கு வந்தன என்று எழுதப்பட்டிருந்ததைப் பார்த்தேன். உடனே ஆழ்வாரருளிச் செய்த நண்ணாதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்தேங்க என்கிற திருவாய்மொழி ஞாபகத்திற்கு வந்து இவையென்ன உலகியற்கை என்று மிகவும் மனம் வருந்தா நிற்கின்றது.

இந்த ஸம்ரக்ஷிணீபத்ராதிபர் தமக்கு ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியரிடமுண்டாயிருக்கும் த்வேஷத்தை இதன் மூலமாகக் காட்டுகிறாரேயல்லாமல் அம்மஹாநுபாவர்கள் அநுக்ரஹித்த அவ்விருக்ரந்தங்களையும் அடியோடு பார்த்தவரன்று என்பது இதன் மூலமாகத் தெரியவருகிறது. ஸ்ரீ பாஷ்யகாரர் திருவடி ஸம்பந்தம் பெற்ற நமக்குள் இவ்வாறு விவாதமேற்படுவதும் அதனடியாக அவரவர்களுக்குண்டாயிருக்கும் த்வேஷத்தைக் காட்டி த்ருப்தியடைவதும் காலத்தின் கொடுமையே.

பத்ராதிபரின் குறிப்பு:—

அத்யமேஶ்லோகார்த்த விஷயமான சர்ச்சை வைஜயந்தியில் ப்ரசுரிக்கப்பட மாட்டாதென்று ப்ரதிஜ்ஞை பண்ணப்பட்டிருந்தாலும் இந்த வ்யாஸம் நிஷ்பக்ஷபாதமாய் ஒருவர்க்கும் வருத்தத்தை யுண்டாக்காதென்று அங்கீகரிக்கப்பட்டது.

வர்த்தமானங்கள்

ஒரு ஆகாசவாணி

ஆரியர்காள் ! நமது எம்பெருமானார் தர்ஶநத்தில் ஆளவந்தார், உடையவர், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, பிள்ளை லோகாசாரியர் முதலான பூர்வாசாரியர்களின் நிர்வாஹங் கள் போலவே தேசிகன் நிர்வாஹமும். இதற்கு ஸ்ரீ தேசிகன் ஸ்ரீஸூக்திகளை நமது பூர்வாசாரியர்கள், அபியுக்தருளிச் செய் வர் என்று ஆங்காங்கு ஆதரித்துப் போந்தமை தக்கதோர் சான்றாகும்.

இது விஷயமாக ஸ்ரீதேசிகன் திருவுள்ள மெவ்வாறிருக்கின்ற தென்பதைச் சிறிது கவனிப்போமேயானால் ஸம்ப்ரதாய பரிசுத்தி யில் "ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஶிஷ்ய ஸம்ப்ரதாயங்களில் ஒன்றி லும் அர்த்த விரோதமில்லை. வாக்யயோஜநாபேதமே யுள்ளது". என்கிற ஸ்ரீஸூக்திரத்ந மொன்றே போரும் ஸ்ரீ தேசிகன் திரு வுள்ளத்தை நன்குணர்த்துகைக்கு.

இவ்வாறு ஐகரஸ்யத்தை யனுபவித்துப்போந்த நமது பூர்வா சார்யர்களின் ஸ்ரீ ஸூக்திகளை வேறுபடுத்தி விபரீதார்த்தங்கள் செய்து தங்கள் க்யாதி லாப பூஜார்த்தம் ப்ரசாரம் செய்ய ஆவலு டையார் பத்ரிகைகளின் வாயிலாக யதேஷ்டமாக ப்ரசாரம் செய்து கொண்டே யிருக்கிறார்கள். அதைப்பற்றிச் சிற்றறிவுடைய அடி யேன் போல்வார்களால் ஒன்றும் செய்ய முடியாமற் போனாலும் இவர்களுடைய வாதத்தால் ஒருவிதமான நிஷ்கர்ஷமும் ஏற்படா தென்பது ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யம் உத்த்ருத்ய புஜமுச்யதே. இந்த நிலைமையில் சில மஹாநுபாவர்கள் பத்ரிகைகளின் வாயி லாக நடந்துவரும் சர்ச்சையில் த்ருப்தி யடையாமல் வாசாவாக வும் நேரில் சர்ச்சை செய்யக் குதூஹலிக்கின்றார்கள். அது அவர் களின் பாண்டியத்தின் பெருமையே. தத்ப்ரகடநார்த்தம் யதேஷ்டமாக அவர்கள் சர்ச்சை செய்து கொள்ளட்டும். அது விஷயத்தில் அடியேனுக்கு யாதொரு வருத்தமும் கிடையாது.

நமது ஸம்ப்ரதாயத்தில் யாதொரு வேறுபாடும் கிடையாது என்றும், ஏதோ சில இடங்களில் வேறுபாடு தோன்றினாலும் அதை அபிஸந்தி பேதத்தாலும் அதிகாரி பேதத்தாலும் நமது பூருவர்கள் ஸமந்வயம் பண்ணிப் போந்திருக்கின்றமையால் தற்

காலமுள்ள பண்டிதர்களால் சர்ச்சை செய்து ஒரு நிஷ்கர்ஷம் செய்யவேண்டிய குறைவு கிடையாதென்றும் பத்ரிகைகளின் வாயிலாகவும் நேரிலும் ப்ரஸ்தாவம் பண்ணிப் போராநின்ற வடி யேனுடைய பெயரை, ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியருக்கு ஸ்ரீரங்கம் ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபா சென்னை, கிளை காரியதரிசி ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸராகவாசாரியர் ரிஜிஸ்டர் போஸ்ட் மூலம் அனுப்பிய நோட்டீஸில் குறிப்பிட்டு, அதை அச் சிட்டும் ப்ரசுரப்படுத்தியது மிகவும் வெறுப்பை யுண்டுபண்ணு கிறது. அந்த நோட்டீஸில் முக்யமாகக் கவனிக்கவேண்டியது. "...........தேவரீருக்கு ஆப்தர்களாகிய வடகரை ஸ்ரீ. உப. வே. ராமாநுஜாசாரியரும் ஆழ்வார் திருநகரி ஸ்ரீ உப. வே. D. ராமாநுஜாசாரியரும் இப்பொழுது தேவரீர் சர்ச்சைக்குத் தயாராக இருப்பதாக சாதித்தார்களாம்" என்பது.

இந்த ஸ்வாமியை அடியேன் இன்னாரென்றறியேன். மற்ற ஒருவரிடமும் இவ்வாறு பேசியறியேன். இவ்வாறிருக்க இதொரு ஆகாயவாணி புறப்பட்டது ஆச்சரியமா யிருக்கிறது. இது எவ்வாறாயினு மாயிடுக. அடியேன் அந்த சர்ச்சையில் சம் பந்தப்பட்டவனில்லை யென்பதை அறிவிக்க வேண்டுவது ஆவஶ் யகமாதலால் ஷை காரியதரிசி ஸ்வாமிக்கு ரிஜிஸ்டர் போஸ்டு மூலம் ஒரு பத்ரிகை விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறேன். அது விஷயம் அகில ஸ்ரீ வைஷ்ணவர்களு மறியுமாறு வைஜயந்தீ வாயி லாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம் : வடகரை ராமாநுஜாசாரி பத்ராதிப்ர்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபா, மாம்பலம்.

ஷை சபையின் ஆதரவில் ஸ்ரீமான் உ. வே. ஸ்ரீரங்கம் சட கோபாசாரியார் ஸ்வாமி சென்ற பதினைந்து மாதகாலமாக ஸ்ரீபாக வதத்தை உபந்யஸித்து வருவது அனைவரும் அறிந்த விஷயம். அதில் ஸ்ரீ க்ருஷ்ண சரித்திரமாகிற தசமஸ்கந்தம் 1—6—37-ல் ஆரம்பிக்கப்பட்டு இப்பொழுது ஸ்ரீ க்ருஷ்ணாவதாரம் வரையில் நடந்திருக்கிறது. மேற்கொண்டு உபந்யாஸங்கள் 15—6—37-ல் ஆரம்பிக்கப்பட்டு வழக்கம்போல் ஊஸ்மான் ரோட்டிலிருக்கும் கோவாப்பரேடிவ் ஸொஸைடி ஹாலில் இரவு 8-மணிக்கு ப்ரதி செவ்வாய், வியாழக்கிழமைகளில் நடைபெற்று வருகின்றன.

(2) மற்றும், ஷை சபையின் ஆதரவில் ஸ்ரீமான் உ. வே. சீர்காழி ஆர். சந்தான கிருஷ்ண அய்யங்கார் ஸ்வாமியால் சென்ற ஏழுமாத காலமாக உபந்யஸிக்கப்பட்டு வந்த ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் யுத்த காண்டம் ஆரம்பமாய் மேற்கொண்டு உபந்யாஸங்கள் 10—6—37-ல் ஆரம்பமாகி கீழ்க்கண்ட விவரப்படி ஷை இடத்தில் நடைபெற்றன. ஜுன் மீ 13உ ப்ரஹ்லாத சரித்திரம், 16, 18உ விபீஷண சரணாகதி, 20உ ராம ராவண ப்ரதம யுத்தம், 23உ கும்பகர்ணவதம் 25உ நாகபாசப் படலம், 27உ இந்திரஜித் வதம், 30உ மூல பலவதம், ஜுலை மீ 2உ இராவண வதம், 4உ விபீஷண பட்டாபிஷேகம், 5உ ஸ்ரீராம பட்டாபிஷேகம்.

(3) பக்த கோடிகள் அனைவரும் வந்திருந்து கதா ச்ரவணம் செய்து ஆநந்தித்தார்கள்.

இங்ஙனம்

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த சபையார், மாம்பலம்.

மதிப்புரை.

ஸ்ரீவைஷ்ணவம் : எனும் பெயர் பூண்ட இக்ரந்தத்தை அச்சிட்டு வெளியிட்டவர் ஆ. ரங்கநாத முதலியார் என்கிற மஹாநுபாவர். தமிழ் வித்வான் ஸ்ரீ. உ. வே. மு. ராகவய்யங்காரால நுக்ரஹிக்கப்பட்ட முகவுரையுடனும், பதிப்பாசிரியரால் எளிய தமிழ் நடையிலெழுதப்பட்ட உரையுடன் கூடிய (பரம காருணிகரான பிள்ளை லோகாசாரியரருளிய) முமுக்ஷுப்படி முதலாக, மற்றும் பல மஹாநுபவர்களாலநுக்ரஹிக்கப்பட்ட பலவ்யாஸங்களை நடுவாகக் கொண்டு பிழைதிருத்த மீருகவுள்ள 84 விஷயங்களாலமையப் பெற்ற இக்ரந்தம் அனேகரத்நங்களா லலங்கரிக்கப்பட்ட ஹாரம்போல் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஹ்ருதிதார்யமாயிருக்கும். இதில் திவ்ய தேசயாத்ராமாாக்கம் என்கிற விஷயம் இளங்கோயில் என்று அவனுகந்து வர்த்திக்கும் திவ்ய தேஸயாத்ரை செய்யுமவர்களுக்கு மிகவும் உபகாரமாயிருக்கும். கிம்பஹுநா ஆவசியகமாயறிய வேண்டுமர்த்த விசேஷங்களெல்லாமொருங்கே யமையப்பெற்ற இக்ரந்தம் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கின்றியமையாததாயிருக்குமென்பதிலையமில்லை. அருமருந்தன்ன அர்த்த விசேஷங்களை ஆரியர்களநுக்ரஹிக்கப்பெற்று க்ரந்தரூபமாக அச்சிட்டுபகரித்த ஆ. ரங்கநாத முதலியார் விஷயத்தில் ஸ்ரீ வைஷ்ணவ உலகம் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுளது.

ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவம்.

ஸ்ரீமத் வேதமார்க ப்ரதிஷ்டாபநாசார்யோபய வேதாந்தப்ரவர்த்தகரா யெழுந்தருளியிருக்கும் திருமழிசை கோயில் கந்தாடை உபந்யாஸ ரத்நம் ஸ்ரீநிவாஸாசாரிய ஸ்வாமியினுடைய, நாளது ஹூ ஆடி மீ 5உ மங்களவாரம் கேட்டை நக்ஷத்திரத்தில் நடக்கவேண்டிய ஷஷ்ட்யப்த பூர்த்தியை முன்னிட்டு ஆடி மீ 1உ வெள்ளிக்கிழமை துடங்கி 4. திநம் நாலாயிர திவ்யப்ரபந்த ஸேவாகாலம் ஸ்ரீ ராமாயண பாராயணம் முதலானவைகள் நடந்து ஷை. 5. உ. சாற்றுமுறையும் நடந்தேறியது.

சாற்றுமுறை யன்று கூடியிருந்த ஸ்ரீ வைஷ்ணவர்களின் கூட்டத்தை ஸேவிக்கப்பெற்றோர் பொலிக பொலிக பொலிக என்று ஆழ்வார் மங்களாசாஸநத்தின் பெருமையே இது என்று அறுதியிட்டு ஆநந்தமடைந்தார்கள். ஷை திநம் சாயங்காலம் ஷை ஸ்வாமியினால் பட்டாபிஷேக ஸர்க்க ஶ்லோகங்களுக்கு அபூர்வமான அர்த்தங்கள் உபந்யஸிக்கப்பட்டன. கோஷ்டியிலந்வயித்த ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு யதோசிதமாக ஸம்பாவனையும் ஸமர்ப்பிக்கப்பட்டது.

ஸ்ரீ அத்திவரதப் பெருமாளின் சேவை

பெருமாள் கோயில் என்று வழங்கப்படும் காஞ்சிமாநகரில் பேரருளாளன் [ஸ்ரீவரதராஜன்] ஸந்நிதியிலுள்ள அநந்தபுஷ்கரிணி யென்கிற திருக்குளத்தில் அத்திவரதர் என்கிற எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் விஷயம் பலபேர்களுக்குத் தெரிந்திராது. இவருடைய திருமேனி தாருமயம். வெகுநாளைக்கு முன் இந்த திவ்யமங்கள விக்ரஹமே ஸ்ரீ ஹஸ்திகிரியில் மூலமூர்த்தியாய் எழுந்தருளி யிருந்ததாகவும், ஏதோ காரண விசேஷத்தினால் திருக்குளத்தில் தம்மை எழுந்தருளப் பண்ணிவிட்டு சீவரம் மலையில் எழுந்தருளியிருக்கிற திருமேனியை இவ்விடத்தில் மூலபேரமாக எழுந்தருளப்பண்ணும்படி ஸ்வப்நம் ப்ரஸாதித்ததனால் அப்படியே நடந்தேறியதாகவும் பெரியோர் சொல்லக் கேள்வி. அங்ஙனம் அநாதிகாலமாக ஸ்ரீ அஸ்திகிரியில் மூலமூர்த்தியாக எழுந்தருளியிருந்த பெருமாளே அத்திவரதர் என்று சொல்லப்படுகிறவர். அவரே திருக்குளத்தில் எழுந்தருளியிருப்பவர். ஆழ்வார்களும், திருக்கச்சிநம்பிகள், எம்பெருமானார், கூரத்தாழ்வான், தேசிகன் முதலான ஆசாரியர்களும் ஸேவித்தகாலத்தில் இந்த அத்திவரதரே மூலமூர்த்தியாக எழுந்தருளியிருந்தவர் என்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். இவர் திருக்குளத்தில் எழுந்தருளி ஏறக்குறைய 400 அல்லது 500 வருஷமிருக்கலா மென்றும் சில மஹான்கள் ஊஹமாகச் சொல்லுகிறார்கள்.

பரம் திவ்விய கம்பீரமான இந்தத் திருமேனியை நித்யமாக ஸேவிக்க ப்ராப்தியில்லாவிடினும் கால விசேஷத்திலாவது ஸேவித்து ஆத்மாவைப் புனிதமாக்கிக்கொள்ளச் சில தர்மிகர்கள் செய்வதுண்டு. இற்றைக்கு நாற்பத்தைந்து வருஷங்களுக்குமுன் ஒருமுறை இந்த திவ்யமங்கள விக்ரஹத்தைத் திருக்குளத்தி லிருந்து எதிரிலுள்ள வஸந்தோத்ஸவ மண்டபத்தில் எழுந்தருளப் பண்ணி ஒருமண்டலம் ஆராதித்து தேச தேசாந்தரங்களிலிருந்து வரும் பக்த கோடிகளும் ஸேவித்துக் களிக்குமாறு செய்து மீண் டும் திருக்குளத்திலேயே எழுந்தருளப் பண்ணினார்கள். அது போலவே இப்போது வஸந்தோத்ஸவமண்டபத்திலெழுந்தருளி சேவை சாதிக்கிறார். இந்த திவ்யமங்கள விக்ரஹமே நமது பூர்வாசார்யர்களால் மங்களாசாஸநம் பண்ணப்பட்டது. இந்த ஸேவை கால விசேஷத்தில் கிடைக்கக்கூடியததாலால் பக்த ஜநங்கள் விசேஷமாக வந்து ஸேவித்து ஆனந்தமடைகிறார்கள்.

ஸ்ரீ. உ. வே. தேசிகவரதாசாரியார்

இந்த ஸ்வாமியை ஸ்ரீ வைஷ்ணவ உலகத்திலறியாதார் ஒரு வருமிருக்கமாட்டார்கள். ஆதலில் அவரது பெருமையை சிலயில் லாச் சிறியனான அடியேனென் புகழ்வது. அம்மஹானுபாவர் ஆழ்வார் திருநகரியில் பகவத் விஷயம் காலக்ஷேபம் செய்து முடித்து அங்கு நின்றும் பதரிகாச்ரம யாத்ரார்த்தம் சென்னைமா நகரிக் கெழுந்தருளி தம்முடைய அமுதமொழிகளால் அகில வைஷ்ணவர்களையும் ஆனந்திப்பித்து பதரிகாச்ரம யாத்ரை எழுந் தருளியிருக்கிறார். 2, 3 மாதங்களில் மறுபடியும் மத்ராஸிற்கு எழுந்தருளுவர் எனத் தெரியவருகிறது.

திருவாடிப்பூர மஹோத்ஸவம்

இவ்வுத்ஸவம் திவ்ய தேசங்களெங்கும் நடைபெற்றாலும் ஆண்டாளவதார ஸ்தலமான ஸ்ரீ வில்லிபுத்தூரில் மிகவும் விமர்சை யாக நடைபெறும். ஆடி 17 உ 1-8-37 உத்ஸவ ஆரம்பம் 21 (5-8-37) 5-வது உத்ஸவம் காலை கொட்டகையில் திருத்தங் காலப்பன், சுந்தரராஜன், ஸ்ரீனிவாசன், வடபெருங்கோயிலுடை யான், ரங்கமன்னார் ஆகிய ஐந்து திருநாமங்கள் எழுந்தருள்வதும் ஆழ்வார் மங்களாசாஸநம் செய்வதும் சேவிக்க உரியது. ராத்திரி ஐந்து திருநாமங்களும் பெரியதிருவடியிலும் ஆண்டாள் ஹம்ஸ வாஹநத்திலும் ஆழ்வார் யானை வாஹநத்திலும் ஸேவை சாதிப் பார்கள். 25 (9-8-37) திருத்தேர்.

इतरदिगपेक्षया उत्कृष्टा भवतीति वास्तवार्थः। अतो विरोधपरिहारश्च। उत्कर्षे हेत्वन्तरं च वर्ण्यते उत्तरार्धेन। सर्वदा योगनिद्रान्वितोपि श्रीरङ्गपतिः यामेव दिशं स्वकटाक्षवीक्षणभाजनीकरोति, तस्या दिशस्सर्वोत्तरत्वे को विवाद इति भावः।

(அங்)—நித்ராலுநா அபி ரங்கபதிநா கடாக்ஷாः பஹுமாந பூர்வம் யத்ரைவ (திசி) நியதம் நிஹிதாः ஸாதிக் தக்ஷிணா அபி. ஹேதேவி! பரிபக்த்ரிம புண்யலப்யாத் தவ அவதாராத் ஸர்வோத் தரா பவதி.

ஆண்டாளே ! * உறங்குவான் போல் யோகு செய்யும் பெரு மானாகிய அழகிய மணவாளன் எந்தத் திசையையே மிக்க ஆதரத் தோடு கடாக்ஷித்துக்கொண்டு "திருக்கண்வளர்ந்தருளுகிறாரோ, அந்தத் திசை தென் திசையாயிருக்கச் செய்தேயும், பரமபாக்யத் தின் பலனாகவுண்டான உமது திருவவதாரத்தினால் [ஸர்வோத்த ரா பவதி] எல்லார்க்கும் வடதிசையாகின்றது; (ஸர்வோத்க்ருஷ்ட மான திசையாகின்றது) என்றபடி.

ஆண்டாள் திருவவதரித்தது ஸ்ரீவில்லிபுத்தூரில். அவ்வூர் உள்ளது தென்திசையில். அது தென்திசையாயிருக்கச் செய் தேயும் வடதிசையாக விருக்கின்றதென்று விரோதாபாஸாலங் காரம் தோன்ற ஒரு சமத்காரமாக அருளிச் செய்கிறார். உத்தரா என்கிற வடசொல் வடதிசையைச் சொல்வது போலவே, 'சிறந் தது' என்னும் பொருளையும் சொல்வதாதலால் முந்தின பொரு ளைக்கொண்டு விரோதோத்பாவநமும் பிந்தின பொருளினால் அதற் குப் பரிஹாரமும் உய்த்துணரத் தக்கது. ஆண்டாளுடைய திருவவ தாரத்தினால் தென்திசை மிகவும் சிறந்ததாயிற்று என்றவாறு. அந்தச் சிறப்புக்கு மற்றொரு காரணம் தன்னையும் உத்தரார்த் தத்தினால் அருளிச் செய்கிறார்—[யத்ரைவ என்று தொடங்கி.] "குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி வட திசை பின்பு காட்டித் தென்திசை யிலங்கை நோக்கி" என்றும் மன்னுடைய விபீடணர்க்காய் மதிளிலங்கைத் திசை நோக்கி மலர்க் கண் வைத்த" என்றும் சொல்லுகிறபடியே பெரிய பெருமாள் தென் திசை நோக்கிப் பள்ளி கொண்டிருப்பதானது விபீஷணாழ்வானைக் கடாக்ஷிப்பதற்காக என்று புராணவரலாறு இருந்தாலும், ஆண் டாளுடைய திருவவதாரஸ்தலமாகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் அபிநி

வேசத்தினால்தான் அத்திசையை நோக்கியிருக்கின்றாரென்று கொள்வது சிறக்கும் என்று இங்கு ஆசிரியர் திருவுள்ளம்போலும். இந்தத் திருவுள்ளத்தை ஸ்பஷ்டமாக க்ரஹிப்பிக்கவல்ல வாசகம் மூலத்தில் இல்லையாகிலும் இங்குற்ற உத்தரார்த்தத்தின் அமைப்பை நோக்குமிடத்து இங்ஙனே சொல்லலாயிருக்குமென்க.

பரிபக்த்ரிம புண்ய லப்யாத்—பலன் கொடுக்க உன்முகமானது பரிபக்த்ரிமம் எனப்படும். பரிபக்வமான ஸுக்ருதத்தின் பயனாக விளைந்ததாம் ஆண்டாளுடைய திருவவதாரம். "எமக்காகவன்றோ விங்காண்டாளவதரித்தாள், குன்றாத வாழ்வான வைகுந்த வான் போகந்தன்னை யிகழ்ந்து ஆழ்வார் திருமகளாராய்" என்ற பேராசிரியர் அருளிச் செயலின்படி அஸ்மதாதிகளான ஸம்ஸாரிகளின் ஸுக்ருத பலனாக விறே ஆண்டாள் திருவவதரித்தது, நித்ராலுநா—ஆலுச் ப்ரத்யயாந்தமான ஶப்தம். நித்ரையை யுடையவன் நித்ராலு.

(11)

प्रायेण देवि ! भवतीव्यपदेशयोगात् गोदावरी जगदिदं पयसा पुनीते ।
यस्यां समेत्य समयेषु चिरं निवासात् भागीरथीप्रभृतयोपि भवन्ति पुण्याः ॥

ப்ராயேண தேவி! பவதீவ்யபதேஶ யோகாத்
கோதாவரீ ஜகதிதம் பயஸா புநீதே,
யஸ்யாம் ஸமேத்ய ஸமயேஷு சிரம் நிவாஸாத்
பாகீரதீப்ரப்ருதயோபி பவந்தி புண்யா꞉ 12.

हे देवि (गोदे !) भागीरथीप्रभृतयोऽपि यस्यां (गोदावर्याम्) समयेषु समेत्य चिरं निवासात् पुण्या भवन्ति, सा गोदावरी भवतीव्यपदेशयोगात् इदं जगत् पयसा पुनीते प्रायेण ।

गोदावरीनद्याः सुप्रसिद्धं जगत्पावनत्वं गोदादेवीनामसंसर्गवशादेवेति पूर्वार्धेन उत्प्रेक्ष्यते । पञ्चवट्यां रावणेन अपह्रियमाणा सीता * हंसकारण्डवाकीर्णां वन्दे गोदावरीं नदीम् । क्षिप्रं रामाय शंस त्वं सीतां हरति रावणः ॥ * इति गोदावरीमुद्दिश्य प्रार्थयतेस्म । अथापि सा रावणचकितेव रामाय न शशंस । अत एव तस्या अपवित्रत्वं समायातम् । पुनः पवित्रताप्राप्त्यर्थं सा घोरं तपस्तेपे । तदा त्वे देवताप्रसादभूता पवित्रत्वं समायातम् । तच्च कीदृशं समायातमिति चेत् ; तदुच्यते उत्तरार्धेन । सुप्रसिद्धपवित्रताशालिगङ्गाप्रभृतय स्सरिद्वरा अपि समयविशेषेषु गोदावर्यां चिरवासं प्राप्य पवित्रतां प्राप्नुयुः इति वरप्रदानं पुराणप्रसिद्धम् ।

स तु गोदादेवीनामयोगनिबन्धन एवेति आचार्यपादानामुत्प्रेक्षा । 'प्रायेण' इत्येतत् उत्प्रेक्षालिङ्गम् ।

(அ꞉) ஹே தேவி! பாகீரதீ ப்ரப்ருதய꞉அபி யஸ்யாம் (கோதாவர்யாம்) ஸமயேஷு ஸமேத்ய சிரம் நிவாஸாத் புண்யா꞉ பவந்தி, ஸா கோதாவரீ பவதீவ்யபதேஶயோகாத் இதம் ஜகத் பயஸா புநீதே ப்ராயேண.

கோதாய்! கங்கை முதலிய நதிகளும் யாதொரு கோதாவரியிலே ஸமய விசேஷங்களில் வந்து கலந்து நெடுங்காலம் வஸித்துப் புனிதங்களாகின்றனவோ, அப்படிப்பட்ட கோதாவரீ நதியானது உம்முடைய திருநாமத்தைத் தான் வஹிப்பதனாலேபோலும் இவ்வுலகைத் தனது தீர்த்தத்தினால் புனிதமாக்குகின்றது.

பஞ்சவடியில் இராவணன் பிராட்டியை அபஹரித்துக் கொண்டு போகும்போது "**हंसकारण्डवाकीर्णां वन्दे गोदावरीं नदीम् । क्षिप्रं रामाय शंस त्वं सीतां हरति रावणः**—ஹம்ஸ காரண்டவாகீர்ணாம் வந்தே கோதாவரீம் நதீம், க்ஷிப்ரம் ராமாய ஶம்ஸ த்வம் ஸீதாம் ஹரதி ராவண꞉" என்று கோதாவரியை நோக்கி 'என்னை இராவணன் கவர்ந்து சென்றதாகப் பெருமாளிடம் அறிவிப்பாயாக' என்று வேண்டிக்கொண்டாள்; அங்ஙனம் வேண்டிக் கொள்ளாவிடினும் பெருமாள் பக்கலில் அறிவிக்கவேண்டிய முறைமையிருந்தும், வேண்டிக்கொண்ட பின்பும் அறிவியாதே யொழிந்தது. இது இராவணன் பக்கலில் அச்சத்தாலே யிருக்கலாம். யமுனை கம்ஸனுடைய மாளிகையின்கீழே பெருகா நின்றதாகையாலே தீயபுந்திக்கஞ்சனுக்கு அஞ்சவேண்டியிருந்தும் அஞ்சாதே "**यमुनां चातिगंभीरां नानावर्तझषाकुलाम् । वसुदेवो वहन् मूर्ध्ना जानुमात्रोदको ययौ** யமுநாஞ்சாதிகம்பீராம் நாநாவர்த்த ஜஷாகுலாம், வஸுதேவோ வஹந் மூர்த்நா ஜாநுமாத்ரோதகோ யயௌ" என்னும்படி முழங்காலளவாகத் தன்னை வற்றிக்கொடுத்தது. ஆதலால் அது தூய பெருநீர் யமுனை என்று கோதை குலாவிக் கூறப்பெற்றது.

அங்ஙனம் கிஞ்சித்கரிக்கும்படியான பாக்கியத்தை கோதாவரி இழந்தமையால் அபரிசுத்தியே இதற்கு உண்டாயிற்று. அந்த அசுத்தி தொலைந்து தூய்மை பெறுதற்காக அந்தக் கோதாவரி தவம் புரிந்ததாகவும், தவத்தினால் ப்ரஸந்நயான தேவதை ஒப்

புயர்வற்ற தூய்மையை வரமாக அநுக்ரஹித்ததாகவும் புராண வரலாறு உள்ளது. அவ்வளவு தூய்மை அதற்கு உண்டானதற்கு உண்மையில் யாது காரணமென்னில், கோதா என்கிற திருநாமத்தைத் தன்னுடைய நாமத்தில் ஏகதேஶமாக வஹிக்கப்பெற்றிருப்பதுவே காரணமாகும் என்று ஸ்வாமி சமத்காரம் பொலிய உத்ப்ரேக்ஷிக்கிறபடி.

நைஷத காவ்யத்தில் அன்னப்பறவை நள சக்ரவர்த்தியின் பெருமையைத் தமயந்தி பக்கல் பகரும்போது "**असत् किल श्रोत्रसुधां निपीय रम्भा चिरं भामतुलां नलस्य। तत्रानुरक्ता तमनाप्य भेजे तन्नामगन्धान्नलकूबरं सा** அஸ்மத் கில ச்ரோத்ரஸுதாம் நிபீய ரம்பா சிரம் பாமதுலாம் நலஸ்ய, தத்ராநுரக்தா தமநாப்ய பேஜே தந்நாமகந்தாத் நலகூபரம் ஸா." என்று சொல்லிற்று. ரம்பையானவள் நளனை மணஞ்செய்துகொள்ள விரும்பிப் பெறுமையினாலே அவனது பெயரை ஏகதேசமாகக் கொண்டிருக்கிற நளகூபரனையாவது மணம்புரிவோமென்றெண்ணி அவனைப் பெற்றாள் என்று இதில் சொல்லப்பட்டது. இது ஒருபுடை ஒப்புநோக்கத் தக்கது இங்கு.

கோதாவரிக்கு எப்படிப்பட்ட தூய்மை உண்டாயிற்றென்னில் அது உத்தரார்த்தத்தில் விவரிக்கப்படுகிறது. ஏற்கனவே சிறந்த பெருமை பெற்றுள்ளனவான கங்கை முதலிய நதிகளுங் கூட ஸமய விசேஷங்களில் கோதாவரி நதியில் நெடும்போது வாஸம்பண்ணித் தூய்மை பெறக்கடவன என்று தேவதாநுக்ரஹம் ஏற்பட்டதாகப் புராண வரலாறு உள்ளது. பரம பவித்திரங்களாக ப்ரஸித்தங்களான கங்கை முதலிய நதிகளுக்கும் பரிசுத்தி கோதாவரீ மூலக மென்னில் இதனுடைய தூய்மை எப்படிப் பட்டதா யிருக்கவேணும்; வாசாமகோசரம் என்ன வேணுமத்தனை; அத்தகைய தூய்மை கோதாதேவியின் திருநாம ஸம்பந்த நிபந்தநமே போலும் என்று உத்ப்ரேக்ஷித்தாராயிற்று.

ப்ராயேண என்பது உத்ப்ரேக்ஷாலிங்கம் என்பது ஆலங்காரிக ஸமய ஸித்தம்.

"யஸ்யாம் ஸமேத்ய" இத்யாதிக்கு ஆவஶ்யகமான புராண வரலாற்றின் ஆகாரத்தையும் விவரணத்தையும் பௌராணிகர் பக்கலிலே விளங்கக் கேட்டுணர்வது.

नागेशयस्सुतनु ! पक्षिरथः कथं ते जातस्स्वयंवरपतिः पुरुषः पुराणः ।
एवंविधास्समुचितं प्रणयं भवत्याः संदर्शयन्ति परिहासगिरस्सखीनाम् ॥१३॥

நாகேஶயஸ் ஸுதநு பக்ஷிரதஃ கதம் தே
ஜாதஸ் ஸ்வயம்வரபதிஃ புருஷ: புராணஃ,
ஏவம்விதாஸ் ஸமுசிதம் ப்ரணயம் பவத்யா:
ஸந்தர்ஶயந்தி பரிஹாஸகிரஸ் ஸகீநாம்.

हे सुतनु ! नागेशयः पक्षिरथः पुराणः पुरुषः ते स्वयंवरपतिः कथं जातः? इत्येवंविधाः सखीनां परिहासगिरः भवत्याः समुचितं प्रणयं संदर्शयन्ति ।

सखीनां परस्परं नर्मोक्तिकथनं स्वाभाविकम् । गोदामुद्दिश्यापि तदातदा सखीनां परिहासभाषितानि अवतरन्ति । हे गोदे ! विवेकिनी त्वं कथमिव सर्वथापि स्पृहयितुमनर्हं वरं पतित्वेन प्राप्तवती ? लोके सर्वा अपि कन्याः शयनसौभाग्यं कामयन्ते । तव तु तन्नैव संघटितम् । शेषशायी कोपि तव भर्ताऽभूत् । त्वयापि दन्दशूकतल्पे खलु शयितव्यम् । तरुणद्युमणिद्युतौ विशालविमलश्लक्ष्णतुङ्गतूलासनोज्वले कनकपर्यङ्के शयनभाग्यं हन्त ! तव नासीत् । तदास्तां नाम । वाहनसौभाग्यमपि तव नाघटत ; अश्वादिवाह्येषु रथादिषु उपविश्य सह भर्त्रा तत्रतत्र सोल्लासं पर्यटितुं सर्वा अपि कन्या उत्कण्ठितास्स्युः । गोदे ! पक्षिवाहन एव हि भर्ता त्वया वृतः । पक्षिणमधिरुह्य पर्यटनं तृप्तिलेशायापि न खलु कल्पेत । तदप्यास्तां नाम । भर्ता यदि युवा स्यात्तर्हि अन्या न्यूनताः कथञ्चन विस्मर्येरन् ; हन्त ! युवा पतिस्त्वया न प्राप्तः ; पुराणः पुरुषः [जरठः पतिः] खलु ते भर्ता—इत्येवंरीत्या गोदां प्रति सख्यः परिहासवचांसि कथयन्ति ; एतैर्वचोभिः किं प्रकाश्यत इतिचेत् , गोदायाः प्रणयः समुचिते (स्वरूपानुरूपे) व्यक्तिविशेषे एव प्रसृत इति प्रकाश्यते । भोगिभोगशयनीयशायिनि वेदात्मविहगेश्वरवाहने अनादिनिधने च परमपुरुषे त्वया विनिहितः प्रणयस्समुचित एवेति सख्यः परिहासापदेशेन प्रकाशयन्तीति भावः ।

(அங்)ஹே ஸுதநு! நாகேஶயஃ பக்ஷிரதஃ புராணஃ புருஷஃ தே ஸ்வயம்வரபதிஃ கதம் ஜாதஃ? (இதி) ஏவம்விதாஃ ஸகீநாம் பரிஹாஸகிரஃ பவத்யாஃ ஸமுசிதம் ப்ரணயம் ஸந்தர்ஶயந்தி.

'அழகிய மேனி படைத்த ஆண்டாளே! அரவணையின்மேற் பள்ளிகொள்பவனும் பறவையை வாஹநமாக வுடையவனும், யுவாவாயிருக்கை யன்றிக்கே நெடுநாளைக் கிழவனுமான ஒரு புருஷன்

உனக்கு ஸ்வயம்வர பர்த்தாவாக எங்ஙனே வாய்த்தான்?' என்றிப்படி தோழிமார் மொழியும் பரிஹாஸ வார்த்தைகள் உம்முடைய காதல் ஸமுசித ஸ்தலத்திலேயே அமைந்தது என்பதை வெளிப்படுத்துகின்றன.

தோழிமார்கள் ஒருவர்க்கொருவர் விநோதமாகப் பரிஹாஸ வார்த்தைகள் பேசிக்கொள்ளுங் கணக்கிலே ஆண்டாளை நோக்கி அவளுடைய தோழிமார் சிலர் பரிஹாஸ மொழிகளைப் பகர்வது உண்டு; எங்ஙனே யென்னில், கோதாய்! உலகில் கன்னிகைகளுக்குத் தாய் தந்தையர் முயன்று விவாஹம் செய்விப்பது வழக்கம்; உன்னுடைய விவாஹமும் அவ்விதமாகவே நடந்திருந்தால் அதிலுள்ள குறை நிறைகளைப்பற்றி விசாரப்பட வேண்டிய அவசியமில்லை; உனது விவாஹமோ அங்ஙனம் நடைபெறவில்லை. ஸ்வயம்வரம் கோடித்து நீயாகவே நாயகனை வரித்தாய்; அப்படிப்பட்ட நீ பலவகைக் குறைகளுக்கு இடமான விவாஹத்தைச் செய்து கொண்டாயே! இது என்னே!; பெண்கள் யாவரும் படுக்கை வாய்ப்பை முந்துற விரும்புவார்கள்; * அஞ்சிதப்பைம் பூம்பள்ளியில் ஶாயனிக்க விரும்புவர்கள்; 'நச்சுநாகணையானே' என்றும் 'நஞ்சரவில் துயிலமர்ந்த நம்பீ' என்றும் கூறப்படுகிறவனை நீ மணம் புண்ர்ந்தனையாதலால் விடநாகத்தின் மீதன்றோ நீயும் துயில் கொள்ள வேண்டிற்று.

அது கிடக்கட்டும்; நல்ல ரதத்தில் வீற்றிருந்து மெல்ல மெல்ல ஊர்வலம் வரவேணுமென்று பெண்கள் ஆசைப்படுவதுண்டு; அவ்வாசைக்கும் இடமில்லாதபடி புள்ளரையனை வார்தியாகக் கொண்டவனைப் பதியாக வரித்தாய்; புள்ளின் மீது ஒருவர் உட்காருவதே வருத்தம்; இருவராய்க் கூடி உட்கார அவகாஶமே அரிது;நெருக்கி வீற்றிருந்தாலும் ஒரு நொடிப்பொழுதில் பல யோஜனை தூரம் பறந்து செல்ல வல்ல பறவையாதலால் மந்தகதியாய் அழகிதாக ஊர்வலம் வருதற்கு ஆசையில்லையே.

அது தானும் கிடக்கட்டும்; நாயகன் நல்ல யுவாவாகஇருந்துவிட்டானாகில் மற்றக் குறை நிறைகள் எப்படியிருந்தாலும் கணிசிக்கப்படாமலிருக்கலாம்; அது தானும் இல்லையே; நீ வரித்தவனுடைய ஜாதகமே கிடைப்பதரிது; அவன் பிறந்தது எப்போதென்று கண்டறிய முடியவில்லை. பல நாளைக் கிழவன் என்று பலரும் பகர்கின்றனர்; அந்தோ! அன்னவனை வரித்தாயே!

விவேகத்திற் சிறந்த நீ இப்படியும் செய்யலாமோ? என்று ஏசுகின்றனராம். இந்த ஏசுதலால் என்ன தேறுகின்றதென்னில்; * மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன், என்றும் * அங்கைத் தலத்திடை யாழிகொண்டானவன் முகத்தன்றி விழியேனென்று செங்கச்சுக் கொண்டு கண்ணாடை யார்த்துச் சிறு மானிடவரைக் காணில் நாணுங் கொங்கைத் தலமிவை நோக்கிக் காணீர் * என்றும் சொல்லுகிறபடியே திண்ணிய உறுதிகொண்ட ஆண்டாள் தன்னுடைய காதலை வகுத்த விஷயத்திலேயே செலுத்தினாள் என்னும் பெருமையே இந்தப் பரிஹாஸ மொழிகளால் பெறுவிக்கப்பட்டதாம்.

"நல்லவென்தோழி! நாகணை மிசை நம்பரர்" என்று ஆண்டாள் திருவாக்கில் வந்திருப்பதால் நாகேஶயः என்றது பரத்வத்தையே காட்டும். "பறவையேறு பரம்புருடா" என்று ஆண்டாள் திருத் தகப்பனாரது திருவாக்கில் வந்திருப்பதால் பக்ஷிரதः என்றதும் பரத்வத்தையே காட்டும். புருஷः புராண: என்றது ஸ்வயமாகவே பரத்வத்தைக் காட்டுகின்றது. "மூவரில் முன்னிய விருத்தனை" என்றும், "தேவர்கட்கெல்லாம் விருத்தா!" என்றும் அருளிச் செயல்கள் காண்க.

[ஸமுசிதம் ப்ரணயம் ஸந்தர்ஶயந்தி] ஆண்டாளுடைய ப்ரேமம் ஸமுசித ஸ்தலத்தில்தான் நேர்பட்டது என்பதைப் பரிஹாஸ வியாஜத்தினால் தோழிமார் தெரிவிக்கின்றனர் என்றதாயிற்று.(13)

त्वद्भुक्तमाल्यसुरभीकृतचारुमौलेः त्यक्त्वा भुजान्तरगतामपि वैजयन्तीम्।
पत्युस्तवेश्वरि! मिथः प्रतिघातलोलाः बर्हातपत्ररुचिमारचयन्ति भृङ्गाः॥

த்வத்புக்தமால்ய ஸுரபீக்ருத சாருமௌலே:
த்யக்த்வா புஜாந்தரகதாமபி வைஜயந்தீம்,
பத்யுஸ் தவேச்வரி!மித: ப்ரதிகாத லோலா:
பர்ஹாதபத்ரருசி மாரயசயந்தி ப்ருங்கா:—

हे ईश्वरि! भृङ्गाः त्वद्भुक्तमाल्य सुरभीकृत चारुमौलेः तव पत्युः भुजान्तरगतां वैजयन्तीमपि त्यक्त्वा मिथः प्रतिघातलोलास्सन्तः बर्हातपत्ररुचिम् आरचयन्ति।

भगवतो वक्षस्स्थले वैजयन्ती नाम वनमाला विराजत इति प्रसिद्धिः। तस्या अम्लानत्वात् अत्यन्तसौगन्ध्यमतिप्रसिद्धम्। मधुप्रवाहश्च तस्यां

विलक्षणः। तथापि मधुलिहस्तस्यामीषदपि रतिं नोद्वहन्ति। भगवतो मौलिभूषायितायां मालिकायामेव ते अनुरज्यन्ते। अहमहमिकया परस्सहस्रा भ्रमरास्तत्रैव संपतन्ति। कतिपयानामेव भृङ्गानां माल्योपरि उपविश्य मध्वास्वादनं कर्तुमवकाशो लब्धः। अनवकाशपराहतास्तु अवकाशलिप्सया उपर्येव मण्डलरूपेण परिभ्रमन्ति। ततश्च बर्हातपत्रेणेव शोभा भवति भगवत इत्युल्लेखः क्रियते। गोदादेव्युच्छिष्टमाल्यमेव खलु भगवतो मौलौ विलसति। भ्रमराकर्षणमेव मालिकायाः प्रकर्षः। वैजयन्तीमपि भ्रमरास्त्यक्त्वा मौलावेव चलन्ते इति कथनात् वैजयन्त्यपेक्षयाऽपि गोदोपभुक्तमालिकायास्सौरभ्यातिशयः परमविलक्षण इति सूचितं भवति। "मिथः प्रतिघातलोला" इत्युक्त्या अहमहमिकया संपततामपि द्विरेफाणां स्रजि अवकाशदौर्लभ्यस्फोरणमुखेन स्रजः प्रकर्षातिशय एव प्रकीर्तितो भवति। "बर्हातपत्ररुचिम्" इत्यभिधानेन गोदाकटाक्षपात्रभूतानाम् एकच्छत्राधिपत्यरूपमाधिराज्यं संपद्यत इति द्योतितं भवति॥

(அந்) ஹே கலாவதி! ப்ருங்காஃ த்வத்புக்தமால்ய ஸௌரபீக்ருத சாரு மௌலேஃ தவ பத்யுஃ ப்ஜாந்தரகதாம் வைஜயந்தீமபி த்யக்த்வா மிதஃ ப்ரதிகாதலோலாஸ் ஸந்தஃ பர்ஹாதபத்ரருசிம் ஆரசயந்தி.

எமக்குத் தலைவியான கோதையே! வண்டுகளானவை நீர் சூடிக் களைந்த மாலையினாலே நறுமணம் கமழ்விக்கப்பட்ட அழகிய திருமுடியை யுடையனான எம்பெருமானுடைய திரு மார்பிலே விளங்காநின்ற வைஜயந்தி யென்னும் வன மாலையையும் விட்டு ஒன்றோடொன்று நெருக்கித் தள்ளிக்கொண்டு திருமுடி மாலையிலே புக்கிருந்து மதுவுண்ண முயன்றும் அங்கு அவகாசம் பெறுமல் ப்ரத்யாசையினால் மேலே வட்டமிட்டுக்கொண்டு மயில் தோகையினாலான குடை பிடித்தாற் போன்ற சோபையை விளைத்தன.

ஆண்டாள் சூடிக்களைந்து கொடுத்த மாலையானது அப்ராக்ருதமான வநமாலையிற் காட்டிலும் மிகச்சிறந்தது என்பதை ஒரு ... அருளிச் செய்கிருர். "மின்னனைய நுண்ணிடையார் விரிகுழல்மேல் ... கொண்டு, இன்னிசைக்கும் ... னுமாபோலே முடியின்மீது ... அணியும் மலர்களில் மதுவின் நசையாலே வண்டுகள் வந்து மொய்ப்பது இயல்பு. அப்படியே எம்பெருமானது திருமுடியின் ... தாம் வண்டினங்கள் குழாங்க...

600 008

அசல் பவுனில் கட்டின ரங்கோன் வைர நகைகளும் சுத்தமான வெள்ளிப் பாத்திரங்களும் காரண்டியுடன் கொடுக்கும் ஷாப்பு.



இதுதான்

ராதாகிருஷ்ண ஜுவெல்லரி எம்போரியம்,

10, கோவிந்தப்ப நாயக்கன் தெருவு, சென்னை.

பகவத் விஷயம்

... ம்வாரருளிச்செய்த திருவாய்மொழிக்கு திருக்குருகைப்பிரான் பிள்ளான், ... திருநாமங்கள் அருளிச் செய்த ஆருயிரப்படி, ஒன்பதிஞயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, ஈடு முப்பத்தாருயிரப்படி ஆகிய ஐந்து வியாக்யானங்களும், அடைய வளைந்தான் அரும்பதமும், ஜீயர் அரும்பதமும் அச்சிடப்பட்டு ஒவ்வொருபத்தும் ஒரு புஸ்தகமாக பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது. 5 ரூபாய் மணியார்டர் செய்தால் மீதி வி. பி. மூலம் அனுப்பப்படும். மற்றும் ஸம்ப்ரதாயப் புஸ்தகங்களும் நம்மிடம் கிடைக்கும். விலை ரூ. 50—0—0

S. R. S. வைஜயந்தீ ஆபீஸ்,
24, சந்திரப்ப முதலி தெரு ஜி. டி. மதறுஸ்.

P. KOTHANDARAM PILLAI
SON OF LATE
P. S. PONNUSAWMY PILLAI,
HIGH CLASS CABINET MAKER AND UPHOLSTERER,
Established in 1854.
Ponnusawmy Pillai's Buildings
39 & 44, Esplanade West :: (Rattan Bazaar) :: P. T., MADRAS

For Genuine GOLD & SILVER ART WARES
K. RAMACHANDRA IYER & Co.
JEWELLERS
237 GOVINDAPPANAICK ST.
BRANCH: MAMBALAM, MADRAS.

உயர்தரமான வைரங்களுக்கு
K. ராமசந்திர அய்யர் & Co.
நகை வியாபாரிகள்
237 கோவிந்தப்பநாய்க்கன் தெரு,
பிராஞ்சு: மாம்பலம், மதராஸ்

பாரிசவாயுவுக்கு பயப்படவேண்டாம்!

க்ஷீரபலா

(101 தடவை பாகம் செய்தது.)

பாரிசவாயுவுக்கு ஸஞ்சீவி. எல்லாவித வாத நோய்களையும் கண்டிக்கும். இதற்கு நிகரான மருந்தே கிடையாது. இதை எங்களுடைய "அயவீரலிங்கூர"த்துடன் கலந்து உட்கொண்டால் இன்னும் அமோகமான பலன் அதிசீக்கிரத்தில் கிடைக்கும்.

க்ஷீர பலா:—அவுன்ஸ் 1-க்கு 3-8-0. ½-அவுன்ஸ் 1-12-0.

அயவீரம்:—ஒருவாரத்திற்கு போதுமான மருந்து 1-0-0.

மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்
107, பிராட்வே, சென்னை

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி
(லிமிடெட்)

தலைமை ஆபீஸ்: மதராஸ். ஸ்தாபிதம்: 1906

டிரஸ்டி: மதராஸ் அபீஷியல் டிரஸ்டி.

பாலிஸிதாரர்களின் நன்மையையே கோரி பணி செய்யப்படுகிறது.

க்ளெய்ம்கள் தாமதமின்றி தீர்க்கப் படுகின்றன. நல்ல சேமிப்பு, திறமையான நிர்வாகம், லாபகரமான பாலிஸி நிபந்தனைகள், குறைந்த ப்ரீமியம், நிறைந்த போனஸ், இவை

யுனைடெட் இந்தியாவை

ஒரு சிறந்த இன்ஷூரன்ஸ் கம்பெனி யாக்குகின்றன.

பூரா விவரங்களுக்கும் தலைமை ஆபீஸ்:

யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்,
செம்புதாஸ் தெரு, மதராஸ் க்கும்
அல்லது
கீழ்க்கண்ட இடங்களிலுள்ள ஆபீஸுகளுக்காவது எழுதவும்

ஆஸான்ஸல்	டாக்கா	லாகூர்	ராஜமகேந்திர புரம்
பெங்களூர்	டில்லி	பாட்னா	ரங்கூன்
பெஜவாடா	கௌஹாத்தி	மதுரை	ஷில்லாங்
பம்பாய்	கூட்டி	மங்களூர்	தஞ்சாவூர்
கல்கத்தா	ஹௌரா	நாகப்பூர்	திருவனந்தபுரம்
கள்ளிக்கோட்	சீட்டகாங்	ஹைதராபாத்	உடுப்பி
சித்தூர்	ஜல்பெய்குரி		

பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின் இரண்
ஔஷத ரத்னங்கள்

ஜீ வா ம் ரு த ம்

(தேகாரோக்யத்திற்கும் பல விருத்திக்கும்)

ரத்தமிழந்து, ஜீவனற்று, பலஹீனத்துடன் வாழ்க்கையை வெறுக்கும் வாலிபர்களுக்கு இவ்வௌஷதம் ஓர் வரத்தைப் போன்றதே. இதை உபயோகிக்க ஆரம்பிக்கும் பொழுதே அளவற்ற சுக உணர்ச்சியையூட்டி, [illegible] உண்டாக்கி, புத்துயிரைக் கொடுத்து, [illegible] நைக்கே இன்பத்தை விளைவிக்கின்றது. அளவற்ற தேகபலம் குறைவற்ற ஆரோக்கியம் முதலியவற்றை மேன்மேலும் செழிக்கச் செய்கின்றது.

விலை பெரிய புட்டி ரூ 4-0
சிறியது 1-12-0

பா ல பா ஸ் க ர

(குழந்தை ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு அற்புத நிவாரணி.)



குழந்தைகளின் ஈரல் (Liver) குலை (Spleen) பெருக்கங்களை அதி விரைவில் கரைத்து பூர்ண ஆரோக்யத்தை யளிக்கும் அரிய சஞ்சீவி. இதர மருந்துகளால் பயனற்றுப் போன இடங்களில் ஆச்சரியத்துடன் பலன் தந்துள்ளன. தவறுதலின்றி குணங் கொடுப்பதென்று பிரக்யாதியடைந்தது. ஆரம்ப நிலைமைக்கென்றும் முதிர்ந்த நிலைமைக்கென்றும் இருதிறத்துள்ளது.

ன்ஸ் 1-12-0.
1-0-0

ஆரம்ப நிலைமை மருந்து 1 மாதம் 4-0-0
முதிர்ந்த நிலைமை 8-0-0

விபரங்களுக்கு எழுதவும்.

தயாரிப்பவர்கள் :— **ஆயுர்வேதாஸ்ரமம்**
தபால் பெட்டி 287.
151, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி, மதராஸ்.

Edited & Published by Vadakarai [illegible]jachariar, 26, Chandra[illegible]
and Printed at the Li[illegible] Sunkurama Chetty St. [illegible]